# யாதுமாகி நின்றாள்!



## 1

அந்த வீடே பரபரப்பாக இருந்தது. சின்னதாக ஒரு மாவிலைக் கொத்தை நிலைவாசலில் செருகிவிட்டு, சற்று எட்டி நின்று ஒரு பார்வை வேறு பார்த்தான் கணேசன். அதை, மூக்குக் பொடியைப் போட்டு உறிஞ்சியபடியே பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் சதாசிவமும் கவனித்தார். அவருக்கு சிரிப்புதான் வந்தது.

‘‘யப்பா கணேசா... என்ன இது மாவிலையெல்லாம்? இன்னிக்கு ராதாவை பொண்ணு பாக்கத்தானே வரப் போறாங்க?’’ என்றும் கேட்டார். சொன்ன ஜோரில் அவர் மூக்கைத் தேய்த்து விட்டுக் கொண்ட விதமே அலாதியாக இருந்தது.

‘‘ஏ மாமா... பொண்ணு பாக்க வரும்போது மாவிலையெல்லாம் இருக்கக் கூடாதா? கல்யாண விஷயம்தானே இது...?’’ அவனும் திருப்பிக் கேட்டான்.

‘‘எவண்டாவன்...? பொண்ணு பாக்க வர்றதுங்கறது ஒரு வழக்கமான சம்பிரதாயம்டா. அப்படி பாக்க வர்றவங்களே சம்மந்தியாவும் வருவாங்கன்னும் சொல்ல முடியாது. இதை எல்லாம் ஒரு விசேஷமாவே நினைக்கக் கூடாதுடா.’’

‘‘அப்ப இதை என்னன்னு சொல்றதாம்?’’

‘‘என்னடா கேள்வி இது? இது ஒரு சம்பிரதாயம். அவ்வளவுதான். ஆம்பளையப் பொறுத்தவரைல பொருட் காட்சிக்குப் போய்ட்டு வர்ற மாதிரி ஒரு பொழுதுபோக்கு.

பொம்பளைங்க வரைல பரீட்சை எழுதற மாதிரி... பொண்ணு வீட்டுக்காரங்களைப் பொறுத்தவரை இதை ஒரு கண்டம்னே சொல்லலாம்.''

சதாசிவம் யதார்த்தமாகப் பேசியது உள்ளே மேக்கப் பில் இருந்த ராதாவின் காதிலும் விழுந்து கொண்டிருந்தது. உடன் ராதாவின் தோழி ராகினி... ''ராதா... உங்க பெரியப்பா உளற ஆரம்பிச்சிட்டார் போலத் தெரியுதே?'' என்று ஆரம்பித்தாள். ராதாவிடம் பதில் இல்லை. அவளுக்கு தீவிரமாய் எண்ண ஓட்டம்.

''என்னடி எதுவும் பேச மாட்டேங்கறே... ஆமா எந்த கலர் சேலையை கட்டிக்கப் போறே...? மஜந்தா கலர் பட்டுதானே?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நான் இப்ப கட்டியிருக்கிற புடவையே நல்லாத்தானே இருக்கு?'' ராதா அப்படி திருப்பிக் கேட்பாள் என்று ராகினி எதிர்பார்க்கவே யில்லை.

''என்னடி சொல்றே... பெருசா மேக்கப் வேண்டாம்னு சாதாரணமா தலை சீவிக்கிட்டிருக்கே. இதுல புடவையும் சாதாரணமான்னா என்னடி அர்த்தம்?''

''நான் ஒரு சாதாரண அக்கவுன்டன்ட் மக தானேடி. எனக்கெதுக்கு அசாதாரணமான மேக்கப்பும் அலங்காரமும்?''

''உன் பெரியப்பா பேசுனதக் கேட்டேல்ல... பொம்ப ளைங்கவரைல இது பரீட்சை எழுதற மாதிரின்னு சொன்னது காதுல விழலையா?''

''காலேஜ்ல படிச்சப்போ, பரீட்சை எழுதப் போனப்ப நான் சாதாரணமாதானே போனேன்?''

''நீ பேசறதப் பார்த்தா நீ ஒரு முடிவோட இருக்கற மாதிரிதான் தெரியுது. ஆமா... இந்தக் கல்யாணத்துல உனக்கு இஷ்டம் இல்லையா?''



ராகினி கேட்ட சமயம் ராதாவின் அம்மா லட்சுமி உள்ளே வந்தாள். மகளைப் பார்த்தவள் கண்களில் அதிர்வு.

''என்னடி.... இன்னும் அலங்காரத்தை ஆரம்பிக் கலையா?''

''ஐய்யோ அம்மா... இதான் அலங்காரமே. இவ்வளவு போதுமாம் உங்க பொண்ணுக்கு.''

''என்ன ராதா இதெல்லாம்?''

''அம்மா... உனக்கு என்ன பத்தித் தெரியும்ல?'' ஆட்காட்டி விரலை ஆட்டி ராதா பதிலுக்குக் கேட்ட விதத்தில் ஒரு தீர்மானமே ஒளிந்திருந்தது.

''என்னடி நீ... பொண்ணு பாக்க வரும்போது பளிச் சின்னு தூக்கலா இருந்தாதானேம்மா நல்லாயிருக்கும்?''

''அப்ப இப்ப நான் அப்படி இல்லேங்கறியா?''

''நான் வழக்கத்த சொன்னேம்மா. கொஞ்சம் கல் யாணம் ஆகிப் போற வரைலயாவது எங்க பேச்சுக் கேளும்மா. நீ இப்படி இருந்தா திமிர் பிடிச்சவனு ஒருமாதிரி பேசுவாங்கம்மா...''!

''அம்மா... இது 2012. நீ கல்யாணம் பண்ணிக்கிட்ட 1980 இல்ல. ஆனா அப்பவே இந்த பொண்ணு பாக்கறது, ஆடத் தெரியுமா, பாடத் தெரியுமான்னு கேக்கறதெல்லாம் வழக்கத்தை விட்டுப் போயிடுச்சு. ஆனா நீங்க இன்னும் இதை விட மாட்டேங்கறீங்க. பொண்ணாப் பொறந் துட்டா அவளுக்குப் பிடிச்சிருக்கோ பிடிக்கலையோ ஒரு ஆம்பிளைய கல்யாணம் பண்ணிக்கணும். அவன் எப்படிப் பட்டவனா இருந்தாலும் மணாளனே மங்கையின் பாக்யம், கணவனே கண்கண்ட தெய்வம்னு வாழணும்ங்கறதெல் லாம் உன்னோட போகட்டும்மா. அதை என்கிட்டயும் திணிக் காதே. எனக்கு இதெல்லாம் சுத்தமா பிடிக்கலே.''

ராதா வெடித்துச் சிதறுவது வெளியே கட்டிலில் அமர்ந்திருந்த சதாசிவத்தின் காதில் மட்டுமல்ல.. அவள் அப்பா கருணாகரனின் காதிலும் விழுந்து, அவர் நெற்றி யில் ஒரு மடிப்பும் விழத் தொடங்கியது.

மாவிலையை செருகிவிட்டு சதாசிவத்தோடு வாதம் செய்த கணேசனும், ராதாவின் குரலில் சற்று அதிர்ந்து போயிருந்தான்.

வாதத்தில் சூம்பிவிட்ட கால்கள் அவனுக்கு!

அதோடு அவன் நடக்கும்போது பார்க்கப் பரிதாபமாக இருக்கும். ஆனால் யார் பரிதாபப்பட்டாலும் அவனுக்குப் பிடிக்காது. வீட்டு வாசற்புறம் ஒரு பக்கமாக எஸ்.டி.டி. பூத் வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டவனுக்கு, ராதாவின் அப்பாதான் எல்லாவிதமான உதவிகளையும் செய்து கொடுத்தார். அந்த நன்றிக்காக இந்தப் பெண் பார்க்கும் படலத்துக்கென அப்படியும் இப்படியும் அலைந்து கொண்டிருந்தவன் முகம்கூட சூம்பிப் போய்விட்டது.

வரப்போகிற மாப்பிள்ளையை அவனுக்கு நன்றாகத் தெரியும். அடிக்கடி எஸ்.டி.டி. பூத்துக்கு வருவான். அவ்வப்போது வந்து ஜெராக்ஸ் பிரின்ட்டெல்லாம் போட்டு எடுத்துச் செல்வான். சென்னை தரமணி பக்கம் ஏதோ ஒரு ஐ.டி. கம்பெனியில்தான் உத்யோகம். ''சாருக்கு சம்பளம் எவ்வளவு இருக்கும்?'' என்று ஒரு நாள் ஒரு சின்ன மன அரிப்போடு கேட்டு விட்டான்.

''கம்மிதான்... பிடித்தமெல்லாம் போக ஒரு அம்பது ரூவா வரும்'' என்று அவன் சொல்லவும், ஒரு வினாடி கிறுகிறுத்துப் போனது. அவன் பொய் சொல்கின்றானோ என்று சந்தேகமாகக்கூட இருந்தது.

அவனைப் போலவே வரும் மற்ற இளைஞர்களிடம் உரசிப் பார்த்தபோது, எல்லோருமே நாற்பதாயிரம், ஐம்ப



தாயிரம் என்றுதான் சொன்னார்கள். பல்சர், ஏ ஸ்டார் என்று விதவிதமான வாகனங்களில்தான் வந்தும் இறங்கினார்கள். வியாபாரம் முடிந்து சில்லறைக்காக மேஜை டிராயரைத் துழாவும்போது, ''இருக்கட்டும் வெச்சுக்குங்க...'' என்று ஐந்து, பத்தை சாதாரணமாகக் கருதி, விட்டும் சென்றார்கள்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவனே பெண் பார்க்கவும் வரப் போகிறான். அவனைக் கட்டிக் கொண்டால் ராதா வுக்கு ஒரு குறையும் இருக்காது என்பதுதான் கணேச னுக்கும் அபிப்ராயம். ஆனால், இந்த சம்பிரதாயத்தை ராதா பெரிதாகக் கருதாமல் ஒருமாதிரி பேசவும் சங்கடமாகி விட்டது.

''என்னடா... அவ உள்ள படபடனு வெடிக்கவும் இங்க உனக்கு ட்ரவுசர் அவுந்து போச்சா?'' - சதாசிவம் கிண்டலாகக் கேட்டார். கருணாகரன் நகர்ந்துவிட்டிருந்தார்.

''ஆமாம் மாமா... பெரிய இடம்... ஆனா ராதா ஏன் புடிக்காத மாதிரி பேசுதுன்னு தெரியல...''

''போய்க் கேளு...! வேற யாரையாவது மனசுல நினைச்சுக்கிட்ருக்காளோ என்னவோ?'' என்றார் மெல்லிய, கீழிறங்கிய குரலில். இப்படி அவர் பேசியது மட்டும் அவள் காதில் விழுந்துவிட்டால், அதன்பின் அது எப்படி வேண்டுமானாலும் முடியலாம் என்கிற பயம் அவரிடம் நிறையவே இருந்தது.

கணேசனும் தனது சூம்பிய கால்களைத் தூக்கிக் கொண்டு ராதாவின் அறைக்குள் புகுந்தான். அவன் வரவும், தான் அமர்ந்திருந்த நாற்காலியை அவனுக்காக இழுத்துப் போட்டாள் ராதா.

''நான் உக்காந்து பேசல்லாம் வரல ராதா... நீ பேசுனது காதுல உழுந்திச்சு. மனசுக்குக் கஷ்டமா போச்சு.''

''கணேஷ் அத்தான்... நீங்க இதுல தலையிடாதீங்க. போய்க் கடைல உக்காந்து பொழப்பப் பாருங்க...''

''அது எனக்குத் தெரியும். ஆமா, நான் நேராவே கேக்கறேன். உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லையா?''

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்ல..''

''அப்புறம் ஏன் இப்படி வேலைக்காரி மாதிரி சாதாரணமா இருக்கே..?''

''நான் நானா இருக்கேன். என்னைப் பெண் பார்க்க வர்ற மாப்பிள்ளை என்ன ராஜா வேஷம் போட்டுக்கிட்டு குதிரை மேலயா வரப் போறாரு..?''

''அப்படி இல்லம்மா.. நான் என்ன சொல்ல வரேன்னா..?''

கணேசன் ஆரம்பிக்க, அதைத் தொடர்ந்து கவனித்தவர்களாக ராதாவின் தங்கைகள் நந்தினியும் ரஞ்சனியும் அறை வாசலில் வந்து நின்று விட்டிருந்தனர்.

''அத்தான்.. நீங்க எதையும் சொல்ல வேணடாம். போய் வேலையைப் பாருங்க. நான் எப்பவும் இருக்கற மாதிரிதான் இருப்பேன். இது பிடிச்சிருந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கறவங்க பண்ணிக்கட்டும். அதே சமயம், அந்தப் பையனை எனக்கும் பிடிக்கணும். இப்படி நான் பேசறதனால, என் மனசுல யாரோ இருக்காங்க.. அதனாலதான் நான் இப்படி நடந்துக்கறேன்னு நினைச்சா நினைச்சுட்டுப் போங்க. அதுக்கு நான் ஒண்ணும் பண்ண முடியாது. கல்யாணம்ங்கற விஷயத்துல எனக்குனு சில நியாயமான அபிப்ராயங்கள் இருக்கு. அது என்ன பெண் பாக்கற சடங்கு? மாப்பிள்ளை பாக்கற சடங்குனு ஏன் இல்ல? நாம போய் மாப்ளை வீட்ல மாப்ளையைப் பாக்கக் கூடாதா?''

ராதா எங்கே வருகிறாள் என்பது கணேசனுக்குப் புரிந்தது. அதற்கொரு பதிலை அவனால் எப்படி கூற



முடியும்? 'இதுதான் நடைமுறை' என்றால், 'எவ்வளவோ நடைமுறைகள் மாறிவிட்ட நிலையில், ஏன் இந்த நடைமுறை மாறக்கூடாது?'' என்று கேட்பாள். கோயில் குருக்களில் பலர் குடுமியில் இருந்து கிராப்புக்கு மாறி விட்டதையும் மொபட்டில் பயணம் செய்வதையும் உதாரணமாக சொல்லுவாள்.

அவளைப் பேசியெல்லாம் ஜெயிக்க முடியாது. அது அவர்களுக்கும் தெரியும். அதனால்தான் கருணாகரன் வாயையே திறக்காமல் மனைவி லட்சுமியை மட்டும் வெறித்தபடியே இருந்தார். மெல்ல அவள் காதுகளில் மட்டும் விழும்படியாக ''இந்த இடம் மட்டும் அமையாம போகட்டும்... உனக்குதான் மண்டகப்படி..'' என்றார்.

''நான் என்னங்க பண்ணேன். அவ கேக்கறதுலயும் எனக்கு எந்தத் தப்பும் இருக்கறதா தெரியலைங்க'' என்றாள் லட்சுமி.

''போதும் லட்சுமி... இப்படி இருந்தா ஒரு பயகூட இவளைக் கட்ட மாட்டான். காலத்துக்கும் இப்படியே இருக்க வேண்டியதுதான். இவளுக்குப் பின்னால இன்னும் ரெண்டு பேர் இருக்காங்க. ஞாபகம் இருக்கட்டும்.''

''ஞாபகம் இருக்கட்டுமா? என்ன பேச்சு பேசறீங்க. மூணு பேரையும் ஒண்ணா பாக்கும் போதெல்லாம் என் பெத்த வயித்துல அமிலம் சுரக்கற மாதிரியே இருக்குதுங்க. இவங்க மூணு பேரும் வாழ்க்கைப்பட்டு புகுந்த வீட்டுக்குப் போய், அங்க நல்ல பேர் எடுத்து வாயும் வயிறுமா நம்ம வீட்டுக்கும் வந்து, நாமளும் செய்ய வேண்டிய முறையை எல்லாம் செய்து முடிக்கறவரை, பெத்த கடன் எவ்வளவு இருக்குதுன்னு எனக்குத்தான் தெரியும். அதையெல்லாம் செய்து முடிக்கறவரை எனக்கு நல்ல தூக்கமே கிடையாதுங்க.''

''இதோ பார்! நீ வார்த்தைல சொல்லிட்டே. நான் சொல்லலை. அவ்வளவுதான் வித்யாசம். நீ சொன்ன அவ்வளவும் நடக்கறதுங்கறது ராதாவோட கல்யாணத்துல தான் ஆரம்பம் ஆகுது! ஒரு பொண்ணுக்கு அவளைப் பாக்கற முதல் மாப்ளையே அமைஞ்சுடணும். அப்படி அமையாம போனா, வரிசையா தட்டித் தட்டிப் போய் அதுவே அந்தப் பொண்ணுக்கு பெரிய தடையாகவும் மாறிடும்.

இதே தெருவுல சங்கரலிங்கம் மகள் ஜமுனாவுக்கு என்ன ஆச்சுனு உனக்கே நல்லா தெரியும். வர்ற மாப்ளை எல்லாம் ஏதோ ஒரு காரணத்தால ஒத்து வராமப் போய், கடைசில அந்தப் பொண்ணு தனக்குக் கல்யாணமே இனி நடக்கப் போறதில்லங்கற எண்ணத்துல தூக்குலயே தொங்கிடுச்சு! இங்க அந்த மாதிரி எல்லாம் தப்பித் தவறிக் கூட நடந்துடக் கூடாதுனு நான் வேண்டாத தெய்வம் இல்லை. இந்த இடம் ரொம்பப் பெரிய இடம் வேற. எத்தன பவுன் கேட்டாலும் சரி.. போட்டு இந்தப் பெரியவளை முதல்ல நல்லபடியா அனுப்பினாதான் அடுத்தடுத்து இருக் கறதுகளை நாம நல்லபடியா கரை சேர்க்க முடியும்.''

கருணாகரன் மனைவி லட்சுமியிடம் வேண்டு மென்றே உரத்த குரலில் பேசி, அது ராதாவின் காதில் மட்டுமல்ல... அவள் தங்கைகள் நந்தினி மட்டும் ரஞ்சனி யின் காதுகளிலும் விழும் விதமாகப் பேசியிருந்தார். ராதா விடம் பதிலுக்கு ஒரு ஆழ்ந்த அமைதி. அப்பா பேசி யதன் நியாயங்கள் அவளுக்குப் புரியாமல் இல்லை. அதற்காக தன்னை ஒரு விற்பனைப் பொருள் போல ஆக்கிக் கொள்ளவும் மனம் இடம் தரவில்லை. எத்தனை பவுன் வேண்டுமானாலும் போட்டு தன்னைத் தள்ளிவிட எண்ணும் அப்பாவை அவள் இந்த சமுதாயத்தின் வழக்க மான அப்பாக்களில் ஒருவராகத்தான் பார்த்தாள். அவள்



நெற்றியில் மடிப்பு விழுந்து அவள் சிந்திப்பதை தோழி ராகினியும் கவனித்தாள்.

''உங்கப்பா பேச்சுக் கேட்டேல்ல..?''

''உம்.''

''என்ன உம்.. போடி.. போய் நல்ல புடவையா கட்டிக் கிட்டு வா..''

''அப்ப, நான் இப்ப இருக்கற கோலத்துல வரப்போற மாப்ளை என்னப் பாத்தா, பிடிக்கலனு சொல்லிடுவானா..?''

''அப்படி இல்லடி.. வாழ்க்கை பூரா உன்கூடத் துணை வரப் போறவனை பூரணமான பொலிவோட பாக்கறதுங்கறது ஒரு மரியாதை. எப்பவும்தான் எண்ணை வடியற முகத்தோட இருக்கோமே..? ஆனா இப்பவும் அப்படி இருந்தா, நீ இந்தக் கல்யாணத்தைப் பெருசா நினைக்கல போல இருக்குனு தப்பான எண்ணம் தோணவும் சான்ஸ் இருக்கு..''

ராகினியின் பொருள் செறிந்த பேச்சு ராதாவை அசைத்து விட்டது. எழுந்து நல்ல புடவையாகக் கட்டிக் கொள்ள தயாரானாள். அதைப் பார்த்த தங்கைகள் முகத் திலும் ஒரு மகிழ்ச்சி. குறிப்பாக, அவளுக்கு அடுத்தவளான நந்தினி தனக்கு அடுத்தவளான ரஞ்சனியிடம்..

''அப்பாடா.. அக்கா வழிக்கு வந்துட்டா. இந்தக் கல்யாணம் நடந்துடும்'' என்றாள்.

''சும்மா இரு.. புடவை கட்டிக்கிட்டு வந்துட்டா போதுமா? நான் மாப்ளைகூடப் பேசணும்னு சொல்லி, அவர்கிட்டப் பேசும்போது அக்கா ஏடாகூடம் பண்ணிட்டா என்ன பண்ணுவே?''

''என்ன பண்ணாலும் அவர்கிட்ட எதுவும் நடக்காது. ஏன்னா, அக்கா விரும்புற மாதிரியான ஒரு கேரக்டர் தான் அவர்! அவருக்கும் இந்தப் பெண் பாக்கறது, பாடச்

சொல்றது, எவ்வளவு செய்வீங்கனு சினிமால வர்ற மாதிரி பேசறதெல்லாம் கொஞ்சம்கூடப் பிடிக்காது.''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''அவர் நம்ம கடைக்கு ஜெராக்ஸ் பிரின்ட் போட வரும்போது பலமுறை பாத்திருக்கேன். நம்ப கடை ஃபோன்ல அவர் ஒருநாள் அமெரிக்காவுல இருக்கற அவங்க அக்காகூடப் பேசினப்போ, 'எனக்கு இந்தப் பெண் பாக்கற சமாச்சாரமெல்லாம் பிடிக்கலைக்கா.. பொதுவான ஒரு இடத்துல இரண்டு பேரும் நட்போட பாத்து பேசிக்கறது தான்க்கா சரினு சொல்லிக்கிட்டிருந் தாரு. அதுமட்டுமில்ல.. ராதாக்கா எதிர்பார்க்கற எல்லா ஐட்டமும் அவர்கிட்ட இருக்கு. உண்மையில் அக்கா ரொம்பக் கொடுத்து வெச்சவ..''

நந்தினி பெருமூச்சுடன் பேசியதைக் கேட்ட ரஞ்சனி, ''நந்தினி.. இதை ஏன் முன்னாலேயே நீ சொல்லலை. அக்காகிட்டவும் சொல்லியிருக்கலாம்ல?''

''அடிப்போடி.. நான் இப்ப மூத்தவளா இல்லாம போய்ட்டனேன்னு எனக்கு எவ்வளவு வருத்தமா இருக்கு தெரியுமா?'' நந்தினி அப்படி ஒரு கேள்வியைக் கேட்கவும், ரஞ்சனிக்கு அவள் நெஞ்சைக் குத்தியதுபோல் இருந்தது.






நந்தினி பெருமூச்சோடு சொன்னது ரஞ்சனியை மிகவே யோசிக்க வைத்துவிட்டது. அவளையே வெறித் தாள்.

''என்னடி அப்படிப் பார்க்கறே?'' நந்தினியிடம் கேட்டாள்.

''இல்ல நந்தினி... நீ எந்த அர்த்தத்துல பேசினேனு யோசிச்சுப் பார்த்தேன். எனக்கு கொஞ்சம் அதிர்ச்சியா இருந்தது. அதான்.''

''இதுல அதிர்ச்சியடைய என்னடி இருக்கு. என் மனசுல பட்டதைச் சொன்னேன். ஏன்னா இந்த மாப்பிள்ளை அந்த அளவு ஹேண்ட்சம் மட்டுமில்ல.. சுயபுத்தி உள்ளவரும் கூட..! சுயபுத்தி இல்லாட்டி என்ன நடக்கும்னு உனக்கு நான் சொல்லத் தேவையே இல்லை. நம்ம பக்கத்து வீட்டு ஜெயந்தி புருஷன் மாதிரிதான். அவன் அவங்க அம்மா சொன்னதுக்காக ஒரு தடவை ஆடுவான். கூடப் பிறந்த அக்கா சொன்னதுக்காக ஒரு தடவை ஆடுவான். ஆனா ஜெயந்தி பேச்சை மட்டும் மறந்துகூடக் கேட்டுட மாட்டான். பாவம் ஜெயந்தி.. கல்யாணத்தப்ப ஜோதிகா மாதிரி கும்முனு இருந்தா. இப்ப, மட்டத் தேங்கா மாதிரி இளைச்சு துரும்பாகிட்டா..''

நந்தினி ஜெயந்தியைத் தொட்டுப் பேசவும் ரஞ்சினிக் கும் கொஞ்சம் வயிற்றைக் கலக்கியது. நந்தினி ஆசைப் பட்டுப் பேசுவதில் தவறு இல்லை என்பது போல் தோன் றியது.

அவர்கள் பேசிக் கொள்வதை அப்போதைய

பரபரப்பில் யாரும் பெரிதாகக் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. பக்கமாய் அறைக்கு அந்தப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு, ஜூஸ் கிளாஸ் டம்ளர்களை பளபளப்பாகத் துடைத்துக் கொண்டிருந்த கணேசன் மட்டும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். பளபளவென்று துடைத்து முடித்துவிட்டு, கண்ணாடித் தம்ளர்களை அழகாய் ஒரு ட்ரேயில் வைத்து சமையலறையில் இருந்த லட்சுமியிடம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு, நேராக ராதாவை நோக்கித்தான் சென்றான்.

பளிச்சென்று புடவை கட்டி தலை நிறைய மல்லிகைப் பூவுடன் சற்று பெரிய ஸ்டிக்கர் பொட்டுடன் பார்க்க லட்சணமாய் அறைக்குள் அமர்ந்திருந்தாள். முகத்தில் ஒரு எண்ண ஓட்டம் ஓடியபடியே இருப்பது நன்றாகத் தெரிந்தது. தோழி ராகினி தானும் உடை மாற்றிக் கொண்டு வருவதற்காக அவள் வீட்டுக்குச் சென்றுவிட்டிருந்தாள்.

சமையல்கட்டில் அந்த வீட்டு இல்லத்தரசியான லட்சுமி பஜ்ஜி பொரித்தபடி இருப்பதும், அதன் வாசமும் அந்த அறைக்குள்ளேயும் கமகமத்தது.

கணேசன் வரவும் ராதாவும் ஏறிட்டாள்.

கணேசன் ஒரு அளவோடு சிரித்தான். அதில் எந்தக் சில்மிஷமும் இல்லை. அவன் மனதில் இருந்து சிரிக்கிறான் என்பது பளிச்சென்று தெரிந்தது. அவளும் பதிலுக்குச் சிரித்தாள்.

''நீ இப்ப பார்க்க எவ்வளவு லட்சணமா இருக்கே தெரியுமா?''

''அப்படியா? அப்ப கொஞ்சம் முந்தி நான் லட்சணமா இல்லேங்கறியா?''

''உடனே என்னை மடக்கறியே ராதா. நான் என் மனசுல பட்டதைச் சொன்னேன். எனக்கு இந்தக் கல்யாணம் நடக்காம போயிடுமோனு ஒரு பயம் இருந்துச்சு தெரியுமா?''

''இப்ப அந்த பயம் இல்லையா உனக்கு?''

''பின்னே.. கிளி மாதிரி இருக்கற உன்னைப் பார்க்கற ஒருத்தனுக்குப் பிடிக்காமப் போகுமா..?''

''அப்ப அழகா இருந்தாதான் ஆம்பளைங்களுக்குப் பிடிக்கும்.. இந்த மனசைப் பத்தி எல்லாம் கவலையே இல்லைனு சொல்றே?''

''திரும்பத் திரும்ப விதண்டாவாதமாவே பேசறியே ராதா. வரப்போற மாப்ளை நிஜமா எவ்வளவு நல்லவர் தெரியுமா?''

''என்ன.. இப்படி எல்லாம் பேசி என்னை தயார்ப் படுத்தச் சொன்னாரா அப்பா.. கவலைப்படாதே! அந்த மாப்ளை கிட்ட நான் அவர் பயப்படற மாதிரி எதையும் பேசிட மாட்டேன்.''

''சேச்சே.. நானாதான் சொல்றேன். நான்தான் அடிக்கடி அவரை என்னோட கடையில பார்த்துருக்கேனே? என்னை விட உன் தங்கச்சி நந்தினிக்கு வரப் போற மாப்ளையை பத்தி நிறையத் தெரிஞ்சிருக்கு. 'உன் இடத் துல நான் இல்லாம போய்டேனே'னு அது புலம்பிக்கிட் டிருக்கு..''

கணேசன் யதார்த்தமாகச் சொன்னது ராதா வரையில் சுருக்கென்று தைத்தது. முகமும் மாறிப் போனது.

''நிசமாதான் ராதா.. அப்படின்னா பார்த்துக்கோ.. அவ எப்படிப்பட்டவனு நான் சொல்லவே தேவையில்லை! உங்கப்பா உங்க மூணு பேருக்குமே சேலை வாங்கிட்டு வருவாரு. அதுல உனக்கு வாங்குன சேலைதான் நல்லா இருக்குனு சண்டை போடுவா. நீயும் தூக்கிக் கொடுத் துடுவே. இதே மாதிரிதானே பூ வாங்குனாலும் பொட்டு வாங்குனாலும்..?''

''இப்ப என்ன சொல்ல வர்றே கணேசா?''

''மாப்பிளை வரதுக்கு முந்தியே அடி போட்றா உன் தங்கச்சி, சுதாரிச்சுக்கோ. துணிமணிய விட்டுக் கொடுத்தா வங்கிக்கலாம். அந்த மாதிரி வரப் போற நல்ல உறவை விட்டுக் கொடுத்தால்லாம் வாங்க முடியாது.''

கணேசன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நந்தினி பளிச்சென்று ஒரு மைசூர் சில்க் புடவையில் முகத்துக்கு ரோஸ் பவுடர் போட்டு, வகிடெடுத்து வாரிய தலைமுடிகளின் முன் பாகத்தில் ஒரு கற்றை முடி, ஸ்டைலாக முன்வந்து விழுந்த நிலையில், ராதாவை ஓவர் டேக் செய்வது போல மேக் - அப் செய்தபடி முன்வந்திருந் தாள்.

கணேசனுக்கு லேசாக நெஞ்சை அடைத்தது. சில நிமிடங்களுக்கு முன்புவரை எண்ணெய் வடிய நின்றவள்.. சினிமா நடிகை போல வெகுவேகமாக மாறிப் போய் வந்து நின்றதற்குள், அவளுக்குள் ஒளிந்திருந்த ஆசையும் அப்பட்டமாகத் தெரிந்தது.

இடையில் லட்சுமியின் குரல் அவளை அழைத்தது.

''அடியே சின்னவளே..''

''என்னம்மா..?''

''ரெண்டு பேரும் என்னடி பண்றீங்க? ஹாலைக் கூட்டி ஜமுக்காளத்தை விரியுங்கடி. விளக்கு மாத்தை மூலைல போடாம பின்பக்கமா கொண்டு போய்ப் போடுங்க..''

சமையல்கட்டுக்குள் இருந்தபடியே ஒலித்த லட்சுமி யின் குரலை நந்தினி பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் கணேசன் எடுத்துக் கொண்டான்.

''ஏ, நந்தினி.. உங்கம்மா கத்துனது காதுல



விழலையா? ஆமா.. பொண்ணு பார்க்க வரப்போறது உங்க அக்காவையா.. இல்லை உன்னையா?''

''அப்ப நான் கல்யாணப் பொண்ணு மாதிரி அழகா இருக்கேன்னு சொல்லு..''

''மண்ணாங்கட்டி.. பெரியவ லைன் க்ளியராகாம உன் லைன் ஓபனே ஆகாது.. தெரியும்ல?''

''அதெல்லாம் அந்தக் காலம்.. எத்தனையோ வீடு கள்ல அக்காவைப் பார்க்க வந்த மாப்பிள்ளைகள் தங்கச்சி யைப் பிடிச்சிருக்குனு சொல்றதும், சரினு பிடிச்சவங்க ளோடயே சேர்த்து வைச்சிடறதும் நடந்துருக்கே..?''

''நீ பேசறதப் பார்த்தா வெளிப்படையாவே நீ களத்துல குதிச்சிட்ட மாதிரி தெரியுதே நந்தினி.. இதெல் லாம் கொஞ்சமாவது நல்லா இருக்கா?''

கணேசன் நேராகவே கேட்டு விட, அவளும் அவனை ஒரு சுற்று சுற்றி வந்தவளாக.. ''போய் கடைல உக்காந்து பொழப்பக் கவனி. இங்க நான் என்ன பண்றேன்.. அவ என்ன பண்றானு நோண்டற வேலை எல்லாம் வேண் டாம்.. புரியதா?'' என்றாள் சற்றுக் கோபமாக. அதைக் கேட்டபடி வந்த ரஞ்சனிக்கும் ஒரு மாதிரி இருந்தது. ஆனால் கணேசன் அசரவில்லை.

''இதோ பார்... நீ இப்படி எல்லாம் பேசறதால நான் ரோஷத்தோட கோவிச்சுக்கிட்டுப் போயிடுவேன்னு நினைச் சுடாதே. உன்ன மாதிரி மனசுல அழகில்லாத ஜென்மங் களுக்கெல்லாம் வீரப்பன் மாதிரி புருஷன் வந்தாதான் அடங்குவே நீ..'' என்று ஒரு போடும் போட்டான். ரஞ்சனி யும் அதை ரசித்தாள்.

லட்சுமியும் எண்ணெய்க் கையுடன் ஹாலுக்கே வந்து ''என்ன சத்தம்.. ஏண்டி என்னடி. இது.. எதுக்குடி இப்படி பவுடரைப் பூசிக்கிட்டு வந்து நிக்கறே.. பொண்ணு பார்க்க

வரப் போறது பெரியவளுக்குடி.. உனக்கில்ல..'' என்று அவளும் தன் பங்குக்கு ஆரம்பித்தாள்.

''இதைத்தான் அத்தை நானும் சொன்னேன். என்னை 'வாய மூடிக்கிட்டு இரு'னு சொல்றா உன் அருமை ரெண்டாவது பொண்ணு..''

''போடி.. போய் சாதாரணமா சேலையை. கட்டிக்கிட்டு, நாடார் கடையில ரீஃபைண்ட் ஆயில் ஒரு லிட்டர் வாங்கிட்டு, அப்படியே வாஷிங் பவுடர் ஒரு பாக்கெட்டும் வாங்கிட்டு வா..''

லட்சுமி, நந்தினியை காக்கையை விரட்டுவது போல விரட்டினாள். பதிலுக்கு முறைத்த நந்தினி ''ஏன் இவளைப் போகச் சொல்ல மாட்டியா..? இவ போனா கடைக்காரர் தரமாட்டாரா?'' என்று திருப்பிக் கேட்டாள்.

அதுவரை அங்கே இல்லாத கருணாகரனும் மாடியில் இருந்து இறங்கி வந்தவராக நந்தினியை முறைத்துப் பார்த்தார். அந்தப் பார்வையை அவளால் தாள முடியவில்லை. வேகமாகத் தலையைக் கலைத்துக்கொண்டு, முகத்தையும் பரபரவென்று தேய்த்துக் கொண்டவளாக, ''இப்ப உங்களுக்கெல்லாம் திருப்தியா?'' என்று கேட்டபடியே கடைக்கும் புறப்பட்டுப் போனாள்.

''எந்த நேரத்தலடி இவளப் பெத்தே.. எப்பவும் எல்லாத்துலயும் கோணலாவே யோசிக்கறாளேடி.'' என்று கருணாகரனும் வெதும்பிட, ''எல்லாம் அப்படியே உங்க ரத்தம்... நான் என்ன பண்ணட்டும்?'' என்று லட்சுமியும் பதில் கூறிட, எல்லாமே பெரியவர் சதாசிவம் காதுகளிலும் விழுந்து கொண்டிருந்தது.

அவர் முகத்தில் ஒரு மந்தகாசமான புன்னகை. அதை கவனித்த ரஞ்சனி நிதானமாக பெரியப்பா அருகில் போய் அவரது கட்டிலில் அமர்ந்தாள்.



''என்ன பொடுசு..?''

''பெரியப்பா.. நான் பொடுசு இல்ல.. ரஞ்சனி..''

''எனக்கு நீ பொடுசுதான் எப்பவுமே.. ஆமா, நீ மேக்கப் போட்டுக்கலையா?''

''என்ன பெரியப்பா.. என் வாயைக் கிளர்றீங்களா?''

''இல்லேன்னாலும் நீ வாயே திறக்காதவ பாரு..''

''நான் உங்ககிட்ட வந்ததே வேற விஷயம் பேச..''

''அப்ப அந்த பேராசைக்காரியைப் பத்தி இல்லைங்கறே..''

''நிச்சயமா இல்லை..''

''சரி பேசு.. நீ என்ன பேசுறனு நானும் பார்க்கறேன்..''

''ஆமா.. நீங்க ஏன் பெரியப்பா கல்யாணமே பண்ணிக்கல..?''

''எதுக்கும்மா.. உங்கப்பன் உங்க மூணு பேரைப் பெத்துட்டு, எப்படி கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போறோமோனு படாத பாடு பட்டுக்கிட்டிருக்கானே.. அந்தப் பாட்டை நானும் படறதுக்காகவா?''

''அப்ப, பிள்ளை குட்டிகளுக்கு பயந்துகிட்டு தான் ஒண்டிக்கட்டையாவே இருந்துட்டீங்களா?''

''சேச்சே.. அப்படி எல்லாம் இல்லடா. நான் சும்மா சொன்னேன். கல்யாணம்னு ஒண்ணு நடந்து பொண்டாட்டினு ஒருத்தி வந்து, பிள்ளை குட்டிகனு பெருகி வாழறதுக்கும் ஒரு கொடுப்பினை வேணும்மா. அது உங்கப்பனுக்கு இருந்துச்சு.. மகாலட்சுமி மாதிரி உங்கம்மாவும் வந்தா... நீங்களும் பொறந்தீங்க. ஆனா நான்தான் பாவி ஆச்சே..''

சதாசிவம் பெருமூச்சுடன் முடித்தபோது, விழியோரம்

கண்ணீர் தளும்பி நின்றது. ரஞ்சனிக்கும் கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டு விட்டோமோ என்று தோன்றியது.

''ஸாரி பெரியப்பா.. நான் சாதாரணமா கேட்டது உங்களை இவ்வளவு தூரம் வருத்தப்பட வைக்கும்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை.. நீங்க பாவிங்கறதையும் நான் ஏத்துக்க மாட்டேன்.. நீங்க மனசு வெச்சிருந்தா நிச்சயம் கல்யாணம் ஆகியிருக்கும். எதனாலயோ நீங்க அப்ப வேண்டாம்னு இருந்திட்டு இப்ப வந்து பாவின்னா என்ன பெரியப்பா அர்த்தம்?''

ரஞ்சனி இதமான குரலில் கேட்டபோது, அவர் விசும்பி அழவே தொடங்கிவிட்டார். அவர்களின் அவ்வளவு பேச்சையும் அறைக்குள் அமர்ந்து கொண்டு கேட்டபடி இருந்த ராதாவை பெரியப்பாவின் அழுகை சற்று கலவரப் படுத்தியது.

எழுந்து வந்து இருவர் அருகிலும் நின்றவள். ''பெரியப்பா அழாதீங்க.. உங்களுக்குத்தான் நாங்க எல் லாரும் இருக்கோமே.. ஏண்டி உனக்கு அறிவில்லை? இப்படியா நேரம் கெட்ட நேரத்தில கண்ட கேள்விய கேட்பே?'' என்று ரஞ்சனியையும் ஒரு வாங்கு வாங்கினாள்.

''ஸாரிக்கா... வெரி வெரி ஸாரிக்கா...'' ரஞ்சனியும் வெளியில் போனாள்.

நல்லவேளை! கருணாகரன், லட்சுமி என்று யாரும் வந்து என்னவென்று கேட்கவில்லை. நந்தினியும் கடைப் பக்கம் போய் விட்டது வசதியாக அமைந்துவிட்டது. இவ் வேளையில் நந்தினி இருந்து ராதா இப்படி கேட்டிருந் தால், பதிலுக்குத் திருப்பிக் கேட்டிருப்பாள். விஷயம் பெரியதாய்ப் பற்றி எரிய ஆரம்பித்திருக்கும்.

ராதா ரஞ்சனியை அதட்டியதோடு, சதாசிவத்தையும் அருகில் சென்று அமர்ந்து அணைத்துக் கொண்டாள்.



கணேசன் எங்கிருந்தோ எட்டிப் பார்த்து ரஞ்சனியை அருகில் வரும்படி சமிக்ஞை செய்தான். ரஞ்சனியும் அவனருகே சென்றாள்.

''இப்படி வா.. அந்தக் கதவை சாத்து..'' என்றான். அவளும் சாத்தினாள்.

''என்னா ரஞ்சனி நீ.. உன் பெரியப்பாகிட்ட எதைப் பத்திப் பேசவே கூடாதோ, அதைப் போய்ப் பேசி யிருக்கே?''

''ஸாரி கணேஷ்.. நான் சாதாரணமாதான் கேட்டேன்.''

''அது எனக்கும் தெரியும்.. ஆனா பெரியப்பா கல்யாண விஷயம், நினைச்சுப் பார்க்கவே முடியாத ஒரு கொடுமை. அதனால் நீ அந்த பாய்ன்ட்டைத் தொடவும் கண் கலங்கிட்டார்.''

''அப்படின்னா, அவருக்குக் கல்யாண முயற்சி எல்லாம் நடந்துச்சா?''

''முயற்சி என்ன முயற்சி.. கல்யாணமே நடந்துச்சு?''

''என்னது.. பெரியப்பாவுக்குக் கல்யாணம் நடந் துச்சா.. அப்ப எங்கே பெரியம்மா?''

''உங்க பெரியம்மாவுக்கு உங்க பெரியப்பாவை சுத்தமா பிடிக்கல. அவங்களுக்கு, கல்யாணத்துக்கு முந்தியே ஒரு காதலன் இருந்துருக்கான். இதை மறைச்சு தான் கல்யாணமே நடந்துச்சு. கல்யாணமாகவும் அவங் களும் அவன் நினைப்பாவே இருந்தாங்க. அதைத் தெரிஞ் சுக்கிட்ட உங்க பெரியப்பாவும் ஒரு நிமிசம்கூட யோசிக் காம, அவங்க காதலன் யாருனு தேடி, கண்டுபிடிச்சு இழுத்துக்கிட்டு வந்து இவர் கட்டின தாலியை இவர் கையாலயே அவுத்து, அவன் கைல கொடுத்து கட்டச் சொல்லி, தன் கல்யாணத்துக்குனு வந்த சீர், நகை

அவ்வளவையும் அவனுக்குக் கொடுத்து. போய் நல்லா இருநு அனுப்பி வெச்சுட்டாரு..''

கணேசன் சொன்னது ரஞ்சனிவரையில் ஒரு நம்ப முடியாத விஷயமாக மட்டுமின்றி, அதில் பெரியப்பா நடந்து கொண்ட விதம் அவளை உலுக்கி விட்டது.

அப்போது வீட்டு வாசலில் மாப்பிள்ளை வீட்டு காரின் தேக்கம்!






மாப்பிள்ளை வீட்டுக்காரைப் பார்க்கவும் ஒரு பரபரப்பு வீடு முழுக்கத் தொற்றிக் கொண்டது. கருணாகரன் கும்பிட்ட கைகளுடன் வாசல் பக்கம் நடந்தார்.

''வாங்க.. வாங்க..''

அவரது வரவேற்பை எதிர்கொண்டபடி காரில் இருந்து இறங்கியிருந்தான் மாப்பிள்ளை ஜெகதீஷ்! அவன் நெற்றியில் சிறியதாக விபூதிக் கீற்றும் குங்குமமும் தெரிந்தது ஆச்சரியம் அளித்தது. கூடவே அவனுடைய அக்காவும் அவள் கணவரும்.

மொத்தமாய் மூன்றே பேர்!

கருணாகரன் 'அவ்வளவுதானா' என்கிற மாதிரி பார்த்தார்.

''என்ன பாக்கறீங்க.. நாங்க மூணே பேர்தான்..''

''மத்த பெரியவங்க..?''

''இது என்ன கல்யாணமா.. எல்லோரும் கட்டாயம் வந்தாகணும்ங்கறதுக்கு.. அதோட, ஜெகதீஷுக்கு எதுலயும் ஆர்ப்பாட்டம் பிடிக்காது. இப்பக்கூட 'ஃப்ரெண்ட்லியா தான் போறோம்.. இந்த சாஸ்த்ர சம்பிரதாயம் எல்லாம் கிடையாது'ன்னு சொல்லித் தான் எங்கள கூட்டிக்கிட்டு வந்துருக்கான்..'' என்கிற விளக்கத்தோடு உள்ளே வந்தார் மாப்பிள்ளை ஜெகதீஷின் அக்காள் கணவனான ராகவன்.

கணேசன் ஹாலில் பெரிய ஜமக்காளம் விரித்திருந்தான். என்னவோ ஒரு பத்து, இருபது பேர் வரப்போகிற மாதிரி.. அந்த ஜமக்காளத்தை ஒட்டி போடப்பட்டிருந்த பழைய பிரம்பு நாற்காலி ஒன்றில் ஜெகதீஷும் இரும்பு

நாற்காலியில் ராகவனும் அமர்ந்து கொள்ள, ஜெகதீஷின் அக்கா சாரதா மிக சகஜமாக அவர்கள் பக்கத்தில் தரையில் அமர்ந்து கொண்டாள்.

''ஐயோ! என்ன இது கீழே உக்காந்துக்கிட்டு.. அப்படி ஜமக்காளத்துல உக்காருங்க..'' என்று பதறினாள் லட்சுமி. அதன்பின் ஜமக்காளத்தில் அமர்ந்து கொண்டாள்.

கருணாகரனுக்கு மெல்லிய அளவில் பதட்டமாய் இருந்தது. அதை கட்டிலில் அமர்ந்திருந்த சதாசிவம் புரிந்துகொண்டு சீர்ப்படுத்த முயன்றார்.

''கருணா.. நீயும் உக்காருப்பா.. லட்சுமி.. நீ முதல்ல எல்லாருக்கும் குடிக்க காஃபி கொண்டுக்கிட்டு வா'' என்றார்.

''இந்த காஃபி, சொஜ்ஜி, பஜ்ஜி எல்லாம் அப்புறம், முதல்ல பரஸ்பரம் பேசுவோம்! நாங்க யாரும் ஆகாசத்துல இருந்து குதிச்சிடலை. இப்படி வந்து உக்காருங்க. முதல்ல மனசுவிட்டுப் பேசுவோம். அப்புறமா மத்ததெல்லாம்..'' என்று சாரதா சூழ்நிலையின் இறுக்கத்தைத் தளர்த்தினாள்.

ஜெகதீஷ் அந்தப் பிரம்பு நாற்காலியில் தலையைத் தாழ்த்திக் கொண்டு, செல்ஃபோனில் யாருக்கோ மெஸேஜ் அனுப்புவதுபோல அமர்ந்திருந்தான். நந்தினி தனது அதீத மேக்கப்பை ஓரளவு கலைத்துக் கொண்டு, வைத்த கண்வாங்காமல் அவனையே பார்த்தபடி இருந்தாள். அவளுக்கு அருகிலேயே ரஞ்சனியும்.

சாரதா அவர்கள் இருவரையும் அருகில் அழைத்தாள். நந்தினியின் கலைந்த மேக்கப்பைப் பார்த்தே, ''நீதான் கல்யாணப் பொண்ணா.. இப்படி உக்காரும்மா'' என்றாள்.

''ஐய்யோ இவ நந்தினி.. ராதாக்காதான் கல்யாணப் பொண்ணு'' என்று ரஞ்சனி, சாரதாவுக்கு வேகமாய் பதில் அளித்தாள்.



''ஓ.. உனக்கும் கல்யாண வயசுபோல இருக்கே..?''

''ஆமாங்க.. பெரியவளுக்கு ஆன உடனேயே இவளுக்கும் பார்த்து முடிக்க வேண்டியதுதான்..'' என்று இடையிட்டார் கருணாகரன்.

''கருணாகரா.. எல்லார்க்கும் எல்லாரையும் முதல்ல அறிமுகம் செய். ராதாவையும் கூப்பிடு. கூடத்துல வந்து உக்காரட்டும்..'' சதாசிவம் பேச்சை முறைப்படுத்த முயன்றார்.

கருணாகரனும் தன் மனைவியை, சதாசிவத்தை மற்றும் தன் பெண்களை என்று எல்லோரையும் அறிமுகப் படுத்தினார். எதனாலோ கணேசனை விட்டு விட்டார். அது ராதாவை சற்று நெருடியதோ என்னவோ.. ''அப்பா.. கணேசன் அத்தானையும் அறிமுகம் செய்யுங்க!'' என்று பொறுப்போடு பேசினாள்.

''அடடே.. இவன் விட்டுட்டேன் பாரு.. இவன் பேர் கணேசன். என் மச்சினன் மகன். இவனுக்கு எங்க வீட்டு முன்னாலயே ஒரு டெலிஃபொன் பூத்தும் ஜெராக்ஸ் மெஷினும் வெச்சுக் கொடுத்துருக்கேன்'' என்று கணேசனுக்கு ஒரு அறிமுகத்தை முடித்தார்.

''இவருக்குக் கல்யாணம் ஆகிடுச்சா,'' என்ற அடுத்த கேள்வியை கருணாகரன் எதிர்பார்க்கவில்லை.

''இவனுக்குக் கல்யாணமா.. இல்லைங்க.. நல்லா இருக்கற என் பசங்களுக்கே நான் சிரமப்படும்போது, இவனுக்குப் பொண்ணு கிடைக்கறது என்ன அவ்வளவு சுலபமா? முடத்துக்கு முடம்னு யாராவது கிடைச்சா இவனுக்கும் பண்ணிட வேண்டியதுதான்''

கருணாகரன் பேச்சில் யதார்த்தம் இருப்பது போலவும் தெரிந்தது. ஒரு அலட்சிய பாவனையும் எட்டிப் பார்த்தது. அது ராதாவை மிகவே பாதித்தது. ஆனால்

கணேசன், துளிக்கூட அதனால் பாதிக்கப்பட்டது போல் காட்டிக் கொள்ளவில்லை.

''மாமா.. இப்ப என் கல்யாணம்தான் ரொம்ப முக்கிய மாக்கும்.. ராதா விஷயத்தப் பேசுங்க சம்பந்தியம்மா.. எங்க ராதா ரொம்ப தங்கமான பொண்ணு. வீட்டு வேலை, சமையல், தையல்னு பிச்சு உதறுவா. மார்கழி மாசத்துல தெருவுல பத்தாயிரம் புள்ளிக்கோலம்னு ஒண்ணு போடுவா பாருங்க..'' - கணேசன் ராதாவுக்கான சிறப்புகளை தனக்குத் தெரிந்த விதத்தில் பேசத் தொடங்கினான்.

''ஆமாம்மா.. ராதா இந்த வீட்டு மகாலட்சுமி..'' சதாசிவம் பெரியப்பாவும் வழிமொழிந்தார்.

''உங்க பொண்ணப் பத்தி நீங்க சொல்லிட்டீங்க. எங்க பையனப் பத்தி நாங்களும் சொல்லணும்ல? எங்க ஜெகதீஷுக்கு நிறைய தெய்வ பக்தி. விபூதி வெச்சுக்கக் கொஞ்சம்கூட வெக்கப்பட மாட்டான். சின்ன வயசுலயே அப்பா, அம்மாவை இழந்துட்டான். எங்க அரவணைப்புல தான் வளர்ந்தான்.

யுனிவர்சிடில கோல்டு மெடலிஸ்ட். இப்ப நல்ல வேலையில கை நிறைய சம்பாதிக்கறான். சொந்தமா வீடு இருக்கு. எந்தப் பிக்கல் பிடுங்கலும் கிடையாது..''

மாப்பிள்ளை ஜெகதீஷின் மாமாவான ராகவனும் ஜெகதீஷைப் பற்றி சொல்லி முடித்தார். அவர் சொல்லி முடிக்கவும் நந்தினியின் பார்வை ஜெகதீஷை நேருக்கு நேர் ஊடுருவியது. மார்பு பெருமூச்சில் மேலெழும்பிப் பின் சரிந்தது. யார் கவனித்தார்களோ இல்லையோ.. அருகில் அமர்ந்திருந்த ரஞ்சனி கவனித்து மெல்ல நந்தினி யின் தொடையையும் கிள்ளினாள்.

''ரொம்ப சந்தோஷம்.. பொண்ணுக்கும் மாப்ளைக்கும் பிடிச்சிருந்தா நாம அடுத்த லௌகீகத்துக்குப் போயிட லாம்'' என்றார் பெரியப்பா சதாசிவம்.



''என்ன ஜெகதீஷ்.. பொண்ணப் பிடிச்சிருக்கா உனக்கு..?''

சாரதா நேராகவே கேட்டாள்.

''அவங்களுக்கு என்னை பிடிச்சிருக்கானு கேளக்கா..''

''அதுவும் சரிதான்.. என்னம்மா சொல்றே! உனக்கு என் தம்பியைப் பிடிச்சிருக்கா?''

சாரதா அடுத்த நொடியே சுற்றி வளைக்காமல் நேராகவே கேட்டாள். ராதாவிடம் ஒருவிதத்திணறல்.

''நீங்க தனியா போய் மனம்விட்டுப் பேசறதா இருந்தா பேசிக்கலாம். என் தம்பிக்கு சிகரெட், தண்ணினு எந்தப் பழக்கமும் கிடையாதுங்கறது எனக்கு நல்லாத் தெரியும்'' சாரதாவின் கலகலப்பான இணைப்பு முறை, லட்சுமியின் கண்களில் ஈரம் பூக்கச் செய்தது.

மீண்டும் நந்தினி மார்பில் பெருமூச்சு.. ரஞ்சனியின் தொடைத்திருகல்..

ராதாவிடமோ நிஜமாகவே நெஞ்சு நிரம்பிய ஒரு நெகிழ்ச்சி. ஒரு பொருளின் மேல் விருப்பத்தை வெளி யிடுவதுபோல, தன் விருப்பத்தை வெளிப்படுத்த அவ ளுக்கு வெட்கமாகக்கூட இருந்தது.

அந்த 'கேப்'பில் நந்தினிடம் ஒரு பாய்ச்சல்.

''ஏய் ராதா.. உனக்குப் பிடிக்கலேன்னா சொல்லிரு.. நானோ.. இல்லை ரஞ்சனியோ சம்மதம்னு சொல்லிட றோம்..'' என்றாள்.

கருணாகரனுக்கும் லட்சுமிக்கும் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது.

''என்ன நந்தினி.. இப்படிச் சொல்லி ராதாவைத் தூண்டி விட்றியா. அவ ஒண்ணும் உன்ன மாதிரி விளை யாட்டுப் பிள்ளை இல்ல.. தெரிஞ்சுக்கோ...!'' என்று

ராதாவின் வெட்கம் கலந்த மௌனத்தை நியாயப்படுத்திய கணேசன், அதில் நந்தினியையும் இழுத்துக் கட்டி சமாளித்தான்.

நல்லவேளையாக ராதாவே குனிந்த தலைநிமிராத படி, ''பெரியவங்க விருப்பம் எதுவோ அதுதான் என் விருப்பமும்'' என்று எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

கருணாகரன், 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டவராக சுவற்றில் காலண்டரில் தெரிந்த திருப்பதி பெருமாள் படத்தைப் பார்த்து, கன்னத்தில் போட்டுக் கொண்டார். லட்சுமி கண்களில் துளிர்த்துவிட்ட கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

''அப்புறம் என்ன.. இனி நாம ஒருத்தருக்குள்ள ஒருத்தர்! லட்சுமி.. போய் சாப்பிட எல்லாம் எடுத்துக்கிட்டு வா. கருணாகரா.. அப்படியே லௌகீகத்தையும் பேசி முடிச்சிடு..'' என்று பெரியப்பா சதாசிவம் மளமளவென்று அடுத்த கட்டத்திற்குள் நுழைந்தார்.

''நீங்க எதைச் செய்யணுமோ அதை செய்யுங்க. நல்ல கல்யாண மண்டபத்துல, நல்லபடியா கல்யாணம் செய்து தரணும்ங்கறது மட்டும்தான் எங்க எதிர்பார்ப்பு. மற்றபடி இவ்வளவு பவுன் போடுங்க.. இவ்வளவு வரதட்சணை கொடுங்கனு பெருசா எந்த எதிர்பார்ப்பும் எங்களுக்குக் கிடையாது.''

சாரதா லௌகீகப் பேச்சுவார்த்தையை மிக சாதாரண ஒன்றாக்கி விட்டாள். சிலிர்த்து விட்டாள் லட்சுமி.

''அம்மா.. நாங்க இந்தப் பெண் பாக்கற சடங்கை நினைச்சு ரொம்பவே பயந்துக்கிட்டிருந்தோம். இது நல்ல விதமா முடியணும்னு வேண்டாத தெய்வம் இல்லை. ஆனா இது இவ்வளவு நல்லவிதமா முடியும்னு நான் எதிர்பார்க்கல'' என்று கருணாகரன் அப்போதே, அவர்கள் எதிரில் கைகளைக் கூப்பி நன்றி தெரிவித்தார்.



''பெண் பாக்கற சடங்கை வெச்சு ஒரு ஆட்டம் போடறதுங்கறது அந்தக் காலம். இப்பல்லாம் எல்லாமே தலைகீழா மாறிப்போச்சு. காலத்துக்குத் தகுந்த மாதிரி நாமளும் மாறிக்கிட்டாதானே நல்லா இருக்கும்?'' என்று திருப்பிக் கேட்டாள் சாரதா.

''அக்கா ஒரு திருத்தம்..'' - ஜெகதீஷ் வாயைத் திறந்தான்.

''என்னப்பா?''

''காலம் மாறிட்டதால நாம மாறிட்டோம்ங்கறது தப்புக்கா. எந்தக் காலத்துலயும் நாம இப்படித்தான் நடந்துக்கணும். அதுதான் உண்மையான சமத்துவம்..'' என்றான் ஜெகதீஷ்!

உள்ளே ராதாவின் காதுகளில் அந்தக் குரல் விழுந்தது. அதுவே ஜெகதீஷ் எந்த அளவு நேர்மையாக சிந்திப்பவன் என்பதை அவளுக்குப் புரியவைத்து விட்டது.

உடை மாற்றி வரப் போயிருந்த ரஞ்சனியும் வந்து விட்டிருந்தாள். ராதாவின் முகத்தில் தெரிந்த தெளிவையும் ஒளியையும் பார்த்து அவளுக்கும் புரிந்து விட்டது.

''ராதா.. கொஞ்ச நேரத்துக்கு முந்தி நல்ல புடவை கட்டிக்க நீ என்னவெல்லாம் பேசினே.. இப்ப மாப்பிள்ளையை நினைச்சு ஜொள்ளு உட்றபோல இருக்கு..'' என்று சீண்டினாள். வெட்கத்தில் ராதாவின் முகம் சிவந்துவிட்டது.

பதிலுக்கு நந்தினியிடம் மட்டும் ஒருவித சிடுசிடுப்பு. ''இதேமாதிரி ஒரு இடம் மட்டும் எனக்கு அமையல.. இந்த அம்மா. அப்பாவை நான் சும்மா விட மாட்டேன்..'' என்று ரஞ்சனியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்!

மறுநாள்..

வீட்டுப் பத்திரத்தை எடுத்து சுவாமி படம் முன்

வைத்து கும்பிட்டபடி இருந்தார் கருணாகரன் கும்பிட்டு முடித்த கையோடு சதாசிவத்திடம் வந்தார்.

''என்னப்பா..?''

''நான் பேங்க்வரை போய்ட்டு வந்துடறேண்ணே..''

''வீட்டுப் பத்திரத்தை வெச்சு எவ்வளவுப்பா கடன் வாங்கப்போறே?''

''அஞ்சு லட்சம் கேக்கலாம்னு இருக்கேண்ணே.. கையில ரெண்டு லட்சம் இருக்கு.. கல்யாணச் செலவும் அவ்வளவுதான் வருது..''

''அஞ்சு லட்சத்துக்கு வட்டி எவ்வளவுப்பா விழுவுது..?''

''ஐயாயிரத்துச் சில்லறை விழுவுதுண்ணே.. அதை எல்லாம் பாத்தா வேலைக்கு ஆகாதுண்ணே. மாப்ள வீட்ல கல்யாணத்த நல்லபடியா செய்து தரச் சொன்னது மனசுல ஓடிக்கிட்டே இருக்கு! எதையுமே கேக்கல அவங்க! கல்யாணத்த நல்லா பண்ணித் தர வேண்டியது நம்ப கடமையில்லையா?''

''வாஸ்தவம்தான். அதுக்காக இருக்கற வீட்டை வெச்சு அளவுக்கு மேல சுமையை ஏத்திக்கக் கூடாதுல்ல..?''

''இது ஒரு சுமையே இல்லண்ணே.. ராதாவுக்கு அவ மனசுக்கேத்த இடம் அமைஞ்சிருக்குது. கல்யாணத்த ஒரு குறையுமில்லாம முடிச்சுத் தர வேண்டியது நம்ப கடமைண்ணே. அதுக்காக நான் இன்னும்கூட கடன் படத் தயாரா இருக்கேன்..''

உற்சாகமாகப் பேசிவிட்டு பத்திரத்துடன் புறப்பட்டார் கருணாகரன். வாசல் தாண்டும் முன் கல்யாணப் பத்திரிகையின் மாதிரியோடு எதிரில் வந்தான் கணேசன்.

கருணாகரனுக்கு அவன் நொண்டியபடி வந்தது ஒரு கெட்ட சகுனம் போலாகி விட்டது. ''இவன் ஒருத்தன்..



எப்ப எதிரில் வருவான்னே தெரியாது. ஏண்டா.. கரெக்ட்டா நான் நல்ல விஷயமா போகும்போதுதான் வருவியா?''

''ஏ மாமா?''

''என்ன ஏ மாமா.. ஓ மாமா? போற காரியம் நல்ல விதமா நடக்க வேண்டாமா?'' கணிசமான கோபம் அவர் குரலில் வெளிப்பட்டது.

''மாமா.. நான் கல்யாணப் பத்திரிகையைக் காட்ட வந்தேன். நீங்க பேசறதும் எனக்குப் புரியல''

''மண்ணாங்கட்டி. நீ ஒண்ணும் உன் நொண்டிக் காலப் போட்டுகிட்டு இந்தக் கல்யாணத்துல கஷ்டப்பட வேண்டாம். போய் உன் பொழப்பக் கவனி. நாங்க பாத்துக்கறோம்..'' கருணாகரனின் சென்டிமென்ட்டான கோபம், உள்ளே ராதாவை ஒரு கலக்கு' கலக்கிவிட்டது.

கணேசன் பதிலுக்கு எதுவும் பேசாமல் கல்யாணப் பத்திரிகையை வைத்துவிட்டு, திரும்பிச் செல்லத் தொடங்கினான்.

ராதா வெளியில் வந்து கருணாகரனைப் பார்த்து முறைக்கத் தொடங்கினாள்!

## 4



கணேசனுடன் வருத்தமாய்ப் பேசி விட்டு திரும்பி வீட்டுக்குள் வந்த கருணாகரன் வெறித்தபடி நிற்கும் ராதாவைத்தான் பார்த்தார்.

''என்னம்மா பாக்கறே.. போய்க் கொஞ்சம் குடிக்கத் தண்ணி கொண்டா'' என்றார்.

ராதாவும் ஒரு செம்பில் எடுத்து வந்து தந்தாள். கொஞ்சம்போல குடித்துவிட்டு, நீரோடு செம்பைத் திரும்பித் தந்தார்.

''என்னப்பா குடிக்க தண்ணி கேட்டீங்க.. ஒருவாய் குடிச்சிட்டு திருப்பித் தர்றீங்க..?''

''சாஸ்த்ரத்துக்குத்தானம்மா கேட்டேன்..''

''சாஸ்த்தரமா..?''

''ஆமாம்மா.. ஒரு நல்ல விஷயமா போகும்போது சகுனங்களும் நல்லா இருக்கணும். இல்லாட்டி இப்படி திரும்பி வந்து தண்ணி குடிச்சிட்டுப் போனா நல்லதுன்னு சொல்வாங்க..''

''யாருப்பா சொல்வாங்க..''

''அதான் சாஸ்த்ரத்துல சொல்லியிருக்குனு சொன்னேன்ல.. சும்மா தொணதொணன்னு கேட்டதையே கேட்டுக்கிட்டு..''

''அதுக்கில்லப்பா.. அதே சாஸ்த்ரத்துலதான் பிறர் மனசு புண்படாம நடந்துக்கணும்னும் சொல்லியிருக்கு. அதை நீங்க மறந்துட்டீங்களேப்பா...''

ராதாவின் பதிலின் முன் கருணாகரன் சூடு பட்டது போல நிமிர்ந்தார்.



''தப்புப்பா.. கணேஷ் அத்தான் ரொம்பப் பாவம்! அதுக்கு ரொம்ப நல்ல மனசு. அது எதுற்க வந்ததுக்காக நீங்க சாஸ்த்ரம் பாக்கறது சரியில்ல. அதுன்னு இல்ல.. எந்த ஊனமுற்றவர்கள் எதிர்ல வந்தாலும் சரி.. அவங்களுக்காக சாஸ்த்ரத்தைத் துணைக்குக் கூட்டிக்கறது எனக்கு சரியாப் படலை. ஒரு நல்லது நடக்கணும்ங்கறதுக்காக இன்னொரு நல்லத்தைக் கிள்ளிப் பாக்கறது எந்த விதத்துலப்பா சரி..?''

கேட்டு விட்டு ராதா உள்ளே போய் விட்டாள். கருணாகரனுக்கு தன் தவறு தெரியாது போலவும் இருந்தது. அதேசமயம் ராதா புரிந்து கொள்ளாமல் பேசுகிறாற் போலவும் இருந்தது. அமைதியாக உட்கார்ந்து விட்டவர் முன் லட்சுமி நின்றாள்.

''நீ என்ன சொல்லப் போறே..?''

''நான் என்ன சொல்ல... அதான் பெரியவளே எல்லாத்தையும் சொல்லிட்டாளே. நீங்க புறப்படலியா...?''

''புறப்படறேன். வர வர இந்த வீட்ல யார் பெரியவங்கன்னே தெரிய மாட்டேங்குது..'' கருணாகரன் குரலில் வருத்தம் தொனித்தது. அதுவரை பேசாமலிருந்த சதாசிவம் அதைக் கேட்டுவிட்டு சிரிக்கத் தொடங்கினார்.

''பாரு.. இவரு ஒரு பக்கம் தொடங்கிட்டாரு..''

''ஆமாண்டா.. தொடங்காம என்ன எண்ண? நீ சின்னப்புள்ளத்தனமா நடந்துக்கிட்டே.. அதுல இருந்து வெளிய வராம சிறுபுள்ளத்தனமாவே யோசிக்கிறியே. பெரியவள நினைச்சு சந்தோஷப்படுடா..! அவ உன் பொண்ணுங்கள்ல மட்டும் பெரியவ இல்லடா.. எல்லாத்துலயுமேகூட பெரியவளாதான் இருக்கா.

இந்த வீட்ல யார் பெரியவங்கன்னே தெரியலியேன்னியே.. வயசுல பெரியவங்க, சிறியவங்க கிடையாது.

செயல்தான் பெருசு சிறிசு இருக்கு.. அதை வெச்சுப் பாத்தா ராதாதான் பெரியவ. நெஜமா சொல்றேன். அவ இந்த வீட்டை விட்டு இன்னொரு வீட்டுக்குப் போகப் போறதை என்னால நினைச்சே பாக்க முடியல. அவ ளோடயே எல்லாமே போயிடுமோன்னு பயமா இருக்குது'' என்று அவர் சொல்லி முடிக்கும்போது அவர் நெஞ்சுக் கூட்டில் ஒரு விம்மல். கண்களிலும் ஈரச் சேர்க்கை. லட்சுமிக்கும் அவர் பேசியது மனதைப் பதைத்துவிட்டது.

“சரிதான்.. அங்க தொட்டு இங்கு தொட்டு கடைசிய அவ போற இடத்துக்கு வந்துட்டீங்களா..? எனக்குக் கூடத்தான் என் மக எங்க உசுர் போறவரை எங்ககூடயே இருக்கணும்னு இருக்கு. ஆனா பொம்பள ஜென்மத்துக்கு பொறந்த இடங்கறது 'சாஸ்வதம் கிடையாதே. போற இடம்தானே அவளுக்கு சாஸ்வதம்..?''

''அட நீ வேற.. எவ்வளவோ விஷயங்கள் மாறிப் போச்சு. இந்த பொறந்த வீடு, புகுந்த வீடுதானா மாறக் கூடாது? எது எதுக்கோ போராட்ற இந்த மாதர் சங்கத்தச் சேர்ந்தவங்க, ‘இனி வரப்போற ஒரு நூறு நூத்தம்பது வருசத்துக்கு ஆம்பளைதான் பொறந்த வீட்டை விட்டு மாமனார் வீட்டுக்கு வந்து அந்த வீட்டோட இருக்கணும். அப்படீன்னாதான் பொம்பளங்க கல்யாணத்துக்கு சம்ம திப்போம்’னு சொல்ல வேண்டியதுதானே..?''

சதாசிவம் சீரியஸாகப் பேசுகிறாரா.. இல்லை, வேடிக்கையாகப் பேசுகிறாரா என்று கணிக்க முடியவில்லை.

''எப்படி எப்படி.. மாப்ளை மாமனார் வீட்டோட இருக்கணுமா? உங்க வீட்டுப் பொண்ணுங்க உங்கள விட்டுப் போயிடக் கூடாதுங்கறதுக்காக, மாதர் சங்கங்கள் தெருவுல இறங்கிப் போராடணுமா? நல்லா இருக்குதே..! பெரியப்பா.. எப்படி பெரியப்பா இப்படி எல்லாம் உன்னால யோசிக்க முடியுது?''



சின்னவள் ரஞ்சனியும் சந்தடி சாக்கில் உள்ளே நுழைந்து கோல் போட்டாள். அதைத் தொடர்ந்து சதாசிவத் திடம் சிரிப்பு. நந்தினியிடம் மட்டும் எரிச்சல். ராதாவுக் காக அவர்கள் இப்படிப் பேசுவதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

''இப்ப என்ன... ராதாக்கா கல்யாணமாகிப் போனா லும், அது பேசற நியாயத்தக் கேட்டு, பையன் வீட்ல எப்படியும் அக்காவைத் துரத்தி விட்டுடுவாங்க. அப்புறம் அவ வேற எங்க போக முடியும்? இங்கதானே வந்தாகணும்? பேசணுமா..?

''வேண்டாம்.. அந்தப் பெரியவளுக்காகப் பேசப் போய் என்கிட்ட சிக்கி வருத்தப்பட வேண்டாம்..''

வார்த்தைக்கு வார்த்தை இருவரும் முட்டிக் கொள்ள வும், அதுவரை பொறுமையாக இருந்த கருணாகரன் எழுந்து வந்து நந்தினியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்.

''என்ன நினைச்சுட்டிருக்கே உன் மனசுல? அவர் இந்த வீட்டுப் பெரியவர். என் அண்ணன்! நீ என்னமோ பெரிய மகாராணி மாதிரியும், அவர் என்னமோ உன் அடிமை மாதிரியும்ல நடந்துக்கறே?'' என்று அடித்த வேகத்தில் குமுறினார்.

உள்ளே தையல் மெஷினைத் துடைத்தபடி இருந்த ராதா, விஷயம் ‘அறை’ வரை போகவும் ஓடி வந்தாள்.

நந்தினி கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு கருணாகரனை வெறித்துக் கொண்டிருந்தாள்.

''அப்பா.. நீங்க புறப்படுங்க.. போய் நீங்க பார்க்க வேண்டிய வேலையப் பாருங்க. இவ ஏதோ பேசினாங் கறதுக்காக அடிக்கறதெல்லாம் கொஞ்சம் கூட நல்லா

இல்லப்பா.. போங்கப்பா..'' என்று அவருக்கு வாசலை நோக்கிக் கையை காட்டினாள். அவரும் புறப்பட்டார்.

''போடாப்பா போ.. சகுனம் சரியில்லன்னு நீ உள்ள வந்ததுல எவ்வளவு பிரச்சினை பார்.. அப்படியே போயிருந்தா யாருக்கும் எந்தப் பிரச்சினையும் வந்துருக் காது. சகுனமாம் சகுனம். மண்ணாங்கட்டி..'' என்று பெரியவர் சதாசிவமும் முணுமுணுத்தார்.

''சரிடி.. போ போய் உன் வேலையைப் பார்...''

ராதா நந்தினியை சமாதானப்படுத்த முயன்றாள்.

''என்ன.. உனக்கு இப்ப திருப்தியா..?''

''என் திருப்திக்கு என்னடி இருக்கு இதுல..?''

''உன்னப் பத்தி பேசினதுக்குத்தானே இந்த அடி..?''

''நீ எப்பவும் எதையும் நேராவே பாக்க மாட்டியா? பெரியப்பாகிட்ட நீ மரியாதை இல்லாம பேசினதுக்கு தான் அப்பா உன்னை அடிச்சாரு. அதைப் புரிஞ்சுக்கோ..''

''நான் இந்த ஆள் விஷயத்துல பேசாதப்போ, இவர் எதுக்கு என்கிட்ட வாயைக் கொடுக்கணும்..''

''இதோ பார். ஆள், கீள்னு மட்டமால்லாம் பேசாதே. நீ பேசினதை நான் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். நீதான் என்னப் பத்திப் பேசி மூக்கை முதல்ல நுழைச்சே..?''

''அப்படி நான் என்ன தப்பாப் பேசிட்டேன்? நீ பேசற நியாயம் பிடிக்காம உன்னை உன் மாமியார் வீட்ல இருந்து துரத்தி விடுவாங்கனு சொன்னேன். ஒரு அபிப்பிராயமா நான் அப்படிச் சொன்னதுல என்ன தப்பு இருக்கு..?''

''இன்னும் கல்யாணமே நடக்கலடி.. அதுக்குள்ள எனக்குக் கல்யாணமாகி, நான் மாமியார் வீட்டுக்குப் போய்ட்டதா நீ எங்கெங்கியோ போயிட்டியேடி...?''

''நீ என்ன சொல்றே.. உனக்குக் கல்யாணம் ஆகா துங்கறியா..?''



''இதோ பார். உன் ஆசையை எல்லாம் என்கிட்ட கேள்வியா கேக்காதே. நீ இப்படி பேசினா, அப்பாக்கு மட்டுமில்ல.. யாரா இருந்தாலும் கோவம் வரும்..''

''கோவம் வந்தா என்ன செய்வே? அப்பா மாதிரி நீயும் அடிப்பியா..?''

நந்தினி உணர்ச்சிவசப்படும் போதெல்லாம் இப்படித் தான் சிதற ஆரம்பித்து விடுவாள். அது எப்பேர்ப்பட்ட மகாத்மாவையும் கோபத்தில் ஆழ்த்திவிடும். ராதா மட்டும் விதிவிலக்கா என்ன? ஆனால் ராதா பதிலுக்கு அவளை அடிக்கவில்லை. சட்டென்று அவள் கைகளைப் பிடித்தாள்.

''நந்தா... ப்ளீஸ் விட்ரு. இது உன் கை இல்ல.. கால்னு நினைச்சுக்கோ..''

ராதாவின் கெஞ்சல் லட்சுமியை சுட்டது. வேகமாக நெருங்கி வந்தவள்,

''விட்றீ கையை.. இவ ஒரு பெரிய மனுஷின்னு இவ கையப் போய்ப் பிடிச்சுக்கிட்டு. இது நான் செஞ்ச பாவத்துல பொறந்த பீடை.. சனியன்.. இவளை முதல்ல இந்த வீட்டை விட்டு அனுப்பினா தான் இந்த வீட்ல எல்லாரும் நிம்மதியா இருக்க முடியும். முகரையைப் பார். தரித்ரம்.. தரித்ரம்..'' வெடித்தாள் லட்சுமி.

''ஐயோ அம்மா கொஞ்சம் நீ சும்மா இருக்கியா..? எப்ப எதைப் பேசணும்னு இல்லையா..?''

''என்னடி பின்ன.. ஒரு ரவுடி மாதிரி அவளே வம்புக்கு வந்து, பேசக் கூடாததை எல்லாம் பேசிட்டு நியாயத்தை வேற கேட்கறா. யாரெல்லாம் நியாயம் பேசறதுன்னு இல்லை..? இந்தக் கல்யாணம் நல்லபடியா நடந்து முடியணுமேனு இங்க வயித்துல நெருப்பைக் கட்டிக் கிட்டிருக்கோம்டி. கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம். சண்டி.. சண்டி..''

லட்சுமியால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. நந்தினிக்கும் தீயில் விழுந்தது போல் இருந்தது.

''எல்லாரும் நல்லாப் பேசுங்க.. என்னவெல்லாம் பேசத் தோணுதோ அவ்வளவும் பேசுங்க.. ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். இந்தக் கல்யாணம் நிச்சயமா நடக்காது. உன் கழுத்துலயும் தாலி ஏறாதுடி. நல்லாக் கேட்டுக்கோ.. உன் கழுத்துல தாலி ஏறாது..''

நந்தினி எரிமலையாகி விட்டாள்.

''என்ன இங்க சத்தம்? ஏன் இப்படி எல்லாரும் நந்தினியை புரிஞ்சுக்காமப் பேசறீங்க.. அவ கொஞ்சம் ஷார்ட் டெம்பர். ஆனா அவ எவ்வளவு நல்லவ தெரியுமா..?

அத்தை போங்க உள்ள... ராதா நீயும் போ.. ஏ சின்னது.. என்ன பாக்கறே. உனக்கு வேற தனியா சொல்லணுமா? போ உள்ள..

நந்தினி நீ வா இப்படி... அப்புறம் இப்ப அந்த மாப்ளை நம்ம கடைக்கு வந்தார்.. நீ கத்திக்கிட்டிருக்கிறதைப் பார்த்துட்டு என்னவோ ஏதோன்னு பயந்து திரும்பிப் போயிட்டார். இப்படியா கோபம் வந்தா கத்துவே. ராதா யார்.. உன் கூடப் பிறந்தவதானே..?''

வேகமாய் உள்புகுந்து, மளமளவென நந்தினியை சமாதானப்படுத்துவது போலப் பேசி, அப்படியே யாரைத் தொட்டுப் பேசினால் அவள் அடங்குவாளோ அவரைத் தொட்டுப் பேசி, ஒரு மாதரி அங்கே அமைதியை ஏற்படுத்தினான் கணேசன்.

ராதாவுக்குப் புரிந்துவிட்டது. மெல்ல விலகினாள்.

''ஏய் கணேஷ்... நிஜமா சொல்லு. மாப்ளை இப்ப நம்ம கடைக்கு வந்தாரா..?'' என்று அவனிடம் தன்மையாகப் பேச ஆரம்பித்தாள் நந்தினி.

''அட என்ன நந்தினி நீ.. வா! நாம கடைக்குப் போய்



உக்காந்து பேசுவோம். கல்லாவுல சொன்னபடி வாங்கி வெச்சுருக்கேன். வா..''

ஒரு நாயை மடக்கி இழுத்துச் செல்வதைப் போல அவளுடன் கணேசன் வெளியேறினான். சதாசிவம் பெருமூச்சு விட்டார்.

''லட்சுமி.. ராதாவுக்கு அமைஞ்ச மாப்பிள்ளையை இவளால தாங்க முடியல. என்னமோ இவளுக்கு உரியதைப் புடுங்கிக்கிட்ட மாதிரி நினைக்கறா. கல்யாணம் நடந்து முடியறதுக்குள்ள இன்னம் எப்படி எல்லாம் பிரச்சினை பண்ணப் போறாளோ தெரியல..'' என்றார்.

''எனக்கும் அதை நினைச்சாதான் பயமா இருக்கு. பாவம் பெரியவ. இவளாலயே அவ ஒண்ணுமில்லாமப் போயிருவா போல இருக்கு..'' என்றபடியே ராதாவை நோக்கி நடந்தாள்.

''அம்மாடி..''

''அம்மா..''

''அவ பேசியதை மனசுல வெச்சுக்காத.. அவளப் பத்திதான் தெரியுமே..''

''என்னம்மா.. நான் உனக்குச் சொன்னத நீ எனக்குச் சொல்றியா..?''

''என்னமோம்மா.. அவ ஆயிரம் பேசியிருந்தாலும் இந்தக் கல்யாணம் நடக்காதுனு அவ பேசினது என் மனசைத் தெச்சிடிச்சு. என்னதான் கோவம்னாலும் இப்படியா அபசகுனமா பேசறது..?''

''விடும்மா.. நெருப்புன்னா வாய் வெந்துடுமா என்ன..?''

''நெருப்புன்னா வாய் வேகாம போகலாம்டி.. ஆனா இப்படி பேசினா மனசு நிச்சயம் வெந்து போகும். நேரம்

காலத்துக்கும் ஒரு சக்தி இருக்கு. சில நேரங்கள்ல சிலர் பேசறது பலிச்சாலும் பலிச்சிடும்..''

''நீ தேவை இல்லாம பயப்படறே.. அப்படி எல்லாம் எதுவும் நடக்காதும்மா. இந்த வீட்ல கல்யாணம் நடந்தே தீரும். நான் இருக்கிறவரை அபசகுனமாவோ இல்ல தப்பாவோ எந்த விஷயத்தையும் நடக்க விட மாட்டேன்.''

''நீ இப்படி பேசறது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? நிஜமா சொல்றேன்.. நீ ரொம்ப நல்லா இருப்பேடி.. இந்த அம்மா உசுரோட இல்லாம போனாலும் எப்பவும் உன் பக்கத்துலதாண்டி இருப்பேன்.''

''ஐயோ அம்மா! இப்ப எதுக்கு நீ இப்படி அபசகுனமா பேசற?''

''என்னமோ என்னையும் அறியாம வாய்ல வந்துடிச்சி, விடு..''

லட்சுமி சமாளித்தாள். ஆனால் சுவற்றுப் பல்லி ஆமோதிப்பது போல 'ட்ரௌச்.. ட்ரௌச்'' என்றது!






கவுளிச் சப்தம் ராதாவை கவலைப்படுத்தியது. ஆனால் லட்சுமியோ ''பாத்தியா.. கவுளி அடிக்குது. அப்ப நான் சொன்னது சரிதான்னு அர்த்தம்..'' என்றாள்.

''போதும்மா.. அதுக்கு பசி எடுத்திருக்கும்.. சப்தம் போட்டுருக்கு. உடனே உன் விருப்பத்தோட அதை முடிச்சுப் போடறே. நீ எதுக்கும்மா செத்தும் என்னை சுத்தணும்? நீ நேரா மோட்சத்துக்குப் போகணும்மா. அங்க நீ சந்தோஷமா இருக்கணும். தப்பித் தவறிக்கூட இந்த மண்ணுல நீ திரும்ப பெண் ஜென்மமா பிறந்துடக்கூடாது. அப்படியே பிறந்தாலும் எங்கள மாதிரி பாவப்பட்ட பாரங்களை நீ சுமந்து கஷ்டப்படக்கூடாது'' என்று உணர்ச்சி ததும்ப பேசுகிறாள்.

''ராதா.. நீ எனக்கு பாரமே இல்லடி.. அதே மாதிரிதான் ரஞ்சனியும்.. ஆனா இந்த நந்தினி எனக்கு நிச்சயமா பாரம்தான்! சாதாரண பாரம்கூட இல்ல அவ.. ஒரு மலையைப் போல பாரம்..! அவ வயித்துல இருந்தப்ப உன் அத்தைக்காரி இங்க எங்ககூடதான் இருந்தா. உன் அத்தை புருஷன் ஒரு குடிகாரன். அதனால அவளோட வாழப் பிடிக்காம இங்க வந்து தங்கியிருந்தா. அப்பதான் நான் வாயும் வயிறுமா இருந்தேன்.

என்னப் பாத்துப் பாத்து பெருமூச்சு விடுவா. அதைப் பாத்து நானும் பயந்தேன்.

நீ கைக் குழந்தை அப்ப.. ஒவ்வொரு நாளும் என் வரைல நலமாதான் இருந்தது! நந்தினி என் வயத்துல இருந்த பத்து மாசமும் என் மனசுல நல்ல உணர்ச்சிகளே

இருந்ததில்லை. எப்பவும் ஒரு பயம், பட்டம்.. அப்ப உங்கப்பாவும் ஒரு சிடுமூஞ்சியாதான் இருந்தார். வருமானமும் சரியா இல்லாததால் ஒருவேளை நல்லா சாப்ட்டா இன்னொரு வேளை பழையதுதான்.

உனக்கு பால் கொடுக்கக்கூட முடியாம நான் கஷ்டப்பட்டேன். அப்ப அப்படி ஒரு தரித்திரம். அதனால என் மனநிலைலயும் சந்தோஷமே இல்லை. அது எல்லாம் அப்படியே என் கருவுல இவளுக்குள்ள இறங்கி இவளையும் சந்தேகம், படபடப்பு, பேராசைனு பண்ணிடிச்சு.." என்று லட்சுமி தந்த விளக்கம் ராதாவை வெகுவாக யோசிக்க வைத்தது.

"ஏம்மா.. வயித்துல குழந்தை உருவாகும்போது, அந்தப் பெண் மனசு சந்தோஷமா ஒரு நம்பிக்கையோட இருக்கணும்னு இதை வெச்சு தான் சொன்னாங்களா?" என்று திருப்பிக் கேட்டாள் ராதா.

"பின்ன. கர்ப்ப காலம்ங்கறது என்ன சாதாரண விஷயமா! அப்ப மனநிலை, உடல்நிலை ரெண்டுமே சம பலத்தோட ஆரோக்யமா இருக்கணும்.." என்று லட்சுமி கூறிட, ஆழமாய் உண்மை தெரிய வந்த ஒரு தெளிவு ராதாவிடம். அப்படியே வெளியே கணேசனை சந்திக்கச் சென்றாள்.

கணேசன் தன் பூத்தில் மும்முரமாய் ஒரு இஞ்ஜினீயரிங் பாடப் புத்தகத்தின் பக்கங்களை ஜெராக்ஸ் எடுத்தபடி இருந்தான். ஒரு காலில் சிரமத்தோடு நின்றபடி அவன் ஜெராக்ஸ் எடுப்பதைப் பார்த்தவளுக்கு பரிதாபமாக இருந்தது.

"கணேசத்தான்.." என்றாள். அவனும் ஜெராக்ஸ் எடுத்தபடியே ஏறிட்டு சிரித்தான்.

"உக்கார் ராதா.. நம்ம சிம்மாசனம்தான் காலியா இருக்குல்ல?"



"நீ வந்து உக்காரு.. நான் ஜெராக்ஸ் எடுக்கறேன்" என்று அவனுக்கு உதவி செய்யத் தயார் ஆனாள்.

"போதும்.. உக்காருன்னா உக்காராம எனக்கு உதவி செய்யறேங்கறியே.."

"உதவி இல்ல.. நானும் இந்தத் தொழிலை கத்துக்க விரும்பறேன்.. போதுமா..?" என்று அவன் நின்ற இடத்துக்கு அருகில் சென்று, பேப்பர்களைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள். பதிலுக்கு கணேசன் வெறித்துப் பார்த்தான்.

"என்ன பாக்கறே..?"

"வேண்டாம் ராதா.. நீ கல்யாணப் பொண்ணு.. உனக்கு வாய்ச்ச இடமும் பெரிய இடம். நீ இங்க இப்படி நின்னு வேலை செய்யறத யாராவது பார்த்து, விஷயம் அவங்களுக்குப் போய், அதனால உன் கல்யாணத்துக்கு எந்தக் கஷ்டமும் வந்துடக் கூடாது."

"ஐய்யய்யோ.. என்ன ஒரு கற்பனை! கணேசத்தான் எப்படி உன்னால இப்படி எல்லாம் யோசிக்க முடியுது?"

"கற்பனையா? உண்மை ராதா.. அதுலயும் உன் அப்பாவுக்கு எப்ப எப்படி கோபம் வரும்னே தெரிய மாட்டேங்குது. வேற யாரும் வேண்டாம். அவரே இப்ப உன்னை இங்க பாத்தா மனசு வருத்தம்தான் படுவார். இந்த நொண்டிக் கூடாரத்துல உனக்கென்ன..? வேலையைப் பாரு.."

கணேசன் ராதாவின் அப்பாவைத் தொட்டுப் பேசியது சற்று வேலை செய்தது. அவளிடம் ஆழ்ந்த மௌனம்.

"என்னைத் தப்பா எடுத்துக்காதே.. நீ கல்யாணம் ஆகறவரை இங்கல்லாம் வராதே.."

"சரி.. அப்புறம்.."

“என்ன ராதா அப்புறம்ங்கறே.. நானென்ன கதைய
சொல்றேன்..?”

“அப்படித்தான் எனக்குத் தோணுது. ஆனாலும்
உனக்கு ரொம்ப நல்ல மனசு அத்தான். ஆமா, என் அப்ப
மேல உனக்கு எந்தக் கோபமும் இல்லையே?”

“கோபமா.. அவர் எனக்கு தெய்வம். அவர் இல்
லன்னா இந்த இடமும் கடையும் ஏது..?”

“அதுக்காக மனசு வலிக்கும்படி பேசறது தப்புல்ல..?”

“அவர் வேணும்னு ஒண்ணும் பேசலையே.. அவ
இடத்துல நான் இருந்தாலும் அப்படித்தான் பேசுவே
ராதா..”

கணேசன், உடம்பில் மட்டும்தான் எனக்கு ஊனம்.
மனசில் துளி கூட கிடையாது என்று பதிலுக்கு பதில்
பேசியது ராதாவுக்கு மிகவே பிடித்துவிட்டது. அப்படியே
அவள் பார்வை அவனது டேபிள் மேல் போனபோது
அங்கே ஒரு நகைக்கடை பாஸ் புக் கண்ணில் பட்டது
கையில் எடுத்துப் பிரித்தாள். பிரபல நகைக்கடை ஒன்றில்
சீட்டுப் போடுவதற்கான பாஸ் புக் அது.

“என்னத்தான்.. நகை சீட்டெல்லாம் போட்டிருக்கே
போல் இருக்கு..?”

“ஆமா.. அது உன் கண்ணுல பட்டுடுச்சா.. போச்சு.”

“ஏன் நான் பார்க்கக்கூடாதா? பாத்தா என்ன தப்பு?”

“தப்பெல்லாம் ஒண்ணுமில்லை. கொஞ்ச
சஸ்பென்ஸா இருந்தது. இப்ப தெரிஞ்சு போச்சுல்ல..”

“இதுல என்ன சஸ்பென்ஸ்?”

“சஸ்பென்ஸ்தான்.. உனக்கு எப்படியும் பத்து
பதினைஞ்சு பவுனாவது மாமா போட்டாகணும். அப்ப
நான் ஒரு ரெண்டு பவுனோ மூணு பவுனோ கொடுத்த
உதவியா இருக்கும்னு?”

அவன் கேட்கவும் அவள் கண்கள் பனித்தது. அதற்



மேல் அவனிடம் அவளால் எதையும் பேச முடியவில்லை. மெல்லிய ஒரு சிலிர்ப்போடு நகரத் தொடங்கினாள்.

மதியம்..

சாப்பாட்டு நேரம்..

எல்லோருக்கும் சாப்பாட்டை போட்டுவிட்டு, வெளியே வீட்டுப் பத்திரத்தோடு போயிருந்த கருணாகரனுக்காகக் காத்திருந்தாள் லட்சுமி.

“அம்மா நீ சாப்பிடலை?” ரஞ்சனிதான் கேட்டாள்.

“உங்கப்பா வந்துடட்டும்மா..”

“அவர் எப்ப வருவாரோ.. நீ சாப்பிடும்மா... நான் உனக்குப் போடறேன்.”

“போடி போ.. உங்கப்பாக்குப் போடாம என்னிக்குடி நான் சாப்பிட்டிருக்கேன்..”

லட்சுமி பதில் சொல்வது தையல் மெஷினில் அமர்ந்திருந்த ராதா காதிலும் விழுந்தது.

“அப்பாதான் இப்ப இல்லையேம்மா..”

“எப்படியும் சாப்பிட வந்துதானே ஆகணும்..”

“மூணு மணிக்கோ நாலு மணிக்கோ வந்தா..”

“வரட்டும். அவருக்குப் போட்டுட்டு அப்புறம் நானும் சாப்பிடறேன்.”

“ஏன் இப்ப நீ சாப்ட்டா என்ன தப்பு?”

“நீ சின்னப் பொண்ணு.. உனக்கு சொன்னா புரியாது” என்றபோது நந்தினி அதைக் கேட்டு கோபத்துடன் வந்து, “இப்ப நீ சாப்பிடப் போறியா? இல்லையா?” என்றாள் சற்றுக் கோபமாக.

“என்னடி மிரட்றே?”

“மிரட்டாம.. அது என்ன புருசனுக்குப் போட்டுட்டுத்தான் அப்புறமா சாப்பிடுவேன்னு..? நீ எந்த காலத்துல இருக்கே?”

''இதோ பார்.. உனக்கு இதெல்லாம் புரியாது. நீ ஒரு சண்டி ஜென்மம்.. போ! போய் உன் வேலையைப் பார்..''

''அதெல்லாம் இல்லை.. எனக்கு இப்ப பதில் தெரிஞ்சாகணும். நீ இப்ப சாப்ட்டா எது கெட்டுப் போயி டும்..?''

''இதோ பார்.. புருஷனுக்குப் போட்டு அவர் சாப் பிடுறதக் கண்ணாரப் பாத்துட்டு அப்புறமா சாப்பிட்றது தான் நல்ல பொண்டாட்டிக்கு லட்சணம். தான் சாப்பிட் டுட்டு மிச்சத்தைப் போட்றது பாவம்..''

''மிச்சத்தை நீ மட்டும் சாப்டலாமா..? அது பாவமில் லையா..?''

''பைத்தியக்காரி.. நாளைக்கு உங்க மூணு பேர்கிட்ட நானும் இதைத்தான் எதிர்பார்க்கறேன். பொம்பள ஜென்மத் துக்குனு சில விஷயங்கள் இருக்கு. அதன்படி நடக்கற குடும்பம்தான் நல்லா இருக்கும்.

நான் இப்படி நடந்துக்கறது, என்னை, உங்களை எல் லாம் காப்பாத்தற இடத்துல இருக்கற உங்க அப்பாவுக்கு நான் காட்ற மரியாதையடி..''

''பேத்தல்! மரியாதையாம்.. மரியாதை! மண்ணாங் கட்டி!'' நந்தினி கோபப்படும்போது கருணாகரனும் வரும் சப்தம் கேட்டது.

''போடி.. உங்கப்பா வந்துட்டார். அவர் எதுக்க வாயாடாதே. வெளிய போயிட்டு வர்ற மனுஷர்கிட்ட ஆயிரம் கவலை இருக்கும்!'' என்று நந்தினியைத் தள்ளி விட்டாள்.

கருணாகரனும் தன் லெதர் பேக்குடன் லட்சுமியிடம் வந்தவர் பேக்கை லட்சுமி முன் நீட்டினார்.

''என்னங்க.. போன காரியம் என்னங்க ஆச்சு?''

''எல்லாம் நல்லபடியா முடிஞ்சது லட்சுமி. இதுல வீட்ட அடகு வெச்சு வாங்குன பணம் அஞ்சு லட்ச ரூபா இருக்கு. பத்திரமா பீரோவுல கொண்டு போய் வை..''



''அப்பாடா... பணம் எப்படியோ கிடைச்சிடிச்சு..''

''எப்படியோ எங்க..? இன்னிக்கெல்லாம் இந்த வீடு பத்துப் பதினைஞ்சு லட்சம் போகும். இதுக்கு அஞ்சு லட்சம் தரக் கசக்குதா?''

''சரிங்க... ஆபத்துக்குக் கிடைக்கணுமே..?''

''அதுவும் சரிதான்..''

''சரிங்க.. கால், கை கழுவிட்டு சாப்பிட வாங்க..''

''அண்ணன் சாப்ட்டாரா?''

''முதல்ல அவருக்குதான் போட்டேன். என்னனு தெரியில. சாப்ட்டுப் படுத்தவர் உடனேயே அசந்துட்டார். அவருக்கு மனசுல ஏதோ குழப்பங்க..''

லட்சுமி கூறவும் கருணாகரன் முகமும் சற்று மாறியது.

''உங்க முகம் ஏங்க ஒரு மாதிரி போகுது..?''

''ஒண்ணுமில்ல லட்சுமி..''

''அப்ப நிறைய இருக்குனுதானே அர்த்தம்..''

''ஹூம்.. என்னனு சொல்ல.. அண்ணனுக்கு வயசான காலத்துல இப்படி ஒரு வருத்தம்..''

''வருத்தமா.. என்னங்க..?''

''உஸ்.. மெல்லப் பேசு. அவர் காதுல விழுந்துடப் போகுது..''

''ஏதோ வருத்தம்னீங்களே..''

''இப்படி கிட்ட வா சொல்றேன்..''

லட்சுமி அவர் அருகே மிகவும் நெருங்க, அவரும் குசுகுசுவென்று எதையோ கூற, லட்சுமியின் விழிகள் அகண்டு விரியத் தொடங்கின!




கருணாகரன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்த லட்சுமி, அதன்பின் அவரிடம் மேற்கொண்டு பேசவில்லை. மௌனமாக சாப்பாடு பரிமாறத் தொடங்கினாள். இது நந்தினியின் கண்களில் பட்டுவிட்டது. மெல்ல லட்சுமியை நெருங்கியவள், குடையத் தொடங்கினாள்.

''அம்மா..''

''என்னடி?''

''அப்பா என்ன இன்னிக்கு தனியா சாப்பிட்றாரு?''

''அதுக்கு என்ன பண்ணலாம்ங்கற.. தெருவுல போற வர்றவங்களை எல்லாம் கூப்ட்டு பக்கத்துல உட்கார வெச்சு சாப்பிடச் சொல்லலாமா?''

''அதுக்கு எதுக்கு தெருவரைக்கும் போகணும். வீட்டுக்குள்ளயே பெரியப்பானு ஒருத்தர் இருக்காருல்ல?''

நந்தினி எங்கு வருகிறாள் என்பது லட்சுமிக்கும் புரிந்தது. அவளைக் கூர்மையாகப் பார்த்தாள்.

''என்ன பார்க்கறே?''

''ஆரம்பிச்சுட்டியா?''

''என்ன ஆரம்பிச்சுட்டியா.. நான் என்னம்மா தப்பா கேட்டுட்டேன்..''

''இதோ பார்! என் புருஷன் தனியாவும் சாப்பிடுவாரு. சிலர் கூட உக்காந்தும் சாப்பிடுவாரு. ஆடிக்கிட்டும் சாப்பிடுவாரு. பாடிக்கிட்டும் சாப்பிடுவாரு. இது அவர் வீடு. எப்படி சாப்பிட்றதுங்கறது அவர் பிரியம். இதுல மூக்கை நுழைக்க யாருக்கும் அதிகாரமில்லை. குறிப்பா உனக்குக் கிடையவே கிடையாது. பேசாம ஓடிப் போயிரு. இல்ல..



இதோ கொதிக்கற குழம்பை அப்படியே உன் மூஞ்சியில்லை ஊத்திருவேன்!''

லட்சுமியிடம் அப்படி ஒரு ஆவேசம். அதிர்ந்து தான் போனாள் நந்தினி. அம்மாவுக்கும் மகளுக்கும் அவ்வளவு தூரம் பேச்சுவார்த்தை நடக்கும்போது அது கருணாகரன் காதுகளிலும் விழவும், அவரிடம் ஒரு மெல்லிய கோபம் தலையெடுக்கத் தொடங்கியது.

அது அவர் நிமிர்வதிலும் கன்னக் கதுப்புகளைத் துடிக்க விடுவதிலும் தெரிந்தது. நல்லவேளை! பொரியல் போட வந்த லட்சுமி பார்த்துவிட்டு, அவரை சமாதானப் படுத்துவது போல பேசத் தொடங்கினாள்.

''ஏங்க.. பணம்தான் வந்துடுச்சில்ல? துணிமணிகளை வாங்கிடுவோமா?''

''உம்..''

''தாலியும் செய்யக் கொடுக்கணும்.''

''உம்..''

''என்னங்க உம் உம்முன்னுக்கிட்டு... வாயைத் திறந்துதான் பதில் சொல்லுங்களேன்.''

''அந்த ரெண்டாவதவ என்ன கேட்டுக்கிட்டிருந்தா..?''

''உங்க காதுல விழுந்திடிச்சாக்கும். அவ கெடக்கறா கழுதை.. விடுங்க.''

''கழுதையா.. அது நல்ல ஜென்மம் லட்சுமி. இது ஓநாய்..''

''வேண்டாங்க.. சாப்பிடும்போது நல்லபடியாவே எதையும் யோசிக்கறதுதானே நல்லதுன்னு சொல்வாங்க..''

''காதுல விழுறதும் நல்லதா இருக்கணும்ல?''

கருணாகரன் அதிரத் தொடங்கவும் வீடே திரும்பிப் பார்த்தது. அமைதியாகப் படுத்திருந்த சதாசிவமும் எழுந்து அமர்ந்தார்.

அவர்தானே இப்போது விஷயத்தின் மையம்!

கருணாகரனுக்கும் லட்சுமிக்கும் மெல்ல பதைக்க ஆரம்பித்தது. சதாசிவமும் ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல ''நந்தினி இங்க வாம்மா..'' என்று அழைத்தார்.

நந்தினியும் புடவை முந்தானையை விரலில் மோதிரம்போல சுழற்றி அவிழ்த்தபடியே வந்து நின்றாள்.

''உனக்கு இப்ப என்னம்மா தெரியணும்?''

''எதுவுமில்லையா..''

''அப்புறம் எதுக்கு உங்கம்மாகிட்ட போய் நான் ஏன் ஒண்ணா உக்காந்து சாப்பிலைன்னு கேட்டே?''

''அது.. அது..''

''சரி! அதுக்கு நான் பதில் சொல்லிட்றேன். இன்னிக்கு என் வாழ்க்கைல ரொம்ப துக்ககரமான நாளும்மா. என் மனசே சரியில்லை. நான் ரொம்ப வெளியில போறதில்லனு உனக்கும் தெரியும். இன்னிக்கு என்னவோ தோணுச்சுன்னு கோயிலுக்குப் போனேன். அப்படி போன இடத்துல, இந்த இலவச அன்னதான திட்டத்துக்கு டோக்கன் கொடுத்துகிட்டிருந்தாங்க. அதை வாங்கறதுக்கும் போட்டா போட்டி.. அந்தப் போட்டா போட்டியில நான் பார்க்கக்கூடாத ஒருத்தரையும் பார்த்துட்டேன். அதாம்மா மனசு ஒடிஞ்சு போயிட்டேன். அவங்க யார், என்ன ஏதுனு உனக்குத் தெரியத் தேவையில்லை. அது என்னோட போகட்டும்!

இவ்வளவுதான் விஷயம். எல்லாரும் எல்லா ரகசியங்களையும் எல்லார்கிட்டயும் சொல்லியாகணும்ங்கிற கட்டாயமெல்லாம் கிடையாது. இது உனக்கும் தெரியும். உனக்குள்ளயும்தான் நிறைய ரகசியங்கள் இருக்குதே.. அதை நான் என்னிக்காவது நீ சொல்லியே ஆகணும்னு அடம் பிடிச்சிருக்கேனா? ஆகையால் நீயும் அடம்பிடிக்காம உன் வேலை என்னவோ அதைப் பார்.



இவ்வளவு தூரம்கூட நான் உன்னைக் கூப்பிட்டு சொல்லத் தேவையில்லை. ஆனா நான் சொல்லியிருக்கேன்னா காரணம் உன் சுபாவம்தான். உன்னால தொட்டுத் தொட்டுப் பிரச்சினை வந்துக்கிட்டே இருக்கு. பாழாப்போன என்னாலயும் அது அதிகரிக்கணுமா? அதான், இதான் விஷயம்னு சொல்லிட்டேன். இனி உன் மண்டையை எதுவும் குடையாதுன்னு நான் நம்பறேன். மீறி குடைஞ்சா அதுக்கு...'' என்ற சதாசிவம் கருணாகரன் பக்கம் திரும்பி, ''யப்பா கருணாகரா... தலைக்கு மேல கல்யாண காரியங்கள் இருக்குது. உன் கவனமெல்லாம் அது மேலதான் இருக்கணும். நீ மத்த எந்த விஷயங்கள்லயும் உன் கவனத்தை சிதற விடாதப்பா. அது நல்லதுக்கில்ல'' என்று முடித்தார்.

பெரியவர் பெரியவர்தான்!

ராதாவும் கேட்டபடிதான் இருந்தாள். மேற்கொண்டு எதுவும் பேசாமல் வெளியே உள்ள கணேசனின் ஜெராக்ஸ் கடையை நோக்கித்தான் சென்றாள். கடையில், ஒரு என்ஜினியரிங் பாடப் புத்தகம், இன்னொரு புத்தகமாக உருவாகிக் கொண்டிருந்தது. கல்லா காலியாக இருந்தது. ராதா வந்து அதில் அமர்ந்தாள்.

''வாங்க முதலாளியம்மா..'' என்று கணேசனும் அவளை ஜாலியாக எதிர்கொண்டாள். ஆனால் அவளிடம் பதிலில்லை. இறுக்கமும் சலனமும் முகத்தில் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தது.

''என்ன ராதா.. திரும்ப சின்னவளால ஏதாவது பிரச்னையா?''

''ஆமாம். பிரச்சனைன்னாலே அவதான் எல்லார் மனசுலயும் முன்னால வர்றா..''

''என்ன செய்ய..? அவ பிறந்த நேரம் அப்படி..''

''அம்மாவும் இதையேதான் சொன்னாங்க.. ஒருத்தர் நல்லவரா இருக்கறதுக்கும் கெட்டவரா இருக்கறதுக்கும், கருத்தரிச்சிருக்கும்போது அந்தத் தாய் எப்படிப்பட்ட மனநிலைல இருக்காங்கறதும் முக்கியம் போல இருக்கு..''

''பின்ன.. நீ நரசிம்மாவதாரம் பத்தி கேள்விப்பட்டதில்லையா? அதுல வர்ற பிரகலாதன் யாரு? அம்மாவோட கருவுக்குள்ள இருக்கும்போதே, நாரதர் 'நாராயணா, நாராயணா'ன்னு உபதேசம் பண்ணதைக் கேட்டுப் பிறந்தவர்தானே?''

''வாஸ்தவம்தான்.. இதெல்லாம் யோசிக்கும்போது தான் தெரிய வருது!''

''சரி, இப்ப என்ன பிரச்சினை...?'' கணேசன் கேட்கவும் ராதா சதாசிவம் பேசியதை அப்படியே கூறினாள்.

உடனே அவனிடமும் சலனம்!

''உங்களுக்கு என்ன ஆச்சு?''

''இல்ல.. இதை இப்படிப் போட்டு உடைச்சிட்டாரான்னு ஆச்சரியப்படறேன்.''

''இல்லாட்டி அவ நோண்டிக்கிட்டேல்ல இருப்ப..''

''உண்மைதான். பாவம் உன் பெரியப்பா..''

''என்ன.. நீங்களும் அம்மா மாதிரியே பேசறீங்க?''

''உனக்கு விஷயம் தெரிய வந்தா நீயும் அப்படித் தான் பேசுவே..?''

''அது என்னன்னு..?''

''எனக்கு ஒரு மாசமாவே தெரியும்.''

''அதான் என்னனு கேக்கறேன்.''

''சொல்றேன் ராதா.. உன்கிட்ட சொல்றதுல எந்தத் தப்பும் வந்துடாது. பெரியப்பாவுக்குக் கல்யாணமாகி, அப்புறமா தன் மனைவியை பெரியப்பாவே இன்னொருத்தருக்குக் கட்டி வெச்சது உனக்குத் தெரியும்தானே?''



''தெரியும். அதையும் நீங்கதான் சொல்லியிருக்கீங்க.''

''அப்படி அன்னிக்கு இன்னொருத்தன் பின்னால போனவங்க, சரியா வாழாமலே இல்ல வாழ முடியாமலோ போய், வீடு வீடா பத்துப் பாத்திரம் தேய்ச்சுப் பொழைக்கற ஒரு நிலைக்கு வந்துட்டாங்க..''

''அடக் கடவுளே.. அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்ட அவங்க காதலன் நிலை?''

''அந்தாள் அப்படியே ஒரு ஆக்சிடென்ட்ல இறந்து போயிட்டானாம்..''

''ஐய்யோ..''

''அவங்களதான் பெரியப்பா கோயில்ல பாத்திருக்கணும்.''

''ஓ.. அதான் பழைய நினைவுகள் பாதிச்சிடுச்சோ?''

''இருக்காதா பின்னே.. தான் விட்டுக் கொடுத்தும் அவங்களால வாழ முடியலேன்னா வருத்தமாதானே இருக்கும்!''

''ஆமாம் கணேஷ் அத்தான்.. பெரியப்பாவுக்குத் தான் எவ்வளவு பெரிய மனசு. மத்த ஆண்கள்னா, கோவிச்சு 'நல்லா கஷ்டப்படு.. உனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்'னு சாபம்தான் கொடுப்பாங்க. ஆனா பெரியப்பா பாவம்னு நினைக்கிறார்..''

''அதுக்கென்ன பண்ண முடியும் ராதா..? அவங்கவங்க கர்மத்தை அவங்கவங்கதான் அனுபவிச்சுத் தீர்க்கணும். உனக்காக நான் சாப்ட்டா உன் பசியாறிடுமா?''

''சாப்ட்டா பசியாறாம போகலாம்.. ஏன்னா உடம்புங்கறது வேற வேற.. ஆன மனசுங்கறது நல்லவங்க

எல்லாருக்கும் ஒண்ணுதான் அத்தான். இங்க நான் ஒரு நல்லதை நினைச்சா, அங்க அது ஆசீர்வாதமாவோ இல்லை அனுக்ரஹமாவோ வேலை செய்யும்.''

''நீ என்ன சொல்லறே?''

''ஏன் அவங்கள நாம ஆதரிக்கக் கூடாது..?''

''என்ன ராதா.. சல்லுன்னு உச்சிக்கே போயிட்டே?''

''ஆதரிக்க நினைக்கறதே உச்சியா... தப்பு அத்தான் எனக்கு என் பெரியப்பாவோட சந்தோஷம் முக்கியம் அதுக்காக அவங்க நல்லா இருக்கறது முக்கியம்..''

''அதனால?''

''அவங்க இப்ப எங்க இருக்காங்கனு தெரியுமா?''

''இதோ பார்.. நீ இப்ப கல்யாணப் பொண்ணு ஒரு வீட்டுக்கு வாழப் போறவ. அந்த வீட்டைப் பத்தி கவலைப்படு. இந்த வீட்டைப் பத்தின கவலைகளை விடு கிட்டத்தட்ட உன்னைப் போலதான் நான் யோசிக்கிறேன் உனக்கும் முன்னால அவங்களுக்கு நான் உதவி செய் துட்டேன்..''

கணேசன் இன்ப அதிர்ச்சியளித்தபோது, தாலி செய்யக் கொடுப்பதற்காக அப்பாவும் அம்மாவும் புறப் பட்டுக் கொண்டிருந்தனர்.





# 7

கருணாகரனும் லட்சுமியும் புறப்பட்டு விட்டனர்!

ஜெராக்ஸ் கடையில் இருந்து வெளியே ராதா வரவும், அவளைப் பார்த்த சந்தோஷத்தோடு இருவரும் சிரித்தனர்.

''எங்கம்மா அப்பாவோட கிளம்பிட்டே?''

''இன்னிக்கு நாள் நல்லா இருக்கும்மா.. அதான் ஆச்சாரியப் பார்த்து தாலி செய்யக் கொடுத்துடலாம்னு...''

''ஆமாண்டா கண்ணு.. இப்ப கொடுத்தாதான் முகூர்த் தத்துக்கு, பிரச்னையில்லாம கைல கிடைக்கும். நாங்க போய்ட்டு வந்துடட்டுமா..?'' கருணாகரன் கேட்டார்.

''பார்த்துப் போய்ட்டு வாங்கம்மா..''

''வர்ற வழியில பத்திரிகைக்கும் ஏற்பாடு பண்ணிட்டு வந்துடறோம்..'' கருணாகரன் கூறவும், ''மாமா.. பத்திரிகை டிசைனை ராதாவுக்குக் காட்டாம முடிவு பண்ணாதீங்க'' என்றான் கணேசன். குரல் மட்டும்தான் கேட்டது.. ஆளைக் காணவில்லை.

''பாத்தியா இவனை.. உள்ள உக்காந்துக்கிட்டே ஐய்யா நமக்குக் கட்டளை போட்றார்.. ஏன் நேர்ல வர மாட்டீங்களோ..?''

கருணாகரனின் கேள்விக்கு கணேசனிடம் இருந்து பதிலே இல்லை..

''பார்.. கேட்டதுக்கு பதிலே சொல்லாம இருக்கறதை! இவனுக்கு ரொம்ப இடம் கொடுத்துட்டோம்..''

''பேசாம வாங்க.. உங்களுக்கு அவனை வம்புக்கு இழுக்கலைன்னா தூக்கம் வராது..'' - என்றவளாக லட்சுமி கருணாகரனை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவர்கள் செல்லவும் மெல்ல கணேசன் வெளியில் வந்தான். ''எங்க போய்ட்டாங்களா?''

''உம்.. என்னத்தான், அப்பாகிட்ட இப்படி திட்டு வாங்கணுமா.. பேசறதை எதிர்ல வந்து பேசினாத்தான் என்ன..?'' ராதா கொஞ்சம் கோபத்தோடு கேட்டாள்.

அவனிடம் உறைந்து போனது போன்ற அமைதி. ''என்னத்த பேச ராதா.. நான் வரலைன்னா, 'கொஞ்சம் கூட மரியாதை இல்லே'ன்னு சொல்வார். வந்தாலோ, 'நல்ல காரியத்துக்குப் போகும்போது உன் நொண்டிக் காலோட எதிர்ல வரணுமா?'ன்னு கேட்பார். இதுக்கு அது மேல் இல்லையா..?''

அவன் கேட்டதும் அதன் ஆழம் ராதாவுக்குள் வெகு வாகவே ஊடுருவியது. அவனது மௌனம் அவளையும் ஆழமாகப் பற்றிக் கொண்டது.

அவன் சொன்னதுதான் உண்மை! இது தனக்குத் தெரியாமல் போய் விட்டதே.

ராதா தனக்குள் வருத்தத்தில் விழுந்த அதேசமயம், கணேசனுக்கு சிறு ஆறுதலையாவது தர ஆசைப்பட்டாள்.

''அத்தான்..''

''என்ன ராதா..?''

''என் கல்யாணப் பத்திரிகை டிசைனை நீதான் செலக்ட் பண்ணனும்..''

''நானா.. நல்லாயிருக்கு போ..''

''இல்ல.. நீதான் செலக்ட் பண்றே..?''

''அட சும்மா இரு ராதா. எனக்கு என்ன தெரியும்னு நீ என்னை செலக்ட் பண்ணச் சொல்றே..?''

''அதெல்லாம் இல்லை.. நீதான் பண்றே.. நீதான் பண்றே.. நீ பண்ணாதான் நான் இந்தக் கல்யாணத்தையே பண்ணிக்குவேன்..''



அழுத்தமாக சொல்லிக் கொண்டே வீட்டினுள் சென்றாள்.

அவள் அப்படி சொல்லியபடி வருவதை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள் நந்தினி.. அவள் பார்க்கும் விதமே சரியில்லை.

அதை மூன்றாமவள் ரஞ்சனி கவனித்தாள்.

''என்ன நந்தினிக்கா.. என்ன யோசனை.. பெருசா ஏதோ திட்டம் போட்ற மாதிரி தெரியுது..?''

''சும்மா இருக்கமாட்டே நீ..''

''நான் கேட்டதுக்கு பதில் சொல்லாம சும்மா இருக்கச் சொல்றே..?''

''போய் வேலையைப் பாருடி. இவ கல்யாணப் பத்திரிகைக்கு அவர் டிசைன் செலக்ட் பண்ணனுமாக்கும்..?''

''ஓ.. இப்ப இதான் உன் பிரச்சினையா..?''

''அந்த நொண்டிக்கு இவ ஓவரா இடம் கொடுக்கறா..''

''மெல்லப் பேசு.. அக்கா காதுல விழுந்தா வருத்தப் படுவார்..''

''படட்டுமே.. என்ன இப்போ? நான் ஒருத்தி இருக்கும் போது இவ எப்படி இவன்கிட்ட டிசைன் செலக்ட் பண்ணச் சொல்லலாம்..? இவனுக்கு என்ன தெரியும்..?''

''ஐய்யோ மெல்லப் பேசு..''

''நான் இப்படித்தாண்டி பேசுவேன். எனக்கென்ன பயம்..?''

நந்தினி வெளிப் பக்கம் நின்று கொண்டு பலமான குரலில் கேட்டது, ராதா காதில் மட்டுமல்ல.. கணேசன் காதிலும் விழுந்தது. ராதாவரையில், எப்போதுமே வராத கோபம் புடைத்துக் கொண்டும் வர ஆரம்பித்தது.

''திருமணம் நடக்க இருப்பது எனக்கு.. இதில் என் விருப்பம்தான் முக்கியம். பொறாமை பிடித்த நீ கல்யாணப் பத்திரிகை தேர்வு செய்தால் இந்தக் கல்யாணமே கூட நின்று போகலாம் - அவ்வளவு நல்ல எண்ணம் உனக்கு.." என்று பேசும் எண்ணம் நாக்கின் நுனி வரையில் வந்து விட்டது. அதற்கான முதல் வார்த்தையை சொல்லிக் கொண்டே திரும்பியபோது, கணேசனே வந்து அவள் எதிரில் நின்றவளாக வழியத் தொடங்கி இருந்தான்.

''நந்தினி..''

''என்ன?''

''என்ன நந்தினி நீ.. நானே உன்னைக் கூட்டிக்கிட்டு போய்தான் டிசைன் செலக்ட் பண்ணணும்னு நினைச்சுக் கிட்டிருந்தேன். அது தெரியாம என்ன தப்பா பேசிட்டியே.."

அவன் அப்படி பேசுவான் என்று ராதாகூட எதிர் பார்க்கவில்லை. நந்தினியிடமும் ஷண நேரத்தில் பெரும் மாற்றம்.

''என்ன கணேசா.. என்னை கூல் பண்றதுக்கா சொல்றியா..?''

''கூல் பண்றதுக்கா.. சேச்சே.. உன்னை இப்படி எல்லாம் ஒருத்தரால கூல் பண்ண முடியுமா? இந்த வீட்டிலயே உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை அழகுலயும் சரி, அறிவிலயும் சரி.. உன்னை அடிச்சுக்க ஆள் இல்லங்கறதுதான் என் அபிப்பிராயம்.''

அவன் பேசப் பேச நந்தினி ஐஸாக உருகத் தொடங்கி விட்டாள். ஆனாலும் வெளியே இரும்பாகக் காட்டிக் கொண்டு, ''உனக்குத் தெரிஞ்ச இந்த உண்மை என் அருமை அக்காவுக்குத் தெரியலியே..''

''தெரிஞ்சா அவ ஏன் இன்னும் அசடாவே இருக்கா. ஒரு புத்திசாலியை இன்னொரு புத்திசாலிக்குத்தானே தெரியும்..?''



நந்தினி உடனே அவனை குறுகுறுவென்று உற்றுப் பார்த்தாள்.

''தெரியுது.. தெரியுது.. நான் புத்திசாலி எல்லாம் இல்லை. சும்மா பேச்சுக்குத்தான் சொன்னேன்..''

அவள் உடனே ரசித்து சிரிக்கத் தொடங்கினாள். எல்லாவற்றையும் கேட்டபடி படுத்திருந்த சதாசிவம் பெரியப்பாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்துவிட் டிருந்தது. அதை கவனித்த ராதா அருகில் சென்றாள்.

''பெரியப்பா..''

''கேட்டியாம்மா அவன் பேசினத.. இவன் வரையில உடம்புதாம்மா ஊனம். மனசுல அவன் ஒரு மகாராஜன்மா..''

''ஆமாம் மாமா.. துளிக்கூட தான்ங்கற எண்ண மில்லை. எவ்வளவு அடிபட்டாலும் தாங்கிக்கற திடம். தன்னை வெறுக்கறவங்களுக்குக் கூட நல்லதையே நினைக்கற எண்ணம்னு கணேசன் அத்தான் ரொம்ப கிரேட் பெரியப்பா..''

''நான் இப்ப சொல்றேன்மா.. இவன் ரொம்ப நல்லா இருப்பான்.. நீ வேணா பாரு.''

சதாசிவம் பெரியப்பா அடிமனதில் இருந்து வாழ்த்துத் தெரிவித்தார்.

''உங்க வாக்குப் பலிக்கட்டும் பெரியப்பா..'' ராதா அதை ஆமோதித்தபோது ஜெராக்ஸ் எடுக்க வந்திருந்த ஒருவன் கையில் ஒரு ஃபைலுடன் எட்டிப் பார்த்தான்.

கணேசனோ பாத்ரூமுக்குப் போயிருந்தான்.

ராதா ரஞ்சனியை அனுப்பி அவனைக் காத்திருக்கச் சொன்னாள். அவளும் உற்சாகமாய் ஓடினாள்.

அவன் அவள் வரவும் சிரித்தான். அந்தச் சிரிப்பில் பல அர்த்தங்கள்.. அவளிடமும் ஒரு புது உற்சாகம்.

''என்ன இது.. வீட்டுப் பக்கமெல்லாம் வந்துக்கிட்டு?''

''ஏன்.. என்னை எதிர்பார்க்கலையா..?''

''ஐய்யோ.. யாராவது பார்க்கப் போறாங்க.. புற
படுங்க ராஜேஷ்..''

''நான் இப்ப ஜெராக்ஸ் எடுக்க வந்துருக்கேன்
இப்படி துரத்தினா எப்படி..?''

''மண்ணாங்கட்டி.. உங்க ஜெராக்ஸ் லட்சண
எனக்குத் தெரியாது..?''

''அதை விடு.. உன்னை அனுப்புனதுதான் உ
அக்காவா..?''

''ஆமாம்.. அதுதான் பெரிய அக்கா.. ரொம்ப நல்ல
வங்க..''

''அதான் நான் வரவும் உன்னை அனுப்பிச் சொல்
சொன்னாங்க.. இல்லேன்னா அவங்களேல்ல வந்திரு
பாங்க..''

''போதும், வழியாம புறப்படுங்க. என் இரண்டாவ
அக்கா பார்த்தா அவ்வளவுதான்..''

''எல்லாரையும் பார்க்கணும்தானே கிளம்பி வந்து
கேன்..''

''ராஜேஷ் ப்ளீஸ்.. போங்க சீக்கிரம்! அப்புறம் நா
எங்க கூப்ட்டாலும் வர மாட்டேன்..''

அவள் சிணுங்க, அவன் ரசிக்க, அதை ராதாவு
வீட்டுக்குள் இருந்தே பார்த்தவளாக மெல்ல வெளி
வரத் தொடங்கினாள்.

''ஐயோ பெரியக்கா வராங்க. நான் பேச்ச மாத்தறே
ஸார் இங்க கலர் ஜெராக்ஸ் கிடையாது. ப்ளாக் அ
ஒயிட்தான்..''

''ஒரு கலர் ஜெராக்ஸ் மெஷினையும் வாங்கிப் போ
வேண்டியதுதானே..?''



''அதைக் கொஞ்சம் ராகம் பாடாம ஒழுங்கா சொல்லக் கூடாதா..?''

''ஒழுங்கானா எப்படி.. மெஷின் இல்லேன்னா போகாம வளவளன்னு பேசறவங்ககிட்ட இப்படித்தான் பேசுவேன்..''

ரஞ்சனி நடிப்பில் கொடி கட்ட, அதைக் கேட்டபடி வந்த ராதா, ''என்ன ரஞ்சா.. எதுக்கு சண்டை போட்றே?'' என்று கேட்க, அந்த ராஜேஷ் என்பவனும் தன் நடிப்பைத் தொடரத் தொடங்கினான்.

''மேடம் நீங்களே சொல்லுங்க.. கலர் ஜெராக்ஸ் இல்லேன்னா அதை எப்படிச் சொல்லணும்? இல்லேன்னு தானே..?''

''ஆமா.. இவ வேற எப்படிச் சொன்னா..?''

''யக்கா.. நீ என்னக்கா இந்த ஆள்கிட்டே போய்க் கேட்டுக்கிட்டு, கலர் ஜெராக்ஸ் இல்லாட்டி வாங்கிப் போட வேண்டியதுதானேன்னா என்ன அர்த்தம்..? கணேசனுக்கு வாங்கத் தெரியாதா?''

''ஓ.. அதுவா! ஸாரிங்க.. கூடிய சீக்கிரம் வாங்கிடுவோம். அப்ப வாங்க. இப்ப ஸாரி..''

ராதாவின் பதிலில் திருப்தியடைந்தவன் போல ''தேங்க்ஸ்ங்க.. உங்களப் போல பேசினா நான் ஏங்க இவங்களோட சண்டை போடப் போறேன்? கொஞ்சம் இவங்கள கன்ட்ரோல் பண்ணி வையுங்க. இல்ல.. புருஷனா வரப் போறவன் ரொம்பவே கஷ்டப்படுவான்..'' என்று ராஜேஷும் அவளுக்கு மட்டும் புரியும்படி மறைமுகமாய்ப் பேசிவிட்டு, பைக்கை ஸ்டார்ட் செய்தபடி பறந்து போனான்.

அவளும் அதை ரசித்து சிரித்தாள். சிரித்த வேகத்தில் ராதா பார்க்கவும் முகத்தை வேகமாய் மாற்றிக் கொண்டாள்.

பாவம் ராதா.. தங்கையின் காதல் நாடகம் பற்றித்

துளிகூடத் தெரியாமல் அவளையே எச்சரிக்கத் தொடங்கி னாள்.

''ரஞ்சனி.. நீ நல்ல பெண்ணுன்னு நினைச்சுக்கிட் டிருக்கேன். எதுக்காக அவர்கிட்ட இப்படிப் பேசினே..?''

''இப்படி பேசினாதான்க்கா அடுத்து இந்தப் பக்கம் வர மாட்டான். இல்ல.. இங்க ஒருத்தருக்கு மூணு பே இருக்கோம். சுத்திச் சுத்தி வந்தா அக்கம் பக்கம் நம்மள தானே தப்பா எடுத்துப்பாங்க..?''

''பரவாயில்லியே.. நீ வயசுல சின்னவளா இருந் தாலும் ரொம்ப எச்சரிக்கையா இருக்கியே..'' ராதா பாராட்டி னாள். ரஞ்சனிக்கு அதைக் கேட்கக் கொஞ்சம் கூசியது பாத்ரூம் போன கணேசனும் வந்துவிட்டாள்.

''என்ன ஏதோ சத்தம் கேட்டுச்சு..?''

''அதை ஏன் அத்தான் கேக்கறே.. ஒருத்தர் கல ஜெராக்ஸ் எடுக்கணும்னு வந்தார். அதுதான் நம்ம கடை இல்லையே.. ஆனா வந்தவர், 'அதை வாங்கி வைக்க துக்கு என்ன?ன்னு கேட்டார். இவ அதுக்கு பதில் சொல்ல ஒரே கூத்து..''

''அதுக்கென்ன இப்ப வாங்கிட்டாப் போச்சு.. ஆமா வந்தவன் சுருட்டத் தலைமுடியோட சட்டையை இ பண்ணிக்கிட்டிருந்தானா..?''

''ஆமாம்..''

''நினைச்சேன்.. அவன் ரெண்டு நாளாவே இந்த பக்கம் சுத்திச் சுத்தி வர்றான். நான் இருக்கும்போது வரா இல்லாதப்ப வந்து வாக்குவாதம் பண்ணியிருக்கான் பா ரஞ்சனி.. ஜாக்ரதையா இருந்துக்கோ.. இந்த மாதிரி ப களை எல்லாம் நம்பக் கூடாது..''

''அதான் எனக்கும் தெரியுமே.. அதான் வாய்லயே போட்டேன்...'' என்றவள் மனதுக்குள் 'அடப்பாவி... ரெண்



நாளா சுத்தி வந்துருக்கியா.. இரு வெச்சுக்கறேன் உன்னை' என்றாள் அடிமனதில் காதலோடு..!

அப்போது ஒருவர் பதட்டத்துடன் ஓடி வந்தார். அவர் முகத்திலும் கலவர உணர்வு..

''இங்க யாருங்க ராதாங்கறது..?''

''நான்தான்.. ஏங்க..?''

''சீக்கிரம் வாங்க.. உங்க அப்பா அம்மா போன ஆட்டோ மீது லாரி மோதி ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சு.. ரெண்டு பேருமே உசுருக்குப் போராடிக்கிட்டிருக்காங்க.. உங்கம்மாதான் அரைகுறையா உங்க பேரையும் அட்ரஸை யும் சொன்னாங்க. உங்கப்பாவுக்கு சுத்தமா கான்ஷியஸ் இல்லை!''

அவர் சொல்ல, ராதாவுக்கு மயக்கம் வர சரியாக இருந்தது.

# 8



அந்தச் செய்தி ராதாவை மயக்கத்தில் ஆழ்த்தி னாலும் சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

கண்களில் கண்ணீர் மதகு வாய்க்கால் தண்ணீ போல பாயத் தொடங்கிவிட்டது. செய்தி கேட்டு கட்டிலில் கிடந்த பெரியவர் சதாசிவமும் எழுந்து வந்துவிட்டார்.

கணேசனும் பாத்ரூம் போய்விட்டு வந்தவன் அடுத்த நொடியிலேயே வேகமானான். மளமளவென்று ஜெராக் கடையை இழுத்து மூடியவன் தெருவில் சென்று கொண் டிருந்த இரண்டு ஆட்டோக்களை மறித்துப் பிடித்து நிறுத் தினான். அதில் அவ்வளவு பேரும் ஏறிக் கொள்ள, ஓ போய் வீட்டையும் பூட்டினான்.

ஆட்டோக்காரர் ''எங்கே?'' என்று கேட்கவும் ''ஜி.எ சுக்கு'' என்றான்.

''எல்லோரும் அழுவறாங்களே.. உயிர் போயிடுச்சா..?

ஆரம்பமே சம்மட்டியாகத் தலையில் தாக்கியது.

''நீ ஒழுங்கா வண்டிய ஓட்டுப்பா.. செத்தா மட்டு தான் அழுவாங்களா..?''

''அதுக்கில்லை.. சாவுன்னா நான் வண்டியை ஷெ டுக்குப் போய்க் கழுவணும்..''

''உனக்கு உன் கவலை..''

''அப்புறம், இங்க இருந்து ஜி.எச்.சுக்கு முன்னூ ரூபா.. அங்கே போய்த் தகராறு பண்ணக்கூடாது..''

''என்னது.. முன்னூறு ரூபாயா.. ஏய், இது ஆட்டோவ இல்லை ஏரோபிளானா..?''



''பார்த்தீங்களா.. தகராறு பண்ண ஆரம்பிச்சிட்டீங் களே. பெட்ரோல் விலையை மாசா மாசம் ஏத்தறது உங்க ளுக்குத் தெரியாதா..?''

''இருக்கட்டும்ப்பா.. அதனால உனக்கு மட்டும்தான் பாதிப்புங்கற மாதிரியே பேசறியே. அது எங்களையும் பாதிச்சு நாங்களும் அந்த பாதிப்புக்கு நடுவுலதான் வாழ றோம். இங்க நாங்க யாரும் டாட்டா பிர்லா இல்லை..''

''அது எனக்கும் தெரியும் ஸார்.. டாடா பிர்லாவா இருந்தா எதுக்கு என் ஆட்டோல ஏர்றீங்க. தனியா காருல்ல வெச்சிக்கிட்டிருப்பீங்க. ஒரு லிட்டர் சுத்தமான தண்ணீர் பதினைஞ்சு ரூபாய்க்கு விக்குது ஸார்..''

''போதும் அத்தான்.. ஒரு பொருளாதார மேதை கூட தன் மாணவர்கள்கிட்ட இந்தியப் பொருளாதாரம் பத்தி இவ்வளவு பேசறதில்ல.. ஒரு ஆட்டோவுல ஏறிட் டாலே இந்தப் பொருளாதாரப் பேச்சுதான்.

கடலுக்கு நடுவுல பாலம் கட்றதெல்லாம் இந்த அரசாங்கத்துக்கு சாதாரண விஷயமா இருக்கு. ஆனா ஏழைகள் பயன்படுத்தற ஆட்டோ கட்டணத்துல ஒரு ஒழுங்கைக் கொண்டு வர முடிய மாட்டேங்குது..'' என்று இடைவீடு செய்து கொஞ்சம் அர்த்தத்தோடும் பேசினாள் நந்தினி.

''இவங்கள அரசாங்கத்தால எல்லாம் திருத்த முடியாது. கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவிச்சும், ஊழலுக்கு எதிர்ப்பு தெரிவிச்சு அன்னா ஹசாரே பின்னாலயும் ஜனங்க ஒண்ணு சேர்ந்த மாதிரி ஒண்ணா சேர்ந்தாதான் இவங்க வழிக்கு வருவாங்க.

இங்க இருந்து பத்து கிலோமீட்டர் தூரத்துல இருக்கிற ஜி.எச்.சுக்கு முன்னூறு ரூபா கேக்கறியேப்பா.. உனக்கே இது அநியாயமா தெரியல..?''

சதாசிவம் பெரியப்பாவும் சேர்ந்து கொண்டார்.

''ஸார்.. இந்த உலகத்துலயே ரொம்பப் பாவப்பட்ட ஜென்மங்க நாங்கதான் ஸார். டெய்லி எங்கையாவது ஒரு போலீஸ்காரனுக்கு நூறு, இருநூறு நாங்க அபராதம்ங்கற பேர்ல தந்தாகணும் ஸார். எவ்வளவுதான் சரியா இருந் தாலும் ஒழுங்கா தலை சீவலேனு சொல்லி அதுக்கு ஃபைன் போடுவாங்க. அதை எல்லாம் சமாளிச்சு, ஆட்டோ வாடகை கொடுத்து வீட்டுக்கும் பணம் கொடுக்கணும் ஸார்..''

சளைக்காமல் அந்த ஆட்டோக்காரனும் பதில் கூறிக் கொண்டே வந்தான்.

சென்னை நகரச் சாலைகளில் ஏற்கனவே நெருக்கடி. அன்று அரசியல் தேர்தல் பிரசார குறுக்கீடுகள் வேறு. ஆட்டோவில் ஊர்ந்து ஊர்ந்துதான் செல்ல முடிந்தது.

'இதுக்கெல்லாம் எவ்வளவு பெட்ரோல் செலவாகும் தெரியுதுங்களா சார்?' என்று அந்த டிராஃபிக்கையும் தனக்கு சாதகமாக பயன்படுத்தி பேசினான். அதில் சகுனத் தடைகளும் தான் நினைவில் முண்டின.

''கடவுளே.. அவர்களுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது..'' என்று பிரார்த்தித்துக் கொண்டே வந்தாள் ராதா.

நந்தினியிடம் எதனாலோ அவள் அளவுக்கு பாதிப்பு இல்லை. ''இப்பல்லாம் ஆக்ஸிடென்ட்டுங்கறது சா்வ சாதாரணமாப் போச்சே..'' என்று எந்த அர்த்தத்தில் சொன் னாளோ தெரியாது. ரஞ்சனிக்கு எரிச்சலாக வந்தது. அவள் வரையில் அப்பா அம்மா இல்லாத சூன்யத்தைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம்தான். அது மற்றவர்களுக்கு நடக்கும்போது, நம் மனதுக்கு பரபரப்பாகவும் விறுவிறுப்



பாகவும்தான் இருக்கிறது. நமக்கு நடக்கும் போதுதான் மனது பேதலித்துப் போய்விடுகிறது.

ரஞ்சனிக்குள் அவ்வேளையில் தனது காதலும் காதலன் ராஜேஷும்கூட வந்து போனார்கள். அப்பா, அம்மா இருந்தால் விருப்பத்தை மெல்லச் சொல்லி கல்யாண முயற்சி செய்யலாம். அவர்கள் இவ்வாறு போய்விட்டால் இந்தக் காதல் என்னாகும்? ஒரு தடையும் இல்லை என்று தாண்டிக் குதித்து ஓடுமா? - ரஞ்சனி கேள்விகளுக்குள் சிக்கிக் கொண்டாள்.

ஒரு வழியாக ஜி.எச்.சும் வந்தது. அது ஒரு புது உலகம்.. கண்ணுக்குத் தெரியாத போதி மரங்கள் அங்கு நிறையவே உண்டு.

அவ்வளவு பேரும் இறங்கி எமர்ஜென்சி வார்டு நோக்கி ஓடினார்கள். ஆட்டோக்காரன் போனால் போகிறது என்று இருபது ரூபாய் குறைத்துக் கொண்டான்.

கணேசனுக்கு, தன் ஊனப்பட்ட கால்களைப் போட்டுக் கொண்டு நடப்பதற்கு சிரமமாக இருந்தது. சதாசிவம் சற்று தேங்கி நின்று, அவனுக்காகக் காத்திருந்து, பின் அவன் கையை தன் கையோடு உறுதியாகப் பற்றிக் கொண்டு அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

வழிநெடுக நோயாளிகளின் காட்சிகள்!

ஒருவிதமான மருந்து வாடை.. அங்கங்கே சுவர்கள் மடங்கித் திரும்பும் இடங்களில் மானாவாரியாக துப்பப் பட்ட வெற்றிலைக் குதப்பல்கள்.

ஸ்ட்ரெச்சர்களில் சிலர் அழைத்துச் செல்லப்பட்ட காட்சிகளில் உடம்பு என்பது இத்தனை பிரச்சினைக்குரிய ஒன்றா என்னும் கேள்விகள்.

எல்லாம் கடந்து எமர்ஜென்சி வார்டை அடைந்த போது, ஒரு வார்டுபாயிடம்தான் பேச முடிந்தது.

''ஏங்க.. இங்க கருணாகரன்ங்கற ஒரு ஆக்ஸிடென்ட் பேஷன்ட்..'' என்று ராதா ஆரம்பிக்கவும் அந்த நபரும் ''யாரு.. இந்த ஆட்டோவுல வந்து அடிபட்ட கேசுங்க தானே..?'' என்று திருப்பிக் கேட்டான்.

''ஆமாம்.. ஆமாம்..''

''கூடவே ஒரு அம்மாவும் இருந்தாங்களா..?''

''ஆமா.. எங்க அம்மா, அப்பாதான் அவங்க..''

''ஓ.. நீங்கதான் அவங்க பொண்ணுங்களா..?''

''ஆமாம். இப்ப ரெண்டு பேரும் எப்படி இருக்காங்க..?''

''என்னம்மா கேள்வி இது? உங்களுக்கு தகவல் சொன்னவங்க உங்கப்பா ஸ்பாட் அவுட்டுன்னு சொல்லலையா..?''

''ஐய்யோ.. அப்பா இறந்துட்டாரா..?''

''ஆமாம்மா.. உங்க அம்மாவும்கூட கிட்டத்தட்ட அந்த கண்டிஷன்லதான் இருக்காங்க. முதல்ல உள்ளே போய் வார்டு சீஃப் டாக்டரைப் பாருங்க..''

அவன் கை காட்ட, ராதா அப்படியே துவண்டு போய் அமர்ந்துவிட்டாள். உடன் ரஞ்சனி அவளைக் கட்டிக் கொண்டாள். நந்தினி மட்டும் தைரியமாக, ''அம்மா இப்ப எங்க இருக்காங்க?'' என்று கேட்டாள். அப்போது பார்த்து கணேசனும் சதாசிவமும் வந்து சேர்ந்தனர்.

''பெரியப்பா.. அப்பா இறந்துட்டாராம்..!'' நந்தினி சொன்னபோது அவளிடம் எந்தப் பதட்டமும் இல்லை.

''என்னது.. என் தம்பி செத்துட்டானா..?'' என்று பதிலுக்குக் கேட்ட சதாசிவத்துக்கு அப்படியே நெஞ்சை அடைத்தது. கணேசன் தாங்கிக் கொண்டான்.

''அய்யோ தம்பி..''

''மாமா.. தைரியமாக இருங்க. இப்ப எங்களுக்கெல்லாம் நீங்கதான் இருக்கீங்க. ஏதாவது ஆயிடப் போகுது..'' என்று கணேசன் தேற்றப் பார்த்தான்.



''இல்லடா.. இல்லடா.. என்னால இனி உசுர் வாழ முடியாதுடா. நான்தான் பாவின்னா, என் தம்பி என்னை விடப் பெரிய பாவியா இருந்து இப்படி பாதியில தவிக்க விட்டுட்டுப் போயிட்டானேடா.. ஐய்யோ..''

சதாசிவம் பெரியப்பாவின் அழுகுரல் ஆஸ்பத்திரியையே திரும்பிப் பார்க்க வைத்தது. ஒரு நர்ஸ் சற்று முன்வந்து, உதட்டில் கை வைத்துக் காட்டி, அமைதியாக அழச் சொன்னாள்.

அதைப் பார்த்த ராதாவிடம் சட்டென்று ஒரு வேகம். சுதாரித்து எழுந்தவள், ''பெரியப்பா.. தைரியமா இருங்க பெரியப்பா.. இனிமே எங்களுக்கு நீங்க பெரியப்பா மட்டுமில்ல.. அப்பாவும் நீங்கதான்.. நான் போய் அம்மாவைப் பாத்துட்டு வந்துட்றேன்..'' என்று துணிவை வலிந்து வரவழைத்துக் கொண்டு சீஃப் டாக்டரைப் போய் பார்த்தாள். பின் அங்கிருந்து லட்சுமி அட்மிட் ஆகியிருக்கும் இன்டென்சிவ் கேர் வார்டுக்குச் சென்றபோது, அங்கு கிடந்த லட்சுமியின் கோலம் ஒரு கணம் நெஞ்சில் அறைந்தது.

தலையில் பலத்த அடிபட்டு மண்டை பிளந்து கொண்டு, மூளைப் பகுதியே கொஞ்சம்போல வெளியே தெரிந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த நொடி அடிவயிறு உள் அமுங்கி, ''அம்மா'' என்கிற பெரும் ஓலம் அடிமனதில் ஏற்பட்டு அடங்கியது.

கேஸ் ஷீட்டும் கையுமாக இருந்த நர்ஸிடம் கேட்டபோது நர்ஸ் கேட்ட முதல் கேள்வியே,

''நீங்க யாரு..?'' என்பதுதான்.

''நாங்க இவங்க மகளுங்க..''

‘‘அப்ப கடவுள்கிட்ட பிரார்த்தனை பண்ணிக்குங்க. எழுபது பர்சன்ட் சான்ஸ் இல்லை. மீறிப் பிழைச்சாலும் இவங்களால நடமாட முடியாது. முதுகெலும்புல பல இடங்கள் நொறுங்கிப் போச்சு. பெட் ரிடர்னாதான் இவங்க இருந்தாகணும்..’’

‘‘அய்யோ.. இன்னிக்கு எவ்வளவோ வசதி, வாய்ப்பு வந்துட்டதா சொல்றாங்களே..’’

‘‘அதை வெச்சுதான் உயிரைக் காப்பாத்த முடியும்னு சொன்னேன். அதுவும் இங்க வெச்சு இல்லை. இங்க இருக்கிற சீஃப் ஆர்த்தோ டாக்டர் பிரைவேட்டாவும் சர்வீஸ் பண்றார். அங்க நீங்க சேர்த்தா, இவங்க நிச்சயம் உயிர் பிழைச்சுடுவாங்க. எதுவா இருந்தாலும் சீக்கிரமா முடி வெடுங்க. இதை எல்லாம் நான் சொன்னதா எங்கேயும் சொல்லிடாதீங்க..’’

அந்த நர்ஸ் அந்த சீஃப் டாக்டருக்கு புரோக்கர் வேலை பார்ப்பவள் என்பது அவள் பேசியதிலேயே தெரிந்து விட்டது.

அப்போது இன்னொரு நர்ஸ் வந்து அவர்கள் மூவரையும் தனியே ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்று, கிசுகிசு குரலில் பேச ஆரம்பித்தாள்.

‘‘அந்த நர்ஸ் இங்க ட்ரீட்மென்ட் எடுத்தா தேறாதுன்னு சொல்லியிருப்பாளே..?’’

‘‘சரி.. நீங்க என்ன சொல்லப் போறீங்க..?’’

‘‘துடிச்சிக்கிட்டுக் கிடக்கறது உங்க’அம்மாதானே..?’’

‘‘ஆமாம்..’’

‘‘நான் சொல்லப் போறதக் கேட்டு, என்னைத் தப்பா புரிஞ்சிக்கக் கூடாது..’’

‘‘முதல்ல சொல்லுங்க..’’



‘‘இவங்க உசுர் பொழைச்சாலும் பழைய மாதிரி பேசக் கொள்ள முடியாது. டாக்டருங்க பேசிக்கிட்டிருந்ததை நான் கேட்டேன். இவங்க தலைல அந்த அளவுக்கு அடிபட்டிருக்கு..’’

‘‘அதனால..?’’

‘‘பேசாம அப்படியே விட்ருங்க. ‘எங்களால எந்த செலவும் செய்ய முடியாது’ன்னு பளிச்சின்னு சொல்லிடுங்க. இல்லாட்டி, உங்களுக்கு லட்சக் கணக்குல செலவு மட்டுமில்ல.. இவங்களால சல்லிக் காசு பிரயோஜனமும் கிடையாது. உசுர்ப் பொணமா இவங்களை வெச்சிட்டிருக்கறதுக்கு போகட்டும்னு விட்ருங்க. ஆக்ஸிஜனைக் குறைச்சா போதும்.. உயிர் அடங்கிடும்’’. அவள் பேச்சு ராதாவின் காதுகளில் திராவகமாக இறங்கியது.




அந்த நர்ஸ் சொன்னதைக் கேட்டு ராதா நிலை குலைந்து போய்விட்டாள். என்ன ஒரு கோரமான சிந்தனை..!

வெள்ளை உடைக்குள் கருணையை சுமக்கும் ஒரு நர்ஸாக இருந்து கொண்டு.. அதிலும் பெண்ணாக வேறு இருந்து கொண்டு, எப்படி அவளால் அப்படி பேச முடிந்தது?

ராதாவுக்கு நெஞ்சையடைத்து கண்கள் இரண்டும் அப்படியே பீறிட்டன.

அதோடு அவளுக்கு பதிலேதும் கூறாமல் அங்கிருந்து வெளியேறி, பெரியப்பா சதாசிவம் அருகில் வந்து நின்றாள். உடம்பெல்லாம் நடுங்கியது.

நந்தினியும் ரஞ்சனியும் கூட அங்குதான் இருந்தனர். கணேசன் ஃபோன் மூலம் உறவினர்களுக்கு கருணாகரனின் இறப்பை சொல்லிக் கொண்டிருந்தான்.

பெரியப்பா கேட்டார்.

''என்ன ராதா.. உங்கம்மாவாவது நல்லா இருக்காள்ல..?''

''பெரியப்பா..''

''என்னடா..?''

''எப்படி பெரியப்பா சொல்லுவேன்.. நான் கொஞ்சம் கூட அதிர்ஷ்டம் இல்லாதவ பெரியப்பா..''

''நீ மட்டும் இல்லம்மா.. இங்க எல்லாரும்தான்! கல்யாண சந்தோஷத்தோட இருக்க வேண்டிய எல்லாரும் எப்படி அழுதுக்கிட்டிருக்கோம் பாரு.. சரி விஷயத்துக்கு வா.. அம்மா எப்படி இருக்கா..?''

''உயிருக்கு..''



''உயிருக்கு..''

''உயிருக்கு ஆபத்து இல்லை.. ஆனால் பொழைக்கறதுல எந்த அர்த்தமும் இல்லேன்னு..'' ராதாவால் முடிக்க முடியவில்லை. அதற்குள் கணேசன் வந்து நின்றான்.

''தா.. ராதா.. அழுவாத..! அம்மாக்கு எதுவும் ஆகாது..''

''அடேய்.. அவ பொழைச்சாலும் பிரயோஜனம் இல்லைன்னு சொல்லியிருக்காங்கடா..'' சதாசிவம் வெடித்தார்.

''ஐயோ.. அப்படியா சொன்னாங்க..!''

''ஆமாம்.. தலைல அடிபட்டதுல சுயநினைவு போயிடிச்சாம்..''

''அப்ப கிட்டத்தட்ட கோமா ஸ்டேஜ்..'' என்றாள் நந்தினி.

''பெரியப்பா.. வாங்க நாம போய் என்ன ஏதுன்னு விசாரிப்போம்..'' கணேசன் அவரைக் கிளப்பினான். ராதா அப்படி சொன்னதைத் தொடர்ந்து ரஞ்சனி, லட்சுமி கிடக்கும் ஐ.சி.யூ. நோக்கி ஓடினாள். நந்தினி மெல்ல நடந்து சென்றாள்.

அவளால் அப்படி ஒரு சூழலில் எப்படி பதட்டமும் துக்கமும் இன்றி இருக்க முடிகிறது என்பதே ஒரு புதிரான விஷயம்தான்.

சதாசிவமும் கணேசனும் யாரை சந்தித்துப் பேச வேண்டுமோ பேசினார்கள். டாக்டர்கள் பதில் வினோதமாக இருந்தது.

''இப்போதைக்கு உயிருக்கு ஆபத்து இல்லை. ஆனா ஒரு கோமா ஸ்டேஜ் பாடி மாதிரிதான் இவங்க. தொடர்ந்து ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு வர்றதுல மெல்ல சுய நினைவு திரும்பலாம். திரும்பாமலே கூடப் போகலாம். ஆனா, நிச்சயம் கொஞ்ச நாளைக்கு இவங்களால எந்தப் பிரயோஜனமும் கிடையாது. .பொம்மை மாதிரி துடைச்சுத்

துடைச்சுதான் வச்சுக்கணும்..'' என்றார் ஒரு டாக்டர். அதை கேட்ட ராதா டாக்டரிடம்..

''எங்கம்மா உயிரோட இருந்தா போதும் டாக்டர்..'' என்று தன் விருப்பத்தைக் கூறிவிட்டாள்!

வீட்டில் ஃப்ரீஸர் பெட்டிக்குள் கருணாகரன்! சுற்றி.லும் உறவுகள் திரண்டு வந்து அழுதபடி இருந்தனர். ராதாவுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த மாப்பிள்ளை ஜெகதீஷும் அவனுடைய அக்கா சாரதாவும் அவள் கணவன் ராகவனும் தங்கள் காரில் இருந்து இறங்கி வந்தபடி இருந்தனர்.

ஜெகதீஷ் கையில் ஒரு பெரிய ரோஜாப் பூமாலை இருந்தது. அவன் நடந்து வருகையில் அது உதிர்ந்து கொட்டிக் கொண்டே வந்தது.

அவர்களைப் பார்க்கவும் சதாசிவம் நிமிர்ந்தார். கணேசன் அந்த நிலையிலும் முக்கியத்துவம் கொடுத்து அவர்களை நோக்கிச் சென்று, உடன் இருந்து அழைத்து வந்தான்.

ஜெகதீஷ் ஃப்ரீஸர் மேல் மாலையை வைத்து விட்டு வெறித்தான். சாரதா, ராதவைத் தேடிச் சென்று கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''உனக்கு எப்படி ஆறுதல் சொல்றதுன்னே தெரியல எனக்கு..'' என்று அவள் அழுத்தமான குரலில் பேசிய போது, விலகி நின்று கொண்டிருந்த நந்தினி வேகமாக நகர்ந்து அவர்கள் அருகில் வந்து நின்றாள். அவள் பார்வை ஜெகதீஷ் மேலேயும் சாரதா மேலேயும் மாறி மாறிச் சென்றது.

ராதா அமர்த்தலாக அழுதாள். ரஞ்சனி அவ்வப்போது ஓங்கினாள். ஆனால் நந்தினிக்கு மட்டும் அழுகையே வரவில்லை. அதற்கு அப்பா-அம்மா இருவருமே அவள் வரையில் கண்டிப்புடன் இருந்தது காரணமாக இருக்கலாமே என்று தோன்றியது.



ஜெகதீஷ் ஃப்ரீஸரை விட்டு விலகி ராதா அருகில் வந்தான். ஊன்றிப் பார்த்தான். ராதாவால் அவன் பார்வையைத் தாள முடியவில்லை. தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''ராதா.. தைரியமா இரு.. இதனால கல்யாண விஷயம் பாதிக்குமோன்னெல்லாம் அநாவசியக் கவலைகள் வேண்டாம். எப்ப நிச்சயதார்த்தம் முடிஞ்சாச்சோ அப்பவே நான் இந்த வீட்டு மாப்பிள்ளை ஆயிட்டேன். அதுல எந்த மாற்றமும் எதனாலயும் வராது..'' என்கிற அவன் பேச்சு, அங்கு நின்றிருந்த பலர் காதுகளில் விழுந்து, அவர்கள் அவனை மதிப்போடு பார்த்தனர்.

'பிள்ளைன்னா இப்படில்ல இருக்கணும்?' என்று மனதுக்குள்ளும் நினைத்துக் கொண்டனர். கணேசனுக்கு அவன் அப்படிச் சொன்னது அந்த துயரமான வேளையிலும் பெரிய அளவில் இதமாக இருந்தது.

சாவுக்கு வந்தவர்கள் லட்சுமி பற்றிக் கேட்கத் தவறவில்லை.

''பாவம் லட்சுமி.. புருஷன் செத்ததுகூடத் தெரியாம ஆஸ்பத்திரில கிடக்கறா. இந்த ஒரு நிலை எந்தப் பொண்ணுக்கும் வரக்கூடாது..'' என்கிற அவர்களது பரிதாபக் கருத்துக்கள் ராதாவை உழுது கொண்டிருந்தன!

மற்ற காரியங்களை எல்லாம் கணேசனே ஓடியாடி செய்தபடி இருந்தான். அப்போதுதான் அவனுக்கு இன்னொரு உண்மையும் தெரிய வந்திருந்தது.

வீட்டை அடகு வைத்து வாங்கி வந்திருந்த பணத்தில் தான் ஒரு தோல் பையில் முப்பதாயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு, லட்சுமியும் கருணாகரனும் புறப்பட்டிருந்தனர். போகும் வழியிலேயே ஆக்ஸிடென்ட் ஆகி விட்டது. அதில் பணத்தோடு அந்தத் தோல் பையும்

காணாமல் போய்விட்டிருந்தது..! அதைப் பற்றிப் பே
வதற்கு அது நேரமும் இல்லை. எனவே, தன் ஜெராக்
கடை கல்லாவில் இருந்ததையும் இல்லாததையும் வைத்
சமாளித்துக் கொண்டிருந்தான்.

அவ்வளவு துக்கத்துக்கு இடையிலும் ராதா அ
உணர்ந்து கொண்டதுதான் ஆச்சரியம். கணேசனை தனிே
அழைத்துச் சென்று கேட்டான்.

''அத்தான்.. எல்லா செலவுக்கும் பணத்துக்கு என்
பண்ணிக்கிட்டிருக்கீங்க..?''

''இருக்கு ராதா.. நீ போ.. நான் பார்த்துக்கறேன்..''

''எங்க இருக்கு? ஆஸ்பத்திரியில அப்பாவோ
கைக்கெடிகாரத்தை மட்டும்தான் ஒப்படைச்சாங்க. அவ
கொண்டு போன பணத்தை இல்லை..''

''ராதா.. எல்லாத்தையும் அப்புறமா பேசிக்கலாம். இ
அதைப் பத்தி எல்லாம் பேசற நேரமில்லை..''

''அதுக்காக.. நீங்க உங்க கடைக் காசை எடுத்து
செலவு செய்யறதை நான் ஒத்துக்க மாட்டேன். கொஞ்ச
இருங்க..'' என்ற ராதா உள்ளே சென்று பீரோவைத் திறந்து
அதில் இருந்த பணத்தை எடுத்து வந்து தந்தாள்.
சுளையாக ஐம்பதாயிரம்!

''அத்தான்.. இதுல இருந்து எடுத்து செலவு பண்
ணுங்க. எல்லாத்தையும் குறிச்சும் வெச்சுக்குங்க. ஒரு
கையா இருக்கட்டும்..'' என்றவளை கணேசன் சற்று சிலிர்ப்
போடு பார்த்தான்! ஒரு ஆச்சரியம் போல, கணேசனுடன்
புதிய மாப்பிள்ளை ஜெகதீஷும் சேர்ந்து கொண்டான்.

''மிஸ்டர் கணேஷ்.. நீங்க தனியா கஷ்டப்படாதீங்க.
நானும் வரேன். நாம சேர்ந்து செய்யலாம்..'' என்றான்.
அவனது பெருந்தன்மை கணேசனை மிகவே கவர்ந்து
விட்டது. நந்தினி மட்டும் நகம் கடித்தபடியே அவனையே



வெறித்துக் கொண்டிருந்தாள். அதை ராதாவும் அவ்வப்
போது கவனித்துக் கொண்டே இருந்ததுதான் ஆச்சரியம்!

மறுநாள்! காலை ஏழு மணிக்கே ஜெகதீஷின் கார்
ராதா வீட்டு வாசலுக்கு வந்துவிட்டது. உள்ளேயிருந்து
வேஷ்டி, டிஷர்ட் என்கிற ஹோம்லிலுக்குடன் இறங்கி
வந்தவனை சதாசிவம் மிகுந்த ஆச்சர்யத்தோடு பார்த்தார்.

''வாங்க மாப்ளை, உக்காருங்க..'' என்று நாற்காலி
யைக் காட்டினார். அவனும் அமர்ந்தான். அவன் காரில்
வந்து இறங்குவதை ராதா ஆரம்பத்திலேயே கவனித்து
விட்டாள். பார்த்து விட்டுத்தான் சமையல்கட்டுப் பக்கமும்
சென்றாள். அடுப்பில் பாலின் கொதிப்பு. நந்தினியும்
முகத்தை ஒரு டவலால் துடைத்தபடி வந்து நின்றாள்.
ராதா காஃபி போட்டாள். வாசம் மூக்கில் ஏறியது.

பெண்களுக்கு கைமணம் என்று ஒன்று இருக்கிற
தாம். உணவுப் பொருளோடு அதுவும் சேர்ந்துதான் ருசி
உருவாகிறதாம். இந்தக் கைமணம் ஆளுக்கு ஆள் வேறு
படுமாம்.. இதற்கும் அவர்கள் மன அமைப்புக்கும் தொடர்பு
உண்டாம்.

தாய்மை உணர்வும் பெண்மையின் ஏனையை உணர்வு
களும் மிக அதிகம் உள்ள பெண்கள், தங்கள் கையால்
பச்சைத் தண்ணீரே தந்தாலும் அதில் ஒரு சுவை இருக்கு
மாம்..'' இதை எல்லாம் கருணாகரன் சொல்லியிருக்கிறார்.
அவர் ராதா கையால்தான் காஃபி சாப்பிடுவார். நந்தினி
எடுத்து வந்தால், ''நீ எதுக்கு எடுத்துக்கிட்டு வந்தே..?
வெச்சுட்டுப் போ'' என்பார்.

அது எல்லாமே நந்தினிக்கு அவ்வேளையில் நினை
வுக்கு வந்தது. ராதா காஃபி போட்டு எடுத்துப் போய்
ஜெகதீஷிற்கு தரப் போகிறாள். கல்யாணத்திற்கு முன்பே
தன்னை இந்த வீட்டு மாப்பிள்ளை என்று ஸ்திரப்படுத்திக்

கொண்டவன். இந்த காஃபியையும் குடித்தால் நிச்சயம் சொக்கிப் போவான்.

இப்படி ஒரு உள் கணக்கோடு ராதாவையும் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் நந்தினி. மனதுக்குள் வேறு விதமாகவும் கணக்குகள்..! எப்படியும் விரைவில் திருமணம் ஆகிவிடும். அதன்பின் ராதா வெளியேறி விடுவாள். அதன் பிறகு, சமையல்கட்டு மட்டுமல்ல.. மொத்த வீடே தன் கையில்.. குற்றம் சொல்லும் அப்பா போய்ச் சேர்ந்து விட்டார். அவருக்கு ஒத்து ஊதும் அம்மாவோ இனி படுக்கைப் பிணம்! எனவே இனிவரும் காலம் தன் காலம் தான் என்பதுபோல் அவளுக்குள் ஒரு எண்ண ஓட்டம்.

அப்படியே ஜெகதீஷை எண்ணி ஒரு பெருமூச்சு. 'ராதா.. நீ கொடுத்து வச்சவதாண்டி..' என்று ஒரு அனல் பார்வை...

அப்போது, அதை எல்லாமே உடைப்பதுபோல நந்தினியை அழைத்து அவள் கையில் காஃபி தம்ளரை தந்தாள் ராதா.

''நான் குடிக்கவா..?''

''இல்ல.. இதப் போய் மாப்ளகிட்ட கொடுத்துட்டு வா..''

''நானா..?''

''நீயேதான்.. போ..''

''கல்யாணப் பொண்ணு நீதானே.. நீ போய்க் கொடு..''

''சொன்னதைச் செய். போ.. 'காஃபி யார் போட்டது?'னு கேட்டா என்னைச் சொல்லாதே..''

ராதாவின் வார்த்தைகள் நந்தினியை அதிர வைத்தன.

''உனக்கு என்ன ஆச்சு..?'' என்று கேட்க வைத்தன.

''கேள்வி கேட்காம எழுந்து போ..'' ராதா குரலில்



கொஞ்சம் அதட்டல் கவ்வ ஆரம்பித்தது. நந்தினியும் காஃபியுடன் நகர்ந்து சென்றாள்.

ஜெகதீஷ், சதாசிவம் பெரியப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தான். கணேசனும் அருகில் இருந்தான்.

''வர்ற வழியில ஆஸ்பத்திரிக்குப் போய் ஆன்ட்டிய பார்த்துட்டுதான் வரேன். அவங்க ஐசியூ-வை விட்டு வரவே பதினைந்து நாளாகும்னு சொன்னாங்க. ஆன்ட்டிக்கு நல்ல லட்சுமிகரமான முகம். அந்த முகத்தை, தலைல பெரிய கட்டோடயும் மூக்குல ஆக்சிஜன் ட்யூப்போடயும் பார்த்தப்போ ரொம்ப கஷ்டமா இருந்தது.''

லைஃப்ல ஒவ்வொரு செகண்டுமே ஒரு சஸ்பென்ஸ் தான் அங்கிள். யார் எப்படி மாறுவோம்.. எங்க இருப்போம்.. என்ன செய்வோம்..ங்கற எதுவுமே நம்ம கையில இல்லை. ஆக்சுவலா நான் இன்னிக்கு கொல்கட்டாவுல இருக்கணும். ஆனா பாருங்க.. நான் இப்ப போய் சுடுகாட்டுல அங்கிளோட சாம்பல் எடுக்கப் போறேன். நான் இதை கற்பனைக்கூடப் பண்ணிப் பார்க்கலை..'' ஜெகதீஷ் வெகு இயல்பாகப் பேசினான்.

அவன் பேச்சிலும் நல்ல உள்ளர்த்தம்!

சதாசிவம் பெரியப்பா அதை ரசித்தார்.

''அதனாலதான் மாப்ளை, நாளைக்குனு வாழாம அன்னிக்கே வாழ்ந்துடச் சொன்னாங்க பெரியவங்க. அப்படி வாழும்போது, நல்லவிதமாகவும் வாழச் சொன்னாங்க. ஒரு நல்லதை நாளைக்கு செய்துக்கலாம்னு தள்ளிப் போட்டா, அதைச் செய்ய முடியாமலே கூடப் போயிடலாம். அதனால எதுவா இருந்தாலும் உடனே அப்பப்ப செய்துடணும்..''

''உண்மைதான் அங்கிள்..'' என்று ஜெகதீஷ் ஆமோதிக்கும்போது காஃபியுடன் வந்து நின்றாள் நந்தினி.

ஜெகதீஷும் வாங்கிக் கொண்டான். வாசம் ஆசையை அதி
ரிக்கப் பார்த்தது.

''அங்க்கிள் உங்களுக்கு..?''

''நான் இப்பதான் குடிச்சேன்..''

''மிஸ்டர் கணேஷ். வாட் அபவுட் யூ..?''

''நான் குடிச்சுக்கறேன் மாப்ள, நீங்க குடிங்க..''

''வாங்க ரெண்டு பேரும் பாதி பாதி குடிப்போம்..''

''அட என்னங்க நீங்க.. நல்லா குடிங்க. நான் உள்ள போய் ராதாகிட்ட வாங்கிக் குடிக்கறேன்.''

அவனும் குடித்தான். முகத்தில் பெரிதும் மாறுதல்கள். ''வாவ்.. எக்ஸலன்ட்..!'' என்றான். அடுத்த நொடி ''இந்த காஃபியை நான் போட்டேன்..'' என்றாள் நந்தினி. சதாசிவம் பெரியப்பாவுக்கு சற்று சுருக்கென்றது. ஆனால் அவ வரையில் அதிர்ச்சிகள் பழையவைதானே..?

ஜெகதீஷ், ''எக்ஸலன்ட்.. உன் கைக்கு தங்கக் காப்பு பண்ணிப் போடலாம்..'' என்றான்.

உடனேயே ''போட்டுக்க நான் தயார்..'' என்று சிரித்தாள் அவள். அவனும் ''போட்டுட்டா போச்சு..'' என்றான். கணேசன் அதைக் கேட்டபடியே சமையல் கட்டுக்குள் நுழைந்து ராதாவை வெறித்தான்.

''என்னத்தான்..?''

''உன் தங்கச்சி ஆரம்பிச்சிட்டா அவ கச்சேரியை..''

''அதுக்கென்ன் இப்போ..?''

''என்ன ராதா கேள்வி இது.. அவளோட சுயநலம் எப்படிப்பட்டதுனு தெரியும்தானே..?''

''அதனால..?''

''அவ நீ போட்ட காஃபியை நான் போட்டதுங்கறா..



இதை சகிச்சுக்கலாம். நாளைக்கு உன் கழுத்துல தாலி கட்டப் போற மாப்பிள்ளையையே என் மாப்பிள்ளைன் னுட்டா..?''

கணேசன் பளிச்சென்றே கேட்டுவிட்டான்.

கேட்டுவிட்டு, அவசரப்பட்டு விட்டோமோ என்று கூட நினைத்து நெளிந்தான். ஆனால் ராதாவிடம் பதிலுக்கு எந்த அதிர்ச்சியுமில்லை.

''அவ அப்படி சொன்னாலோ.. இல்லை, அவ விருப்பப்படி அவர் அவ கழுத்துல தாலி கட்டினாலோ எனக்கு சந்தோஷம்தான். அதான் கணேஷ் அத்தான் எனக்கு வேணும்..!''

ராதாவின் பதில் கணேசன் தலையில் கிட்டத்தட்ட ஒரு இடியைப் போலத்தான் இறக்கியது.

## 10



ராதாவின் பதில் கணேசனை வெறிக்க விட்டது. அடுத்து அவனிடமிருந்து பேச்சே வரவில்லை. ஆனா ராதா, மிக சகஜமாய் எந்தவிதமான பதட்டமும் படபடப்பு இன்றி, காஃபி போடுவதிலேயே மும்முரமாய் இருந்தாள்.

அவனுக்கும் தெரியும்.. இப்படி ஒரு பதிலை அந்த வீட்டில் யாருமே விரும்ப மாட்டார்கள் என்று..! ஆனாலும் அவள் ஒரு தெளிவான முடிவெடுத்து விட்டுத்தான் அப்படி பேசினாள் என்பது அவளது பதட்டமில்லாத செயல்பா டில் தெரிந்தது.

அப்படியே கணேசனுக்கும் காஃபியைக் கலந்தவள், ''அத்தான்.. இங்கேயே குடிங்க! சூடு ஆறிடப் போகுது'' என்றாள்.

''காஃபி சூடு எவ்வளவு வேணா ஆறிட்டுப் போகட் டும் ராதா. திரும்ப கூட வெச்சுக்கலாம். ஆனா நீ மனசுக் குள்ள இப்ப என்னை சூடாக்கிட்டே..'' என்றான்.

''முதல்ல காஃபி குடிங்க. நீங்க டி.வி. சீரியல்லாம் பார்க்க மாட்டீங்களே..''

''இப்ப எதுக்கு அந்தக் கேள்வி..?''

''இல்ல.. அதுலதான் காஃபிச் சூடு.. மனச்சூடுன் னெல்லாம் வசனம் பேசுவாங்க..''

''ராதா எப்படி இப்படி உன்னால பேச முடியுது..? அந்தப் பேராசைக்காரிக்காக, கால் செருப்புல இருந்து கண் மை வரை விட்டுக் கொடுத்துருக்கே.. அது எனக்கும் தெரியும். ஆனா உனக்குனு அமையப் போற வாழ்க்கை யையே விட்டுத் தர்றேன்ங்கறியே.. நீ என்ன பைத்தி யமா..?'' கணேசனிடம் மிதமாய் ஆவேசம் வெளிப்பட்டது.



''அத்தான்.. பைத்தியங்கள் எங்கயாவது விட்டுத் தருமா..? சட்டையைக் கிழிச்சிக்கிட்டு சண்டைதான் போடும்..''

''நான் ஒரு பேச்சுக்கு சொன்னேன். ஆமா, எந்த எண்ணத்துல நீ இப்படிப் பேசினே..? அந்த மாப்ளைக்கு உன் தங்கையைப் பிடிக்க வேண்டாமா..?''

''என் தங்கைக்கு என்ன குறை..? என்னை விடவே அவ ராஜாத்தி..''

''ராஜாத்தியா.. தப்பா சொல்றே.. அவளை ராஜாளினு சொல்லு.. சரியா இருக்கும்..''

''அத்தான்..''

''என்ன அத்தான்.. உன் எண்ணத்தை மாத்திக்கோ.. பத்தாம்பசலி மாதிரி நடந்துக்காதே..''

கணேசன் பதிலுக்கு பதில் பேசினான். அப்போது, காலியான காஃபி தம்ளருடன் நந்தினி திரும்பி வந்து கொண்டிருந்தாள். துளிக்கூட தந்தையை இழந்த சோகம் இல்லாத முகம். மாறாக, 'ஜெகதீஷ் தன்னைப் பார்த்தால் ஜொள்ளு விட வேண்டும்' என்று ஆசைப்பட்டவளைப் போல, மேலாக்கை சற்று சுதந்திரமாக விட்டிருந்தாள். கணேசனுக்கு அது புரிந்தது. அவளை முதல் தடவையாக மிகுந்த கோபத்தோடு பார்த்தாள்.

''என்ன பார்க்கறே..?''

''பார்க்காம.. இது சாவு வீடு, நீ என்னமோ அழகிப் போட்டி நடக்கிற இடம்னு நினைச்சுட்ட மாதிரி தெரியுது..''

''என்ன.. பேச்சு ஒரு மாதிரியா இருக்கு, என் அக்கா வுக்கு பயமா இருக்குதா..?''

''அவளுக்கு பயமா..? என் கேள்விக்கு பதிலைச் சொல்லாம அவளை எதுக்கு வம்புக்கு இழுக்கறே..?''

''இல்ல.. இப்படி எல்லாம் நீ பேச மாட்டியே.. அதனால கேட்டேன்..''

''இப்ப இங்க நான்தான் பேசறேன். இது எந்தக் காலத்துல பேசியிருக்கு? எல்லாத்தையும் விட்டு கொடுத்துட்டு, அப்பக்கூட சிரிச்சுக்கிட்டே நிக்கச் சொல்லு.. இது நிக்கும். ஆனா, உன்ன மாதிரி இதுக்கு தேள் கொடுக்கு நாக்கு கிடையாது..''

''ஹலோ என்ன.. விட்டா, மேல மேல போய்க்கிட்டே இருக்கு.. அடங்கு..'' நந்தினி ஸ்டைலாக எகிற, குறுக்கிட்டாள் ராதா.

''நந்தினி.. வார்த்தைக்கு வார்த்தை பேசாம, போய் வேலையைப் பார். சுடுகாட்டுக்குப் போய்ட்டு வரப் போறவங்களுக்கு வென்னீர் போடணும். வாசல்ல கால் கழுவ, அண்டாவுல தண்ணீர் வைக்கணும். அரிசி உப்புமாவுக்கு அரிசியை உடைக்கணும்.. எவ்வளவு வேலை இருக்கு..?'' என்று ராதா நந்தினியைத் தள்ளிவிட்டாள். அவளும் நெளிந்தபடியே விலகினாள். ஆனால், கணேசன் மட்டும் விலகாமல் நின்று கொண்டிருந்தான்.

''புறப்படு அத்தான்.. பால் தெளிக்கப் போக வேண்டாமா..?''

''இங்க இப்ப என் மனசுல முதல்ல பால் தெளி ராதா.. உன் கல்யாணம் நல்லபடியா நடக்கணும். நடக்கும்னு சொல்..''

கணேசனின் அக்கறையைப் பார்த்து அவளுக்கு சிலிர்ப்பாகவும் இருந்தது.

''நடக்கும்..'' என்றாள் மெல்லிய குரலில்.

''இப்ப இப்படிச் சொல்லிட்டு, பின்னால நீ மனசு மாறிடக் கூடாது. என் மேல அடிச்சு சத்தியம் செய் முதல்ல..'' என்றான்.



அப்படியே செய்தாள்.. அதன் பிறகே கணேசன் அகன்றான்.

ஹாலுக்கு வந்தவன், சதாசிவத்துடன் பேசியபடி இருக்கும் ஜெகதீஷையும் ஒரு பார்வை பார்த்தான். மனிதர்களில் நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இல்லாவிட்டால் திருமணத்துக்கு முன்பே உறவு ஏற்பட்டதாகக் கருதிக் கொண்டு, ஒரு குடும்பத்தின் துக்க நிகழ்வுக்கு வர மனம் வருமா..?

ஜெகதீஷை நெருங்கினான்.

''மாப்ள..''

''சொல்லுங்க கணேசன்..''

''நாம சுடுகாட்டுக்குப் புறப்படலாமா..?''

''நான் அதுக்குத்தானே வந்துருக்கேன். புறப்படலாமா..?''

சதாசிவம் பெரியப்பாவும் கட்டிலை விட்டு எழுந்து வேஷ்டியை அவிழ்த்து இறுக்கிக் கட்டிக் கொண்டவராக.. ''நானும் வரேன்..'' என்று அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

சமையல்கட்டை விட்டு விலகி வந்து, எல்லோரும் ஒரு வேனில் ஏறிக் கிளம்புவது வரை பார்த்துக் கொண்டே இருந்தாள் ராதா. ரஞ்சனி மெல்ல அருகில் வந்தாள்.

நந்தினி மாடிப் பக்கம் சென்றிருந்தாள். உறவுகளும் தூர இருந்தனர்.

''என்ன ரஞ்சா..''

''அக்கா..''

''சொல்லு..''

கணேசன் அத்தானோட நீ பேசனதக் கேட்டுக்கிட்டிருந்தேன்..''

அவள் அப்படிச் சொல்லவுமே நறுக்கென்று காலை தைத்ததுபோல ஊன்றப் பார்த்தாள்.

''அக்கா.. நீ விளையாட்டுக்கு எதையும் பேசறவ கிடையாது. அதனால கேட்கறேன். எதனால அக்கா இந்த மாப்ளையை நீ நந்தினிக்குன்னு முடிவு பண்ணே..?''

''ரஞ்சா அது வந்து.. அது வந்து..''

''எது வந்துக்கா.. வேண்டாம்க்கா! மாப்ளை ரொம்ப நல்லவரா இருக்காரு. அப்பா, அம்மா ரெண்டு பேருமே இப்ப இருந்தும் இல்லாம போயிட்டாங்க. எனக்குத் தெரிஞ்சத வெச்சு சொல்றேன்க்கா. இப்படி நடந்ததுக்கு வேற யாரா இருந்தாலும் விலகிப் போயிருப்பாங்க. ஏன்னா, உனக்குப் பின்னால நாங்க ரெண்டு பேர் இருக்கோம். சொத்து, பத்தும் கிடையாது. எங்கள கரை சேக்கற சுமை நம்ம தலைல விழுந்துடும்னு நினைச்சு பயந்து, 'இந்தக் கல்யாணமே நின்னு போச்சு'ம்பாங்க.

ஆனா, ஜெகதீஷ் ஜென்டில்மேன்! பாருக்கா.. நேத்து அவங்க குடும்பத்தோட வந்தார். இன்னிக்கும் வந்துட்டார்.. வாஸ்தவத்துல, கல்யாணம் ஆகியிருந்தா ஒரு மாப்ளையா அவர்தான் இதைச் செய்யணும். ஆனா, ஆகறதுக்கு முன்பே பொறுப்பா இதைச் செய்யறார். இப்படி ஒருத்தர் புருஷனா வர எந்தப் பொண்ணுமே கொடுத்து வச்சிருக்கணும். அப்படி இருக்க, இப்படி ஒருத்தரைப் போய் நீ விட்டுத் தர்றியேக்கா..''

ரஞ்சனியின் விளக்கமான பேச்சு ராதாவை சற்று நெகிழ வைத்திருந்தது. அவள் தாடையைத் தடவி, அப்படியே தன் உதட்டுக்குக் கொண்டு சென்று முத்தமிட்டாள்.

பின் பேசத் தொடங்கினாள்.

''ரஞ்சா.. உன்னை நான் இன்னும் சின்னவளாவே நினைச்சுட்டிருக்கேன். ஆனா, ரொம்பப் பெரிய பேச்சைப் பேசியிருக்கே. பரவாயில்ல. உனக்கும் எல்லாம் தெரிஞ்சிருக்கு. எப்ப நீ இவ்வளவு பேசிட்டியோ, உன்கிட்ட இந்த



அக்கா இனி எல்லாத்தையும் பேசிர்றதுதான் சரி. நல்ல வேளை! எல்லாரும் வெளியே போய்ட்டாங்க. நான் சொல்றதை நல்லாக்கேள்.

அம்மாவுக்குப் பூரண குணமாக எவ்வளவு காலமாகுமன்னு தெரியாது. ஒருவேளை, கடைசிவரை அவங்க குணமாகாமலேயே கூடப் போயிடலாம். இதை நான் சொல்லலை.. டாக்டர்தான் சொன்னாங்க. நான் உன்னை இப்ப கேக்கறேன்.. என் முகத்தைப் பார்த்து பதில் சொல். நான் கல்யாணமாகிப் போன பிறகு, அம்மாவை நீயும் நந்தினியும் ஜாக்ரதையா பார்த்துப்பீங்களா..?''

''அது.. பா.. பார்த்துப்போம்க்கா.. பார்த்துக்கிட்டுத் தானே தீரணும்..?''

''சரி.. எவ்வளவு காலத்துக்கு..?''

''இது என்னக்கா கேள்வி.. அம்மாவுக்கு குணமாகிற வரைதான்..''

''அப்ப உங்க கல்யாணம்..?''

''ஆனா என்னக்கா.. நாம அம்மாவை ஆளுக்குக் கொஞ்ச நாள் வெச்சுக்க முடியாதா..?''

''அப்படியா..?''

''என்னக்கா அப்படியான்னு கேக்கறே.. இப்ப நாம பெரியப்பாவை வெச்சுக்கல..?''

''பைத்தியம். பெரியப்பா அவர் காரியங்களை அவரே பார்த்துக்கறாரு. அம்மா அப்படியா..?''

''புரியுது. அது கஷ்டம்னு சொல்ல வர்றே..?''

''கஷ்டம் மட்டும் இல்ல.. அம்மாவை இனி நாம பாதுகாக்க நினைக்கறது ஒரு தவம். இந்த தவத்தை நந்தினி செய்வாள்னு நீ நம்பறியா..?''

''நிச்சயமா மாட்டா.. அப்பா சாவே அவளை எதுவும் பண்ணலியே..?''

''அவளைக் குறை சொல்லாதே.. அவளால தாங்கிக்க முடியுதுனு நினை.. அவளை இங்க விட்டுட்டு என்னால கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போய், நிம்மதியா யார்கூடயும் வாழ்ந்திட முடியாது..''

''அக்கா.. இது ஆனாலும் ரொம்பக் கொடுமையான தியாகம்..''

''அது எனக்குத் தெரியாது. இப்ப இருக்கற நிலைல இதுதான் எனக்கு சரியான வழியா படுது. அடுத்து உனக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டா, என் கடமையும் நல்லபடியா முடிஞ்சிடும். அம்மாவையும் நான் கிட்ட இருந்து கடைசிவரை பார்த்துப்பேன்..''

''சரிக்கா.. அப்ப நீ கடைசிவரை கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லையா..?''

''அது பத்திப் பேசவோ யோசிக்கவோ இது தருணமில்லை ரஞ்சா..''

''அக்கா..''

''என்னடா..?''

''உனக்கும் கல்யாணம் ஆகணும்க்கா. உனக்கு ஆகாம எங்களுக்கு மட்டும் ஆகறதுக்கு, நாங்களும் கல்யாணம் பண்ணிக்காம இப்படியே இருந்துடுறோம்க்கா..''

அதைக் கேட்டு சிரித்தாள் ராதா. திரும்பவும் அவள் கன்னத்தை வருடியவள், ''போ.. போய் அரிசியை எடுத்து உப்புமா செய்ய கல்லுரல்ல போட்டு உடைக்கற வழியப் பார்..''

''அக்கா..''

''போப்பா.. போய் வேலையைப் பார். இங்க இப்ப பேசினதைப் பத்தி யார்கிட்டயும் பேசக்கூடாது. அது ரொம்ப முக்கியம்..''



''அக்கா..'' ரஞ்சனியின் விழிகளில் ராதாவை எண்ணி, கரகரவென்று கண்ணீர் வந்தது.

''போப்பா..''

''போறேன்.. ஆனா நான் உன் முடிவுகளுக்கு சம்மதிக்க மாட்டேன். ஞாபகம் வெச்சுக்கோ..''

ரஞ்சனி செல்லமாய் எச்சரித்தபடியே விலகினாள்.

அவ்வளவையும் நந்தினி ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்ததுதான் இதில் திருப்பமான விஷயம்.

அவள் முகத்தில் ஒரு பெரும் பூரிப்பு!

'ஜெகதீஷை அக்கா மணக்கப் போவதில்லையா? அவன் இனி தனக்கா..?'

நினைக்கும் போதே அவளுக்கு மனசெல்லாம் இனித்தது. கூடவே பயமும் ஏற்பட்டது.

''நான் மணந்தால் ராதாவைத்தான் மணப்பேன். இல்லாவிட்டால் வேறு இடம் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டால்..? இல்லை.. ராதாவையே வற்புறுத்தி சம்மதிக்க வைத்து விட்டால்..?

தித்தித்த அவள் மனதுக்குள் திகுதிகுவென்று தீயும் மூளத் தொடங்கியது!

சுடுகாடு!

அகண்ட தூங்குமூஞ்சி மரங்களின் நிழல்களில் வேனும் காரும் தேங்கி நிற்க, எல்லோரும் இறங்கிக் கொண்டனர். ஒரு புதிய மூங்கில் கூடைக்குள் இரு மண் கலயங்களும் ஒரு கலயத்தில் பசும்பாலும் இருந்தது.

அதை கணேசனே தூக்கி தலையில் வைத்துக் கொண்டு நடந்தான்.

எவரையுமே சுடுகாட்டுச் சூழல் மௌனமாக்கி விடும். 'நாமும் ஒரு நாள் வரப் போகிற இடம்' என்கிற

எண்ணத்தைத் தரும். அதன் தொடர்ச்சியான பயங்களையும் மூளச் செய்யும்.

குறிப்பாக, சதாசிவத்தை அந்த சுடுகாடு வெறித்துப் பார்க்க விட்டது. 'வயதில் பெரியவனான தான் மிச்சமிருக்க, தம்பி முந்திக் கொண்டு போய்விட்டானே' என்கிற விதி வசம், அவர் கண்ணில் கண்ணீரைப் பீறிட விட்டது.

ஜெகதீஷ் கவனித்துத் தேற்றினான். தாங்கிப் பிடித்து நடந்தான்.

எரிமேடையை நெருங்கியபோது, எல்லாமே அவிந்து அடங்கியிருந்தது. பாலைத் தெளித்தபோது, 'ஜலங்' என்று சப்தமுடன் புகைக் கோடுகள், ஊதுபத்திப் புகைக் கோடுகள் மேலே மேலே எழும்பின.

கருணாகரன் என்கிற மனிதர் பழுப்பு தட்டிய சாம்பலாக பரவிக் கிடந்தார். எலும்புகள் அங்கங்கே கண்ணில் பட்டன. அதைத் தொட்டு எடுத்து கலயத்தில் போட்டபோது, 'இவ்வளவுதானா வாழ்க்கை!' என்றும் தோன்றியது. கணேசனும் சதாசிவமும்தான் துழாவித் துழாவி எலும்புகளை எடுத்தனர்.

ஒரு இடத்தில் இதய பாகம் மட்டும் வேகாமல் அப்படியே இருந்தது. சதாசிவத்தை உதறவிட்டது..!



## 11



**வேகாத** அந்த சதை பாகம் கணேசனை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதைக் கையில் எடுத்தபோது, அவன் உடம்பெல்லாமும் நடுங்கியது. ''மாமா..'' என்றான் சதாசிவத்தைப் பார்த்து.

''என்னப்பா..''

''இங்க பாருங்க..'' என்று சதை பாகத்தைக் காட்டினான். நெருங்கி வந்து பார்த்து சதாசிவம் அதைப் பார்த்து கண்களை அகலத் திறந்தார்.

''கருணாகரா..'' என்றார் விம்மலோடு.

''என்ன மாமா.. மொத்த உடம்பும் எரிஞ்ச நிலைல எப்படி மாமா இது மட்டும்..'' கணேசனின் கேள்விக்கு பதில் கூற முடியாதபடி விம்மலைத் தொடர்ந்தார்.

கண்ணிரண்டிலும் கண்ணீர் பெருகிக் கொட்டியது.

ஜெகதீஷும் அந்த சதை பாகத்தை பார்த்து ஆச்சரியப்பட்டான். அப்போது யதார்த்தமாக சுடுகாட்டு வெட்டியானும் அந்தப் பக்கம் வர, ஜெகதீஷ் அவனை அழைத்தான்.

''என்னப்பா இது.. பாடியை சரியா எரிக்க மாட்டீங்களா..?''

''ஏன் சாமி.. நல்லாத்தானே அவிஞ்சிருக்கு..''

''எங்க..? இங்க பார்..'' சதை பாகத்தைக் காட்டவும் அவனிடம் பெரியதாக ஆச்சரியமோ அதிர்வோ இல்லை.

''சாமி.. இது செத்தவரோட நெஞ்சு. இது வேகலைன்னா செத்தவர் அநியாயமா செத்துருக்கறாருன்னு அர்த்தம்.

அப்படி செத்தாலே நெஞ்சு வேகாது.. ஆயிரத்துல ஒன்னு இப்படி ஆகறது சகஜம். ஆமாம் ஏதாச்சும் நல்ல காரியம் நடக்கணுமா ஊட்டுல..?''

அவன் மிகச் சரியாகக் கேட்டான்.

''ஆமாம்.. இதுக்கும் அதுக்கும் என்ன சம்மந்தம்?''

''நல்லா கேட்டீங்க சாமி. நல்ல காரியத்த பண்ண வேண்டியவர் செத்துட்டா நல்ல காரியம் எப்படி நடக்கும்..? அந்தக் கவலைதான் இப்படி காட்டுது.. இதெல்லாம் எங்களுக்கே புரியாத விசயம். இத்தனைக்கும் ரெண்டு குண்டு விறகு, மூணு லிட்டர் மண்ணெண்ணை ஊத்தியிருக்கேன். என் உயரத்துக்கு எரிஞ்சிச்சு நெருப்பு..''

அவன் பேச்சில் ஆச்சரியமூட்டும் விஷயங்கள் ஒளிந்திருந்து திகைக்கு விட்டது. பெரியவர் சதாசிவம் அழுது முடித்தவராக, ''கருணாகரா.. கவலைப்படாதடா.. இதோ பார் மாப்பிளை..! இப்பவே உன்னை மாமனாரா ஏத்துக்கிட்டு சுடுகாட்டுக்கே வந்துருக்கார் பார். உனக்கு சாந்தி ரொம்ப முக்கியம்ப்பா.. சாந்தி ரொம்ப முக்கியம்.. நீ அமைதியாகுப்பா.. அமைதியாகு.. நாங்க எவ்வளவு பேர் இருக்கோம்.. விட்றுவோமா..?''

''மாப்ளை.. உங்க வாயைத் திறந்து சொல்லுங்க.. 'மாமா நான் இருக்கேன் மாமா. இந்தக் கல்யாணம் நல்லபடியா நடக்கும்'னு சொல்லுங்க மாப்ளை..''

சதாசிவம் எரிமேடை சாம்பலைப் பார்த்து, பித்துப் பிடித்தவர் போல் பேசினாலும் அவரின் நோக்கம் எல்லோருக்கும் புரிந்தது. ஜெகதீஷைப் பார்த்து,

''சாமி.. நீங்களே அந்த சதைப் பிண்டத்துக்கு உங்க கையால நெருப்பு வையுங்க. அப்பதான் வேகும்'' என்றான் வெட்டியான். ஜெகதீஷும் அவன் சொன்னபடியே அவன் தந்த இரு எரு முட்டைக்கு நடுவில் அந்த பாகத்தை



வைத்து வெட்டியான் எண்ணெய் விடவும் தீயிட்டான். அவனுக்கு இதெல்லாம் புதிதான அனுபவம். புதிரான அனுபவமும் கூட!

ஹோம குண்டத்து நெருப்பு போல அதுவும் எரிந்தது!

கும்பிட்டபடியே அஸ்தி கலசத்துடன் மெல்ல அங்கிருந்தபடியே விலகத் தொடங்கினர்!

அரிசி உப்புமாவும் கொத்சுவும் தயாராகி விட்டது. அதன் வாசம் வீடெங்கும் பரவியதில் துக்கத்தை மீறிக் கொண்டு சுவை நரம்புகள் எல்லோரிடமும் வேலையைச் செய்தன.

ரஞ்சனி பாத்ரூம் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி கொடியில் துண்டைப் போட்டு புதிய கோடித் துண்டுகளை எடுத்து வைத்தாள்.

வாசலிலும் ஒரு பெரிய வாளியில் தண்ணீர் வைக்கப் பட்டது. காட்டுக்குப் போய் வருபவர்கள் அப்படியே வரக் கூடாது என்பது விதி!

குளித்துவிட்டு வருபவர்கள் முதற்காரியமாக பசியாற வேண்டும். சோகத்தில் இருப்பவர்களுக்கு சாதம், குழம்பு, ரசம் என்று சாப்பிட மனம் இடம் தராது. எனவேதான் ஒரு அவசர உணவாக அரிசி உப்புமாவை செய்து வைத்தனர். அப்படியே துணியில் பொடியை வடிகட்டிய காப்பி.. சர்க்கரைக்கு பதிலாக வெல்லம்.

வீடு திரும்பியிருந்த எல்லோரும் திரும்ப ஒருமுறை குளித்து சாப்பிடவும் தயாராகினர். தையல் இலையில் உப்புமாவை வைத்து, கொஞ்சம் வெல்லத் துண்டுகளோடு சாப்பிடத் தந்தபோது அதைப் பார்க்கவே பரவசமாக இருந்தது. ஜெகதீஷுக்குத் தரும்போது, ராதா நந்தினியை அழைத்துத் தரச் சொன்னாள்.

நந்தினியும் அந்த நொடியே அவன்தான் இனி

தன் கணவன் என்கிற முடிவோடு, கண்களில் காதல் வடிய பார்த்துக் கொடுத்தாள். அந்தக் காட்சி அடுத்தவளான ரஞ்சனியை எரியவிட்டது.

கணேசனுக்கோ அப்படியே நந்தினியை நிற்க வைத்து கொளுத்திவிடத் தோன்றியது. மெல்ல சமையற் கட்டுப் பக்கம் சென்றாள்.

"ராதா.. நீ தப்பு பண்ணிட்டிருக்கே.." என்று ஆரம் பித்தாள். ராதா பதில் பேசவில்லை.

"அவகிட்ட உன் எண்ணத்தைச் சொல்லிட்ட போல தெரியுதே. மாப்ளய விட்டு நகராம நிக்கறாளே..?" என்று தொடர்ந்தான்.

ராதாவிடம் மௌனம் நீடித்தது.

"வாயத் திறந்து பேசு.. இது அநியாயம்.."

"எது..?" ராதா பளீரென்று கேட்டு திரும்பினாள்.

"நீ இப்படி அவளுக்கு இடம் கொடுக்கறது..?"

"வேற வழியில்ல.. என்ன பேசறே நீ..?"

"மெல்லப் பேசுங்க.. இப்ப நாம எதையும் பேச வேண்டாம். அவர் போகட்டும். அப்புறமா பேசுவோம்.."

"எப்பவும் நான் இந்தப் பேச்சைப் பேச விரும்பல. உன் கழுத்துல தான் மாப்ளை ஜெகதீஷ் தாலிய கட்டறார். அதுதான் உங்க அப்பா விருப்பம்.."

"ஏன் அம்மாவை விட்டுட்டீங்க..?"

"ராதா.. நான் இப்படி சொல்றதுல பெரிய அர்த்தம் இருக்கு தெரிஞ்சுக்கோ.. சுடுகாட்டுல என்ன நடந்துச்சு தெரியுமா..?"

ராதா சற்று அதிர்வோடு அவனைப் பார்த்தாள். "உங்கப்பா நெஞ்சு மட்டும் வேகவே இல்லை. தெரி யுமா..?" கண்களை அகட்டிக் கொண்டு கையை ஆட்டிய படி அவன் கேட்கவும் ராதாவுக்கு பதைப்பெடுத்தது.



"அத்தான்.."

"ஆமாம் ராதா.. மொத்த உடம்பும் சாம்பலாயிடிச்சு. ஆனா நெஞ்சு வேகாம அப்படியே இருந்துச்சு. அதைப் பார்த்துட்டு அந்த சுடுகாட்டு வெட்டியான், 'என்ன ஏதாவது நல்ல காரியம் நடக்க வேண்டியிருக்கா..? நடுவுல செத்துட் டாரா'னு அவ்வளவு கச்சிதமா கேட்டான். கடைசில மாப்ளை ஜெகதீஷ்தான் தன் கையால நெருப்பு வெச்சு எரிச்சார்...!"

"நெஜமாவா..?"

"இதுல போய் நான் பொய் சொல்வேனா..?"

"அத்தான்.. அப்ப அப்பா மனசு துடிச்சிக்கிட்டிருக்குன் னுதானே அர்த்தம்..?"

"பின்ன.. மாப்ளை கல்யாணத்தை வேண்டாம்னுட்டா என்ன பண்றது..? நம்ப சாவு நம்ப பிள்ளைகள் எதிர் காலத்தை பாதிக்கக் கூடாதேன்னு எவ்வளவோ நினைச்சு மாமா துடிச்சிருக்கலாம். ஆனா மாப்ளையே தன் கையால தீ வைக்கவும் நிச்சயம் சாந்தி அடைஞ்சிருப்பார். பெரிய மாமாவும் கதறிட்டார் கதறி.."

கணேசன் சொல்லி முடிக்க ராதா அங்கிருந்து விலகி ஒரு ஓரமாகச் சென்று நின்றுகொண்டு, ஜன்னல் வழியாக வெளியே வானத்தைப் பார்த்தபடியே அழத் தொடங்கினாள்!

* * *

ஆஸ்பத்திரியில் லட்சுமியிடம் எந்த அசைவும் இல்லை. பெரியவர் சதாசிவம் கணேசனோடு வந்திருந்தார். மூக்கில் ஆக்ஸிஜன் ட்யூப் செருகப்பட்ட நிலையில் கிடக் கும் லட்சுமியைப் பார்த்து, சரசரவென்று அழுதார்.

கணேசனுக்கு கண்ணீர் வந்தது.

நர்ஸ் ஒருத்தி வந்து "தூரப் போயிருங்க.. இன்ஃபெக் ஷன் ஆகிட்டா ரொம்ப சிவியர் ஆகிடும்.." என்றாள்.

''இதுவே சிவியர்தான்.. இதுக்கு மேல சிவியரா என்னம்மா ஆகணும்..?'' - கேட்டுவிட்டார் சதாசிவம். அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

கணேசன் அப்படியே அவரை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

''இதெல்லாம் எந்த ஜென்மத்துப் பாவமோ..?'' என்றார் சதாசிவம்.

''அதெல்லாம் நெஜமா மாமா..?''

''எதுடா..?''

''இல்ல இந்த பாவம், புண்ணியத்த சொன்னேன்..''

''உனக்கே இதுல சந்தேகமா..?''

''பொறவு.. மாமாவும் அத்தையும் எவ்வளவு நல்லவங்க.. இவங்களுக்கு இப்படி ஆயிடிச்சே. பாவியா இருந்தாதானே இப்படி ஆகலாம்..?''

''அப்ப மறு ஜென்மமெல்லாம் உண்டுங்கறீங்க..?''

''உனக்கு என்னடா ஆச்சு.. எதுக்கு என்ன இப்படி எழவெடுத்த கேள்வியா கேட்டுக் குடையறே..?''

''கோவிச்சுக்காதீங்க.. நான் உங்கள இப்படி தனியா கூட்டிக்கிட்டு வந்தது அத்தைய பார்க்கறதுக்கு மட்டுமல்ல.. சில முக்கியமான விசயங்கள் சொல்றதுக்கும்தான்..''

''என்னடா அந்த முக்கியமான விசயம்..?''

கணேசனும் ராதாவின் புதிய முடிவை ஒருவாறு சொல்லி முடித்தான். சதாசிவம் அப்படியே ஸ்தம்பித்து விட்டிருந்தார்.

''மாமா.. என்ன பேச்ச காணோம்..?''

''என்னத்தடா பேச.. ராதா, நான் எப்பவும் ராதாதாங்கறா..''

''நீங்க ஒண்ணு.. அவ முடிவுக்கு நீங்க சம்மதிக்கக் கூடாது. அவ மாப்பிள்ளையையும் சேலை, செருப்புனு



நினைச்சுட்டா. அதை விட்டுத் தந்தா வாங்கிடலாம். இவ்வளவு நல்ல மாப்பிள்ளையை விட்டா அப்புறம் இவ வாழ்க்கை என்னாகறது..?''

''அவளுக்குன்னு ஏதுடா ஒரு வாழ்க்கை.. நம்ப எல்லார் வாழ்க்கையும்தான் அவ வாழ்க்கை..''

''அது சரி.. அப்படி எல்லாம் இளிச்சவாய்த்தனமா இருக்காதேன்னு சொல்லி அவளுக்கும் ஜெகதீஷ் மாப்பிள்ளைக்குமான கல்யாணத்தை நாமதான் நல்லவிதமா முடிச்சு வைக்கணும்..''

''இல்ல கணேசா.. அது முடியாது..!''

''என்ன மாமா பொசுக்குனு இப்படி சொல்றீங்க..''

''பைத்தியக்காரா.. உனக்கு இன்னுமா ராதாவைத் தெரியில.. அவ ஒரு முடிவை எடுக்க மாட்டாடா. எடுத்துட்டா அவளை அதுல இருந்து மாத்த முடியாது.''

''மாமா..''

''என்னடா..? இதுக்கு அவகிட்ட எல்லா நியாயங்களும் இருக்கும்.. அது தெரியுமா உனக்கு..?''

''மண்ணாங்கட்டி.. நான் தெரியாமத்தான் கேக்கறேன். இதுக்கு அந்த மாப்பிள்ளை சம்மதிக்க வேண்டாமா..? பொண்ணு பார்த்தது அக்காவை. கட்டிக்கிட்டது தங்கையைன்னா ஊர் சிரிக்காது..?''

''கொஞ்சம் சிரிக்கத்தான் செய்யும். பெருசா சிரிப்பா சிரிச்சிடாம இருக்க வேற வழியில்லனு ராதா நினைச்சிருக்கலாம்..''

''என்ன மாமா சொல்றீங்க.. எனக்கு இருக்கற பதட்டம் கூட உங்ககிட்ட இல்லையே..?''

''அதுக்கு உன் வயது காரணம்டா. நான் வாழ்ந்து முடிச்சவன். ராதாவை என்னால நல்லாவே புரிஞ்சுக்க முடியுது..''

''சரிதான்.. ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டு ஒளிஞ்ச கதையால்ல இருக்கு. நான் உங்ககிட்ட நியாயம் கேட்டதே தப்பு..''

''கணேசா பதட்டப்படாம யோசி.. ராதா போல பிறகு அந்த நந்தினி இந்த வீட்டை ஒழுங்கா பாத்துப்பா கறே..?''

''அதுக்காக.. காலமெல்லாம் ராதா இங்கையே கெடந்து சீரழியணுமா? இது எந்த ஊர் நியாயம் மாமா..?''

''பதட்டப்படாதே.. லட்சுமி இருக்கற இருப்பை பார்த்தேல்ல..?''

''இவளை யாருடா சாகறவரை பார்த்துக்கறது?''

''நாம பாத்துப்போம் மாமா..''

''கணேசா.. நீ சொல்றதக் கேட்க நல்லா இருக்குடா! உனக்கு ரொம்பவே பெரிய மனசு. ஆனா நம்மால ஒரு பெண்ணை அந்தரங்க சுத்தியோட பாதுகாக்க முடியாதுப்பா. உள் விஷயம் நிறைய இருக்கு அதுல..''

''புரியுது மாமா.. ஒரு நர்ஸை வேணும்னா வேலைக்கு வைப்போம்..''

''விட மாட்டேங்கறியேடா.. நர்ஸ் கூலிக்கு மாரடிக்கிறவ. ஆனா உன் அத்தைக்குத் தேவை பரிபூரணமான அன்பும் அனுசரணையும்..''

''சரி மாமா.. இதுக்கு மாப்ளை ஒப்புக்காட்டி என்ன மாமா பண்ணுவீங்க..?''

''ஏண்டா.. இப்படி ஒரு முடிவெடுத்த ராதாவுக்கு, மாப்ளையை எப்படி சம்மதிக்க வைக்கணும்னா தெரியாதுனு நினைக்கறே..?''

''என்ன மாமா நீங்க.. கல்யாணம்ங்கறது அவங்கவங்க சொந்த விருப்பம். அதுல யாரையும் நாம வற்புறுத்த



முடியாது. ராதா எனக்கு இஷ்டமில்லைனு சொல்லலாம்.. அதுக்காக, நந்தினியைக் கட்டிக்குங்கனு எப்படி சொல்ல முடியும்..?''

''ஒரு வேண்டுகோளா இருக்கும்போது நடந்துடாதா என்ன..?''

''மாட்டேன்னுட்டா என்ன பண்ணுவீங்க. ராதா கல்யாணமும் நின்னு இந்த துக்கம் மட்டுமே மிச்சம்னு ஆயிடாதா..?''

- கணேசனின் கேள்வி சதாசிவம் மனதில் ஒரு நங்கூரம் போட்டது.

## 12



கணேசன் கேட்ட கேள்வியிலும் நியாயம் இருக்கத் தான் செய்தது. ராதா எடுத்திருக்கும் முடிவுக்கு ஜெகதீஷ் உடன்படுவானா? கல்யாணம் என்பது என்ன கடைச் சரக்கா..? இது பிடிக்கவில்லை... இதற்கு பதிலாக அதை வாங்கிக் கொள்கிறேன்' என்று கூறுவதற்கு..!

சதாசிவம் யோசித்தபடியே நடந்தார்.

தற்காலிகமாக, அந்தக் கேள்விகளை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு, திரும்பவும் லட்சுமியைப் பார்க்க வார்டுக் குள்ளும் நுழைந்தார். லட்சுமி உயிர்க் கட்டையாகக் கிடந்தாள். குளுகோஸ் அவள் உடம்பில் இறங்கிக் கொண் டிருந்தது. தப்பு தப்பு.. அது இறங்கி முடிந்த நிலையில், காலி பாட்டில்தான் இருந்தது. அதைக் கூட கவனித்து மாற்றாமல் இருந்தனர்.

''பார்த்தீங்களா மாமா.. பாட்டில் எப்ப தீர்ந்துச்சோ தெரியல.. யாருமே கண்டுக்கல. இருங்க, அந்த குண்டுக் கொழுக்கட்டையா இருக்கற நர்ஸைப் பார்த்து, 'என்னா வேலை பாக்கறீங்க?'னு ஒரு வெறட்டு வெறட்டிட்டு வரேன்..''

– கணேசன் உணர்ச்சியில் விழுந்தான். பருமனாகத் தெரிந்த ஒரு நர்ஸை நோக்கியும் செல்லத் தொடங் கியவனை சதாசிவம் பாய்ந்து தடுத்தார்.

''டேய்.. இங்க சத்தம் போட்டால்லாம் வேலைக்கு ஆகாதுடா. அவ கையில ஒரு நூறு ரூபாயைத் தாடா. 'அப்பப்ப கவனிக்கறோம்'ன்னு சொல்லு.. உன் அத்தையை ஏதோ மோசமில்லாம பார்த்துக்குவா..''



''கொடுமை மாமா இது.. இது தர்ம ஆஸ்பத்திரி மாமா.. அவங்களுக்கு அரசாங்கம் சம்பளம் தருது..''

''போடா புண்ணாக்கு.. இதை அவகிட்ட சொன்னா 'வாங்கற சம்பளம் ஒரு மாசத்துல பாதி நாள்கூட வர மாட் டேங்குது.. நான் என்ன பண்ணுவேன்'னு திருப்பிக் கேட் பாடா..''

''அது சரி.. இவ செட்டும் சீருமா வாழாம செலவு பண்ணுவா.. அதுக்கு நாமதான் கிடைச்சோமா..?''

''எதுடா செட்டு.. எதுடா சீரு..? இது தெரியாமதானேடா மந்திரில இருந்து மாக்கான் வரை திரியறோம். உனக்கு ஒரு அளவு.. எனக்கு ஒரு அளவு, அதுக்கு ஏதுடா இலக் கணம்..? ஒரு கிலோன்னா ஆயிரம் கிராம், ஒரு மீட்டர்னா நூறு சென்டி மீட்டர்னு இதை வகுக்க முடியாதுடா..

மனசுங்கறது ஒரு பலூன் மாதிரி.. வெடிக்காத மாதிரி எவ்வளவு வேணா ஊதி பெருசாக்கிக்கலாம்.. வெடிச் சுடும்ங்கற பயத்துல எலுமிச்சங்கா சைஸோட நிறுத்திக்கற வங்க உண்டு. அதெல்லாம் ஒண்ணுமாகாதுன்னு பூச ணிக்கா சைஸுக்கு வெச்சுக்கறவங்களும் உண்டு. அதுக் கும் மேல போய் வெடிச்சுட்றதும் உண்டு.. இவ அதுல ஒருத்திடா.. இவகிட்ட போய் சட்ட நியாயம் பேசறதால எதுவும் ஆயிடாது..

நாம சாதியிலயே மோசமான சாதியான ஏழை சாதியா போயிட்டோம்டா.. நமக்கான நியாயங்கள் இடத்துக்கு இடம் வேறதான்.. இங்க இவளை கவனிச்சுக்கிட்டாதான் இவ உங்க அத்தையை கவனிச்சுக்குவா.. இல்லாட்டி, 'இது சட்டம் பேசற கூட்டம்.. சட்டப்படியே நடக்கட் டும்'னு இவ நினைச்சா, இன்னிக்கு படுக்கைல இருக்கற உங்க அத்தை நாளைக்கு வராண்டாவுக்கு வந்துடுவா.. கேட்டா அதுக்கு சரியான பதில் சொல்ல இவங்களுக்குத் தெரியும்..''

– சதாசிவம் யதார்த்தம் பேசினாரா.. இல்லை, அந்த நர்ஸுகள் சங்கத் தலைவராக மாறி பிரசங்கம் புரிந்தாரா.. என்பது தெரியாமல் அவரையே வெறித்தான் கணேசன்.

''என்ன வெறிக்கறே..?''

''எப்படி மாமா இப்படி எல்லாம் உங்களால பேச முடியுது..?''

''உதைடா.. வாங்குன உதை.. அடி உதவற மாதிரி எதுவுமே உதவாதுடா.. பேசாம நட..''

இருவரும் படுக்கையை நெருங்கிப் பார்த்தனர். பாவம் லட்சுமி! காய்ச்சின பாலில் ஏடு பரவின மாதிரி வெள்ளையாக இருப்பவள்.. படுக்கையில் கருவெள்ளைக்கு மாறியிருந்தாள். உதடுகளில் வெடிப்பு.. ஈ ஒன்று அங்கே உட்கார்ந்திருந்தது. சதாசிவம் வரவும் பறந்து போயிற்று.

''மாமா.. கண்றாவி மாமா.. இதுக்கா மாமா இந்தக் கண்ணு..?'' மிகவே உணர்ச்சிவயப்பட்டான் கணேசன். அந்த நர்ஸும் அருகில் வந்தாள். சதாசிவம் அவளிடம் சாதுர்யமாகப் பணம் தந்தார்.

''அம்மாடி.. பாவம் நீ! இந்த நோயாளிகளுக்கு நடுவுலதான் உனக்கு அரிசின்னு எழுதிட்டான். அந்த ஆண்டவன். இருந்தும் நீ முடிஞ்ச அளவு பண்றே.. நானும் என் சக்திக்குக் கொடுத்துருக்கேன்.. இவளை கொஞ்சம் பாத்துக்கம்மா!'' என்றார்.

சதாசிவத்தின் வார்த்தைகளை விட, அதை வெளியிட்ட விதமும் அதில் கரைந்திருந்த பரிவும் கனிவும் மிகவே வேலை செய்தது.

''அடடே.. குளுகோஸ் தீர்ந்துடிச்சே! வேலை பிஸியில கவனிக்காம விட்டுட்டேன். ஸாரி, நீங்க போங்க.. நான் பார்த்துக்கறேன்'' என்றவள், ''சொல்றேன்னு தப்பா



எடுத்துக்காதீங்க. இவங்களப் பத்தி பெரிய டாக்டர் எதாவது சொன்னாரா?'' என்று கேட்டாள்.

''என்னம்மா விசயம்..?''

''இல்ல.. இவங்க இப்படியேதான் இருக்க முடியும். வீட்ல வெச்சுப் பார்த்துக்கறதும் கஷ்டம். நூத்துக்கு தொண்ணூத்தி ஒம்போது சதவிகிதம் இவங்களுக்கு சுய நினைவு வராதுன்னுதான் சொல்லணும். அந்த ஒரு சதவிகிதம் என்ன வேணா நடக்கலாம்..''

''புரியுதும்மா.. அடிமாடா நினைச்சு இப்பவே விட்டுடச் சொல்றே..?''

''அது.. அதை எப்படி நான் என் வாயால சொல்ல முடியும்..?''

''அதான் சொல்லாம சொல்லிட்டியேம்மா.. நாங்களும் யோசிக்கறோம்'' என்றபடியே சதாசிவமும் கணேசனும் அங்கிருந்து நகரத் தொடங்கினர்.

வழியெங்கும் நோயாளிகளின் காட்சிகள். மூக்கைப் பிய்த்து எறியச் சொல்லும் மருந்து வாடை. கணேசனுக்கு மிக்ஸிக்குள் விழுந்து அரைபடுவது போல் இருந்தது.

''மாமா.. கொடுமை மாமா..''

''கொடுமைதான்.. ஆரோக்யம் தான் பெரிய செல்வம்னு சும்மாவா சொன்னாங்க..''

''நல்லா இருக்கற எல்லாரும் ஒரு தடவை பெரிய ஆஸ்பத்திரிக்கு வந்துட்டுப் போகணும் மாமா..''

''அடப் போடா.. இப்ப இருக்கற உன்னோட மனநிலை ஒரு சாம்பிராணி புகை மாதிரி.. இந்தக் கட்டிடத்தைத் தாண்டி தெருவுல இறங்கிட்டா, அங்க காத்துக்கிட்டிருக்குடா ஆசைப் பேயிங்க.. விசுக் விசுக்குனு நம்ம தோள்ல ஏறிக்கும். அப்புறமா, அதுங்க பேச்சைத்தான் நாம கேட்போம்..''

‘‘ஏ மாமா.. இப்படி எல்லாத்துக்கும், ஒரு எதிர்மறையான பதிலையே சொல்றீங்க.. உங்க பேச்சை எப்படி எடுத்துக்கறதுன்னே எனக்குத் தெரியலை..’’ என்றான்.

பதிலுக்கு சிரித்தார்.

‘‘இந்த சிரிப்புக்குத்தான் எனக்கு அர்த்தம் புரியவே மாட்டேங்குது. போவட்டும்.. ராதா விசயத்துல என்ன மாமா பண்றது..?’’

‘‘இதுல நாம பண்ண எதுவுமேயில்லைடா.. எல்லாத்தையும் அவ பாத்துக்குவா!’’

‘‘தப்பா இருந்தாதானேடா சொல்ல முடியும்..?’’

‘‘நர்ஸுக்கு லஞ்சம் கொடுத்தது கூடத் தப்புதான்.. தரலையா நீங்க..?’’

‘‘ஏணிப்படிக்கும் வாசப்படிக்கும் வித்யாசம் இருக்குடா.. இரண்டுலயும் ஏறுறோம்தான்! ஆனா, ஏணியில எங்க வேணா ஏறி இறங்கலாம். வாசப்படி அப்படி கிடையாது. நர்ஸ் வாசப்படி மாதிரி.. ராதா ஏணிப்படிடா!’’

‘‘கொழப்பறீங்களே மாமா..’’

‘‘ராதா தெளிய வைப்பா பேசாம வாடா..’’

கணேசன் அதற்கு மேல் பேச முடியாதவன் ஆனான். ஆனால் அவன் மனதுக்குள், ‘அவள் வாழ்க்கை அநியாயமாகப் பறி போகிறதே.. ஜெகதீஷ் போல ஒரு மாப்பிள்ளை திரும்ப கிடைக்க வேண்டுமே!’’ என்றெல்லாம் பதைப்பு.

வெளியே கிளம்பிக் கொண்டிருந்தாள் ராதா. ரஞ்சனியையும் தனக்குத் துணையாக தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள். ராதா வரையில் தலையைக் கூட வாரிக் கொள்ளவில்லை. ஒரு போனி டெய்ல்தான். நெற்றிக்கும் ஸ்டிக்கர் பொட்டு. ஆனால் ரஞ்சனி பவுடர், க்ரீம் என்று முகத்தோடு மல்லுக் கட்டிக் கொண்டிருந்தாள். ராதா வரவும் அசட்டுப் பார்வை பார்த்தாள்.



‘‘ரஞ்சா.. நாம ஒண்ணும் அழகிப் போட்டிக்குப் போகலை, புறப்படு!’’ என்றாள்.

அவளுக்கோ, போகிற வழியில் எப்படியும் காத்திருந்து ராஜேஷ் தன்னைப் பார்ப்பான் என்றே எண்ணம். அவன் தன்னைப் பார்க்கும் போதெல்லாம் சொக்க வேண்டும் என்பது அவளின் அடிப்படையான விருப்பம். இருந்தும் ராதா சொல்லும்போது மறுக்க முடியாமல், அப்படியே புறப்பட்டாள்.

பார்த்துக் கொண்டே இருந்தாள் நந்தினி. அவளுக்குள் ஈர விறகுபோல புகைச்சல். ‘தன்னிடம் சொல்லாமல், தன்னைப் பொருட்படுத்தாமல், ராதா ரஞ்சனியோடு எங்கே போகிறாள்?’ என்னும் கேள்வி குடை போல விரிந்து அவளை மூடியிருந்தது. அதைத் தூக்கிக் கொண்டு அருகில் வந்தாள்..

‘‘யெஸ் மேடம்..’’ என்றாள் ரஞ்சனி.

‘‘பொடலங்கா..’’

‘‘என்ன பொரியல் பண்ணப் போறியா..?’’

‘‘என்ன கிண்டலா? எங்கடி கிளம்பிட்டீங்க..?’’

‘‘என்ன கேட்டா.. அக்காட்ட கேளு..’’

‘‘ஓஹோ.. அப்பா அம்மா இல்லன்னா உடனேயே இவ நாட்டாமைக்கு வந்துட்டாளா..?’’

‘‘இதையும் அதோ, அக்கா வர்றா பார்.. அங்கயே கேளு.. ராதாக்கா, நந்தினி என்னவோ கேக்கறா பார்..’’

மாட்டியும் விட்டாள். ராதா அருகில் வந்தாள். அவள் கையில் சிறிய லெதர் பேக்!

‘‘என்ன ராதா..’’

‘‘எங்க கிளம்பிட்டே..?’’

‘‘அவசியம் சொல்லியாகணும்மா..?’’

‘‘ஆரம்பிச்சிட்டியா உன் நாட்டாமைய..?’’

‘‘இப்ப அதான் உன் வருத்தமா..?’’

‘‘கேட்டதுக்கு பதில் சொல்லாம எதுக்கு டென்ஷன்
பண்றே..?’’

‘‘டென்ஷனை தனியா வேற டென்ஷன் படுத்தணு
.மா..?’’

‘‘ராதாக்கா.. வார்த்தையை அளந்து பேசு!’’

‘‘தேங்க்ஸ்.. ராதாக்கானு சொன்னதுக்கு..! அக்கானு
நீயே சொல்லிட்டியே! அதுக்குத் தகுந்த மாதிரி நான்
நடந்துக்க வேண்டாமா..?’’

‘‘என்ன உளர்றே..?’’

‘‘அப்ப நீ அக்கான்னது உளறலா..?’’

‘‘விஷயத்துக்கு வா..’’

‘‘அவசரப்பட்றியே.. உன்கிட்ட பேசிட்டுதான்
மாப்ளை ஜெகதீஷை போய்ப் பார்க்கணும்னு இருந்தேன்.
இப்படி பறந்தா எப்படி...?’’

அவள் ஜெகதீஷ் பேரைச் சொல்லவும், நெருப்பின்
மேல் சிலீர் என்று நீர்ச் சொட்டுக்கள் விழுந்து, அந்த எரி
நெருப்பும் அடங்கி புகைய ஆரம்பித்து விட்டது.

‘‘நந்தினி.. உன்கிட்ட நான் இப்ப விளக்கமா எதை
யும் பேசப் போறதில்லை.. உனக்கே எல்லாம் தெரியும்..
இப்ப நம்ம குடும்பம் இருக்கிற நிலைல. ஜெகதீஷை நான்
கல்யாணம் பண்ணிக்கிறதை விட நீ பண்ணிக்கறதுதான்
சரியான முடிவுங்கறது என் அபிப்பிராயம்.. உனக்கு இதுல
சம்மதமானு மட்டும் சொல்லு...’’

தேங்காய் உடைந்துவிட்டது. நந்தினியிடமும் திக்கு
முக்காடல். தடுமாற்றம், தவிப்பு..!

‘‘இப்ப கத்துடீ.. ஏய் டென்ஷன் இப்ப கத்து..! ‘எனக்கு
ஜெகதீஷ் மாப்ளை பிடிக்கல.. ஒபாமாதான் வேணும்..



கேட்டுச் சொல்லு’ன்னு சொல்லுடி..’’ ரஞ்சனி ரசனை
யோடு குறுக்கிட்டாள்.

‘‘வாயை மூடுடி..’’

‘‘என்ன ஒபாமாவுக்குக் கல்யாணம் ஆனதால, ராகுல்
காந்தி மாதிரி யாரையாவது சொல்ல விரும்பறியோ..?’’

‘‘அடிப்பேன்.. ராதாக்கா நீ எது செய்தாலும் இந்த
விஷயத்துல எனக்கு சம்மதம். ஆனா.. ஆனா..’’

‘‘என்ன ஆனா ஆவன்னா..?’’

‘‘இல்ல இதுக்கு அவர் சம்மதிக்கணுமேக்கா..’’

‘‘இல்ல இதுக்கு அவர் சம்மதிக்கணுமேக்கா..’’ சரியா

‘‘பார்றா.. எப்படி நந்தினி இப்படிக்கூட சரியா
உன்னால யோசிக்க முடிஞ்சது..?’’

‘‘சும்மா இருடி.. இது ஒண்ணும் சாதாரண கேள்வி
யில்லை. மில்லியன் டாலர் கேள்வி..’’

‘‘தெரியும் நந்தினி.. அந்த மில்லியன் டாலர் கேள்
விக்கு எனக்கு நிச்சயம் நல்ல பதில் கிடைக்கும்ங்கற
நம்பிக்கை எனக்கு இருக்கு.. நீ அந்தக் கவலையை விடு..’’
என்ற ராதா, ‘‘எங்கே சதாசிவம் பெரியப்பா இன்னுமா
வரலை..?’’ என்றும் கேட்டாள்.

அப்போது அவரும் கணேசனும் எதிரில் வந்தபடி
இருந்தனர். கணேசன் தன் மொபட்டில் அவரை கூட்டி
போயிருந்தான். அதன் சைலன்சரில் ஓட்டை விழுந்து
விட்டதால், அநியாயத்துக்கு சப்தம் போட்டு அவர்கள்
வந்துவிட்டதை சொல்லாமல் சொல்லிற்று.

உள்ளே நுழையும் கணேசன் கைகளில், கீரைக்கட்டு
மற்றும் காய்கறிகள்.

‘‘எங்க ராதா கிளம்பிட்டே...?’’

‘‘நீங்க எங்க போய்ட்டு வர்றீங்க?’’

‘‘அதான் சொன்னோமே அத்தைய பார்க்கறதுக்
குன்னு..’’

''பெரியப்பா.. அம்மா..?''

அப்படியேதாம்மா இருக்கா.. பார்க்கப் பார்க்க வயித்
தெரிச்சலா இருந்துச்சு.. அதை விடு! நீ எங்க கிளம்பிட்டே?
போகும்போது கேக்கறேனேன்னு தப்பா எடுத்துக்காதே..''

''நீங்களும் தப்பா எடுத்துக்காதீங்க பெரியப்பா..
போயிட்டு வந்து சொல்றேன்..''

''எனக்குத் தெரியும் நீ எங்க போறேனு.. ஏ ரஞ்சனி,
இந்தா இந்தக் காயை வாங்கி ஊற வை.. வர்ற வழில மலிவா
இருக்கவும் வாங்கிட்டு வந்தேன்..''

''தேங்க்ஸ் கணேசத்தான்..''

''உன் தேங்க்ஸ் ஒண்ணும் எனக்குத் தேவையில்லை..
நீ இப்ப போற காரியம் உருப்படக் கூடாதுன்னு சாமிகிட்
டயும் வேண்டிக்கறேன்..''

''அதுக்கும் தேங்க்ஸ்..''

''ராதா..''

''போ அத்தான்! பெரியப்பா, இட்லி பண்ணி உங்க
ளுக்குப் பிடிச்ச கொத்சு பண்ணியிருக்கேன். சூடு ஆற
துக்குள்ள சாப்பிட்டுடுங்க.. நந்தினி, பார்த்துப் போடு..''

''சரிக்கா.. நீ பார்த்து போய்ட்டு வாக்கா..''

''என்னது அக்காவா.. நீயா ராதாவை அக்கான்னு
கூப்ட்டே..?''

''அவ எனக்கு அக்காதானே.. குடாக்கு, வா உள்ள.
உனக்கு இட்லிக்கு மிளகாப் பொடிதான்..''

''அதான் இங்க வார்த்தைலயே கொட்டிட்டியே..''

ரசனையான பேச்சுக்களோடு அவர்கள் வீட்டில்
நுழைய, ராதாவும் ரஞ்சனியும் தெருவில் இறங்க, மிகச்
சரியாக அந்த ஏரியாவையே சுற்றி வரும் ஒரு கடாரன்
பூனை குறுக்கில் போயிற்று!



## 13



பூனை குறுக்கே போனால் அதைப் பார்த்து, போகிற
காரியம் உருப்படாது என்கிற முடிவுக்கு வருவது அந்தக்
காலம். இந்த செல்ஃபோன், டி.வி. யுகத்தில் அது ஒரு மூட
நம்பிக்கை!

ஒரு டி.வி.யில், இந்த மாதிரி சகுனங்கள் எல்லாம்
எந்த அளவுக்கு உண்மை என்பது பற்றி ஒரு பெரிய
விவாதம் நடந்தது. இறுதியில், 'இதையெல்லாம் நம்புவ
தாகக் காட்டிக் கொண்டால் நம்மை பிற்போக்காளனாகக்
கருதிவிடுவார்கள்' என்ற பயத்திலேயே பலரும், 'இந்த
மாதிரி சகுனங்கள் எல்லாம் பொய்யானவை' என்று பேசி
னார்கள். அன்று அப்படி பேசியவர்கள்தான் ஜெயித்தார்கள்.

அது எல்லாம் ராதாவுக்கு அந்தப் பூனை கடந்து
சென்ற நொடி நினைவில் வந்து போனது. ஆதலால், அவள்
அதைப் பொருட்படுத்தி தேங்கி நின்றாள். அது ரஞ்சனிக்
குப் புரிந்தது.

''என்னக்கா.. பூனை குறுக்கே போகவும் போற
காரியம் நடக்குமோ நடக்காதோன்னு சந்தேகமா இருக்கா..?''

''ஆமாம் ரஞ்சா.. வா, வீட்டுக்குப் போய் தண்ணி
குடிச்சிட்டுப் புறப்படுவோம்..''

''அப்படி செஞ்சா போற காரியம் நடந்துடுமா..?''

''கஷ்டப்பட்டு முடிப்பம்னு வெச்சுக்கயேன்..''

''அக்கா..''

''சொல்லு..''

''இப்படியே போலாமாக்கா. போற காரியம் முடியாமலே

போகட்டும்க்கா. நீயே அந்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கோக்கா.. ப்ளீஸ்..!''

– ரஞ்சனியின் பேச்சைக் கேட்டு, அவள் தலையைக் கோதிவிட்டு, ஒரு சிரிப்பு மட்டும் சிரித்தாள் ராதா.

இப்பொழுதெல்லாம் வானளாவிய கட்டடங்கள் வெகு சாதாரணமாகி விட்டன. ஜெகதீஷ் வேலை பார்க்கும் அந்த ஐ.டி. கம்பெனியும் நிலைக் கண்ணாடிகளின் அடைப் போடு ஒரு மிரட்டு மிரட்டியது.

உள்ளே நுழைந்து லிஃப்ட்டில் ஏறும்போது உடம்பு ரத்தத்துக்குள் ஒரு சந்தோஷக் கிறுகிறுப்பு! ஏர் கண்டிஷன் இப்போது தேசிய கட்டாயம் போல ஆனதால், வெளி வெய்யிலுக்கு உள்ளே நுழையவும் ஒரு சிலுசிலுப்பு கவ்விப் பிடிக்கவும், லிஃப்ட்டில் தொற்றிய கிறுகிறுப்பு தன்னை இரண்டாகப் பெருக்கிக் கொண்டது.

கண்ணில் பட்டவர்கள் எல்லாம் டக் செய்து, டை கட்டி, கழுத்திலும் ஐடெண்டிடி கார்டின் மாலை சகிதம் தான் காட்சி தந்தார்கள். போதாக்குறைக்கு செல்ஃபோன் வேறு.

காதுகள் கூட இல்லாமல் இருந்துவிட முடியும். செல்ஃபோன் இல்லாமல் இருப்பவன்தான் ஒரு ஊனமுற்றவன் என்றாகிவிட்டது. பார்த்தபடியே நடந்த ராதாவிடம் இந்தக் காட்சிகளால் எந்த அதிர்வுமில்லை. ஆனால் ரஞ்சனிக்கு உடம்பில் எறும்பு ஊர்வதுபோல் இருந்தது. அவள் வரையில் இன்னொரு அதிர்வும் காத்திருந்தது. அவள் மிக விரும்பும் அவளது காதலன் ராஜேஷ், அங்கே ரிசப்ஷனில் உட்கார்ந்திருந்தான்.

அவனைப் பார்க்கவும் ஏ.சி. குளிர்ச்சியை மீறி ஒரு மெல்லிய வியர்ப்பு ரஞ்சனியிடம். ராதாவும் அவனைப் பார்த்தாள். அவள் ஜெராக்ஸ் கடைக்கு வந்தது ஞாபகத்துக்கு வந்தது. அவன் சகஜமாக சிரிக்கப் பார்த்து, பின்



அடக்கிக் கொண்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அவன் மடி மேல் ஃபைல் ஒன்று இருந்தது. அவனோடு சேர்ந்து பலர் அமர்ந்திருக்க, அந்த ஹாலின் ஸ்பீக்கரில் 'மிஸ்டர் ராஜேஷ் ப்ளீஸ் பி அலர்ட்' என்று ஒரு அறிவிப்பு ஒலித்து அடங்கியது. அதுவே அவன் இன்டர்வியூவுக்கு வந்ததை சொல்லாமல் சொல்லிவிட்டது.

ரஞ்சனி இன்பமாகப் புழுங்கிய அவ்வேளையில், ராதா ரிசப்ஷனிஸ்ட்டிடம் சென்று ஜெகதீஷ் பற்றி விசாரித்தாள்.

''ஓ.. டி.ஜி.எம். ஸாரா..?'' என்று அவள் திருப்பிக் கேட்டபோதுதான், ஜெகதீஷ் அந்த நிறுவனத்தில் டெபுடி ஜெனரல் மேனேஜராக இருப்பது ராதாவுக்குத் தெரிந்தது.

கேட்ட அந்த ரிஸப்ஷனிஸ்ட் அநியாய இறுக்கத்தில் ஆடை அணிந்திருந்தாள். ராதாவுக்கு அது சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அவளோ, அதை லட்சியமே செய்யாமல் ஜெகதீஷை இன்டர்காமில் தொடர்பு கொண்டு, ''ஸார், உங்களைப் பார்க்க ரெண்டு பேர் வந்துருக்காங்க..'' என்று ஆங்கிலத்தில் பேசினாள். அவனும் வருவதாகக் கூறினான்.

''ப்ளீஸ், அப்படி ரெஸ்ட் ரூம்ல உக்காருங்க. ஸார் வரேன்னு சொன்னார்..'' என்றாள் அந்த டைட்டி. ராதா அந்த அறை நோக்கி நடந்தாள். ரஞ்சனியோ ராஜேஷைக் கண்களாலே கவ்வி விழுங்கிக் கொண்டிருந்தாள். ரெஸ்ட் ரூமில் அழகான சோஃபாக்கள். அதில் உட்கார்ந்தபோது 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என்கிற பாடல் வரி ஞாபகமாய் ஞாபகம் வந்தது ராதாவுக்கு.

ரஞ்சனியும் அருகில் உட்கார்ந்து கொண்டாள். அங்கிருந்தும் ராஜேஷ் தெரிந்தான். ஜாடையாக, வரும்படி சைகை காட்டினான். இவளும் ஜாடையில் மறுதலித்தாள். அதற்குள் அவனுக்கு அழைப்பு வரவும் எழுந்து சென்றான்.

ரஞ்சனியும் 'ஆல் த பெஸ்ட்' என்று கட்டை விரலை ராதாவுக்குத் தெரியாதபடி ரகசியமாகக் காட்டினாள்.

அந்த சமயம் ஜெகதீஷும் வந்தபடி இருந்தான். ராதா, ரஞ்சனி.. இருவருக்குள்ளும் மெல்லிய படபடப்பு தொற்றிக் கொள்ளத் தொடங்கியது.

''ஓ.. ராதா.. நீங்களா..?'' மிக மரியாதையாகவே ஆரம்பித்தான். எதிரில் உள்ள ஒற்றை சோஃபாவில் அமர்ந்த நொடி. மேஜை மேல் கிடந்த இன்டர்காமில் கேன்டீனுக்கு ஃபோன் செய்து ''ரெஸ்ட் ரூமுக்கு இரண்டு காஃபி'' என்றான்.

''ஐயோ வேண்டாம்..''

''பரவாயில்ல. சாப்பிடலாம். ஃபில்டர் காபிதான்..''

''இல்ல. அது வந்து..''

''எதுவும் வரலை.. ஆமா..' எதுக்கு இந்தப் பதட்டம்? முதல்ல ஃப்ரீயா ஃபீல் பண்ணுங்க..''

''தேங்க்ஸ்..''

''சம்பிரதாயமாகவே பேச நான் என்ன மூணாம் மனுஷனா.. ஆமா என்ன விஷயம்..?''

ராதா அந்தக் கேள்விக்குப் பிறகு ரஞ்சனியைப் பார்த்தாள்.

''அக்கா..''

''நீ கொஞ்சம் வெளியே போ..''

''சரிக்கா..''

''என்ன ராதா.. ரஞ்சனிக்குக் கூடத் தெரியாதபடி என்கூடப் பேச என்ன இருக்கு அப்படி..?''

''நிறைய இருக்குங்க..''

''ஓ! அதான் ஒரு ஃபோன் கூடப் பண்ணாம ஆபீஸுக்கே நேர்ல வந்துட்டீங்களா..?''



''ஆமாம்..''

''அவ்வளவு அவசரமான விஷயமா.. ஃபோன் பண்ணியிருந்தா நான் சாயந்தரமா வீட்டுக்கே வந்துட்டுப் போறேன்..''

''நீங்க வருவீங்க.. ஆனா என்னால அந்த விஷயத்தை வீட்ல வெச்சுப் பேச முடியாது..''

''சரி, சொல்லுங்க.. என்ன விஷயம்..?''

''நான் இப்ப சொல்லப் போறதைக் கேட்டு நீங்க கோபமோ, வருத்தமோ படக் கூடாது.''

''பீடிகை எல்லாம் பலமா இருக்கே..''

''ஆமாம்.. எனக்கும் எப்படி ஓபன் பண்றதுன்னே தெரியலே..''

''வெயிட்.. வெயிட்.. நானே அது என்னன்னு கண்டு பிடிச்சு சொல்லவா..?''

அவள், அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

''என்ன ராதா.. நீங்க வேற யாரையாவது லவ் பண்ணிக்க நீங்களா..? அதனால என்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் இல்லையா..?''

''ஐய்யய்யோ..'' அவள் பலமாகவே குரல் கொடுத் தாள்.

''ஓ.. அது இல்லையா. சினிமால்லாம் இப்படித்தான் வரும்.. ஐ ஆம் ஸாரி.. வேற என்ன..?''

''நீங்கதான் எங்க வீட்டு மாப்ளை.. அதுல எந்த சந்தேகமும் இல்ல..''

''வேற என்ன.. கல்யாணச் செலவுக்குப் பணம் இல்லையா..? அதனால அதைத் தள்ளி கிள்ளி வெச்சுக் கணுமா..?''

''இல்ல.. கல்யாணமும் வேகமா நடந்தாகணும்.. அதுல எந்த மாற்றமும் இல்லை..''

''அப்ப என்னதான் விஷயம்..?''

''அது வந்து.. அது வந்து..''

''அது வந்து..?''

''நான் இப்பச் சொல்லப் போறதக் கேட்டு திரும்பவும் சொல்றேன்.. கோவமோ, வருத்தமோ படக்கூடாது..''

இப்படி புதிர் போடறதையே என்னால தாங்க முடியல.. இதுல கண்டிஷன் போட்டு கட்டிப் போடப் பார்த்தா எப்படி..?''

''நான் என்ன சொல்வேன்..? என் நிலை அப்படி!''

''ராதா.. உங்க நிலை வேற என் நிலை வேறயா.. ரெண்டு பேர் நிலையும் ஒண்ணுன்னுதான் நான் நினைக்கிறேன்.. ஆம் ஐ கரெக்ட்..?''

''நோ..!'' அவள் பதிலால் அவனிடம் அதிர்வின் ஆரம்பம்.

அவளும் அதற்கு மேல் இழுக்காமல், 'கல்யாணப் பெண் நானில்லை.. என் தங்கை நந்தினி' என்று கூறி முடித்தாள்.

ஜெகதீஷிடம் ஒரு கனத்த மௌனம்!

இடையில் காஃபி வந்தது!

''சாப்டுங்க..''

''இருக்கட்டும்.. தயவு செய்து எனக்கு சரின்னு நல்ல பதிலைச் சொல்லுங்க..''

''எப்படி ராதா இப்படி உங்களால ஒரு முடிவுக்கு வர முடிஞ்சது..?''

அவள் அமைதியைத் தொடர்ந்தாள்.

''எப்படி என்கிட்ட வந்து இப்படி பேச உங்களால முடிஞ்சது..?''



அவன் காஃபியை ஒரே மடக்கில் குடித்தவனாக, சற்று உரத்த குரலில் கேட்டான்.

''நான்.. நான்.. இதைச் செய்துதான் தீரணும்.. வேறு வழி இல்லை மிஸ்டர் ஜெகதீஷ்..''

''அதுக்காக.. எனக்குன்னு விருப்பங்களே கிடையாதுங்கறது உங்களோட எண்ணமா..?''

''இல்ல.. நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க.. நீங்க இதுக்கு சம்மதிப்பீங்கனு எனக்குள்ள ஒரு நம்பிக்கை, இந்த நிமிஷம் வரை அப்படியேதான் இருக்கு..''

''மண்ணாங்கட்டி.. பொண்ணு பார்த்தது அக்காவை.. ஆனா கல்யாணம் பண்ணிக்கிட்டது தங்கையைன்னா சிரிக்க மாட்டாங்க..?''

''அப்படி சொன்னாத்தானே சிரிப்பாங்க.. ஏன் சொல்லணும்..? அக்காவைப் பார்க்கவே இல்லைன்னு நினைச்சுக்குவாங்க..''

''நான் நினைச்சுக்கறது இருக்கட்டும்.. என் அக்காவும் என் மாமாவும் உங்க விருப்பப்படியே நினைப்பாங்கனு எதை வெச்சு எதிர்பார்க்கறீங்க..''

''அவங்க.. அவங்க படிச்சவங்கதானே.. என் குடும்ப நிலையைப் புரிஞ்சுக்க மாட்டாங்களா..?''

''நோ.. உங்க விருப்பத்துக்கே எதிர்பார்க்காதீங்க ராதா.. இது கல்யாணம்! புடவையோ நகையோ இல்லை. கலர் பிடிக்கலை, டிஸைன் பிடிக்கலைன்னு திருப்பிக் கொடுத்துட்டு வேற மாத்திக்க..''

''தெரியும்.. நானும் புடவை, நகையால்லாம் நினைக்கலை.. உங்கள, உங்க குடும்பத்தை ரொம்ப உயர்ந்த இடத்துலதான் வெச்சுப் பார்க்கறேன்.. அப்பா இப்படி இறந்து போய், அம்மா இப்படி கோமாவுல விழுந்துட்ட

நிலைல, இதைவிட ஒரு நல்ல முடிவு எனக்கு இருக்கறதா தெரியல..’’

‘‘ஸாரி ராதா.. என்னைப் பிடிக்கலைனு சொல்லுங்க.. ஏத்துக்கறேன்! உங்க தங்கைக்காக என்கிட்ட பிச்சை எடுக்காதீங்க.. நீங்க பிச்சை எடுக்கறது எனக்குப் பிடிக்கலை.’’

‘‘பிடிக்காததெல்லாம் நடக்கறதுதானேங்க வாழ்க்கை...?’’

‘‘வேண்டாம்.. இதுக்கு மேலே இதைப் பத்தி எதுவும் பேச வேண்டாம்.. ப்ளீஸ்.. நீங்க போகலாம்..’’

‘‘போகலாம்னா.. உங்க பதில்..’’

‘‘ஐம் ஆம் ஸாரி..’’ என்றபடி எழுந்து செல்லத் தொடங்கினான் அவன்.

ராதாவுக்கு மனதுக்குள் மலை அமுங்குவது போல் இருந்தது. ரஞ்சனியும் மெல்ல உள்ளே வந்தாள்.

‘‘அக்கா..’’

‘‘போகலாம் ரஞ்சனி..’’

‘‘என்னக்கா.. அத்தான் மாட்டேன்னுட்டாரா..?’’

‘‘அத்தானா..?’’

‘‘ஸாரி.. ஸாரி..’’

‘‘இல்ல.. நீ சரியாதான் சொல்லியிருக்கே.. உன் வார்த்தை பலிக்கட்டும்..’’

‘‘என்னக்கா சொல்றே.. எனக்குப் புரியலை..’’

‘‘ஜெகதீஷ் ‘ஐ ஆம் ஸாரி’ன்னு சொல்லிட்டுப் போய்ட்டார் ரஞ்சனி.. அதுக்கு நாம வேற அர்த்தம் எடுத்துக்கலாம். அவருக்கு நந்தினியைக் கட்டிக்க இஷ்டம் இருந்து போய்ட்டதாவும் எடுத்துக்கலாம்.. இப்படி அதுக்கு பல அர்த்தங்கள்..’’



‘‘பார்த்தியா.. நான் அப்பவே சொன்னேன். பூனை குறுக்க போனது சரியாதான் இருக்கு..’’

‘‘பேசாம வா..’’

இருவரும் அறைக்கு வெளியே வந்தனர்.

அதற்குள் ராஜேஷ் இன்டர்வியூ முடித்து வந்திருந்தான்.

‘‘கொஞ்சம் இரு! டாய்லெட் போய்ட்டு வந்துட்றேன்..’’ என்று ராதா வசதியாக விலக, அவனும் ரஞ்சனியிடம் வந்து ‘‘ரஞ்சா.. வேலை கிடைச்சிடிச்சு.. மாசம் அறுபதாயிரம் சம்பளம்.. ரெண்டு வருஷம் யூஎஸ்ல டெபுடேஷன் வேற..’’ என்றான். ரஞ்சனிக்குள் வண்ணக் கனவுகள் மின்னத் தொடங்கியது.



# 14

ரஞ்சனி ஆகாயத்தில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டாள். ராஜேஷ் அதைக் கலைப்பது போல தொடர்ந்து பேசினான்..

''ஆமா, அக்காவோட எங்க இங்க..?''

''அது ஒரு பெரிய கதை ராஜேஷ்!''

''அப்ப நாம மேட்னி ஷோ போறோம்..''

''வ்வாட்..?''

''என்ன வாட்..? பெரிய கதைன்னா கேட்க ஒரு ரெண்டு, மூணு மணி நேரமாவது வேண்டாமா..?''

''நல்லாருக்கு.. என் குடும்பம் இப்ப இருக்கற நிலை தெரியாம பேசறீங்களே ராஜேஷ்.''

''தெரிஞ்சுதான் பேசுறேன் ரஞ்சனி. பாவம் நீ! ரொம்பவே மனசு உடைஞ்சு போயிருப்பேனு தெரியும்.. அப்பா, அம்மானு ரெண்டு பேரையும் ஒரே சமயத்துல இழக்கறது எவ்வளவு பெரிய கொடுமைனு எனக்கு நல்லா தெரியும்..''

அவன் குரலில் பரிதாபமும் வாஞ்சையும் நிறையவே இருந்தது. அதேசமயம்.. தொலைவில் ராதா வருவது தெரியவும் ரஞ்சனி, ''அக்கா வர்றாங்க.. விலகுங்க..'' என்றாள். அவனும் விடாமல், ''அப்ப மேட்னிக்கு மாயாஜால் வரேன்னு சொல்லு..!'' என்றான்.

''ஐய்யோ கடவுளே.. அதெல்லாம் முடியாது. அக்கா வந்துட்டா..''

''வரட்டும்.. நானே அவங்ககிட்ட உன்னை மேட்னிக்குக் கூட்டிக்கிட்டுப் போக பர்மிஷன் கேக்கறேன்..''



அவனிடம் அநியாயத்துக்கு ஒரு தைரியம். ரஞ்ச
னியோ இனி அவன் விலக மாட்டான் என்று உணர்ந்து
விட்டவள் போல ''அக்கா'' என்றபடி ராதாவை நோக்கிச்
சென்றாள். ஆனால், ராதாவின் பார்வை அவன் மேல்
தான் இருந்தது. அருகில் வந்த ரஞ்சனியை ஒரு தினுசாகப்
பார்த்தாள்.

''அக்கா..''

''யார் அது..? நீ போற இடத்துக்கெல்லாம் வர்ற
மாதிரி தெரியுதே!'' என்று எடுத்த எடுப்பில் விஷயத்துக்கு
வந்துவிட்டாள்.

''அக்கா.. அது.. அப்படி எல்லாம் எதுவுமில்லை!''
அவள் தடுமாற ஆரம்பித்தாள்.

ஆனால், அவன் துணிவாக ராதாவிடம் வந்தான்.
''வணக்கங்க..'' என்றான்.

''வணக்கம் இருக்கட்டும்.. என் தங்கைகூட உங்க
ளுக்கு என்ன பேச்சு..?'' ராதா குரலில் ஒரு மென்மையான,
நாகரீகமான கடுமை தெரிந்தது.

''மேடம், நீங்க கோபப்படறது எனக்குத் தெரியுது..
நான் சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வந்துட்றேங்க.
நான் உங்க தங்கையை மனப்பூர்வமா லவ் பண்றேன். பை
த பை, உங்க தங்கையும் என்னை லவ் பண்றா..''

பொட்டென்று போட்டு உடைத்துவிட்டான் ராஜேஷ்.
ரஞ்சனிக்குக் கொஞ்சம் போல் நெஞ்சுக் கூட்டுக்குள்
நெருப்பெரியத் தொடங்கியது. பதிலுக்கு ராதா அவளைப்
பார்க்கவும், மௌனமாகத் தலையைத் தாழ்த்திக் கொண்
டாள். அதுவே அவன் சொல்வது உண்மை என்பதை
உணர்த்திவிட்டது.

''மன்னிக்கணுங்க.. காதலிக்கறது ஒண்ணும் பாவமோ,
குற்றமோ இல்லீங்க. நட்பும் காதலும் தாங்க மனித

இனத்துலயே இருக்கற அற்புதமான உணர்ச்சிகள். டங்
தங்கையைத் தேடி வந்து ப்ரபோஸ் பண்ணது நான்தா
என் காதலை ஏத்துக்க இவ ஆறு மாசம் எடுத்துக்கிட்ட"

அவன் தொடர்ச்சியாக சொன்னதில் வெளிப்பட்ட
உண்மைகள், ராதாவைக் கொஞ்சம் அதிர வைத்துவிட்டது

"அப்ப வருஷக்கணக்கா காதலிக்கிறீங்க.. அப்படி
தானே?"

"ஆமாங்க! இப்ப எனக்கு இதே ஆஃபீஸ்ல நல்ல
வேலை கிடைச்சிடிச்சு. ஜஸ்ட், இப்பதான் இன்டர்வியூ
முடிச்சுட்டு வரேன்."

"ஓ.. அதான் இவ்வளவு தைரியமாவும் திடமாவும்
பேசறீங்களா?"

"இல்லைன்னாலும் பேசுவேங்க. ஏன்னா, இந்த
ஜென்மத்துல ரஞ்சாதான் என் பெட்டர் ஹாஃப்!"

அவனிடம் துளிக்கூட பதட்டம் தெரியவில்லை. மிக
நேர்த்தியாகவும் நேராகவும் பேசினான்.

"உங்க பேர்.."

"ராஜேஷ்."

"உங்க பேரன்ட்ஸ் என்ன பண்றாங்க?"

"அப்படி உக்காந்து பேசலாமே.."

"ஏன் நடந்துக்கிட்டே பேசலாமே!"

ராதா லிஃப்ட் நோக்கி நடந்தாள். அவனும் "ஓ பேச
லாமே.." என்று தொடர்ந்தான்.

ரஞ்சனிக்கு, பரபரவென்று இருந்தது. லிஃப்ட்டுக்குள்
மூவரும் அடங்கினார்கள்.

அது சரிந்து இறங்கவும் ரத்த ஓட்டத்தில் ஒரு சின்ன
கிறுகிறுப்பு.. உச்சி மண்டையில் நமைச்சல்.. சொரிந்து
விட்டுக் கொள்வதில் நல்லசுகம்.



அது வெளியேற்றவும் அந்தக் குபேர கட்டடத்தின்
வெளிப்புற கார் பார்க்கிங்கிற்கு வந்தனர். உலகில் தயா
ராகும் எல்லாவிதமான கார்களும் அங்கு நின்று கொண்
டிருந்தன. பெட்ரோல் ஊற்று அடைபடவே படாது என்கிற
நம்பிக்கை..!

"நீங்க என் பேரன்ட்ஸைப் பத்திக் கேட்டீங்க
இல்லையா?" என்று அவனாகத் தொடங்கினான். அவளும்
காது கொடுக்கத் தொடங்கினாள்.

"என் அப்பா சினிமா இண்டஸ்ட்ரில ஒரு ஆர்ட்
டைரக்டர். நேஷனல் அவார்டு வின்னர். சித்ரவேல்னா
எல்லாருக்கும் தெரியும். அம்மா ஆயிஷா ஒரு ஆர்க்கி
டெக்ட்! என்ன பாக்கறீங்க? அம்மா முஸ்லீம்.. அப்பாவோ
டது காதல் கல்யாணம்.

நான் ஒரே ஒரு சன். அப்பா, அம்மாவே ஒரு காதல்
ஜோடிங்கறதால என் குடும்பத்துல ரஞ்சனிக்கு எந்த
அப்ஜெக்ஷனும் கிடையாது. உங்க குடும்பத்துல கடுமை
யான அப்ஜெக்ஷன் இருக்கும்னு தெரியும். ஆனாலும்,
எந்தக் காதலும் சுலபமா ஜெயிச்சதில்லையே.. ஆகை
யால போராடியாவது நாங்க ஜெயிப்போம்ங்கற நம்பிக்கை
எனக்கு நிறைய இருக்கு..

பை த பை, உங்க குடும்ப சூழ்நிலை தெரியாம நான்
பேசறதா நீங்க நினைக்க வேண்டாம். உங்க அப்பாவோட
மரணம் ரொம்ப துரதிர்ஷ்டம். அம்மாவோட கோமா ஸ்டேஜ்
அதைவிட துரதிர்ஷ்டம். என்னோட ஆழ்ந்த அனுதாபங்
கள்..!"

அவன் இங்கிதமாகவும் நடந்து கொண்டான். ராதா
ஒருமுறை அவனை ஊன்றிப் பார்த்தாள்.

"என்னங்க.. உங்களைப் பேச விடாம நானே பேச
றேன்னு பார்க்கறீங்களா?"

"ஒரு ஆறு மாசம் பொறுத்துக்க முடியுமா?"

"ஆறு மாசமா.. எதுக்கு?"

"ரஞ்சனிக்கு இன்னொரு அக்காவும் இருக்கா சொல்லலையா..?"

"ஓ தெரியுமே! நந்தினி.. கொஞ்சம் சனி.. அவங்க தானே..?"

"கொஞ்சம் சனியா..?"

"இல்ல.. அவங்களப் பத்தி சொல்லும்போது ரஞ்சனி அப்படித்தான் சொல்வா!"

"ரஞ்சனி அவளை சனிங்கறாளா..?"

"ஐயோ அக்கா! நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்.."

"விளையாட்டுக்கு என்னை என்னனு சொல்லியிருக்கே?"

"நான் சொல்றேன்.. ராதாக்கா ரொம்ப சாதாக்கா. அதாவது நீங்க ரொம்ப சிம்ப்பிள்னு சொல்வா.."

அவன் சொன்னதைக் கேட்டு ராதா முகத்தில் ஒரு சின்ன புன்னகை அரும்பத் தொடங்கியது. அதுவே ரஞ்சனிக்கும் ஒரு தெம்பை ஏற்படுத்தியது. அவனிடமும் உற்சாகம் அதிகரிக்கத் தொடங்கியது.

"ரஞ்சனி, உன் அக்கா சிரிச்சுட்டாங்க.. நம்ம காதலை இவங்க ஏத்துக்கிட்டாங்க. நீ தேவையே இல்லாம பயந்தே.. இப்ப பார்த்தியா?" என்று உடனேயே ராதா சம்மதித்து விட்டது போலப் பேசினான் ராஜேஷ். ராதா அடுத்த ஷணம் இறுகத் தொடங்கியது.

"ஐய்யய்யோ! என்னங்க ஆச்சு..? நான் எதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"பின்ன.. இப்பதான் வேலையே கிடைச்சிருக்கு.



ஆனா அதுக்கு முந்தியே காதல்.. அதையே என்னால இன்னும் ஜீரணிக்க முடியல. இதுல, என் மௌனத்தையும் ரசனையையும் உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கப் பார்க்கறது பக்கா கிரிமினல் குற்றம்."

"கிரிமினலா.. தயவு செய்து அதை சிவிலா மாத்திக்கங்க.." என்றவனைப் பார்த்து, அடக்க மாட்டாது திரும்பவும் சிரித்துவிட்டாள் ராதா.

இம்முறை ரஞ்சனியே பேசினாள்.

"ஸாரிக்கா. எனக்கு என் லவ் மேட்டரை ஓபன் பண்ற சான்ஸே கிடைக்கல. உன்கிட்ட மட்டுமாவது சொல்லிடணும்னு நான் பல தடவை ஆசைப்பட்டேன். கூடவே அந்த நந்தினி இருந்ததால பேச முடியலை. இதுக்கு நடுவுல உன் கல்யாண விஷயம்.. அப்பா சாவுனு என்னென்னவோ நடந்துடுச்சி. அதான்...!"

"விடு ரஞ்சனி.. இனி நான் சொல்றதை நீ கேட்டு நடந்தாதான் உங்க கல்யாணத்துக்கு அக்கா சம்மதிப்பேன்."

"நான் என்ன பண்ணணும் சொல்லுக்கா.."

"நாங்க என்ன பண்ணணும்னு கேள் ரஞ்சனி.. அது என்ன 'நான்'னு என்னை கழட்டி விட்றே..?"

"ரெண்டு பேரும் முட்டிக்காதீங்க.. மிஸ்டர் ராஜேஷ், நீங்க முதல்ல டியூட்டில சேர்ந்து செட்டில் ஆகுங்க. எப்படியும் ஆறு மாச காலத்துல என் இன்னொரு தங்கையான நந்தினிக்கு கல்யாணம் நடந்து முடிஞ்சிடும். அதுக்குப் பிறகு என் பெரியப்பாகிட்ட சொல்லி நானே உங்க விஷயத்துல எல்லாத்தையும் வேகமா செய்யறேன்."

"ஓ.. அதனாலதான் ஆறு மாசம் டயம் கேட்டீங்களா?"

"ஆமாம்!"

''ஆறு மாசம் என்னங்க.. ஒரு வருஷம் கூட ஆக
டும். எனக்கு ஆட்சேபணை இல்லை. பை த பை, உங்க
கல்யாணத் தேதி முடிவாயிடிச்சா?'' ராஜேஷ் பாய்ண்
டுக்கு வந்தான். அந்தக் கேள்வி முன் ராதா சற்று திணறி
தான் போனாள்.

''என்னங்க, நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. என் கல்யாண
பத்தி என்ன சொல்றதுன்னு தெரியல. கண்ணுக்கு எட்டின
தூரம்வரை அது இல்லை. அதை மட்டும்தான் என்னால
சொல்ல முடியும்!''

''ஐயோ என்ன சொல்றீங்க. உங்களுக்குத்தான்
நிச்சயத்தார்த்தமே நடந்து முடிஞ்சிடுச்சுங்களே?''

''இருக்கலாம்.. ஆனா அது நிச்சயமில்லாததா மாறி
டிச்சு. இப்ப அதைப் பத்தி நாம பேச வேண்டாம். எனக்கு
வேற கடமைகள் நிறைய இருக்கு. நீங்க உங்க வேலை
யைப் பாருங்க மிஸ்டர் ராஜேஷ். பை த பை, ஒரு முக்கிய
மான விஷயம்.''

''என்னங்க..?''

''இந்த ஆறு மாச காலம் நீங்க ஒருத்தரை ஒருத்தர்
பார்த்துக்கக் கூடாது.''

''ஏங்க அப்படி? அதான் எங்க காதலுக்கு சம்மதிச்
சுட்டீங்களே.''

''அதனாலதான் சொல்றேன், இந்த சம்மதம் உங்களை
கட்டுக்கோப்பா இருக்க வைக்கறதுக்குத் தான். நீங்க பார்க்
குலயும் பீச்லயும் மீட் பண்ணி ஜொள்ளு விட்றதுக்குக்
கிடையாது. புரியுதா?''

''இதுக்கு நீங்க சம்மதிக்காமலே இருந்துருக்கலாம்''
ராஜேஷ் முனங்கினான்.

''என்ன முனகல்?''





''இல்ல ஃபோன்லயாவது பேசிக்கலாமா.. இல்ல
அதுக்கும்?''

''நான் அவ்வளவு பெரிய ராட்சஸி எல்லாம் கிடை
யாது.. தாராளமாக பேசிக்கோங்க. ஆனா, சந்திக்க மட்டும்
கூடவே கூடாது. இது உங்களுக்கு ஒரு பரீட்சை எனக்குத்
தெரியாம சந்திக்கறதும் என்னை ஏமாத்தறதும் ஒண்ணு
ஞாபகம் வெச்சுக்கோங்க..''

''மேடம்.. அப்படி சந்திக்க விரும்பினா உங்க பர்மிஷ
னோட உங்க எதிர்ல பேசிக்கலாமா?'' மிகவும் கெஞ்சும்
குரலில் கேட்டான் ராஜேஷ்.

''பார்ப்போம்!'' என்று ஒரு வார்த்தையில் அதற்கு
பதில் சொன்ன ராதா, அப்படியே நடந்து சில அடி தூரம்
வந்து, ஆட்டோ ஒன்றைக் கைகாட்டி நிறுத்தினாள்.

''உங்களை நான் என் கார்லயே ட்ராப் பண்றேன்..''
என்றவனை நெட்டுக் குத்தலாய் முறைத்துப் பார்த்தபடியே
ஆட்டோவில் அமர்ந்தாள்.

ஆட்டோ புறப்பட்டது. ரஞ்சனி முகத்தில் தனித்த
சந்தோஷம். கூடவே ஒரு கலவரமான மனநிலையும் உரு
வாகத் தொடங்கியது.

ராதா சாலை மனிதர்களைப் பார்த்தபடியே வந்தாள்.

''ஸாரிக்கா..'' என்று இடையிட்டாள் ரஞ்சனி.

''எதுக்கு?''

''உன்கிட்ட சொல்லாம தப்புப் பண்ணிட்டேன்.''

''விடு.. இப்ப நீ எனக்கு உதவிதான் பண்ணியிருக்கே.
உனக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையணுமேங்கற என்
கவலை இப்ப கொஞ்சம் நீங்கியிருக்கு.''

''அக்கா.. என் எதிர்காலம் இருக்கட்டும். உன் எதிர்
காலத்தை நினைச்சா எனக்கு பயமா இருக்குக்கா..''

''பெரிய மனுஷி மாதிரி பேசறத விடு.. எனக்கென்னடி?''

''எனக்கென்னவா? அத்தான் என்ன சொன்னாக்கா.. கொஞ்சம் புரியும்படி சொல்லுக்கா..''

''அதான் அப்பவே சொன்னேனே.. ஐ ஆம் ஸாரினு சொல்லிட்டுப் போய்ட்டார். ஆனா இப்ப தீவிரமா யோசிச்சுக்கிட்டு இருப்பார். நிச்சயம் ஒரு நல்ல முடிவுக்கு வருவார்.''

''எதை வெச்சுக்கா நம்பறே..?''

''என் உள் மனசு எப்பவும் தப்பா யோசிக்காது. அது தான் இப்ப உங்கள சந்திக்கக் கூடாதுனும் சொன்னது. அதுதான் ஜெகதீஷ் நிச்சயம் என் விருப்பப்படி நடந்துக்குவார்னும் சொல்லுது.''

''அக்கா.. சொல்றேன்னு தப்பா நினைக்காதேக்கா. அத்தானை நீயே கல்யாணம் பண்ணிக்கோக்கா. நந்தினிக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையை நாம சேர்ந்து பார்க்கலாம்க்கா.''

''ஆகக்கூடி நாம மூணு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டு அம்மா, பெரியப்பாவை அம்போனு விட்டுடலாம்கறே.. அப்படித்தானே?''

''ஐயோ அக்கா! நான் அந்த அர்த்தத்துல சொல்லலக்கா..''

''அப்ப அதுக்கு வேற என்ன அர்த்தம்?''

ராதாவின் கேள்விக்கு ரஞ்சனியிடம் பதில் இல்லை.

''பேசாம வா.. வீட்ல பெரியப்பா, கணேசத்தான், நந்தினியை நான் சமாளிச்சுக்கிறேன். நீ எதுவுமே பேசக்கூடாது..'' என்று ரஞ்சனியின் வாய்க்கு ஒரு பூட்டும் போட்டாள்.

ஆட்டோ சென்றபடியே இருந்தது. ராதாவும் வெளியே



கவனிக்கத் தொடங்கினாள். அப்போதுதான் அந்தக் காட்சியும் அவள் கண்ணில் பட்டது.

ஒரு பெண்மணி, தான் வாங்கி வைத்திருந்த ரேஷன் அரிசியை தெருவில் கொட்டிவிட்ட நிலையில் கூட்டி அள்ளிக் கொண்டிருந்தாள்.. பையின் காதுகள் அறுந்ததால் வந்த வினை! எனவே பையில் கொஞ்சத்தையும் சொச்சத்தை, தன் சேலை முந்தானையிலும் போட்டுக் கொண்டிருந்தாள்.

ராதாவுக்கு அந்தப் பெண்மணியைப் பார்க்கவும் சுரீர் என்று இருந்தது. ஆட்டோவை நிறுத்தச் சொன்னாள்.

சாலையில் சிதறிக் கிடந்த ரேஷன் அரிசியை அள்ளிப் போட்டபடி இருந்த அந்த பெண்மணியை பார்த்த மாத்திரத்தில் ஆட்டோவை நிறுத்தச் சொல்லி ஆட்டோவிலிருந்து இறங்கி ஓடினாள்.

## 15



சென்ற வேகத்தில் குனிந்து அவளும் அரிசியை அள்ளத் தொடங்கினாள். அதைப் பார்த்த அந்த பெண்மணியிடம் ஒரு ஆச்சரிய அதிர்வு.

''அம்மாடி நீயா..?''

''நானேதான்.. நீங்க இருங்க நான் அள்ளிடறேன்..'' என்று வேகமானாள். ஆட்டோவில் இருந்த ரஞ்சனியும் இறங்கி வந்து ராதாவோடு சேர்ந்து கொண்டாள்.

''ஐயோ வேண்டாம்மா.. உனக்கு எதுக்கு சிரமம்..?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை.. நீங்க சும்மா இருங்க..''

- ராதா பேச்சோடு பேச்சாக அள்ளி முடித்தாள். இன்னமும் அள்ள வேண்டி இருந்தது. அதிக குப்பை காரணமாக விட்டுவிட்டாள்.

பின் ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டாள்.

அந்த பெண்மணிக்கு ராதாவை பார்க்கவே என்னவோ போல இருந்தது.

''நல்ல பைல வாங்கிட்டு வந்துருக்கலாமே..?''

''இருக்கறதுல தானேம்மா வாங்க முடியும்..!''

''சரி, இப்ப வீட்டுக்குத்தானே போறீங்க..?''

''ஆ.. ஆமாம்.. நீ போம்மா நான் போய்க்கறே..''

''இல்ல வாங்க.. உங்கள விட்டுட்டு போறேன்..'' - ராதா ஆட்டோ நோக்கி நடந்தாள்.

''வேண்டாம்மா.. நடந்தே போய்க்கறேன்..''



''பரவால்ல வாங்க..'' - ராதா வலிந்து இழுத்தாள். ரஞ்சனிக்குள் ஒரே குழப்பம்.

''அக்கா யார் இவங்க..?'' என்று கேட்டே விட்டாள்.

''சொல்றேன்.. நீங்க வாங்கம்மா..'' என்று அவர்களை ஆட்டோவில் முதலில் ஏற்றி பின் தான் ஏறி அமர்ந்து கொள்ள கடைசியாக ரஞ்சனி ஏறிக் கொண்டாள். ஆட்டோ கிளம்பியது. அந்த பெண்மணிக்கு ஒரு மாதிரி கூச்சமாக இருந்தது. நெளிந்தபடியே அமர்ந்து வந்தாள். ராதா பேசத் தொடங்கினாள்.

''உங்க அட்ரஸை சொல்லுங்க..''

''அட்ரஸ்.. அட்ரஸ்.. எனக்கு தெருப் பேரெல்லாம் தெரியாது. இப்பதானே வந்துருக்கேன்.. அதோ அப்படி திரும்பிப் போகணும்..''

''டிரைவர் இவங்க சொல்ற மாதிரி போப்பா..''

''அம்மா பேசுனதுக்கு மேல வரும்... ஞாபகம் வச்சுக்குங்க..''

''நீ போப்பா நான் தரேன்..''

''ஒரு நாளைக்கு ஒரு விலைல்ல பெட்ரோல் விக்குது..?''

''அதுசரி.. அதனால யாராவது போதுண்டா சாமின்னு நடந்தா போறாங்க..'' - ரஞ்சனி ஆரம்பித்தாள்.

''அதுவும் சரிதான்.. நான் என்ன நினைக்கறேன்னா 200 ரூபா வரை பெட்ரோல் போனாலும் ஓட்ற வண்டி குறையாது. நம்ப மைனர் பசங்களும் யாரும் நடக்க மாட்டாங்க..''

- டிரைவர் கொஞ்சம் எதார்த்தத்துக்கு வந்தான். அதற்குள் வீடும் வந்துவிட்டது.

''அந்த மரத்தை ஒட்டி நிறுத்துங்க..'' - என்றாள் அந்த

பெண். பின் இறங்கிக் கொண்டாள். ஒரு மாதிரி இணக்கமாக பார்த்தாள். மெல்ல ''ரொம்ப நன்றிம்மா..'' என்றாள்.

''நன்றி மட்டும்தானா.. உள்ள வான்னு கூப்பிட மாட்டீங்களா..?''

''உள்றயா.. சரி வாம்மா.. ரொம்ப சின்ன வீடு..'' - என்று தயங்கியபடியே திரும்பி நடந்தாள். அவர்களும் இறங்கினர். ஆட்டோக்காரன் ''அம்மா நேரமாகுமா..?'' என்று ஆரம்பித்தான்.

''அக்கா இந்த ஆளை வெட்டிவிடு.. நாம நடந்து போவோம்..'' - என்றாள் ரஞ்சனி. அதேபோல ராதாவும் அவனுக்கு பணத்தை தந்துவிட்டு சிறிய அந்த ஓட்டு வீட்டினுள் நுழைந்தாள். அப்போதும் ஒருமுறை கேட்டாள் ரஞ்சனி.

''யாருக்கா இவங்க..?''

''சொல்றேன்னு சொன்னேன்ல..'' - என்று மெல்லிய குரலில் சற்று அதட்டலோடு கூறினாள். அது அந்த பெண்மணி காதில் விழுந்துவிட்டது. அரிசிப் பையை ஒரு ஓரமாக வைத்தபடியே ரஞ்சனி முன் ஒரு பழைய பாயை எடுத்து விரித்தாள்.

''உக்காரும்மா.. நானே நான் யாருன்னு சொல்றேன்..'' என்றாள்.

''ஐயோ அம்மா நீங்க தப்பா எடுத்துக்காதீங்க.. ரஞ்சனிக்கு எதுலயும் கொஞ்சம் அவசர புத்தி..''

''அப்படி சொல்லாதம்மா.. இது ரொம்ப இயல்பான விஷயம். இதுக்கும் அவசர புத்திக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை..'' - என்ற அந்த பெண்மணி, முதல் காரியமாக அவர்களுக்கு குடிக்க தண்ணீர் கொடுத்தாள். மண்பானைத் தண்ணீர்.. அடி வாங்கிய எவர்சில்வர் சொம்பு.. ரஞ்சனி பேருக்கு குடித்தாள்.



''பொதுவா காபியோ, ஜூஸோ கொடுப்பாங்க.. இந்த கூலி வேலைக்காரிக்கு அதுக்கு வசதி இல்லை.. ஏதோ இலவச ரேஷன் அரிசியால பழைய சாதத்துக்கு குறைவில்லை..'' - என்று வெகு அமரிக்கையாகவே பேசினாள்.

ரஞ்சனியிடம் அந்த பெண்மணியை தெரிந்து கொள்ளும் ஆர்வம் முண்டிக்கொண்டிருந்தது.

''உன் பேர் ரஞ்சனியாம்மா..?''

''உம்..''

''அழகான பேர்.. நீ ராதாதானே..?''

''ஆமாம்..''

''மொத்தம் மூணு பேர் இல்ல..?''

''ஆமாம்..''

''அவ பேர்..?''

''நந்தினி..''

''உன் அம்மா அப்பா எல்லாம் சௌக்யம்மா..?''

அந்த கேள்வியை ராதா எதிர்பார்க்கவில்லை. மௌனமாக வெறித்தாள்.

''என்னக்கா.. அப்பா இறந்ததே இவர்களுக்குத் தெரியல..?''

என்று ரஞ்சனி கேட்ட நொடி அந்த பெண்மணியிடம் ஏராளமான அதிர்ச்சி.

''என்னம்மா சொல்றே.. உன் அப்பா இறந்துட்டாரா..?''

''ஆமாம்மா..''

''ஐயோடா.. இது என்ன கொடுமை. அதான் ஒரு வாரமா உன் பெரியப்பா வரலையா..?''

''பெரியப்பாவுக்கும் உங்களுக்கும் என்ன சம்மந்தம்..?''

''சொல்றேம்மா.. ஆமாம் உன் கல்யாண ஏற்பாடெல்லாம் நடந்துகிட்டிருந்ததே.. அது..?''

''உம். அதுபாட்டும் ஒரு பக்கம் நடந்துகிட்டுதான் இருக்கு..'' என்றாள் ராதா.

''பொய்.. அதைதான் நீயே சிக்கல்ல கொண்டு விட்டுட்டியே..''

''என்னம்மா இது.. எல்லா பதிலுமே என் நெஞ்சுல அறையற மாதிரியே இருக்கே.. அப்பாக்கு என்னம்மா ஆச்சு..?''

அந்த பெண்மணியிடம் நிஜமாலுமே குரல் விம்மியது.

ராதாவும் நடந்ததை சொல்லி முடித்தாள், வெகு சுருக்கமாக.

அந்த பெண்மணியின் கண்களில் கண்ணீரின் பெருக்கெடுப்பு ரஞ்சனிக்கு வெகு ஆச்சரியமாகி விட்டது.

''இப்பவாது சொல்லுங்க.. நீங்க யார்..?'' என்று கேட்டாள்.

''சொல்ல முடிஞ்சாதான் அப்பவே சொல்லியிருப்பேனேம்மா.. என்ன பத்தி நான் என்னத்த சொல்ல..? எனக்கு பெருந்தேவின்னு ஒரு பேர் இருக்கு.. ஆனால் நான் அசல் மூதேவி..''

''ஐயோ பெரியம்மா.. ஏன் இப்படி எல்லாம் பேச நீங்க..'' ராதா ஒரு வேகத்தில் உறவைச் சொல்லவும் ரஞ்சனிக்கு பகீர் என்றது.

''என்னது பெரியம்மாவா..?''

''இல்லம்மா.. நான் பெரியம்மா இல்லை.. எனக்கு அந்த பாக்கியமோ தகுதியோ இல்லை.. விதி என்னை வேற விதமா செலுத்தி இப்ப நான் ஒரு குப்பையா இருக்கேன்..''



சும்மா இருங்க.. பெரியப்பா உங்கள பத்தி சொல்லியிருக்கார். உங்க மேல ஒரு தப்பும் இல்லை..''

''என்னது.. என்மேல தப்பு இல்லையா.. அப்படின்னு உன் பெரியப்பா சொன்னாரா..?''

''ஆமாம்.. எதையும் எங்க இருந்து எப்படி பாக்கறோம்கறதுலதான் இருக்கு.. நீங்க ஒண்ணும் பெரியப்பாவுக்கு தெரிஞ்சு துரோகம் பண்ணலை. நீங்க ஒருத்தரை காதலிச்சீங்க.. உங்க வீட்ல அந்த காதலை மறைச்சு உங்களை பெரியப்பாவுக்கு வலுக்கட்டாயமா கல்யாணம் பண்ணிக் கொடுத்தாங்க.. இது தெரிஞ்ச பெரியப்பா உங்களை உங்க விருப்பப்படி உங்க காதலரோட சேர்த்து வச்சாங்க.. இதுல உங்க பேரண்ட்ஸ்தான் குற்றவாளிகள்.. நீங்க இல்லை..''

''அதெல்லாம் சரிம்மா.. ஆனா என் காதல் எவ்வளவு பொய்யானது தெரியுமா உனக்கு..?'' பெருந்தேவி என்கிற அந்த பெண்மணியின் கேள்வி ரஞ்சனியை நிமிர்த்தியது. அவளும் காதலிப்பதாலோ என்னவோ அவள் கண்கள் அகண்டு விரியத் தொடங்கின.

''நான்தாம்மா அவனை மனசார காதலிச்சேன். என் காதலுக்கு உன் பெரியப்பா கொடுத்த மரியாதையைக் கூட அவன் கொடுக்கலை.. பிறகுதான் அவன் என் உடம்பை மட்டுமே நேசிச்சது புரிய வந்தது. அதன்பிறகு ஒரே போராட்டம்தான்.. அவனோட என்னால ஒத்து வாழ முடியலை.. அவனையும் காலம் வாழவிடலை.. மஞ்சக் காமாலைன்னு ஒரு வியாதி வந்து அவனை கொண்டு போயிடிச்சு.. உண்மைல மஞ்சக் காமாலைக்கு நான் நன்றிதான் சொன்னேன்.. அதன்பிறகு தன்னந்தனியா இரண்டு பக்கத்து தொடர்பும் இல்லாம நான் போராடிக்கிட்ருக்கறது எனக்கு மட்டும்தான் தெரியும்.. நல்லவேளை எனக்கு கொஞ்சம் வயசாகி என் தலை முடில நாலைஞ்சு

நரை விழுந்துச்சு.. இல்லைன்னா நான் வேலை பாக்கற வீடுகள்ள உள்ள கழுகுகள்கிட்ட நான் காயப்பட்டே தீரணும்..''

பெருந்தேவி பேசப்பேச ரஞ்சனிக்கு தணலாய் காந்தியது. ராதாவோ மௌனத்தில் புதைந்து போயிருந் தாள்.

''அக்கா..''

''என்ன ரஞ்சனி..''

''இப்படி எல்லாம்கூட நடக்குமாக்கா..?''

''என்னம்மா இது கேள்வி.. இந்த மண்ணுல பெண் ஜென்மங்கள் வாழ்க்கைங்கறது சரியான தாயக்கட்டம் ரஞ்சனி..''

''இது தெரிஞ்சிருந்தும் ஜெகதீசன் சாரை நீ மறுக் கறது சரியா..?''

''நீ அதுலயே நிக்கறே.. அதுக்குமேலே போக மாட் டேங்கறே.. நான் ரொம்ப தூரம் போயிட்டேன்..

இந்த கல்யாணம் எனக்கு ஒரு பரிட்சை மாதிரி ரஞ்சனி.. இதுல நான் கல்யாணம் பண்ணிக்கறதுங்கறது நான் மட்டும் பாஸ் பண்ற மாதிரி.. நந்தினிக்கு பண்ணி வைக்கறது நம்ம குடும்பமே பாஸ் பண்ற மாதிரி..''

அவர்கள் தன்னைத் தொட்டு பேசிக் கொள்வது பெருந்தேவிக்கு புரியவில்லை..

''ராதா.. ரஞ்சனி என்ன சொல்றா..?''

''அது ஒண்ணுமில்லை பெரியம்மா.. நீங்க தைரி யமா இருங்க.. உங்களுக்கு யாருமில்லேன்னு நினைக்க வேண்டாம்.. நாங்க இருக்கோம்..''

''என்ன பெரியம்மான்னு கூப்பிட்றியே.. அந்த உற வுக்கு எனக்கு தகுதி கிடையாது ராதா.. உன் பெரியப்பா



தான் மாறவே இல்லை.. அப்படியே இருக்கார்.. பாவி என்னால அவர் தனி மரமாவே நின்னுட்டாரே..'' விசும்பி னாள் பெருந்தேவி.

''இந்த தனிமரம்.. பாவி.. இந்த பேச்சை விடுங்க. திரும்பவும் எதையும் எங்க இருந்து பாக்கறோம்கறதுல தான் இருக்கு.. நான் இனி அடிக்கடி வருவேன்.. உங்களை யும் பெரியம்மான்னுதான் கூப்பிடுவேன்.. அம்மாதான் பேச முடியாதபடி படுத்துட்டாங்க.. நீங்களாவது பேசுங்க பெரியம்மா..''

''ஐயோ ராதா அப்படி எல்லாம் சொல்லாதே.. உன் அம்மா மகாலட்சுமி.. அவங்க நிச்சயம் நல்லவிதமா எழுந்து டுவாங்க.. நான் அதுக்காக கடவுளை வேண்டிக்கறேன்.. அதே சமயம் உன் கல்யாணம் நல்லபடியா நடக்கணும்மா.. உன் அப்பா சாவால அதுக்கு எந்த குந்தகமும் வந்துடக் கூடாது.''

''அப்பா சாவால வராதது.. அக்கா முடிவால் வந்தாச்சு..'' ரஞ்சனி இடையிட்டு பேசியது பெருந்தேவியை அதிரவிட்டது.

''பெரியம்மா எதுவும் பிரச்சினை இல்லை.. இவ உளறுறா.. எனக்கு பாத்த மாப்பிளையை நான் என் தங்கை நந்தினிக்கு அமைக்க விரும்பறேன்.. அவ்வளவுதான்..''

தான் விட்டுக் கொடுப்பதை வெகு சாதாரணமாக அவள் சொன்னதை கேட்டு பெருந்தேவியிடம் திகைப்பு.

''பாத்தீங்களா.. உங்களாலேயே ஜீரணிக்க முடியல..''

''ஆமாம்மா.. ஜீரணிக்கத்தான் முடியல.. ராதா.. நம்மை தேடி வர்றதை நாம ஏத்துக்க மறுக்கும் போது நாம தாம்மா அதிகம் பாதிக்கப்படுகிறோம்.. நானே அதுக்கு ஒரு முன் உதாரணம்..''

''இல்ல பெரியம்மா.. உங்க விஷயம் வேற..!

என்னோடது வேற.. நான் தெளிவா முடிவு எடுத்து திடமா அதுல போய்கிட்டு இருக்கேன்.. என் முடிவுல நான் ஜெயிக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க..'' என்ற ராதாவை பிரமிப்பு குறையாமல் பார்த்தாள் பெருந்தேவி என்கிற அந்த பெண்மணி!

* * *

தன் ஜெராக்ஸ் கடையில் அமர்ந்தான் கணேசன். போன் ஒலித்தது.. மறுபக்கம் ஜெகதீஷ்.

''அடடே.. மாப்ளையா..?''

''இல்ல.. நான் ஜெகதீஷ் பேசுறேன்..''

''புரியுது.. நான் இப்ப மாப்ளை இல்லைன்னு ஒரு வரில சொல்லிட்டீங்க. அப்ப ராதா உங்கள பாத்து பேசிட்டானும் தெரியுது. அவ விருப்பத்துக்கு நீங்க சம்மதிக்கலேன்னும் தெரியுது..''

''ஆமாம்.. ஏன் இவங்க இப்படி நடந்துக்கறாங்க..?''

''இதுக்கெல்லாம் நான் எப்படி மாப்ளை பதில் சொல்ல முடியும்..?''

''திரும்பவும் மாப்ளைங்கறீங்களே..?''

''என் நாக்குல வருது.. நான் என்ன செய்யட்டும்.. மாப்ளையா நினைக்க போய்தானே மாமாவோட நெஞ்சுக்கு மட்டும் தனியா நெருப்பு வெச்சீங்க..''

கணேசனின் கேள்வி மறுபுறம் ஜெகதீஷை மௌனப் படுத்தியது.

''என்ன பதிலைக் காணோம்.. போகட்டும் அந்த நந்தினியை கட்டிக்க முடியாதுன்னு தெளிவா சொல்லிட்டீங்க இல்லை..''

''அப்படி சொல்லலை.. உங்களுக்கு இஷ்டம் இல்லைன்னா விட்றுங்க.. யாருக்காகவும் என்னை நிர்ப்பந்தப்



படுத்தாதீங்க.. என் கல்யாணம்கறது என் விருப்பம்னு சொல்லிட்டேன்..''

''சூப்பர்.. உங்க பதில்தான் சரி..''

''சரி.. இவங்க எதனால இப்படி ஒரு முடிவுக்கு வந்தாங்க..''

''அதை அவ சொல்லலையா..?''

''சொன்னாங்க.. ஆனா அது எனக்கு ஒப்புதலா இல்லை..''

''யாருக்குமே இருக்காது.. ஏன்னா நாமெல்லாமே நமக்காக வாழறவங்க.. ராதா இம்மட்டுல ரொம்ப வித்தியாசமானவ.. அவ எப்பவுமே அடுத்தவங்கள பத்தி ரொம்ப கவலைப்படுவா!''

''அது தப்பு இல்லை.. ஆனா கல்யாணம் வரை அது வந்ததுதான் தப்பு..''

''சரிங்க மாப்ளை.. நீங்க உங்க முடிவுல உறுதியா இருங்க.. ராதா அடுத்து என்ன பண்றாள்னு பாக்கறேன்..''

கணேசன் ரிசீவரை வைத்து விட்டு நிமிர தெருவில் ஆட்டோவில் இருந்தது ராதா, ரஞ்சனி உதிர சரியாக இருந்தது. உள்ளிருந்தபடியே நந்தினி பார்த்துக் கொண்டிருந்தாள். அவளிடம் சொல்ல முடியாத அளவு தவிப்பு!

## 16



ஆட்டோவில் இருந்து இறங்கிய இருவரையும் பார்த்த கணேசன், ராதாவை சீண்டுவது போல ஒரு பழைய சினிமா பாட்டை முணுமுணுக்கத் தொடங்கினான். 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை' என்கிற அந்தப் பாட்டு அவனுக்கு நன்றாகவே பாட வந்தது. அவன் எதற்காகப் பாடுகிறான் என்பது ராதாவுக்கும் புரிந்தது.

நின்று ஒரு விநாடி அவனைப் பார்த்து சிரித்தாள்.

''அக்கா.. கணேஷ் அத்தானுக்கு ஜெகதீஷ் அத்தான் முடியாதுன்னு சொல்லிட்டது தெரிஞ்சிடிச்சி போல இருக்கு...'' என்றாள்.

''என்ன உளறுறே ரஞ்சனி.. அவரை அத்தான்னு உறவு முறையோட குறிப்பிட்டுட்டு அப்புறம் நீயே முடியாதுன்னு சொன்னதை நம்பினா எப்படி..?'' என்று பளிச்சென்று மடக்கினாள் ராதா.

''என்னக்கா சொல்றே..?''

''என் முயற்சி நிச்சயம் ஜெயிக்கும்.. அதான் இங்க கணேசன் அத்தான் இப்படி பாடவும் காரணம்..''

''இந்த பாட்டுக்கு அந்த அர்த்தம் வரலையக்கா..''

''எனக்கு வந்துடுச்சே..?''

''எப்படிக்கா..?''

''அங்க நடந்தது அவர் சொல்லாம எப்படி கணேசத்தானுக்கு தெரிஞ்சிருக்க முடியும்..?''

''அப்படின்னா..?''



''முடியாது-மாட்டேன்னுட்டு போன் மட்டும் ஏன் பண்ணணும்.. சும்மா இருந்துருக்கலாம் இல்லையா..?''

''அதனால..?''

''என்ன அதனால..? இன்னுமா புரியல.. அவர் நம்ம வீட்டை வெறுக்கல.. என் முடிவுலதான் அவருக்கு வெறுப்பு..''

''நீ என்னென்னமோ பேசறக்கா.. எனக்கு தான் ஒண்ணும் புரியல..''

''உனக்கா..?'' ராதா திருப்பிக்கேட்ட விதம் கூர்மையாக இருந்தது. பதிலுக்கு ரஞ்சனி பார்த்தவிதமும் ஒரு தினுசாக இருந்தது.

''ஆறு மாசமா ஒருத்தனை டாவ் அடிச்சுட்டுருக்கே.. அதை கூட வெளிக்காட்டிக்காம இருக்கவும் உன்னால முடிஞ்சிருக்கு.. உனக்கு ஒண்ணும் புரியலையா..?''

''அக்கா அது வந்து..''

''நீ போ.. போய் அந்த டென்ஷன் பார்ட்டியை சமாளிச்சிடு, நான் வந்துட்றேன்..''

என்றபடி நேராக கணேசனை நோக்கி நடந்தாள் ராதா. அவள் வருவது தெரிஞ்சதும் தெரியாதவன் போல மேஜை டிராயரை திறந்து ரூபாய் நோட்டுகளை எண்ணத் தொடங்கினான். ராதா அருகில் சென்று ''என்ன இன்னிக்கு கலக்ஷன் அதிகமோ..?'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமா பெரிய கலெக்ஷன்.. இது என்ன டாஸ்மாக் பாரா..? அள்ளிக் குவிக்க.. ஜெராக்ஸ் கடைம்மா..'' என்றபடியே நிமிர்ந்தான் கணேசன்.

''பாட்டெல்லாம் பலமா இருக்கு..''

''ஏதோ தோணுச்சு பாடினேன்.. நல்ல பாட்டுல்ல..?''

''நிச்சயமா.. அப்பாக்கு ரொம்ப பிடிச்ச பாட்டு இது..''

அவள் அடுத்த நொடி கணேசனைத் தொடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''நான் பதிலுக்கு ஒரு பாட்டு பாடட்டுமா அத்தான்..?'' அவன் பதில் பேசாமல் மௌனமாக அவளை வெறித்தான்..

''சிலர் சிரிப்பார்.. சிலர் அழுவார்.. நான் அழுது கொண்டே சிரிக்கின்றேன்..'' என்று சற்று ராகமாகவே பாடியவள், ''ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்.. இதய சுரங்களுக்குள் எத்தனை கேள்வி'' என்று பாடிக் கொண்டே வீட்டினுள் சென்றாள்.

உள்ளே தனியறைக்குள் நந்தினி ரஞ்சனியை பிடுங்கி சமாளித்துக் கொண்டிருந்தாள். ரஞ்சனியும் சமாளித்துக் கொண்டிருந்தாள். ''எனக்கு எதும் தெரியாது நந்தினி. அக்கா பேசும்போது நான்கூட இல்லை. ஆனா ஒண்ணு அக்கா நிச்சயம் அவரைக் கல்யாணம் பண்ணிக்க போறதில்லை.. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்..'' என்று கூறி கொண்டிருக்க, ராதா பெரியப்பாவை நெருங்கியிருந்தாள்.

''என்னம்மா.. ரொம்ப நேரமாயிருச்சு போல இருக்கே..?''

''ஆமாம் பெரியப்பா..''

''என்னம்மா வழியில் அப்படியே உங்கம்மாவை பாக்க போயிட்டியோ..?'' அவர் கேட்டதும் சற்று தேங்கியவள்.

''அப்படியும் சொல்லலாம்..'' என்றாள். அவருக்கு சற்றுக் குழப்பமாகி விட்டது.

''என்னம்மா சொல்றே.. எனக்கு புரியல..'' என்றவரிடம் ராதா பீடிகை போட விரும்பவில்லை. வழியில் பெருந்தேவியை பார்க்க நேர்ந்தது.. வீட்டுக்கு சென்றது.. என்று கூறி முடித்தாள்.





பெரியப்பாவிடம் கனத்த மௌனம்.

''என்ன பெரியப்பா.. இதை நீங்க எதிர்பார்க்கலையா?''

''ஆமாம்மா.. என் வழியிலேயே நீயும் வர்றியேம்மா..''

''உங்க வழி நல்ல வழியா இருக்கும்போது அதுல நடக்கறது தப்பில்லையே பெரியப்பா..?''

''இல்லம்மா.. வேண்டாம்.. நீ இனி அவளைப் பாக்காதே.. அங்கெல்லாம் போகாதே..''

''ஏன் பெரியப்பா.. நான் விருந்து சாப்பிடவா போனேன்? தற்செயலா பார்த்தேன்.. தாண்டி வர முடியல பெரியப்பா..''

''தற்செயலா தாம்மா எல்லாமே நடக்குது. உங்கப்பன் போனது, உன் அம்மா படுத்த படுக்கையா இருக்கறதுன்னு எல்லாமே தற்செயலா தானே நடந்தது..?''

''அது ஒண்ணும் நம்ம கைல இல்லையே..?''

''இல்ல நம்ம கைலதான் இருக்கு.. நீ சில விஷயத்துலயாவது உன் தங்கை நந்தினி மாதிரி நடந்துக்கணும்..''

''என்ன பெரியப்பா அவகிட்ட போயிட்டீங்க..?''

''வாழ ஆசைப்படும்மா.. எதையும் அடைய ஆசைப்படு – கொடுக்க ஆசைப்படாதே..''

''இது என்ன புது சித்தாந்தம்..?''

''சித்தாந்தம்தான்.. அனுபவிச்சவன், அனுபவிச்சிகிட்டு இருக்கிறவன் சொல்ற வார்த்தை இது. இந்த பெருந்தன்மை, விட்டுக் கொடுக்கிறது. இதனால் எல்லாம் எதுவும் நடந்துர்றதில்லை. எது நடக்கணுமோ அதுதான் நடக்குது.''

சதாசிவத்திடம் ஒரு மெல்லிய ஆவேசம் தலைதூக்கத் தொடங்கியிருந்தது.

‘‘ராதா.. என்னை நீ உதாரணமா எடுத்துக்காதே. வாழறதுக்கு ஆசைப்படு.. நல்லா வாழ ஆசைப்படு.. எதையும் யாருக்காகவும் விட்டுத் தராதே. அது தப்பு.. நான்கூடதான் விட்டுத் தந்தேன். என்னம்மா புண்ணியம்..? அவ என்ன பெருசா வாழ்ந்துட்டா..? அவளும் வாழாம, நானும் வாழாம.. என்னம்மா வாழ்க்கை இது..? போகட்டும். அவளை கூட நான் தான் விட்டுத் தந்தேன். இந்த கடவுள் எனக்குன்னு இருக்கற ஒரே சொந்தமான உங்கப்பனை எதுக்கு என்கிட்டே இருந்து பிரிச்சான்..?’’

எனக்குன்னு பிள்ளைங்க இல்லை – நீங்கல்லாரும் தான் என் பிள்ளைங்க.. ஆனா நீங்களும் கஷ்டம்தானே பட்றீங்க..?

அம்மாடி சுருக்கமா சொல்லிக்கறேன். இந்த பெரிய மனசு, இரக்கப்பட்றது, விட்டுத் தர்றது எல்லாமே பைத்தியக்காரத்தனம். இந்த வாழ்க்கை விளையாட்டுல ஜெயிக்கறதுக்கு என்ன உண்டோ அதைத்தான் செய்யணும். வேணும்னா தப்பா விளையாட மாட்டேன்னு சொல்லு - வரவேற்கிறேன். விளையாட்டுலல்லாம் விட்டு தர்றது கோழைத்தனம். அவ்வளவுதான் சொல்வேன்.’’

சதாசிவம் எங்கோ ஆரம்பித்து கன கச்சிதமாக வந்து முடித்தார். ராதா மௌனமாக பார்த்தபடி இருந்தாள். உள்ளே இருக்கும் நந்தினியும் அவர்களுக்கு அருகில் வந்து நின்று கொண்டு பெரியப்பாவை எரிப்பது போல் பார்த்தபடி இருந்தாள்.

எங்கே அவர் பேச்சை கேட்டு ராதா மாறிவிடுவாளோ என்று பயப்படுவது அவளிடம் நன்றாகவே தெரிந்தது. கணேசனும் கேட்டபடியே வந்து நின்றான்.

‘‘மாமா.. பிரமாதம்!’’

இன்னிக்கு நீங்க பேசினதுதான் பேச்சு. ராதாவுக்கு நீங்க கோடி ரூபாயை தூக்கி கொடுத்ததை விட இப்படி



பேசுனதுதான் சரி. இப்ப உங்க எல்லாருக்கும் ஒரு உண்மையை சொல்லிக்கறேன். ராதா போய் மாப்ள ஜெகதீஷை பார்த்து பேசினது கொஞ்சம் கூட அவருக்கு பிடிக்கல.. அவர் கட்டிகிட்டா ராதாவைத்தான் கட்டுவாராம். இல்லாட்டி சும்மா இருப்பாராம்.. தெளிவா சொல்லிட்டார் என்கிட்ட..’’ என்றான்.

‘‘அப்படியாம்மா..’’ என்று பெரியப்பாவும் திருப்பி கேட்டார்.

‘‘ஆமாம் பெரியப்பா..’’

‘‘சரி இப்ப என்ன பண்ணப் போறே..?’’

‘‘என் முடிவுல மாற்றமில்ல பெரியப்பா..’’

‘‘என்னம்மா இது பைத்தியக்காரத்தனம்.. உன் முடிவால ஒரு நல்ல மாப்பிள்ளையை நாம இழக்கறோம்கறது நீ புரிஞ்சுதான் பேசறியா..?’’

‘‘இல்ல பெரியப்பா.. நாம் எதையும் இழந்துடலை, இனி இழக்கப் போறதுமில்லை..’’

‘‘எதை வச்சும்மா இப்படி சொல்றே..?’’

‘‘விட்டுக் கொடுக்கறது அசட்டுத்தனம்கற மாதிரி பேசினீங்க பெரியப்பா. ஒரு வீரத்தில் நீங்க பேசினதாதான் நினைக்கிறேன். விட்டுக் கொடுக்கறவங்க கெட்டுப் போறதில்லங்கறதுதான் கால காலமான உண்மை..’’

‘‘நான் இப்படி நிக்கறேனே.. என்னப் பாத்துமா இப்படி நீ பேசறே..?’’

‘‘ஆமாம். நீங்க விட்டுக் கொடுத்ததா சொல்றதே முதல்ல சரியில்ல பெரியப்பா..’’

– ராதா ஒரு பெரிய விஷயம் நோக்கி வரத் தொடங்கி விட்டாள் என்பது அவளது தீர்க்கமான ஆரம்பத்தில் உணர முடிந்தது.

''என்னம்மா சொல்றே..?''

''உங்க விஷயத்தை நான் இப்ப கொஞ்சம் உடைச்சு பேசப் போறேன்.. அதுக்காக என்னை மன்னிச்சிடுங்க.. பெரியப்பா.. நீங்க உங்க மனைவியை அவங்க காதல் தெரிஞ்சதும் விட்டு கொடுத்துட்டீங்க.. இதுல நீங்க விட்டு தர இடமே இல்லை.. ஏன்னா அவங்க உங்களுக்கு முன் னாலேயே காதலிச்சுக்கிட்டு இருந்துருக்காங்க. மன உறுதி யோட, அந்த காதலனோட போய் வாழ அவங்களுக்கு தான் தெரியல. அவங்க உங்களை கல்யாணம் பண்ணிக் கிட்டதுதான் தப்பே ஒழிய, நீங்க அவங்களை கல்யாணம் பண்ணிகிட்டதுல ஒரு தப்பும் இல்ல.. அர்த்தமும் இல்லை.

அவங்க வீட்ல அவங்க காதலை ஒத்துக்காம உங்க ளுக்கு கல்யாணம் பண்ணி வெச்சிருக்கலாம்.. அதுக்காக அவங்கள மிரட்டி வழிக்கும் கொண்டு வந்துருக்கலாம். ஆனா என்ன நடந்துருந்தாலும் சரி, அவங்க உறுதியா உங்களோட நடந்த கல்யாணத்தைத் தவிர்த்திருக்கணும். இல்லைன்னா எனக்கு கல்யாணம் வேண்டாம்னு கூட அவங்க நின்னுருக்கலாம். ஆனா எப்ப காதலிச்சது ஒருத்தனை.. கல்யாணம் பண்ணிக்கிட்டது இன்னொருத் தனைனு ஆயிடிச்சோ.. அப்ப அவங்ககிட்ட முடிவெடுக்கற துல பலமில்லை.. தெளிவில்லைனுதான் அர்த்தம். அப்படி பலமில்லாத, தெளிவில்லாத அவங்களை நீங்களாவது பாதுகாத்திருக்கணும். ஆனா நீங்களோ வாழ வைக்கிறதா நினைச்சுக்கிட்டு தூக்கி கொடுத்துட்டீங்க. அதை விட்டு தந்துட்டதா நினைச்சுட்டீங்க. உங்களுக்கு உரியதை விட்டுத் தந்தா தான் அது தியாகம். இது அசட்டுத்தனம், அசட்டுத்தனத்துக்கு தண்டனைதான் தனிமை. அதைத்தான் நீங்க அனுபவிக்கிறீங்க.

அப்புறம் அப்பா உங்களை விட்டு போய்ட்டதா சொன்னீங்க.. அவர் உலகத்தையே விட்டுட்டு போயிட்டார்.



இதுல நீங்க என்ன.. நாங்க என்ன..? நாம் எல்லாரும் கூட போய்த்தானே தீரணும்..? முந்தி-பிந்திங்கறதுதானே வித்தி யாசம்..?

தினம் தினம் இறப்பும் பிறப்பும் நடந்துகிட்டு தானே இருக்கு..? வெளியே நடக்கும்போது ஒரு சம்பவமா மட்டும் பாக்கற நாம் நமக்குள்ள நடக்கும்போது மட்டும் இழப்பா நடக்கக்கூடாத ஒண்ணு நடந்துட்டதா பாக்க றோம். இது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்? அப்படித் தான் பாக்கறோம். அந்த சோகத்துல அப்படியே இருந் துடறமா என்ன..? அதிகபட்சம் பத்து நாள் கூட நாம் அந்த சோகத்தை சுமக்கறதில்லை. அப்பா இறந்து இன்னும் பத்து நாள் கூட ஆகலை. நாம் என்ன சாப்பிடலையா..? தூங்கலையா..? இதுதானே எதார்த்தம்.. இப்படி தானே உலகம் பூராவும் இருக்கு. இதுல நமக்கு மட்டும் நடக்க கூடாதது நடந்துட்டதா நினைச்சு எதுக்காக வருத்தப் படணும்!''

- ராதாவுக்கு பேச்சுக்கு நடுவில் கொஞ்சம் தொண டையை கட்டியது. அதனால் பேச்சும் நின்று போனது. ஆனால் அவள் பேசினது அவ்வளவு பேரையும் கட்டிப் போட்டிருந்தது. ராதாவா இவ்வளவு சிந்தனைப் பொறி களோடு பேசுகிறாள் என்றுகூடத் தோன்றியது. அதிலும் பெரியப்பாவை அவள் அசடு என்று சொன்னது அவரை மிகவும் பாதித்துவிட்டிருந்தது. அதே சமயம் அதை மறுக்கும் திராணியும் அவரிடம் இல்லை. கணேசன் மட்டும் இடையிட்டான்.

''அம்மாடி.. உன் சொற்பொழிவை முடிச்சுட்டியா..?'' என்றும் கேட்டான்.

''இல்ல.. இன்னும் பாக்கி இருக்கு..'' அவள் கம்பீர மாகச் சொன்னாள்.

''சரி அப்ப அதையும் பேசி முடிச்சிரு. நான் கடைசியா பேசறேன்..''

''பெரியப்பா நான் உங்களை வருத்தப்பட வைக்கற துக்காகப் பேசலை. என் மனசுல பட்டதை சொன்னேன். நான் ஒரு விஷயத்தை தெளிவா புரிஞ்சு வெச்சிருக்கேன். மனுசனுக்கு மனுசன் கருத்து வேற்றுமை இருக்க காரணமே பாக்கற கோணங்கள் மாறி இருக்கறதாலதான்..

இப்ப நான் உங்களுக்கு நேர் எதிரில் நின்னு உங்களை பார்க்கும்போதுதான் நீங்க என் பெரியப்பா. ஒரு நூறு அடி தூரத்துல இருந்து உங்க முதுகை நான் பார்க்கும்போது நீங்க யாரோ ஒரு மனிதரா மட்டும்தான் தெரிவீங்க. காரணம் பாக்கற இடமும் கோணமும்தான். அதனால் தான் மாறுபட்ட கருத்து கொண்ட யாரை நான் சந்திச்சாலும் கோபப்படறதுமில்லை, வருத்தப்படுற துமில்லை. அதேசமயம் ஒவ்வொருத்தருக்கும் ஒரு தெளிவு ரொம்ப முக்கியம். எந்த ஒரு விஷயத்தையும் சரியான கோணத்துல பாத்த பிறகுதான் முடிவுக்கு வரணும்கிறது தான் அது. நானும் அப்படித்தான் நம்ம குடும்ப விஷயத் துல வந்துருக்கேன்.

என் வரைல நான் மிஸ்டர் ஜெகதீஷை ஒண்ணும் நந்தினிக்கு விட்டு தரல. நிச்சயம்கறது ஒரு சடங்கு. அவ்வளவுதான். ஜெகதீஷ் ஒரு பொதுவான மனிதர். அவர்கிட்ட நான் என் விருப்பங்களை சொன்னப்போ, அவர் எதிர்பார்க்காததால் கொஞ்சம் கோபப்பட்டார். கொஞ்சம் வருத்தப்பட்டார். வேகமா ஓடி வந்து ஒருத் தரால உடனேல்லாம் சட்டுன்னு நின்னுட முடியாது. கொஞ்ச தூரம் ஸ்லோவாக ஓடித்தான் நிக்க முடியும். அவரும் அப்படி மனசளவுல நின்னு என் கருத்துகளை அசைபோட்டு ஒரு நல்ல முடிவோட திரும்புவார்னு நான் நம்பறேன்.

அப்படி அவர் வரலைன்னாலும் பாதகமில்லை. நந்தினிக்கு நல்ல இடம் பார்த்து கல்யாணம் பண்ண



வேண்டியது நம்ம கடமை.. நாட்டுல மாப்பிள்ளை களுக்கா பஞ்சம்..?''

- என்று ஆணித்தரமான தன் நிலைப்பாட்டை அவள் சொல்லவும், நந்தினி ஆவேசமாக முன்னால் வந்தாள். ராதாவை உற்றுப் பார்த்தாள்.

''என்ன நந்தினி.. எதுக்கு இப்படி பாக்கறே..?''

''நீ பேசுன எதுவுமே எனக்கு புரியல. ஆனா கடைசியா ஒண்ணு சொன்னே பார், இந்த மாப்பிள்ளை இல்லாட்டி இன்னொரு மாப்பிள்ளைன்னு.. அதை மட்டும் என்னால ஒத்துக்கவே முடியாது. நான் கல்யாணம்னு பண்ணிக்கறதா இருந்தா மிஸ்டர் ஜெகதீஷைத்தான் பண்ணிக்குவேன். இல்லை கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்..'' என்றாள்.

''என்ன பைத்தியக்காரத்தனம் இது.. நீ அவர் மேல ஆசைப்படற மாதிரி அவர் உன் மேல் ஆசைப்பட வேண்டாமா?''

- என்றான் கணேசன்.

''அதெல்லாம் எனக்கு தெரியாது. இவ எனக்கு ஆசை காமிச்சுட்டா. அதை என்னால இனி அழிச்சுக்க முடியாது. ஜெகதீஷ் என்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னா அதுக்கு இவதான் காரணம். பிறகு நான் எப்பவும் கல்யாணத்தை நினைச்சே பாக்க மாட்டேன்..'' என்று வெடித்தவள் விறுவிறுவென்று விலகியும் போய் விட்டாள்.

''இதுக்கு பேர்தான் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகறதுங்கறது. அம்மாடி ராதா.. இதுக்கு என்ன பண்ணப் போறே?''

- கணேசன் சற்று கிண்டலான குரலில் கேட்டான்.

ராதாவுக்கு சற்று சலனமாகத்தான் இருந்தது. ஆனால்..




கணேசன் கேட்க, ராதாவும் சலனப்பட, அவர்கள் வீட்டு வாசலில் கச்சிதமாய் வந்து தேங்கி நின்றது ஒரு கார். காருக்குள் இருந்து மாப்பிள்ளை ஜெகதீஷின் அக்கா சாரதாவும் அவள் கணவர் ராகவனும் இறங்கி வந்தபடி இருந்தனர்!

அவர்களைப் பார்க்கவும் கணேசனிடம் விதிர்ப்பு. ''ஐயோடா.. இது என்ன இவங்க வர்றாங்க. ராதா இன்னிக்கு உன்பாடு திண்டாட்டம்தான் போ..'' என்றான். அவர்களை ராதாவும் கனிவுடன் பார்த்து வரவேற்றாள்.

அவர்களும் சகஜமான முகபாவத்துடன் வீட்டினுள் நுழைந்தனர். கட்டிலில் அமர்ந்திருந்த சதாசிவம் அவர்களை சற்றும் எதிர்பார்க்கவில்லை. எழுந்து நின்று வரவேற்க முனைந்தார்.

''ஐயோ பெரியவங்க நீங்க எழுந்திருக்க தேவையில்லை. சும்மா உட்காருங்க..'' என்று அவர்கள் இருவரும் ரஞ்சனி வேகமாய் தூக்கிப் போட்ட நாற்காலிகளில் அமர்ந்தனர். உட்கார்ந்த நிலையில் பார்வை ராதாவை நோக்கித்தான் திரும்பியது.

சற்று முன்னால் ஆவேசமாக பேசிவிட்டுச் சென்ற நந்தினி வேகமாய் வந்து அறை வாசல் கதவருகே நின்று பரக்க பரக்க கவனிக்கத் தொடங்கினாள். சாரதாவின் பார்வை அவள் மேலும் சென்றது.

சாரதா பார்க்கவும் நந்தினியிடம் ஒருவகை படபடப்பு.

கணேசன் இடையிட ஆரம்பித்தான்.

''என்ன இப்படி திடுதிப்னு ஒரு போன்கூட பண்ணாம கிளம்பி வந்துருக்கீங்க.. ராஜா வெடிச்ச வெடி



ங்களை வரவெச்சிடுச்சு'' என்ற அவனை ராகவன் சற்று புன்னகையோடு பார்த்தார். ஆனால் அதற்கு பதில் கூறாமல் சதாசிவத்திடம் ''உங்க சகோதரரோட துக்க காரியங்கள் சரியா நடந்துகிட்டிருக்கா..?'' என்று கேட்டார்.

''ஏதோ நடந்துகிட்டிருக்குங்க. அவனே போய்ட்டான். காரியம் என்ன பெரிய காரியம்..'' சதாசிவம் குரலில் ஒரு அலுப்பும் சலிப்பும் தொனித்தது.

''அம்மாடி நீதானே நந்தினி..?'' என்று சாரதா அப்போது நந்தினியை பார்த்து கேட்டு அவளை அருகிலும் அழைத்தாள்.

அழைத்த விதம், அழைத்த தொனி என்று சகலத்திலும் ஒரு அன்பும் அனுசரணையும் கலந்திருப்பது தெரிந்தது. நந்தினியும் வேகமாக வந்து அவள் அருகில் நின்று கொண்டாள். ராதா மௌனமாகவே இருந்தாள். சாரதா பேசத் தொடங்கினாள்.

''ஜெகதீஷ் திடீர்னு லீவு போட்டுட்டு வீட்டுக்கு வந்தான். வந்தவன் எல்லா விஷயத்தையும் சொன்னான். எங்களுக்கும் அதிர்ச்சியாத்தான் இருந்தது. அதேசமயம் ராதா எடுத்த முடிவுல ஒரு நியாயமும் தியாகமும் தெரிஞ்சது.

நாங்க ஜெகதீஷ் கல்யாண விஷயத்துல ரொம்ப தூரம் போயிட்டோம். அது எந்த காரணத்தைக் கொண்டும் நின்னுடக் கூடாதுங்கறது எங்க எண்ணம். ஏன்னா எந்த ஒரு நல்ல காரியமும் ஒரு தடவை தட்டிப் போனா மூணு தடவை தட்டிப் போகும்னு சொல்வாங்க. இந்த செண்டிமெண்ட்ஸ் ஜெகதீஷ்க்கு இல்லை. ஆனா நாங்க எடுத்துச் சொன்னோம். இப்போதைக்கு அரை மனசா சம்மதம் தெரிவிச்சிருக்கான். போகப் போக எல்லாம் சரியாயிடும்னு நம்பறோம்'' – என்றவளை குபீரென்று பீரிட்ட மகிழ்ச்சியோடு பார்த்தாள் ராதா. வெகுவேகமாக நெருங்கி வந்து ''அம்மா, ரொம்ப சந்தோஷம்மா.. ரொம்ப ரொம்ப சந்தோஷம்..'' என்று சாரதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

நந்தினியின் முகத்திலும் குபீரென்று ஒரு சந்தோஷம். ஆனால் ரஞ்சனி, சதாசிவம் பெரியப்பா, கணேசன் என்று மூவரிடமும் பெரிதாக எந்த உணர்வுமில்லை. சாரதாவுக்கு அது புரிந்தது.

''என்ன இது.. நாங்களே இறங்கி வந்துட்டோம். உங்ககிட்ட சந்தோஷத்தைக் காணோமே..?''

''சந்தோஷம்தாம்மா.. ஆனா இது ஒரு பூரணமான சந்தோஷம்னு சொல்ல முடியாது.''

''அது பாக்கிற விதத்தை பொறுத்தது. பெரியப்பா கொஞ்சம் சும்மா இருங்க. அம்மா நிச்சயம் என் முயற்சிக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும்கற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆனா அது இவ்வளவு சீக்கிரத்துல நடக்கும்னு நான் எதிர்பார்க்கவேயில்லை.

ரியலி உங்க தம்பி ஒரு ஜெண்டில்மேன். அவருக்கு நான் கோடி கோடி நன்றிகளை சொன்னதா சொல்லுங்க..'' என்று கண்கள் பனிக்க பேசினாள் ராதா. அப்படியே நந்தினியைப் பார்த்து ''நந்தா.. போ.. போய் காபி போட்டு எடுத்துகிட்டு வா..'' என்று அவளையும் விரட்டினாள். கணேசன் முகத்தில் பெரிய அளவில் ஏமாற்றம் தெரிந்தது. மெல்ல விலகி தன் ஜெராக்ஸ் கடை நோக்கி நடந்தான். அவன் அப்படி போவதை ராதாவும் ரசித்தாள்.

''ஆமா, அம்மா எப்படி இருக்காங்க..?''

''இருக்காங்க..''

சாரதா சகஜமாக பேசத் தொடங்கிவிட்டாள்.

''நீ சொல்ற விதத்துலேயே அவங்க நிலை எப்படின்னு நல்லா தெரிஞ்சிடிச்சும்மா.. ஆனா எனக்கென்னமோ உன் நல்ல மனசுக்கு அவங்க நிச்சயம் கோமாவுல இருந்து குணமாயிடுவாங்கன்னு தான் தோணுது..'' என்றாள். அப்போது சுவரிலிருந்த பல்லியும் சப்தமிடவே ராதாவுக்கு மிகவே உற்சாகமாகிவிட்டது.



''அம்மா உங்க வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்..'' என்றாள்.

''முகூர்த்தம் என்றதும் தான் ஞாபகம் வருது. கல்யாணத்த எப்பம்மா வெச்சுக்கலாம்? நாங்க அவசரப்படுத்தலம்மா. மூணு மாசம் கழிச்சா, இல்ல ஆறு மாசம் கழிச்சான்னு தெரிஞ்சா, அதுக்கு தகுந்த மாதிரி திட்டமிடுவோம் பாரு..''

''சாரதா.. சம்மந்தி இறந்து முழுசா பத்து நாள்கூட ஆகலை. இப்படி பேசறது கொஞ்சமும் நல்லா இல்லை. ஒரு மாசம் போகட்டும். ராதாவுக்கு தெரியாதா எதை எப்படி பண்ணணும்னு..?'' என்று கேட்ட ராகவன் ராதா வரையில் இன்ப அதிர்ச்சியை அளித்தார்.

ராதா திக்குமுக்காடினாள். ஆனால் சதாசிவமோ ''இந்த துக்க காரியத்துக்கும் கல்யாணத்துக்கும் சம்பந்தம் இல்லம்மா. சொல்லப்போனா எவ்வளவு சீக்கிரம் இந்த நல்ல காரியம் நடக்குதோ அவ்வளவு சீக்கிரம் என் தம்பியோட ஆத்மாவுக்கு சாந்தி கிடைக்கும். ஏன்னா ஒரு தகப்பனா கல்யாண ஏற்பாடு செய்ய போனப்பதானே அவன் உயிர் அநியாயமா பிரிஞ்சு போனது. அது அந்த கல்யாணத்தை பார்க்கும்போதுதான் ஓரளவாவது அமைதி அடையும்..'' என்ற சதாசிவம் பேச்சை ராதா அப்படியே கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

''ஆமாம்மா.. அதிகபட்சம் ஒரு மாசத்துல இந்த கல்யாணத்தைச் செய்திடலாம்..'' என்றாள்.

''அப்ப சரிம்மா.. நீயே தேதிய முடிவு செய்துட்டு வந்து சொல்லும்மா. நாங்க தயாரா இருக்கோம். அப்புறம் இன்னொரு விஷயம்..''

''என்னம்மா.. கல்யாணத்தை நல்லபடியா செய்து தரணும் அதுதானே..?''

''ஆமாம்மா.. உங்ககிட்ட நாங்க எதிர்பாக்கிறது அது ஒண்ணைத்தான். நல்ல கல்யாண மண்டபம், நல்ல சாப்பாடு, நல்ல ரிசப்ஷன்னு எதுவும் குறை இல்லாம

பாத்துக்குங்க. இதுக்கெல்லாம் அதிக செலவாகும்னு எங்களுக்கும் தெரியும். அதனால..'' - என்று சாரதா ராகவனை பார்த்தாள். ராகவன் தன் சட்டை பாக்கெட்டில் இருந்து ஒரு பிளாங்க் செக்கை எடுத்து நீட்டினார்.

ராதாவுக்கு, அவர்கள் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது. அதேசமயம் நந்தினியும் காபியுடன் வந்து நின்று அந்த பிளாங்க் செக்கை வெறித்துப் பார்த்தாள்.

''ஐயோ சார் முதல்ல செக்கை உங்க பாக்கெட்டுல வையுங்க'' என்று பதைத்தாள் ராதா.

''இதுல எந்த தப்பும் இல்ல ராதா..''

''தப்பு, சரிங்கறதே அப்புறம்மா.. இந்த கல்யாணம் எங்க கடமை. நீங்க காட்டின பெருந்தன்மைக்கே நாங்க ரொம்ப கடமைப்பட்டுருக்கோம். இதுல உங்ககிட்டயே பணம் வாங்கி இந்த கல்யாணத்தை பண்ணினா எங்களை விட சுயநலம் உள்ளவங்க யாரும் இருக்க முடியாது.''

- என்று ராதா பேசி, ராகவனும் இது எதிர்பார்த்த பதில்தான் என்பதுபோல செக்கை பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். பின் காபியை வாங்கிப் பருகினார். நந்தினி அவசரத்தில் சக்கரை போட மறந்திருந்தாள். ஆனால் ராகவன் அதை காட்டிக் கொள்ளவில்லை. சாரதா மட்டும் நந்தினிக்கு புரிய வேண்டும் என்பதற்காக, ''நந்தினி எனக்கொண்ணும் சர்க்கரை வியாதி இல்லம்மா..'' என்றாள். ராதாவுக்கு உடனே புரிந்தது.

''ஐயோ நந்தினி.. உன் வாழ்க்கைய தித்திப்பாக்கற சேதி சொன்னவங்களுக்கு நீ பால் பாயசம் பண்ணித் தந்திருக்கணும்.. இப்பிடியா காபியில சக்கரை போட மறப்பே..?'' என்றும் கேட்க, நந்தினிக்கு அவர்கள் எதிரிலேயே ராதா அப்படி பேசியது என்னவோ போல் ஆகி விட்டது.

அவர்களும் ''விடும்மா.. கல்யாண சந்தோஷத்துல தலை கால் தெரியல போல இருக்கு..'' என்று கூறியபடியே புறப்படவும் எழுந்தனர்.



''சரிம்மா நாங்க புறப்படறோம்..'' என்றவர்களை வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு வந்தாள் ராதா. கூடவே போனாள் ரஞ்சனி.

திரும்பி வரவும் எதிரில் வெறித்த விழிகளோடு நந்தினி..

''என்னடி..?''

''என்ன என்னடி.. இப்படிதான் அவங்க எதிர்ல என் மானத்தை வாங்குவியா..?''

''மானத்தை வாங்கினேனா.. என்ன உளறுறே..?''

''பின்ன.. பால் பாயாசம் பண்ணித் தரணும்கறே.. சக்கரை போட ஒண்ணும் நான் மறக்கல. வீட்ல சர்க்கரை இல்லை.. அது தெரியுமா உனக்கு..?''

''அதை சொல்றதுக்கென்ன..?''

''மண்ணாங்கட்டி. அவங்க அப்புறம் என்ன நினைப்பாங்க? ஆமா செக் கொடுத்தா வாங்கிக்க வேண்டியது தானே.. ஏன் வேண்டாம்னே..?''

''கல்யாண செலவுன்னா இரண்டு பக்கமும்தானே? இதுல அவங்க கிராண்டா நடத்த விரும்பினா செய்துட்டு போகட்டும். நீ எதுக்கு அதை வேண்டாம்னே..?''

''முண்டம் மாதிரி பேசாதே.. சுயமரியாதைன்னு ஒன்னு இருக்கு. பெருந்தன்மைன்னும் ஒன்னு இருக்கு. அதுல அவங்க எவ்வளவு பெரியவங்கன்னு காட்டிட்டாங்க. நாம காட்ட வேண்டாம்..?''

''அப்ப உன்னால கிராண்டா கல்யாணம் பண்ண முடியுமா..? அதுக்கு பணம் இருக்கா..?''

''நம்ப சக்திக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்வோம். பணத்துல பாதி சவு செலவுக்கும் ஆகும். பத்திரி செலவுக்குமே போயிடுச்சு. மீதி இருக்கறது கல்யாண மண்டப வாடகைக்கும் எலெக்ட்ரிக் பில்லுக்குமே காணாது..''

- நந்தினியின் பேச்சு சதாசிவத்துக்கு நெருப்பை மூட்டியிருந்தது.

‘‘அடியே வாய்க் கொழுப்பெடுத்தவளே, கொஞ்ச நேரம் உன் திருவாயை மூட்றியா? யார்கிட்ட என்ன பேசறேன்னு தெரிஞ்சுதான் நீ பேசறியா..? இவ உனக்காக தன்னையே விலக்கிகிட்டவடி. இவளையே நீ கனம் பாக்கறியா?..’’ இனி நீ ஒரு வார்த்தை கூட இவளை பத்தி பேசினே, உன் வாய்ல பல்லு இருக்காது. பேத்துடுவேன் தெரிஞ்சுக்கோ..’’

- சதாசிவத்தின் சீற்றம் வெளியே கடையில் இருந்த கணேசன் காதுகளில் விழுந்து அவனும் ஓடி வந்தான். நந்தினிக்கும் சதாசிவத்தின் கோபம் சற்று நடுக்கத்தை ஏற்படுத்திவிட்டது. ராதாகூட சதாசிவம் பேசியதைக் கேட்டு மிரண்டு போய்விட்டாள்.

‘‘பெரியப்பா எதுக்கு இந்த கோபம்.. இவ எப்பவும் இப்படித்தான் பேசுவான்னு தெரியும்தானே..?’’ என்று கேட்டாள்.

‘‘இதுவரைல பேசியிருக்கலாம். இனி பேசக்கூடாது. உன் கால்ல விழுந்து நன்றி சொல்ல வேண்டிய இந்த நாய்க்கு இந்த வாய் கொஞ்சமும் ஆகாது. இங்க பேசற இதே வாய் புகுந்த வீட்லயும் பேசினா என்ன ஆகும்னு யோசிச்சு பார்.

இவளுக்கு இருக்கறது வாய் இல்ல.. கால்வாய்!’’ திரும்பவும் சீறினார்.

‘‘போதும் நிறுத்துங்க.. நீங்கள்லாம் இப்படி என்னை புண்படுத்தினா நான் தீக்குளிக்க கூட தயங்க மாட்டேன். ஞாபகம் வெச்சுக்குங்க! நான் என்ன தப்பா பேசிட்டேன்? இல்ல நான் என்ன தப்பா நடந்துட்டேன்?

அவங்களா பணம் தரும்போது பணத்தை வேண்டாம்னு சொன்ன கையோட புத்திசாலித்தனமா கல்யாணத்தை



நீங்களே கிராண்டா பண்ணிடுங்கனுன்னு சொல்றதுல என்ன தப்பு..?’’

- நந்தினியும் சளைக்கவில்லை. கணேசனுக்குத் தான் நந்தினியை எப்படி சமாளிப்பது என்பதும் தெரியும். எனவே அவள் பேசி முடிக்கவும் அவன் ஆரம்பித்தான்.

‘‘ஒரு தப்பும் இல்லை நந்தினி. நீ பேசினதுதான் சரி. மாமா உங்களுக்கு வயசாயிடிச்சு. பிரஷர் எகிறும் போது என்ன பேசறோம்னு உங்களுக்கு தெரிய மாட்டேங்குது. வாய மூடிக்கிட்டு பேசாம இருங்க..’’ என்று அவள் சார்பாக பேச நந்தினிக்கும் சற்று அடங்கியது.

அதேசமயம் சதாசிவத்தை பார்த்து ஜாடை காட்டி சமாளித்து விட்டான். ராதாவுக்கும் புரிந்தது.

ராதாவை சற்று பரிதாபமாக பார்த்தான். அப்படியே சதாசிவத்திடம், ‘‘மாமா.. என்ன மாமா இப்படி வெடிச்சிட்டீங்க? இவளப் பத்தியெல்லாம் நீங்க பேசவே கூடாது மாமா. ஒரு மாசம்.. ஒரு மாசம்தான்.. அதான் பிடிச்சு தள்ளி விட்டுடப் போறாளே. அப்புறம் இந்த வீடு நிம்மதியா யிடும்..’’ என்றவன் ராதா பக்கம் திரும்பி, ‘‘நான் இவ விஷயத்துல நீ தோத்துடுவேன்னுதான் நினைச்சேன். ஆனா வசமா மாட்டிக்கிட்டியே ராதா..’’ என்றான்.

‘‘என்ன அத்தான் பேசறீங்க?.. புரியல எனக்கு..’’

‘‘புரியலியா! சரிதான்! இந்த கல்யாணம் நடக்கலேன்னா தோத்து மட்டும்தான் போயிருப்பே. ஆனா நடக்க போகுது. அதேசமயம் அந்த குடும்பமோ தங்கமான குடும்பமா தெரியுது. அவ்வளவு நல்ல குடும்பத்துக்குள்ள இப்படி ஒரு ராட்சஸிய அனுப்பி நாளைக்கு அவங்ககிட்ட மாட்டிக்கப் போறியே அதை சொன்னேன்..’’ என்று அவன் விளக்கமாய் கூறவும் ராதாவுக்கே கூட சுருக்கென்றது!

18



கணேசன் கேட்ட கேள்வி ராதாவிடம் நிறையவே வேலை செய்தது. மௌனமாக விலகிப் போனாள். கணேசனுக்கும் தன் கேள்வி வேலை செய்யத் தொடங்கி விட்டது புரிந்தது. அவள் நன்றாக யோசிக்கட்டும் என்பது போல ஒதுங்கிக் கொண்டான். ரஞ்சனியும் அவளது அறைக்குள் நுழைந்து அங்கிருந்த கம்ப்யூட்டரில் புகுந்து கொண்டு தற்காலிகமாக ஆசுவாசமானாள். அப்போது பக்கத்து வீட்டு சின்னப் பெண்ணான ஸ்ரீநிதி..

''ரஞ்சனியக்கா.. ரஞ்சனியக்கா..'' - என்றபடியே வந்தாள்.

''என்னடி..?''

''உங்க ஃப்ரெண்டுகிட்ட இருந்து ஃபோன்..''

''அப்படியா..?'' - என்று வேகமாய் அவள் வீடு நோக்கி செல்லத் தொடங்கினாள். அவள் செல்வதை பெரியப்பா செருமலோடு பார்த்தார்.

''யார்கிட்ட இருந்தும்மா ஃபோன்..?'' - என்றும் கேட்டார்.

''ஃப்ரெண்ட் பெரியப்பா..''

''ஃப்ரெண்ட் சரி - அவளுக்கு பேர் இல்லையா..?''

''பேர்.. பேர்.. பாரதி..''

''ஆம்பளையா பொம்பளையா..?''

''பொ.. பொம்பளதான் பெரியப்பா..''

ஆம்பளைக்கும் பாரதிங்கற பேர் உண்டேம்மா..?''



பெரியப்பா விடாமல் கேட்டதும் பதில் கூறியதும் ரஞ்சனிக்கு எரிச்சல் மூட்டியது.

''அம்மாடி உன் அப்பன் இருந்திருந்தாலும் இப்படித் தான்மா கேட்டுருப்பான். அவன் இல்லாத நிலைல நான் தானே கேட்டாகணும். அதான் கேட்டேன்..'' - என்றுதான் கேட்டதற்கு காரணத்தையும் கூறினார்.

ரஞ்சனியும் அதற்கொரு பதில் என்று கூறாமல் வேகமாய் டெலிஃபோனை நோக்கி ஓடினாள்.

''இங்க நம்ம கடைலயே ஃபோன் இருக்கும்போது பக்கத்து வீட்டுக்காரங்கள எதுக்கு இவ தொந்தரவு பண்றா..'' - என்று பெரியப்பா முணுமுணுத்துக் கொண்டார். அப்படியே இவன் மூணு பேரையும் என்கிட்ட விட்டுட்டுப் போய் சேர்ந்துட்டான். பெரியவ எனக்கே புத்தி சொல்றா. இரண்டாவதவ விட்டா என்னை கொலையே செய்துடுவா.. மூணாவதவகிட்டயும் ஏதோ சிக்கல் இருக்கு..'' - என்று அந்த முணுமுணுப்பு அப்படியே தொடர்ந்து முடிந்தது.

பக்கத்து வீட்டில் டேபிளில் ஃபோன் பிரிந்து கிடந்தது. ஓடிச் சென்று கையில் எடுத்தாள். மறுபுறம் அவள் காதலன் ராஜேஷ்!

''ரஞ்சா..'' என்றான் ஃபோன் எடுக்கும் சப்தம் கேட்டு..

''யெஸ்..'' - என்றாள் மெல்லிய குரலில்..

''ஏய் நான் ராஜேஷ்..''

''தெரியும்.. இப்ப என்ன திடீர்னு ஃபோன்..?''

''அது சரி.. முந்திதான் வெளிய தெரிஞ்சா என்னாகுமேங்கற கவலை. இப்பதான் நமக்கு கிரீன் சிக்னல் கிடைச்சாச்சே..?''

''மண்ணாங்கட்டி.. இங்க வீட்ல ஒரே யுத்தம். தயவு செய்து ஃபோனை வை. நானே அப்புறமாக உனக்கு ஃபோன் பண்றேன்..''

''என்ன ரஞ்சா யுத்தம் அது இதுங்கறே.. உன் அக்கா கல்யாண பிரச்னையா..?''

''அக்காவே பிரச்னைதானே.. இதுல கல்யாணம் மட்டும் எங்க இருந்து வாழும்..?''

''புரியும்படி சொல்.. கல்யாணம் நின்னு போய் அதனால குழப்பமா..?''

''இல்ல ராஜேஷ்.. இந்த கல்யாணம் நடந்து அதனால என்னவெல்லாம் பிரச்னை வரப்போகுதோன்னு பெரியக் காவுல இருந்து எல்லாரும் ஃபீல் பண்றோம்..''

''நீ பேசறதை பார்த்தா பெரிய அளவுல புயல் வீசிகிட்டு இருக்கறது தெரியறது.. நாம நேர்ல சந்திக்கறது தான் ஒரே வழி. வழக்கமா சந்திக்கற இடத்துக்கு வந்துட்றியா..?''

''ராஜேஷ்ஷ்ஷ்..!''

''என்ன ரஞ்சா..''

''அக்காகிட்ட பேசினது மறந்து போச்சா..''

''என்ன பேசினோம்..?''

''வேண்டாம். ஃபோனை கட் பண்ணு. இங்கயும் சூழல் சரியில்ல. உன் ஃபோனுக்காக நான் வரும்போது பெரியப்பா வேற யார் ஃபோன் எதுக்கு ஃபோன்னு பிராண்டி எடுத்துட்டாரு..''

''நான் கட் பண்றேன் - நீ வரேன்னு சொல்லு..''

''முடியாது.''

''ஏன்..?''

''உனக்கே பதில் தெரியும்..''



''லுக் ரஞ்சனி.. உன் அக்கா ஒரு அக்காவா நமக்கு அட்வைஸ் பண்ணாங்க. அப்படிதான் பண்ணுவாங்க. நான் உன் காதலனா வருங்கால கணவனா இப்படித்தான் கூப்பிடுவேன். நீயும் ஒரு காதலியா சந்திக்க வரணும். நாளைக்கு கல்யாணமாகிட்டா இப்படி சந்திச்சுக்க முடியுமா? இதெல்லாம் ஒரு டைம்.. போனா வராது..''

''நீ என்ன சொன்னாலும் சரி - நான் வர மாட்டேன்..''

''இதோ பார்.. எனக்கு உன்னை நல்லா தெரியும். நீ வருவே.. வருவே.. வருவே..'' டொக்.. மறுபக்கம் ஃபோனை வைத்துவிட்டான் ராஜேஷ். ரஞ்சனி முகத்தில் நிச்சலனம்.

மௌனமாக ரிசீவரை வைத்துட்டு நடக்கத் தொடங்கினாள். பக்கத்து வீட்டில் இருந்து வெளியே வந்தவளை கணேசனும் கவனித்தான்.

''என்ன ஃபோனா..?''

''ம்..''

''ஏன் என் கடை நம்பர் தர மாட்டீங்களா..?''

- கணேசனும் அதே கேள்வியை கேட்டான். அவனை முறைத்துப் பார்த்துவிட்டு நடந்தாள். அவனும் யோசிக்கத் தொடங்கினான்.

''இதுல ஏதோ வில்லங்கம் இருக்கு..'' என்று அவள் காதில் விழுவது போலவே முணுமுணுத்தான். அதைக் கேட்ட ரஞ்சனியும் தேம்பி நின்று விட்டு திரும்பி வந்தாள். அவனை நேருக்கு நேர் ஏறிட்டாள்.

''என்னம்மா.. இந்த வெறி வெறிக்கறே..?''

''வெறிக்கல எப்படி சொல்றதுன்னு யோசிக்கறேன்..''

''அப்ப வில்லங்கம் இருக்கறது உண்மைதானா..?''

''வில்லங்கமெல்லாம் இல்லை - இது ஒருவிதத்துல நல்ல விஷயம்தான்..''

"என்ன காதலா..?" - கரெக்டாக பாய்ண்ட்டை பிடித்தான்.

"உம்.."

"நினைச்சேன்.. உன் அக்காவரைல நந்தினி தான் அணுகுண்டுன்னு நினைச்சேன். நீ அதுக்கும் மேலே இருப்பே போல இருக்கே..?"

"அக்காவுக்கு எல்லாம் தெரியும்.."

"பார்ரா.. ராதாவுக்கு எல்லாம் தெரியுமா..?"

"உம்.."

"அதான் தைரியமா என்கிட்டயும் சொல்ல உனக்கு மனசு வந்ததா..?"

"எப்படி வேணா எடுத்துக்கோ.."

"எப்படி ராதா உன்னை விட்டா.. மண்டையை உடைச்சு மாவிலக்கு போட்ருப்பாளே..?"

"அது நான் தப்பான ஆளை லவ் பண்ணியிருந்தா.."

"அப்ப நீ லவ் பண்றவன் யார்.. அம்பானியோட மகனா..?"

"உனக்குத்தான் பேசத் தெரியும்னு பேசாதே.." - என்ற ரஞ்சனி, ராஜேஷ் பற்றி சுருக்கமாக கூறி முடித்தாள். ராதாவும் ராஜேஷும் பேசிக் கொண்டதையும் கூட சொல்லி முடித்தாள்.

"ஓ.. விஷயம் அவ்வளவு தூரம் போயாச்சா..?"

"கணேசத்தான்.. உன்கிட்டயும் நான் நம்பித்தான் சொல்றேன். நந்தினி கல்யாணம் நடந்து முடியற வரை இப்ப இதைப் பத்தி பெரியப்பாகிட்ட பேசாதே. உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன்.."

"நான் ஏம்மா பேசறேன். உனக்குத்தான் பெரியவ சப்போர்ட் இருக்கே? நான் பேசினாத்தான் என்ன, பேசாட்டிதான் என்ன..?"



- கணேசன் குரலில் சுருதி குறைந்து அவன் முகமே மாறத் தொடங்கியது. ரஞ்சனியும் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டவள் போல விலகினாள். அவள் விலகிய நொடியே ராதாவின் வருகை.

"எங்கே போய்ட்டு வரே..?" - என்கிற கேள்வியோடு ஃபோன் வந்ததுக்கா பேசிட்டு வரேன்.."

"சரி சரி போய் காய் நறுக்கி வை.. கொஞ்சம் பாத்திரங்களையும் தேச்சு வை. நான் ஜோசியர் வீடு வரை போய்ட்டு வந்துட்றேன்.." என்றாள்.

"சரிக்கா.." - என்று ரஞ்சனி விலக, ராதா கடைமுகப்பில் கணேசன் முன் நின்றாள்.

கணேசன் அவளை நிமிர்ந்து பார்க்காமலே கல்லாவில் சில்லரையை எண்ணத் தொடங்கினான்.

"எவ்வளவு தடவை எண்ணினாலும் எவ்வளவு இருக்குமோ அவ்வளவுதான் இருக்கும்.. ஆமா என்னை கொஞ்சம் நிமிர்ந்து பார்க்க மாட்டீங்களோ?"

அவனும் நிமிர்ந்தான்.

"என்கூட கொஞ்சம் ஜோசியர் வீடு வரை வர முடியுமா..?"

"எதுக்கு..?"

"என்ன எதுக்கு? ஒரு மாசத்துக்குள்ள நாள் குறிச்சிட்டு தேதிய சொல்லச் சொல்லிட்டுல்ல போயிருக்காங்க மாப்ள வீட்டுல..?"

"நல்ல காரியத்துக்கு போறே.. கூட எதுக்கு இந்த நொண்டி..?"

- அவன் இப்படி கேட்கவும் அவனை முறைத்தவள், "இந்த தாழ்வு மனப்பான்மை உங்களை விட்டு போகவே போகாதா? அரசாங்கமே உங்களை எல்லாம்

மாற்றுத் திறனாளின்னுதான் சொல்ல ஆரம்பிச்சிருக்கு. ஆனா உங்களுக்குள்ள அப்படியே இருக்கே..?'' என்று சீறினாள்.

''ராதா.. நீ எப்படி பேசினாலும் என் கால் வளர்ந்து சரியாகப் போறதில்ல. நீ முற்போக்கா யோசிச்சாலும் பார்க்கறவங்க அதை முற்போக்கா எடுத்துக்கப் போற தில்லை. நான்லாம் உயிர் இருக்கறதால வாழறவன் - வயிறு இருக்கறதால சாப்பிட்றவன். என் வாழ்க்கைல என்ன பெரிய ஒரு வெளிச்சம் இனிமே வரமுடியும்..?''

''ஆமா என்ன இன்னிக்கு இவ்வளவு வேதாந்தம் உங்க பேச்சுல..?''

''வேதாந்தமாவது விளக்கெண்ணையாவது.. நான் உள்ளதைப் பேசறேன்..''

''இல்ல.. என்கிட்ட உரிமை எடுத்துப் பேசற நீங்க மூணாவது மஷனுன் மாதிரி பேசறது ஆச்சரியமா இருக்கு. நான் நிறைய விஷயங்கள் உங்ககிட்ட பேசணும்னுதான் ஜோசியர் வீட்டுக்கு உங்கள கூப்பிடறேன்..''

''என்கிட்ட பேச என்ன இருக்கு ராதா..?''

''நிறைய இருக்கு..''

''அப்பா ஸ்தானத்துல பெரியப்பா இருக்கார்.. என் கிட்ட பேசி என்ன புண்ணியம்..?''

''போதும் கணேஷ் அத்தான்.. யார்கிட்ட என்ன பேசணும்னு எனக்கு தெரியும்..''

''உங்களுக்கு என்ன ஆச்சு? நான் இன்னிக்கு எல்லாமே எனக்கு தப்பு தப்பா நடக்குது..?''

''தப்பாவா.. எல்லாம் நீ நினைச்ச மாதிரிதானே நடக்குது..?''

''தப்பா சொல்றீங்க.. எது நடக்குமோ அதையே நான் நினைக்கறேன்.. புரிஞ்சுக்குங்க..''



- ராதாவிடம் ஒரு வெடிப்பு. மளுக்கென்று கண் ணீரும் வந்துவிட்டது.

''ராதா'' - கணேசனும் பதறத் தொடங்கினான்.

''அத்தான்.. இந்த உலகத்துல என் மேலயும் அக்கறை உடைய ஜீவன்கள் இப்ப மூணு பேர்தான். அதுல என் அம்மாவால அசையக்கூட முடியாது. அடுத்து பெரியப்பா. அவரே பெரிய மனபாரத்தோட இருக்காரு. மூணாவதா நான் சாஞ்சுக்க முடிஞ்ச ஒரே சுமை தாங்கி நீங்கதான். நீங்களே இப்படி வார்த்தையால என்னை வறுத்தெடுத்தா நான் என்ன செய்வேன்..?''

''ஆமா.. இதுல உன் தங்கைகளுக்கு இடமில் லையா?''

- கணேசன் பாய்ன்ட்டைத் தொட்டான். அதற்கு அவள் சுழித்த உதட்டில் ஒரு சிரிப்பு. அதில் ஏராளமான அர்த்தங்கள்.

''என்ன சிரிக்கறே..?''

''சிரிக்காம என்ன செய்ய.. என் தங்கைங்க இரண்டு பேருமே கெட்டிக்காரிங்க. பெரியவ தட்டிப் பறிக்கறத பற்றி கவலையே பட மாட்டா - சின்னவளும் அவளுக்கு ஒரு வழியை அவளே தேடிக்கிட்டிருக்கா..''

''அப்படின்னா..?''

''அதை எல்லாம் பேசணும்னுதான் ஜோசியர் வீட் டுக்கு கூப்பிட்டேன்..''

''சரி இரு வரேன்..''

- கடையை மூடப் போனான் கணேசன்.

''கடையை மூடாதே. பெரியப்பாவை வந்து நான் பார்த்துக்க சொல்றேன். நாம ஒரு ஆட்டோ பிடிச்சு போய்ட்டு வந்துடுவோம்..'' என்றாள்.

ஆட்டோவில் ஏறி அமர்ந்த நிலையில் ரஞ்சனியின் காதலைப் பற்றித்தான் பேசத் தொடங்கினாள். கணேசன் அவள் அதைப் பற்றி பேசத் தொடங்கவே இலேசாகி விட்டான். ராதா தனக்கும் தெரியாமல் ஒரு ரகசியத்தோட இருக்கிறாள் என்கிற எண்ணம்தான் அவனை பலவாறு பேச வைத்தது. அது உண்மையில்லை என்று தெரிய வரவுமே மனது லேசாகிவிட்டது. ராதாவை தவறாக புரிந்து கொண்ட வேதனையோடு அவளை பார்த்தவன், "ராதா.. விடு ஒருவிதத்துல நீ எடுத்த முடிவுதான் சரி. ரஞ்சனிக்கும் அவ ஆசைப்பட்ட வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்தா அவளும் சந்தோஷமா வாழ்ந்துட்டு போறா.. இப்ப என்ன..?"

"நமக்கும் வேற வழியும் இல்லையே அத்தான்.." - என்றாள் ராதா.

"போகட்டும்.. நந்தினி கல்யாணத்தை தடபுடலா பண்றதா சொல்லிட்டியே.. அதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போமா..?"

"எனக்கும் இப்ப அதுதான் யோசனை. சிம்பிளா பண்ண அவங்க ஒத்துக்கிட்டாலும் இவ விடமாட்டா.."

"நம்மால முடிஞ்ச அளவு பண்ணுவோம். வேற என்ன பண்ண முடியும்..?"

"அதுதான் என் எண்ணமும். எனக்குன்னு நகை நட்டு எதுவும் வேண்டாம். எல்லாத்தையும் நந்தினிக்கே கொடுத்துடப் போறேன்.."

"உளறாதே.. நாளைக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க போறவன் எப்படி உன்னை ஏத்துப்பான்?"

"அப்ப என்கிட்ட நகை நட்டு இருந்தாதான் என்னை நீங்க ஏத்துக்குவீங்களா..?" - ராதா அப்படி ஒரு கேள்வியைக் கேட்பாள் என்று கணேசன் எதிர்பார்க்கவில்லை. அவனிடம் திக்குமுக்காடல்!



## 19



ராதாவின் கேள்வி கணேசனைத் திக்குமுக்காட வைத்துவிட்டது. விக்கித்துப்போய் அவளையே பார்த்தான். கண்ணிரண்டும் கூட கலங்க ஆரம்பித்து விட்டன.

"என்னத்தான்.. ஏன் கலங்கறீங்க..?"

"கலங்கறேனா.. திகைச்சுப் போயிருக்கேன் ராதா.

ஆமா, நீ நல்ல தெளிவான மனசோடதான் பேசறியா..?"

"நான் எப்பவும் என் மனசை மட்டும் குழம்பவிட்றதே

யில்லை.."

"உண்மைதான்.. உன்னாலதான் இப்படி எல்லாம்

பேச முடியும். ஆனா.."

"என்ன ஆனா..?"

"நான் எங்கே, நீ எங்கே..?"

"நான் இங்க நீங்களும் இங்கதான் இருக்கீங்க.."

"ராதா வாழ்க்கைங்கறது ரொம்ப பெரிய விஷயம்..

நான் ஒரு முடவன்.."

"நீ பேசறது எனக்குப் புரியல.. எல்லாரும் ஊனமா..?"

"ஊனம்கறது உடல் உறுப்புகள்ல இருந்தா தானா..

மனசுல இருந்தாலும் ஊனம் ஊனம் தானே..?"

"எப்படி..?"

"வீட்ல பெரியப்பாவையே முதல்ல எடுத்துப்போம்.. அவரோட மாஜி மனைவி இதே ஊர்ல தனியா கஷ்டப் பட்றாங்க. இவரும் தனியா கஷ்டப்பட்டிட்டிருக்கார். அவங்களோட சேர்ந்து இவர் ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கி வாழலாம். ஆனா சமுதாயத்தை நினைச்சு பயம்.

தன்னையே நினைச்சு பயம். இந்த வயசுல தனக்கொரு கல்யாணமாங்கற கேள்வி. அதனால குழப்பம். அதனால பயம். பயம் ஒரு பெரிய ஊனம்ங்க...

அடுத்து உங்க விஷயத்துக்கு வருவோம்.

கால் இல்லேன்னா என்ன இப்போ? இதனால உங்க ளுக்குள்ளேயே நிறையவே தாழ்வு மனப்பான்மை. தாழ்வு மனப்பான்மையும் ஒரு ஊனம்தானே..?

என்னையே எடுத்துக்குங்க. என்னோட இந்த விருப்பத்தை நான் இவ்வளவு தாமதமாவா சொல்றது..? எனக்கும் ஜெகதீஷுக்கும் நிச்சயமெல்லாம் நடந்து முடிஞ் சாச்சு. அப்பா, அம்மா ஆக்சிடெண்டுக்கு ஆளான பிறகு, நான் என் மனசை மாத்திக்கிட்டுத்தானே சொல்றேன். அப்பா, அம்மாவுக்கு ஒருவேளை ஆக்சிடெண்ட் ஆக லைன்னா ஜெகதீஷோட என் கல்யாணம் நடந்திருக்குமே.

என்கிட்டேயே இப்படி தடுமாற்றங்கள் இருக்கே. இது ஒரு ஊனம்தானே..?

ரஞ்சனியை எடுத்துக்குவோம். அவளோட காதலை என்னன்னு சொல்ல..?

வரிசையாக சொல்லிக்கொண்டே போக, கணேசன் கையை உயர்த்தி, ''போதும் ராதா நிறுத்து. உன்கிட்ட யாருமே பேசி ஜெயிக்க முடியாது..'' என்றான்.

எதுக்கு இவ்வளவு காட்டம். என்னை உங்களுக்கு பிடிக்கலையா? பிடிக்கலைன்னா சொல்லிடுங்க..''

''பைத்தியக்காரி.. உன்னை ஒருத்தர் பிடிக்கலேன்னு சொல்ல முடியுமா? ஆனா என்னாலதான் நம்ப முடியல. இதை ஊர் உலகத்துல இருக்கறவங்க கேட்டா என்ன நினைப்பாங்களோன்னும் பயப்படறேன்...''

''இப்பதான் பயம் ஒரு ஊனம்னேன். உங்களுக்கு ஒரு ஊனம் போதாதா? எதுக்கு ஒரு இரண்டாவது?''



''ராதா..''

''இது எப்படி இருக்கு தெரியுமா..? ஒரு தாய் தான் பெத்த குழந்தையைப் பார்த்து என்னைப் பெத்தவளேன்னு சொல்ற மாதிரி இருக்கு..''

''இப்ப சரி, நாம நந்தினி கல்யாண வேலைகளை வேகமா கவனிப்போம். முதல்ல ஜோசியர்கிட்ட நாளைக் குறிச்சு பத்திரிகை அடிக்க குடுப்போம். அடுத்து கல்யாண மண்டபம் புக் பண்ற விஷயம்.''

''உத்தரவு மகாராணி..''

''பை த பை நல்ல விஷயத்தை இப்ப சொல்ல வேண்டாம். நந்தினி கல்யாணம் முடிச்ச கையோட ரஞ்சனி கல்யாணத்தையும் முடிச்சிடுவோம். கடைசியா என் கழுத்துல தாலி கட்டுங்களேன்..''

அவன் அதை வெகுவாய் ரசித்தான்.

''எப்படியோ நீங்க மூணு பேருமே கரை சேரப் போறீங்க. சரிதானே..?''

''ஆமாம்..''

''எல்லாத்துக்கும் நீ எடுத்த முடிவுதான் காரணம். நீ மட்டும் ஜெகதீஷை ஒத்துக்கிட்டிருந்தா இதுக்கெல்லாம் வாய்ப்பே இல்லை.

இப்பத்தான் புரியுது. நீ எவ்வளவு சரியான முடிவை எடுத்திருக்கேனு..''

கணேசன் நெஞ்சம் விம்ம பாராட்டவும் செய்தான்.

''முடிவை செயல்படுத்தற கடமை இருக்கு. முடி வெடுக்கறதா பெருசு..? செயல்படுத்தறது தானே எல்லாத் தையும் விட பெருசு..''

''சரி ராதா, இப்ப என்ன செய்யணும் சொல்லு..''

''ஜோசியரைப் போய்ப் பார்ப்போங்க..''

''நான் ஒண்ணு சொன்னா கேட்பியா..?''

''என்ன..?''

''ஏன் இந்த கல்யாணத்தோட சேர்ந்து ரஞ்சனி கல்யாணத்தையும் பண்ணக்கூடாது..?''

''இதுக்கே செலவுக்கு என்ன பண்றதுன்னு தெரியல. இதுல அவ விஷயம் சேரும்போது பல விஷயம் இடிக்கும்ங்க...''

''நான் ஒரே செலவுல முடிஞ்சிடும்னு நினைச்சு சொன்னா நீ இடிக்கும்கறியே..''

''ஒரே செலவா? எப்படி? நந்தினிக்கு 30 பவுன் வரை போடப் போறோம். ரஞ்சனிக்கு இப்ப இருக்கற நிலைல அதே அளவு போட முடியுமா?

அப்புறம் பாத்திரம், பண்டம் இடிக்கும்னு இப்ப புரியுது..''

''அவ கல்யாணக் கவலை இப்ப வேண்டாம் அத்தான். அதுக்கு குறைஞ்சது இரண்டு வருஷமாவது ஆகும்றது தான் என்னோட முடிவு..''

''இரண்டு வருஷமா..?''

''நிச்சயமா.. அவளுக்கு இதே மாதிரி முப்பது பவுன் நகை போட்டு கல்யாணம் பண்ண வேண்டாமா?''

''ஆமால்ல.. முப்பது பவுன்னா இன்னிக்கு மதிப்பு ஏழரை லட்சம். வருஷத்துல இது பத்து லட்சமா கூட மாறலாம். சம்பாதிக்கணும். அதுக்கு டைம் வேணும்..''

''ஆமாம் அத்தான். நந்தினி கல்யாணம் முடியட்டும்னு நான் காத்திருக்கேன். என்கிட்ட நிறைய திட்டங்கள் இருக்கு. அதுல ஒண்ணு நல்ல ஜெராக்ஸ் கடையை கம்ப்யூட்டர் சென்டரா மாத்தறது. நானும் வேலைக்குப் போகப் போறேன். ரஞ்சனியையும் வேலைக்கு அனுப்பப் போறேன்..''



ராதா எதிர்காலத்தை கணேசனோடு நின்றபடி எம்பிப் பார்ப்பதுபோல பார்த்து பேசினாள். கணேசனுக்கு அதைக் கேட்க வெகு இன்பமாக இருந்தது.

அந்த இன்பமான உணர்வுகளோடு இருவரும் ஜோதிடர் வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

* * *

அக்கா உங்களுக்கு ஃபோன் என்றான் பக்கத்து வீட்டுப் பெண் ஸ்ரீநிதி. அதைக் கேட்ட ரஞ்சனிக்கும் ராஜேஷ் அழைப்பது தெரிந்து சன்னமாய், ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. பூனை போல நடந்து வெளியேறினாள். நல்ல வேளையாக சதாசிவம் பெரியப்பா தூக்கத்தில் இருந்தார்.

நந்தினியோ டி.வி. மெகாசீரியலில் மூழ்கியிருந்தாள்.

ரஞ்சனியும் அவளைப் பார்த்தபடியே கடந்து போய் பிரிந்து ரிசீவரை எடுத்து காதில் வைத்தாள். வைத்த நொடி

''டார்லிங்'' என்றான் ராஜேஷ்.

அவளோ செருகியபடியே, ''சொல்லுடி ராஜீ'' என்றாள்.

''என்ன பொம்பள' ஆக்கிட்டியா நீ..''

''போதும். இப்ப எதுக்கு ஃபோன் பண்ணே..?''

''மயிலாப்பூர் பஜனை மடத்துல இன்னிக்கு பஜனை இருக்காம். போய் கலந்துக்கலாமான்னு கேட்கத்தான்..''

''என்னது பஜனை மடத்துல பஜனையா..?''

''பஜனை மடத்துல பஜனை நடக்காம பின்ன என்ன ரிகார்ட் டான்ஸா நடக்கும்..?''

''போதும் விஷயத்துக்கு வா. அக்கா வேற வீட்ல இல்லை...''

''அப்ப ரொம்ப சௌகரியமா போச்சு..''

''உளறாதே. அக்கா சொன்னது போச்சு..''

''என்ன சொன்னா..?''

''ராஜீ.. உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன். ஃபோனை வை..''

''நானும் உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன். தயவு செய்து ராதாகிருஷ்ணன் சாலை எல்லோபேஜஸ் பஸ் ஸ்டாப்புக்கு வா..''

''முடியாது..''

''வரே நீ..''

''நோ. அக்காவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்.''

''அக்கா.. அக்கா.. அக்கா உங்கக்காவுக்கு காதல்னா என்னன்னு தெரியுமா? நாளைக்கே கல்யாணமாயிட்டா நீயும் நானும் பாத்துக்கறதுல பேசிக்கறதுல கொஞ்சமாவது த்ரில் இருக்குமா..?''

''அதுக்காக..?''

''மண்ணாங்கட்டி. கிளம்பி வாடி..''

''அக்கா கேட்டா என்னன்னு சொல்றது..?''

''உலகம் பூரா எல்லா பெண்களும் சொல்ற ஸ்பெஷல் கிளாஸ், தையல் கிளாஸ்னு எவ்வளவு இருக்கு.

''..........''

''பயப்படறதும் காதலோட ஒரு அங்கம் தான்..''

''விடமாட்டேங்கறியேடி..''

''அது எப்படி விடுவேன். விட்றதுக்கா காதல் பண்ணினே..?''

ராஜேஷ் சொன்னதில் இருவிதமான பொருள். ரஞ்சனி ஃபோனை வைத்துவிட்டுத் திரும்பினாள். எதிரில் அவளையே வெறித்தபடி பார்த்தாள் பக்கத்து வீட்டுப் பெண்ணான கோமதி.



''யாரும்மா ஃப்ரெண்டா..?''

''அ.. ஆமா..''

''லவ் பண்றியா..?''

''ஐய்யய்யோ என்ன நீங்க...?''

''பதட்டப்படாதே. எனக்கு சுத்தி வளைச்சு பேசத் தெரியாது. இப்படி ஃபோன் வந்தாலே அது எப்படிப்பட்ட ஃபோனுன்னு எனக்கும் தெரியும். ஆமா உன் காதலன் இன்னுமா உனக்கொரு செல்ஃபோனை வாங்கித் தரலை..? ஓ.. ராதா இருக்கும்போது நீ எப்படி அதுல பேச முடியும். அப்படிதானே..?''

''ஆன்ட்டி..''

''இதோ பார் ரஞ்சனி. உன் குடும்பம் இருக்கற இருப்பு எனக்கும் நல்லா தெரியும். நீங்க நல்லா இருக்கணும். ராதா தனக்கு பார்த்த மாப்பிள்ளையையே விட்டுக் கொடுத்ததும் தெரியும். இன்னிக்கு இந்தத் தெருவோட டாபிக்கே உங்க அக்காதான். இந்தக் காலத்துல இப்படி ஒரு பொண்ணான்னு பேசாதவங்க கிடையாது. உனக்கு கிடைச்சிருக்கறவ அக்கா மட்டுமில்ல, அம்மா, அப்பா, அண்ணன்னு எல்லாரும் சேர்ந்த ஒரு கலவை. அவளுக்குத் தெரியாம எதுவும் பண்ணாதே. அது உனக்கு நல்லதில்ல..''

''இல்ல ஆன்ட்டி. என் லவ் மேட்டர் அக்காவுக்குத் தெரியும். நான் லவ் பண்றவரும் ரொம்ப நல்லவரு..''

''நல்லவங்க இப்படி ரகசியமா கூப்பிட மாட்டாங்கம்மா..''

''இல்ல ஆன்ட்டி. அக்காவும் அவர்கூட பேசினாங்க..''

''இருக்கலாம்மா.. இருந்தாலும் எச்சரிக்கையா இரு. இப்ப என்ன பண்ணப் போறே? அவனைப் பார்க்க போகப் போறியா..?

அந்த கோமதி ஆண்ட்டி நெருக்கமாக வந்து பாய்ன்ட்
டாக கேட்டாள். முதல்ல அரை மனதாய், பிறகு முழு
மனதோடு "இல்லை ஆண்ட்டி. அடுத்து ஃபோன் வந்தா
நீங்களே ஃபோன் பண்ணாதீங்கனுன்னு சொல்லிடுங்க.."
என்றாள்.

ஆண்ட்டி முகத்தில் ஒரு மெல்லிய நிம்மதி பெருமூச்சு.

ஆஸ்பத்திரிக்குள் லட்சுமியை கணேசனும், ராதா
வும் நெருங்கியபோது கண்ணிரண்டும் திறந்திருக்க
நேர் மேலான சீலிங் மேல் அவள் பார்வை இருந்தது.

பார்க்கும்போதே கணேசனுக்கு கண்ணை கரித்தது.
சில காட்சிகளைக் கண்கள் காணவே கூடாது. அதில்
ஒன்று இது. கண்ணீர் துளிர்க்க கணேசன் ராதாவைப்
பார்த்தாள். ராதா அம்மாவின் நெற்றியில் காளிகாம்பாள்
கோவில் குங்குமம் வைத்துவிட்டாள்.

அப்போது ஒரு நர்ஸ் வந்து டாக்டர் அழைப்பதாகக்
கூறவும் இருவரும் டாக்டரை காணச் சென்றனர்.

டாக்டரும் இருவரையும் அமரச் சொன்னார்.
அதே வேகத்தில் "எப்ப வீட்டுக்கு கூட்டிகிட்டு போகப்
போறீங்க.." என்று கேட்டார்.

"வீட்டுக்கா..?" கணேசன் அதிர்வோடு கேட்டான்.

"ஏன் உங்களுக்கு வீட்டுக்கு கூட்டிகிட்டு போறதா
உத்தேசம் இல்லையா..?"

"இல்லை" டாக்டர். வீட்ல அம்மாவுக்கு ட்ரீட்மெண்ட்
எப்படி கொடுக்க முடியும்..?"

"ட்ரீட்மென்ட்டா..?"

டாக்டர் பதிலுக்குக் கேட்ட விதமே ஒருமாதிரி
இருந்தது.

"என்ன டாக்டர் இப்படி கேக்கறீங்க..?"



"வேற எப்படி கேட்க..? இவங்களுக்கு ட்ரீட்மெண்
டுன்னு ஒண்ணு கிடையாது. டெய்லி மெய்ன்டனன்ஸ்
மட்டும்தான். நான் முந்தியே சொன்ன மாதிரி இவங்க
உயிர் ஒட்டிக்கிட்டு இருக்கற ஒரு பிணம். அவ்வளவுதான்."

"டாக்டர்ர்ர்..."

"உணர்ச்சிவசப்பட்றதுல அர்த்தமே கிடையாது.
இங்க எங்களால வெச்சுக்க முடியாது. பிரைவேட்
ஆஸ்பத்திரி எதுலயாவது கேட்டு அட்மிட் பண்ண முடியு
மான்னு பாருங்க. மன்த்லி ஃபீஸ் ரொம்பவே இருக்கும்.

இப்பல்லாம் ஏ.சி. சிங்கிள் பெட் ரூமுக்கு ஒரு நாள்
வாடகையே 1500 ரூபாய். அப்புறம் மெயின்டெனன்ஸ்
ஃபீஸ். அது ஒரு ஆயிரம் ரூபாய்.

ஒரு நாளைக்கு 2500 ரூபாய். மாசத்துக்கு கணக்கு
போட்டுக்குங்க. 75000 ரூபாய்...!"

டாக்டர் சொல்லச் சொல்ல ராதாவுக்கு தலையை
சுழற்றியது.

"டாக்டர் நாங்க வீட்டுக்கே கூட்டிகிட்டு போய்
டறோம்.." என்றாள் மிக வேகமாய்.

"கூட்டிக்கிட்டு போறதைத் தவிர வேற வழி..
ஆனா உங்களாலே ஒரு வாரம் பத்து நாள் கூட பாத்துக்க
முடியாது..."

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க டாக்டர்..."

"உங்களுக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்குன்னு
நினைக்கறேன். நீங்களும் சிரமப்படாம உங்கம்மாவை
இன்னிக்கு இருபது லட்ச ரூபாய்க்கு விக்க முடியும். ஒரு
நல்லஆஃபர் ஒண்ணு வந்துருக்கு. ஆர் யூ ரெடி..?

டாக்டர் கேட்ட விதமே நெஞ்சில் அறைந்தது!

## 20



ராதாவின் முகம் அப்பட்டமாக மாறிவிட்டது. அதை டாக்டராலும் உணர முடிந்தது.

''அம்மா நீங்க என்னை தப்பா எடுத்துக்காதீங்க.. நான் யதார்த்தமா தான் கேட்டேன். உங்கம்மா மாதிரி மூளைச் சாவு ஏற்பட்டவங்களை எங்க மெடிகல் ஃபீல்டுல நாங்க எப்படி எல்லாம் பயன்படுத்திக்க முடியும்னு தான் யோசிப்போம்.

போனமோசம் கூட ஒரு ஆக்சிடென்ட் கேஸ்... தலைல அடிபட்டு டோட்டலா கோமாவுல விழுந்துட்டான் ஒரு காலேஜ் ஸ்டூடன்ட். அவன் எழுந்து நடமாட வாய்ப்பே கிடையாது. ஆக்சிஜன் ட்யூப் உதவியால உயிரோட மட்டும் வெச்சிருக்கலாம். ஆனா அதனாலேயும் ஒரு பிரயோஜனமும் கிடையாது. அதிகபட்சம் ஒரு ஆறு மாசம்தான்... பெட் ஹார்ம் வந்தா அது அப்புறம் அவ்வளவு சீக்கிரம் ஆறாது. லிகியுட் ஃபுட் தாங்கறதால யூரினா அது வெளியேறிடும். உடம்புக்கு தேவையான விட்டமின்கள் கிடைக்காம போய் கடைசில உடம்பும் இன்ஃபெக்ட் ஆகி நாத்தமடிக்க தொடங்கிடும். இதை புரிஞ்சிக்க பேரண்ட்ஸ் அந்த பையனோட உடல் உறுப்பை தானம் பண்ண சம்மதிச்சாச்சு. இப்ப அந்த உறுப்புகளால் சாகக் கிடந்த மூணு பேர் நல்லபடியா குணமாகி உயிர் வாழ்ந்துகிட்டு இருக்காங்க.

ஆகையால தயவு செய்து யோசிச்சு பாருங்க..'' - டாக்டர் அளித்த அந்த நீண்ட விளக்கம் ராதாவை கட்டிப் போட்டு விட்டது. மேற்கொண்டு பேச அவளால் முடியவில்லை. ஆனால் கூடவே இருந்த கணேசன் டாக்டரிடம் கேட்டான்.



''டாக்டர் சார்.. நீங்க சொல்றது எல்லாம் சரி.. பல வருஷம் கோமாவுல கிடந்தவங்க ஒருநாள் கண் முழிச்சதா நான் பேப்பர்ல படிச்சிருக்கேன். அப்படி என் அத்தையும் முழிக்க வாய்ப்பு இருக்கு தானே?''

- அவன் கேள்வியின் நோக்கம் டாக்டருக்கு தெளிவாய் புரிந்தது.

''இவங்க கேஸ் அப்படி இல்லை மிஸ்டர்... மூளை நல்லா இருந்து ஒரு பார்ட் மட்டும் பாதிக்கப்பட்டு கோமா ஸ்டேஜ் ஏற்பட்றதுக்கும் மொத்த மூளையும் செயல் இழக்கறதுக்கும் வித்யாசம் இருக்கு.

திரும்பவும் சொல்றேன். இவங்க உடல் உறுப்புகள் வேணும்கறதுக்காக நான் சொல்லலை. இவங்களை ஒரு உயிர் பிணமா வெச்சிருந்து நீங்க கஷ்டப்பட்றது புத்திசாலித்தனம் கிடையாது. இதுக்கு மேலே உங்க விருப்பம்.

இவங்க உறுப்புகளுக்கு பணம் தரேன்னு சொன்னது கூட உங்க நல்லதுக்காகத்தான். ஒரு பெரிய கோடீஸ்வரரோட மனைவி பெரிய அளவுல இதய பாதிப்போட அட்மிட் ஆகியிருக்காங்க. கல்லீரல்ல இருந்து கிட்னி வரை எல்லாமே அவங்க வரைல கொலாப்ஸ் ஆகியிருக்கு.

அவங்க கணவர் தான் எவ்வளவு லட்சம்னாலும் செலவு பண்ணத் தயார். என் மனைவி உயிர் பிழைச்சா போதும்னு சொன்னார். அதனால தான் உங்க கிட்டயும் நான் அப்படி சொன்னேன்.

இனி நீங்க உங்க குடும்பத்தோட கலந்து பேசிட்டு நல்ல முடிவுக்கு வாங்க...''

என்றபடியே டாக்டர் விலகிப் போனார். ராதா அவ்வளவையும் கேட்டபடி அமைதியாகவே இருந்தாள். கணேசனும் அதற்கு மேல் அங்கே நின்று கொண்டு எதையும் பேச வேண்டாம் என்று அவளுடன் புறப்பட்டான்.

வீட்டில் பெரியப்பாவுக்கு இருப்பு கொள்ளவில்லை. வாசல்புறமே பார்த்தபடி அமர்ந்திருந்தார். நந்தினி எந்த கவலையும் இன்றி டி.வி. சீரியல் பார்த்தபடி இருந்தாள். ரஞ்சனியிடமும் ஒருவித கவலை தெரிந்தது. குறிப்பாக ராஜேஷ் காதல் தவிப்போடு சந்திக்க துடிப்பது ஒருபுறம் தித்திப்பாகவும் மறுபுறம் அவன் அவசரப்படுவது போல வும் உணர்வுகளை தோற்றுவிப்பது அவளை அலைக் கழித்தபடியே இருந்தது.

மீதம் உள்ள நாட்களை அவன் வரையில் எப்படிக் கழிக்கப் போகிறோமோ என்று அவசரமாகவும் இருந்தது.

நல்லவேளையாக ஆட்டோ சப்தம் கேட்டது.

வாசல்புறம் ராதாவும் கணேசனும் இறங்கி வந்தபடி இருந்தனர்.

சதாசிவமும் சற்று நிம்மதி அடைந்தார்.

அதுவரை டிவியிலேயே கவனமாய் இருந்த நந்தினி யும் டிவியை அணைத்துவிட்டு வந்தாள்.

''வாம்மா.. ஏம்மா இவ்வளவு லேட்டு?'' என்று சதாசிவமே ஆரம்பித்தார்.

''ஒரு வேலையா இரண்டு வேலையா மாமா.. வரிசையா எல்லாத்தையும் முடிச்சிட்டு வரோம்..

''அப்படி என்னத்தடா முடிச்சீங்க..?''

''முதல்லே ஜோசியரை பார்த்து தேதி குறிச்சோம். அப்புறம் மாப்ளை வீட்டுக்கு போய் அதை தெரியப்படுத் தினோம். வர்ற வழில அத்தையையும் போய் ஆஸ்பத்திரி யில பார்த்தோம்.''

''அதான் இவ்வளவு காலதாமதமா?''

''அட ஆமாம் மாமா... ஏ நந்தினி பாத்துக்கிட்டு நிக்கறியே வெளியே போய்ட்டு வந்துருக்கோம்ல. உன் கையால காபி போட்டு தரலாம்ல?''



''அதுக்கென்ன போட்டுட்டா போச்சு. ஆமா தேதிய முடிவு பண்ணிட்டதா சொன்னியே.. பணத்துக்கு ஏற்பாடு பண்ணியாச்சா?'' என்று விடாமல் கேட்டாள் நந்தினியும்.

''ஒரு கேள்விய கேள்.. ஒரே சமயத்துல இரண்டு கேள்வி கேட்டா என்ன அர்த்தம்?''

''இரண்டுக்கும் பதில் சொல்லணும்னு அர்த்தம்.''

''உன் கல்யாணம் இன்னும் 15 நாள்ல கிராண்டா நல்லபடியா நடக்கும். போதுமா?''

''15 நாள்ளன்னா?''

''தேதி விவரத்தோடயே சொல்றேன். வர்ற இருபதாம் தேதி.''

''கூடவே கிராண்டான்னு ஒரு வார்த்தை சொன் னியே.. எப்படி?''

- நந்தினியின் வளைப்பு ராதாவை உறுத்தியது.

''நந்தினி.. இது உன்வரைல தேவை இல்லாத கேள்வி. உன் கல்யாணம் நல்லபடியா நடக்கும். போதுமா?''

''இப்படி பொதுவா சொன்னா எப்படி? எந்த வகைல நல்லபடியா நடக்கும்? கோவில்ல வெச்சு பண்றதுக்கு பேரும் கல்யாணம்தான். பெரிய மண்டபத்துல வெச்சு பண்றதுக்கு பேரும் கல்யாணம்தான்.

இதுல நீ எதை சொல்றே?''

அவள் கேள்வி பெரியப்பாவை கோபப்படுத்தியது.

''ஏய் ஏழரை சனியனே.. உனக்கு இப்ப என்ன வேணும். உன் அக்காதான் நல்லவிதமா நடக்கும்னு சொல்றாளே. சும்மா நோண்டி நோண்டி கேட்டா என்ன அர்த்தம்?'' என்று பாய்ந்தார்.

''அப்படி எல்லாம் கேட்டா தானே மாமா அவ நந்தினி.''

"ஏண்டி உனக்கு வீட்டோட நிலைமை தெரியாதா? அக்கா தன்னையே தியாகம் பண்ணி உனக்கு விட்டு தந்துருக்காங்க. தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடுங்கி பாக்கற மாதிரி நீ கேட்டா என்னடி அர்த்தம்?"

- ரஞ்சனியும் பாய்ந்தாள். அனைவரையும் கைகளை உயர்த்தி ராதா தடுத்தாள். பின் நிதானமாக பேசத் தொடங்கினாள்.

எல்லாரும் கொஞ்சம் அமைதியா இருங்க.

நந்தினி தன் கல்யாணம் மாப்பிள்ளை வீட்டோட அந்தஸ்த்துக்கு தகுந்த மாதிரி நல்லா நடக்கணும்ங்கற ஆசைலதான் இப்படி பேசறா.

அந்த கல்யாணமும் அவ எதிர்பார்ப்புக்கு மேலே கிராண்டா நடக்கும். அதனாலேயே அதே மேடைலையே ரஞ்சனிக்கும் கல்யாணத்தை பண்ணிடலாம்னு நினைச்ச நானும் கணேஷ் அத்தானும் அந்த எண்ணத்தை அப்புறமா மாத்திட்டோம்.

இப்ப இந்த கல்யாணம் நல்லபடியா நடக்கணும்.

அப்புறமா தான் ரஞ்சனி கல்யாணம். ஆகையால இதை பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்."

- என்று ராதா சொன்னதில் சதாசிவத்திடம் பலத்த அதிர்ச்சி.

"ராதா.. நீ என்னம்மா சொல்றே.. ரஞ்சனிக்கு இப்ப என்ன அவசரம்?" - என்கிற கேள்வி அவரிடம் இருந்து வேகமாய் வந்து விழுந்தது.

- அப்போது தான் அவசரத்தில் ரஞ்சனி பற்றி தான் பேசிவிட்டதும் ராதாவுக்கு உறைத்தது. உடனேயே முகத்தில் அதன் எதிரொலித் தடுமாற்றங்கள்.

ஆனால் நந்தினி அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை.



"இது என்ன புதுக்கதை.. என் கல்யாணத்தையே எப்படி பண்றதுன்னு தெரியாம வாதமும் தர்க்கமுமா போய்க்கிட்டிருக்கு. இதுல இவளப் பத்தி என்ன புதுசா கவலை..?

- என்று மிக வேகமாய் நங்கூரத்தை போடத் தொடங்கினாள்.

"ராதா.. நீ எப்பவும் ஒரு வார்த்தை பேசறதுக்கு நாலு தடவை யோசிக்கறவ. ரஞ்சனி பத்தி நீ யோசிச்சிருக்கேன்னா நிச்சயம் காரணம் இருக்கணும். அதே சமயம் பெரியவளான உன் கல்யாணத்தைப் பத்தி நீ பேசவே இல்லை.

இவளும் அடிக்கடி போன் வருதுன்னு பக்கத்து வீட்டுக்கு போயிட்றா. எனக்கு சந்தேகமா இருக்கம்மா..

- பெரியப்பா போடு போடுவது போல் பேசியதுதான் தாமதம் சட்டென்று பிடித்தாள் நந்தினி.

"எனக்கு இப்ப புரிஞ்சு போச்சு.. நல்லா புரிஞ்சு போச்சு. என்னடி... யார் உன் காதலன்? இதுதான் சந்தர்ப்பம்னு ராதாக்கிட்ட நீயும் உன் கல்யாணம் பேச்சை எடுத்து எனக்கும் பண்ணி வெச்சிடுன்னு ஏதாவது கோரிக்கை வெச்சுட்டியா?"

மிகக் கூர்மையாக அதேசமயம் கொஞ்சம் தவறாக நந்தினி கேட்கவும் கணேசனுக்கு அவள் கன்னத்தில் அறைய வேண்டும் போல ஆத்திரம் வந்தது.

"நந்தினி.. நீ வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்க மாட்டே. என்ன நீ உன் இஷ்டத்துக்கு பேசறே... ரஞ்சனிக்கு கல்யாணம் பண்ண நினைச்சா அதுக்கு உன் இஷ்டத்துக்கு கற்பனை பண்ணி அர்த்தம் கொடுக்கறே?"

"எப்படி எப்படி.. நான் என் இஷ்டத்துக்கு அர்த்தம் கொடுக்கறேனா! அப்படி போடு அரிவாளை... இல்ல. நான்

தெரியாமதான் கேக்கறேன். என் கல்யாணத்துக்கோ பதினைந்து நாள்தான் இருக்கு. இதுல ரஞ்சனிக்கு மாப்ளை பார்த்து அதே மேடைல முடிக்க முடியும்னு எதை வெச்சு நம்பினே நீ?

இந்த நாட்டுல மாப்பிள்ளைங்க என்ன சந்தைல வரிசையாகவா நிக்கறாங்க. அப்படியே மாப்பிள்ளை கிடைச்சாலும் அவங்க இவ்வளவு அவசரமா கல்யாணம் பண்ண எதை வெச்சு சம்மதிப்பாங்க... புரியலியே..?''

- நந்தினியின் முகபாவமும் அவள் கேட்ட விதமும் ரஞ்சனியையே ஊசி குத்துவது போல குத்தவும் அவளிடம் சட்டென்று ஒரு ஆவேசம்.

''ஏ நந்தி.. நந்தி.. னி.. நான் உனக்கு பதில் சொல்றேண்டி. நல்லா கேட்டுக்கோ.. நான் ராஜேஷ்ங்கற ஒருத்தரை லவ் பண்றேன். அவரை தான் கல்யாணம் செய்துக்கவும் போறேன். என் காதல் பற்றி ராதாக்காவுக்கும் நல்லா தெரியும். இப்ப என்னடி சொல்ற நீ?''

- கோபத்தில் உண்மை குதித்தபடி வெளிவந்து விட்டது. பெரியப்பா சதாசிவம் முகத்தில் ஏராளமாய் சாதிக்கவும் வெளிப்பட்டது.

''பெரியப்பா என்னை மன்னிச்சிடுங்க..'' என்றாள் மிக வேகமாய்...

''அப்படி வா வழிக்கு.. இங்க உனக்கு முன்னால நானும் ராதாக்காவும் இருக்கும் போதே காதலா? சபாஷ்! ராதாக்காவும் ஒருவேளை லேட்டாகி இந்த மாப்ளை வராம போயிருந்தா. அதனால நானும் காத்திருக்கும்படி ஆகியிருந்தா நீ உன் காதலனோட ஓடிப் போயிருப்பியோ?''

- நந்தினியின் அடுத்த கேள்வியில் நெருப்பின் தகிப்பு.



''நந்தினி...'' - ராதா இடையிட்டுக் கத்தினாள்.

''என்ன கத்தறே.. நான் கேட்டதுல என்ன தப்பா?''

''என்ன தப்பா.. அவ காதலிக்கறது அவளோட விருப்பம் சார்ந்த விஷயம். ஆனா அவ ஓடிப் போவாளான்னு அசிங்கமா கேட்கறியே.. உனக்கு நாகரிகமாக பேசவே தெரியாதா?''

''பார்றா இந்த அநியாயத்தை...

இவ இந்த வீட்டுல யாருக்கும் தெரியாம காதலிச்சது தப்புல்லை. ஆனா நான் ஓடிப் போயிடுவியான்னு கேட்டது தப்பா.. சபாஷ்!

பெரியப்பா.. கேட்டீங்களா?

காதலிக்கறது அவ விருப்பமாம்.

என்ன சொல்றீங்க?''

''போதும் நிறுத்து.. ஒண்ணும் இல்லாத விஷயத்தை பெருசு படுத்தாதே.. அவ காதலிச்சாலும் இந்த நிமிஷம் கண்ணியத்தோட தான் இருக்கா. உன் கல்யாணத்துக்கு பிறகு அவ கல்யாணமும் நல்லவிதமா கௌரவமா நடக்கும்.

இப்பவே அவ கல்யாணத்தைப் பத்தி பேசி நடக்க வேண்டிய உன் கல்யாணத்துக்கு சங்கடத்தை உருவாக்கிடாதே...

இப்ப சொல்றேன்...

உன் கல்யாணம் நடந்து முடியறவரை நீ ஒரு வார்த்தை பேசக் கூடாது. மீறி பேசினா நான் வீட்டுல ஒரு வினாடி கூட இருக்க மாட்டேன். அதுக்கு பிறகு உன் கல்யாணம் நடக்கறதும் நடக்காததும் கடவுள் விருப்பம்னு ஆயிடும். ஞாபகத்துல வச்சுக்கோ..''

- ராதா ஒரே அதட்டலாய் அதட்டி நந்தினியை அடக்கினாள்.

பெரியப்பா மனதோ ராதா மிக தன்னிச்சையாக நடப்பது போல எண்ணி குமையத் தொடங்கியிருந்தது. அது கணேசனுக்கு பார்த்த மாத்திரத்தில் புரிந்தது.

''பெரியப்பா.. ராதாவுக்கு தெரிஞ்ச ஒரு விஷயம் உங்களுக்கு தெரியாம போயிடிச்சேன்னு நினைச்சு வருத்தப் படாதீங்க.. இவளோட காதல் ராதாவுக்கே இரண்டு நாளா தான் தெரியும்.

இந்த கல்யாண சந்தர்ப்பத்துல இதை பத்தி பேச வேண்டாம்னு தான் பேசலை. இப்ப கூட வாய் தவறி தான் விஷயம் வெளிய வந்துடுச்சி.

தப்பா எடுத்துக்காதீங்க பெரியப்பா..'' என்றான். அவன் பேச்சை கேட்ட பிறகு தான் அவருக்கும் சற்று ஆறுதலாக இருந்தது.

அதே சமயம் யாரோ ஒரு இளம்பெண் ''இங்க சதாசிவம்கறது யார்?'' என்று கேட்டபடி வந்து நின்றாள்.

சதாசிவமும் சற்று திகைப்போடு அவளைப் பார்த்தார். அந்த பெண் கையில் ஒரு கடிதம் இருந்தது.

''இந்த கவரை உங்க கிட்ட கொடுக்கச் சொல்லி எங்க வீட்டுக்கு பக்கத்துல குடியிருக்கிற பெருந்தேவிங்கறவங்க இதை கொடுத்தாங்க..'' என்றபடியே கவரை நீட்டினாள் அவள்.

சதாசிவத்தின் முன்னாள் மனைவியல்லவா பெருந்தேவி! அவரிடம் ஒருவித பதட்டம் தெரிய ஆரம்பித்தது.






பெருந்தேவியின் கடிதம் சதாசிவம் கைகளில் கிடைத்தது. ''என்ன எழுதியிருக்கிறாளோ எதை எழுதியிருக்கிறாளோ'' என்று அவருக்குள் ஒருவித கற்பனை கலந்த படபடப்பும் ஏற்பட்டது.

''பெரியப்பா..''

''உம்..''

''கடிதத்தை படியுங்க.. அப்படியே வெச்சுகிட்டிருக்கீங்களே..''

''வாஸ்தவம்தாம்மா... ஆனா படிக்கணுமான்னும் இருக்கு.''

''என்ன பெரியப்பா சொல்றீங்க..''

''நான் இவளை திரும்ப பார்த்திருக்கவே வேண்டாம்னு தோணுது ராதா..''

''என்ன பெரியப்பா நீங்க.. எதுக்கு இப்படி தேவையில்லாத பேச்சு பேசறீங்க..?''

''தேவை இல்லாத பேச்சு இல்லம்மா.. தேவைப் படற பேச்சுதான்..''

''முதல்ல பெரியம்மா கடிதத்தை படியுங்க. அப்புறம் பேசுங்க. அவங்களுக்கு என்ன கஷ்டமோ?''

''அவன்னாலே கஷ்டம் தானேம்மா..''

''பெரியப்பா..''

''விடு.. நான்தான் இந்த ஏரியாவுக்கு எதுக்கு வந்தே.. சாகப்போற காலத்துல உன்னை பார்த்துட்டு எனக்கும் சந்தோஷமில்லை. தயவு செய்து விலகி எங்கையாவது போயிடுன்னு சொல்லிட்டு வந்தேன்.

அதான் அதுக்கு பதில் சொல்லியிருப்பான்னு நினைக்கறேன்.''

''ஐயோ, பெரியப்பா.. இப்ப எதுக்கு அவங்ககிட்ட போய் அப்படி எல்லாம் பேசினீங்க..''

''என் வரைல எது உண்மையோ அதை பேசினேன். இவ்வளவு நாள் இல்லாம இப்ப எதுக்கு அவ வரணும். உங்க கண்ணுலயும் பட்டு நீயும் போய் பார்த்து ஒரு பழக்கம் எதுக்கு ஏற்படணும். சொல் பார்ப்போம்.''

''அப்ப நான் அவங்களை மதிச்சு பேசினது உங்களுக்கு பிடிக்கலையா.. அந்த கோபத்துலதான் அவங்களை எங்கையாவது போயிடுன்னு சொன்னீங்களா?''

''மதிச்சு பேசினது எனக்கு பிடிக்காம இல்லை.. ஊர் உலகத்துக்கு அது பிடிக்காம போயிட்டா என்ன பண்றதுங்கற பயம்! உங்களுக்கெல்லாம் நல்லவிதமா கல்யாணமாகணும். வெளிய இருந்து வரப்போற மாப்ளையும் அவங்க குடும்பத்தை சேர்ந்தவங்களும் தான் இனி நம்மோட புதிய உறவுகள். அவங்க காதுல இந்த ஓடிப்போனவ விஷயம் விழுந்தா அசிங்கம். அது அநாவசியமா உங்க எதிர்காலத்தை தான் பாதிக்கும்.''

பெரியப்பா சொன்னதிலும் நிறையவே நியாயங்கள் இருந்தன. இருந்தாலும் பாவம் பெரியம்மா என்கிற பரிதாபமே ராதாவுக்குள் தலைதூக்கியது. அந்த பரிதாப உணர்வு துளியும் குறையாதபடியே' பெரியம்மா கடிதத்தை பெரியப்பாவிடம் இருந்து வாங்கிப் படித்தாள்.

''பெரியப்பா என்னை தப்பா எடுத்துக்காதீங்க.. உங்க அனுமதியோடதான் படிக்கறேன்'' என்றவள் மனதுக்குள் மிக வேகமாய் வாசித்தாள்.

அன்புள்ளவரே...

நீங்கள் என் வீடு தேடி வந்து பேசிவிட்டு போன அவ்வளவும் என்னை மிகவே சிந்திக்க செய்தது.





நான்தான் வாழத் தெரியாமல் விழுந்து விட்டேன்.

ராதா மற்றும் அவள் சகோதரிகள் நிச்சயம் நல்ல விதமாக வாழ்ந்தே தீர வேண்டும். அதற்கு நான் எந்த வகையிலும் இடையூறாக இருக்க மாட்டேன்.

இப்போதே நான் வீட்டை காலி செய்து கொண்டு அன்னை சாரதா அறக்கட்டளையினர் நடத்தும் பெண்கள் மறுவாழ்வு மையத்திற்கு சென்று அங்கே சேர்ந்துவிட முடிவு செய்துவிட்டேன்.

அங்கே ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் இடம் கிடைக்கும். எனக்குத் தான் தையல் வேலை தெரியுமே? இனி அந்த எந்திரம் என்னை பார்த்துக் கொள்ளும்.

நீங்கள் இனி கவலையோ அச்சமோ கொள்ளத் தேவையில்லை. உங்கள் உடல் நலத்தை பார்த்துக் கொண்டு மனநலத்தோடு நீங்கள் நல்லபடி வாழ்ந்தால் அதுவே போதும் எனக்கு.

இந்த பாவி இனி உங்கள் வாழ்வில் எந்த நாளும் குறுக்கிட மாட்டேன். ராதா மற்றும் குழந்தைகளுக்கு என் கல்யாண ஆசிகள்.

அவர்கள் மிக நல்ல பிள்ளைகள்!

இப்படிக்கு

உங்கள் அன்பை மறவாத

பெருந்தேவி!

- என்கிற கடிதம் ஒரு கணம் ராதாவை உலுக்கி கண்ணீர் பெருக்கச் செய்தது.

''என்ன எழுதியிருக்கா?''

''நீங்க மோசம் பெரியப்பா.''

''மோசம் தான்.. சாகாம இன்னும் உயிரோட இருக்கேனே..''

''எப்பவும் புலம்பல் தானா.. நல்லவிதமா வாழவே முடியாதா இனி..!''

''நான் நல்லவிதமா வாழறதா.. சரிதான்'' - பெரியப்பா விரக்தியாக சிரித்தார்.

ராதா கணேசனை பார்த்தாள்.

''என்ன ராதா''

''புறப்படுங்க''

''எங்க?''

''பெரியம்மாவை பாக்க!''

''அவ உன் பெரியம்மா இல்லை - யாரோ...! என்று இடையிட்டார் சதாசிவம்.

''இல்ல. பெரியம்மாதான்! அவங்க இப்ப பழைய பெரியம்மா இல்லை. வாழ்க்கைப்பாடம் கத்துகிட்ட பெரியம்மா. அன்புக்கும் பண்புக்கும் இப்பதான் அவங்களுக்கு அர்த்தமே தெரியும்.

''உளறாம நீ போய் உன் வேலையை பாரு.''

''பாக்கத்தான் போறேன். என் வேலையை நான் எப்பவும் மிச்சம் வைக்கவும் தள்ளிப் போடவும் தயாரா இல்லை. அத்தான் புறப்படுங்க..''

''எங்கன்னு சொல் ராதா''

''போய் முதல்ல பெரியம்மாவை பார்ப்போம். மத்த விஷயங்களை நாம பிறகு பேசுவோம்.''

''அவங்கள நாம் பார்த்து என்ன பண்ண முடியும். அதான் அவங்க தங்களுக்கு ஏற்ற ஒரு வழியை பாத்துக் கிட்டிருக்காங்களே..!''

''தயவு செய்து இப்படி எல்லாம் பேசாம என் கூட வாங்க..''



- கணேசனை கட்டுப்படுத்தி அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

பெரியப்பாவுக்கும் அவள் பெரிதாக ஏதோ செய்யப் போகிறாள் என்பது புரிந்தது.

''நில்லு...'' - தடுத்தார்.

''ஏன் தடுக்கறீங்க?''

''இப்ப அவளை பார்த்து என்ன செய்யப் போறேன்னு சொல்லு..''

''நம்ம வீட்டுக்கே கூட்டிகிட்டு வரப்போறேன்.''

''ராதா''

''என்ன ராதா.. அவங்க இனியும் தனியா கஷ்டப் பட தேவையில்லை. தாலி கட்டின புருஷன் நீங்க உயிரோட தான் இருக்கீங்க..''

''ராதா.. என்ன பேசறே நீ - அவ நான் கட்டுன தாலியை கழட்டி எறிஞ்சிட்டு இன்னொருத்தனோட ஓடிப் போனவ.''

''ஓடிப்போயிட்டாங்கல்ல - அவங்கள அப்புறம் எதுக்கு நீங்க போய் பார்த்தீங்க..''

''அவ இப்படி நிர்க்கதியா நிக்கறதை பாக்க சகிக்காம தான்.''

''அந்த அளவுக்கு அன்பும் கருணையும் உள்ள நீங்க அவங்களை மன்னிச்சு ஏன் ஏத்துக்கலை?''

''ஹூம்.. என்ன பேசற நீ - இந்த வயசுல இந்த ஆளுக்கு பொண்டாட்டி கேட்குது பார்னு ஊர் என்ன பார்த்து கேள்வி கேட்கவா?''

''இது தேவையே இல்லாத கற்பனை பெரியப்பா. அப்புறம் ஒரு உண்மையை நீங்க புரிஞ்சுக்கணும். இப்ப ஊர்னு நீங்க சொல்ற விஷயம் ரொம்பவே மாறிடிச்சு.

பக்கத்து வீட்ல யார் இருக்காங்கன்னு கூட தெரியாதபடி வாழறதுதான் இப்ப ஃபேஷன்.

கூட்டு வாழ்க்கை குடும்ப வாழ்க்கை முடிஞ்சு வேக வாழ்க்கை நடக்கற காலம் இது. ஆகையால் நீங்க சேர்ந்து வாழ்ந்தாலும் சரி, பிரிஞ்சு வாழ்ந்தாலும் சரி அதை பற்றி யாருக்கும் எந்த கவலையும் கிடையாதுங்கறத புரிஞ்சிக் குங்க.

உங்க வாழ்க்கையை நீங்க தான் வாழ்ந்துக்கணும். அதுக்கு இப்ப வாய்ப்பு வந்துருக்குன்னு நினையுங்க.''

''ராதா.. இப்ப இந்த முயற்சி எதுக்கும்மா... உங்க கல்யாண வேலையை பாரும்மா..''

''அது நடந்துகிட்டுதான் இருக்கு பெரியப்பா. அதுல சின்ன சுணக்கமும் இல்லை. அதேசமயம் ஒரு முக்கியமான முடிவை எடுக்கற அவசியத்தை காலம் உருவாக்கியிருக்கு.''

''என்னம்மா அது?''

''எங்கம்மாவை என்ன செய்யணும்கறது தான் அது.''

''புரியறமாதிரி சொல்லு.''

- அவள் டாக்டர் கூறிய அவ்வளவையும் சொல்லி முடித்தாள். அடுத்த நொடியே நந்தினியிடம் ஒரு ஆவேசம்.

''உன் இடத்துல நான் இருந்தா அம்மாவை முதல்ல அந்த டாக்டர் விருப்பப்படி செய்யச் சொல்லி இருப்பேன். அப்படியே தேடி வர்ற பணத்தையும் வாங்கிப் போட்டுருப் பேன்.

அம்மாவால இனி எந்த காலத்துலேயும் எழுந்து நடமாட முடியாது. படுத்தே கிடக்கறதுக்கு அவங்க போய் சேர்றதுதான் நல்லது'' என்றாள்.

அதுவரை அவள் வரையில் கோபமாக பேசமட்டுமே செய்திருந்த சதாசிவம் அவள் பேசி முடிக்கவும் அருகில் சென்று ஓங்கி ஒரு அறை விட்டார். அதிலும் ஒரு அசாதார ணமான அறை.



அவள் காதுக்குள் பூச்சி பறந்தது. விக்கித்துப் போய் நின்றுவிட்டாள்.

''எப்படா 15 நாள் கழியும் நீ ஒழிஞ்சு போவேன்னு காத்துட்டுருக்கேன். பாவம் அந்த ஜெகதீஷ். உன்கிட்ட மாட்டி என்ன பாடு பட போறானோ?'' என்றும் வெடித்தார்.

அப்படியே ''அம்மாடி.. என்ன செய்யலாம்னு இருக்கே?'' என்றும் கேட்டார்.

''தெரியல பெரியப்பா.. நிஜமா தெரியல..''

''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. டாக்டர் சொல்றதுதான் சரி. உன் அம்மா வேற ஒருவர் வடிவத்துல உயிர் வாழப் போறதா நினைச்சுக்கோம்மா..''

''பெரியப்பா அப்ப அம்மாவை வித்துடச் சொல் றீங்களா?''

''சத்தியமா அப்படி சொல்லலை. தானமா கொடுத்து டுங்கறேன்.''

- பெரியப்பா சொன்னதை அசை போட்டபடியே புறப்பட்டாள்!

ஆட்டோவில் கணேசன், ராதா.

கணேசன் கேட்டான், ''என்ன பண்ணப்போறே?''

''தெரியல''

''பெரியப்பா சொன்னது எனக்கு சரியா படுது.

''அதுக்காக அம்மாவை கொன்னுடுன்னு சொல்ல முடியுமா. இது என்ன சோதனை..?''

''புரியுது. இந்த கட்டத்தை எப்படியாவது நீ கடந்து தான் தீரணும்.''

''சரி இப்ப அந்த பேச்சை பேச வேண்டாம். முதல்ல பெரியம்மாவை வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வந்து பெரியப்பா வோட சேர்ப்போம்..''

''இது சரியா வருமா?''

''வர வைப்போம். அம்மா இடத்துல இனி பெரியம்மா.''

''கேட்க நல்லா இருக்கு ராதா.. ஆனா அக்கம் பக்கம்..''

''நீங்களுமா அத்தான்.. அக்கம் பக்கம்னு பேச றீங்க?''

''உரக்க பேசாட்டியும் உள்ளுக்குள்ள பேசுவாங்களே..''

''பேசினா பேசட்டும். எவ்வளவு நாள் பேசுவாங்க. அடுத்து நாம இங்க இருந்தா தானே பாதிப்பு, நாம வேற எங்கையாவது போயிடுவோம்.''

''அதுதான் சரியான முடிவா இருக்க முடியும்.''

- கணேசனும் வளவளவென்று இழுக்காமல் ஒப்புக் கொண்டான்.

அந்த சாரதா பெண்கள் காப்பகமும் வந்தது. உள்ளே நுழைந்தபோது ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடந்தபடி இருந்தது.

எதற்கு என்று தெரியவந்த போது திகைப்பாக கூட இருந்தது.

அந்த பெண்கள் மறுவாழ்வு இல்லத் தலைவியான சாரதா தேவிதான் ஒரு விபத்தில் அடிபட்டு உயிருக்கு போராடியபடி இருக்கிறார். அந்த சாரதா தேவிக்குத்தான் டாக்டரும் ராதாவின் அம்மா உறுப்புகளை கேட்டிருந்தார்.

ராதா விக்கித்துப் போய் நின்றுவிட்டாள்.

எதிரில் சாரதம்மாவின் பெரிய படம்.

அந்த பெண்கள் மறுவாழ்வு இல்லத்திலும் நூற்றுக் கணக்கான பெண்கள்.



அவ்வளவு பேரும் சாரதாம்மா உயிர் பெற்று எழுந்து வர வேண்டும் என்கிற பிரார்த்தனையில் கண்ணீர் விட்டு கதறியது ராதாவை மிகவே பாதித்துவிட்டது.

பெருந்தேவியும் ராதா தேடி வந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

''எதுக்கும்மா என்னை தேடி இவ்வளவு தூரம் வந்தே... நீங்க நல்லா இருக்கணும்னுதானே நான் இங்க வந்துருக் கேன்?'' என்றுதான் ஆரம்பித்தாள்.

''பெரியம்மா.. ஒரு விதத்துல உங்க முடிவு ரொம்ப சரி. ஆனா பெரியப்பாவை விட்டுட்டு, நீங்க வந்ததுதான் தப்பு'' என்றாள்.

''என்ன சொல்றே நீ?''

''நீங்க இப்ப என் பழைய பெரியம்மா தானே?''

''ராதா''.

''அப்ப புறப்படுங்க. இனி என்வீடு தான் உங்க வீடு. உங்களுக்கு நாங்க இருக்கறதால இங்க இனி நீங்க இருக்க றது சட்டப்படி குற்றம்.''

''ஐயோ.. நான் வந்து உங்க நல்லதெல்லாம் கெட்டுடப் போகுது.''

''தப்பு.. நீங்க வந்து எல்லா நல்லதையும் ஆரம்பிக்க போறீங்க..''

''ராதா சொன்னா கேள்.''

''நீங்க நான் சொல்றத கேளுங்க.. பெரியப்பாவும் உங்கள ஏத்துக்க தயாராக இருக்கார்..''

''நெஜமாவா?''

''இப்படிக் கேட்கறத விடுங்க. புறப்படுங்க. ஆமா இப்ப இந்த காப்பகத்தை யார் பாத்துக்கறாங்க?''

''சாரதாம்மாவோட மகள் சாந்தா தேவி''

''நான் அவங்கள பாக்க முடியுமா?''

''தாராளமா''

- பெருந்தேவியே ராதாவை சாந்தாவிடம் அழைத்துச் சென்றாள். சாந்தா முகத்தில் ஒரு உறைந்து போன சோகம். ''மேடம்.. கவலைப்படாதீங்க. உங்கம்மா பிழைச்சு வந்துடு வாங்க. உங்கம்மா தான் இனி எனக்கும் அம்மா. எப்படின்னு சொல்லட்டுமா?

- என்று கேட்டவள் அடுத்தடுத்து ஆஸ்பத்திரியில் நடந்ததைச் சொல்லச் சொல்ல சாந்தாதேவிக்கு புல் லரித்தது. வேகமாய் எழுந்து ராதாவின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''பெரியம்மாவை வீட்ல விட்டுட்டு அப்படியே ஆஸ்பத்திரிக்கு போவோமா?'' என்றும் கேட்டாள். சாந்தா தேவியும் பரபரப்பாக புறப்பட்டாள்.






வீட்டு வாசலில் ஒரு படகு கார் தேங்கி நிற்கவும் அதை பார்த்த நந்தினிக்கு பலத்த ஆச்சரியம். ஜெகதீஷ் தான் பார்க்க வந்திருக்கிறான் என்று நினைத்தாள். ஆனால் காரில் இருந்து ராதா கணேசன் கூடவே பெரியம்மா பெருந்தேவி, காப்பக இயக்குநர் சாந்தா என்று நான்கு பேரும் இறங்கி வரவும் ஆச்சரியத்துடன் அதிர்வும் அவ ளிடம் ஏற்பட்டது.

ரஞ்சனியும் ஓடிவந்து பார்த்து வியந்தாள்.

சதாசிவம் டாய்லெட் போயிருந்தார்.

நால்வரும் உள்வரவும் ராதா சாந்தாவை ஒரு நாற்காலி யைக் காட்டி அமரச் சொன்னாள். பெருந்தேவியால் வீட்டு வாசல்படியை தாண்டி உள்ளே வர முடியவில்லை.

தயக்கம் அவள் கால்களை கட்டிப்போட்டு வெளி யேயே நிற்க வைத்துவிட்டது. இதை எதிர்பார்த்தவள் போல் ராதா அவளை உள்ளே அழைத்தாள்.

''இல்லம்மா.. என்னை வற்புறுத்தாதே..''

''அப்படின்னா எங்க கூட நீங்க வந்திருக்கவே வேண்டாமே..''

''நான் எங்கம்மா வந்தேன் - நீதானே கட்டி இழுத்து கிட்டு வந்துருக்கே?''

''அப்ப சரி இப்பவும் கட்டி உங்களை உள்ள இழுக்க றேன் வாங்க...''

''சாரிம்மா.. எனக்கு தகுதியில்ல. நான் பாவி..''

''உங்கள கெஞ்சிக் கேட்டுக்கறேன். நீங்க இனி இந்த

''பழைய விஷயத்தை நினைக்கவே கூடாது.''

''உனக்கு இது சொல்றது சுலபம்.. ஆனா என் வரைல..'' என்று எதையோ சொல்ல வந்தவள் பேச முடி யாமல் விசும்பி அழத் தொடங்கிவிட்டாள்.

அதற்குள் பாத்ரூம் போயிருந்த சதாசிவம் வெளியே வந்து ராதாவும் பெருந்தேவியும் பேசியதைக் கேட்டபடி இருந்தார்.

ராதாவும் திரும்பி அவளைப் பார்த்தார்.

பார்வையே பெரியம்மாவை உள்ளே கூப்பிடுங் களேன் என்றது. அவருக்கும் புரிந்தது. மெல்ல வெளியே வந்தார்.

''உள்ள வா தேவி'' என்றார் விம்மும் குரலில். அவள் அடுத்த நொடி சரிந்து அவர் காலில் விழுந்தாள். அப்படியே அணைத்து அவளைத் தொட்டு தூக்கியபடியே அணைத்துக் கொண்டார்.

பெருந்தேவிக்கு அது ஒரு கனவு போல இருந்தது.

ராதாவுக்கும் கணேசனுக்கும் கண்ணில் நீர் துளிர்த்து விட்டது.

அவ்வளவையும் பார்த்தபடியே மௌனமாக அமர்ந் திருந்த சாந்தாவிடமும் ஒரு நெகிழ்ச்சி.

''மேடம் பெரியம்மா பெரியப்பாவை இவ்வளவு நாள் பிரிஞ்சிருந்தாங்க. கிட்டதட்ட விவாகரத்துன்னே கூட சொல்லலாம்..'' என்று வெகு நாசூக்காக அவர்கள் பிரிவுக்கான காரணத்தை சாந்தாவிடம் ராதா கூறிட, சாந்தா கைகளை உயர்த்தி மேற்கொண்டு காரணம் எனக்கு தேவையில்லை என்றாள்.

''அப்படியே நீங்க முன்ன சொன்ன மாதிரி எதுக்கு பழைய குப்பையை கிளறிகிட்டு. இனி இவங்க ஒருத் தருக்கொருத்தர் ஆதரவா சந்தோஷமா இருக்கணும். அது தான் முக்கியம். உங்களால இவங்களுக்கு அது கிடைச்



சிருக்கு. ரியலி இட்ஈஸ் எ வொண்டர்ஃபுல் ஜாப் யு ஹேவ் டன்.''

- என்றாள் சாந்தா. சதாசிவம் ராதாவை நெருங்கி அவளையும் அணைத்துக் கொண்டார். விம்மி வெடித்து அழுதார்.

''பெரியப்பா என்ன இது சின்ன குழந்தையாட்டம்.''

''உன் முன்னால நான் சின்ன குழந்தைதாம்மா. பாரதி தன் கண்ணன் பாட்டுல இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்னு சொல்வான். நான் உன்னைப் பார்த்து சொல்றேம்மா. இங்கு உனை நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்'' என்று உணர்ச்சிக் கடலானார்.

''ரொம்ப சரியா சொன்னீங்க சார்.''

''ராதாவால எங்கம்மாவும் உயிர்த்து எழப் போறாங்க. ஒரு பெண்கள் காப்பகத்துக்கே உயிர் வரப்போகுது'' என்ற சாந்தா, ஆஸ்பத்திரியில் கிடக்கும் லட்சுமியின் உறுப்பு கள் தானமாக பெறப்படப் போவதை கூறிட சதாசிவத் திடம் மட்டுமல்ல அவ்வளவு பேரிடமும் சிலிர்ப்பு...

''ராதா.. சரியான முடிவை எடுத்துருக்கே...'' என்றார் பெரியப்பா.

''எடுத்துருக்கேன் இல்லை பெரியப்பா. எடுத்துருக் கோம்'' என்றாள் ராதா. அப்படியே ''எல்லாரும் போய் அம்மாவை ஒரு தடவை பார்த்துட்டு வந்துடுவோமா? என்று கேட்கவும் அவ்வளவு பேர் கண்களிலும் கண்ணீர்.

* * *

ஆஸ்பத்திரி!

லட்சுமியின் படுக்கையை அனைவருமே நெருங்கி நின்றனர். லட்சுமி இன்னும் சில மணி நேரங்களில் அவ யவங்களை இழந்து சாம்பலாகிவிடுவாள்.

மனிதனின் இறுதி வடிவம் சாம்பல்தானே?

கண்ணீர் ஒவ்வொருவர் கன்னக்கதுப்பிலும் உருண்டு ஓடிக் கொண்டிருக்க ராதா தாயின் கால்களைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

அதற்குள் விஷயம் மாப்பிள்ளை ஜெகதீஷ் வீட்டிற்கும், ராஜேஷ் வீட்டிற்கும் கூட சொல்லப்பட்டு விட்டதில் அவர்களும் திரண்டு வந்து உள் நுழைந்தபடி இருந்தனர். அந்த அறையே நிரம்பி வழிந்தது.

ராதா தாயின் காலடியில் நின்றபடியே அவள் தாயிடம் அவளுக்கு கேட்கும் சக்தி இருப்பதாக நம்பிக் கொண்டு பேசத் தொடங்கினாள்.

''அம்மா..

உன்னை என்னால காப்பாத்த முடியலம்மா..

என்னை மன்னிச்சுடு.

ஆனா நீ ஒரு சமூக சேவகியா இந்த உலகத்துல வாழத்தான் போறே. இதுல நிச்சயம் உனக்கும் சம்மதம் இருக்கும்னு நான் நம்பறேன்.

அப்புறம் நாங்க யாரும் நீ பயப்படற மாதிரி தெருவுல நின்னுடலை.

நந்தினி, ஜெகதீஷ் மாப்ளையை கட்டிக்கப் போறா, இதோ இரண்டு பேரும் இங்க இருக்காங்க. அதே மாதிரி ரஞ்சனி ராஜேஷ்ங்கறவரை கல்யாணம் பண்ணிக்க போறாரு. அவரும் வந்துருக்காரு. அப்புறம் பெரியப்பாவும் பெரியம்மாவோட சேர்ந்துட்டாரு.

இப்ப நீ என்னைப் பத்தி கவலைப்படுவேன்னு நல்லாத் தெரியும். கவலைப்படாதே. என்னைப் பார்த்துக்க கணேசன் அத்தான் இருக்காரு என்று அவள் சொன்ன நொடி அங்குள்ள ஒவ்வொருவர் முகத்திலும் ஒரு இன்ப அதிர்ச்சி. குறிப்பாக ஜெகதீஷ் அதை துளிகூட எதிர்பார்த்திருக்கவில்லை. மிகவே உணர்ச்சி வசப்பட்டவன் ராதா



அருகில் வந்து கை குலுக்குவதற்காக தன் வலது கரத்தை நீட்டினான்.

''என்ன சார் இது?''

''மனசார பாராட்டறேன். என்ன நீங்க வேண்டாம்னு மறுத்தப்ப ஏற்பட்ட வருத்தம் இப்ப நீங்கிடிச்சு. உங்களால மட்டும்தான் இப்படியெல்லாம் ஒரு தெளிவோட நடந்துக்க முடியும்'' என்றவன் அருகில் இருந்த கணேசனை கட்டி அணைத்துக் கொண்டான்.

கணேசனுக்கும் சிலிர்ப்பாக இருந்தது. அதற்கு மேல் யாராலும் அங்கே ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. எல்லோருமே லட்சுமியின் கால்களைத் தொட்டு வணங்கினார்கள்.

ஜெகதீஷின் அக்காவும், ராதாவின் கைகளை பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''அம்மாடி.. கல்யாணத்துக்காக கஷ்டப்படாதே சிம்பிளா ரிஜிஸ்தர் கல்யாணம் போதும்''.. என்றனர். ராஜேஷின் அப்பா அம்மாவும் அதே கருத்தைக் கூறினர்.

''இவன் காதல் தெரிஞ்சப்ப கோபம் வந்தது.

இங்க வந்து உங்கள எல்லாம் பார்த்த பிறகு என் மகன் ரொம்ப கொடுத்து வச்சவன்னு தோணுது. நீ பெரிய தியாகம் பண்ணியிருக்கே. பண்ணிக்கிட்டேவும் இருக்கே. உன் முன்னால நாங்க தூசும்மா.. தூசு! உனக்கு நாங்க ஒரு உதவி செய்ய விரும்பறோம்.

இவங்க கல்யாண செலவை பத்தி நீ கவலையே படாதே. சிம்பிளா ரிஜிஸ்தர் மேரேஜ் போதும்'' - என்றார் ராஜேஷின் அப்பாவான ஆர்ட் டைரக்டர்.

எல்லோரும் ஒருவருக்குள் ஒருவர் அன்பு மயத்தில் கலந்துவிட்ட அந்த நொடிகளில் லட்சுமியின் உடம்பும் அங்கிருந்து ஆபரேஷன் தியேட்டர் நோக்கி செல்லத் தொடங்கியது.

நந்தினியும் ரஞ்சனியும் ஆளுக்கொரு பக்கமாக ராதாவின் தோள்களைப் பற்றிக் கொண்டு முகம் புதைத்து அழத் தொடங்கினர்.

''அக்கா...''

எங்களுக்கு நீ தான் இனி அம்மா..'' என்கிற அவர் களின் விசும்பல் எல்லோர் காதுகளிலும் விழுந்தது. சாந்தா வும் ராதா அருகில் வந்து,

''ராதா... எங்க காப்பகத்துக்கு உங்களையும் ஒரு டைரக்டரா போடப் போறேன். உங்களைப் போல பரந்த மனசும் தியாக உள்ளமும் கொண்டவங்க தானே எங்க ளுக்கும் தேவை'' என்றாள்.

அப்படியே கணேசனை பார்த்து எங்க காப்பகத் துக்கு நீங்களும் ஒரு டைரக்டர். இனி நீங்க ஜெராக்ஸ் கடைல சிரமப்பட வேண்டாம். உங்க உழைப்பு இனி சமூக சேவைக்கு பயன்படட்டும்'' என்றாள்.

கணேசன் ஆனந்தக் கண்ணீரோடு ராதாவை பார்த் தான். அவளோ அன்பு, கருணை, பாசம், நெகிழ்ச்சி, ஈகை, இன்பம் என்கிற சகல உணர்வுகளும் கலந்த ஒரு கலவையாக

யாதுமாகி நின்றாள் - நிற்கிறாள். எப்போதும் நிற்பாள்.